# அனலாய்க் காயும் அம்புலிகள்

இந்திரா சௌந்தர்ராஜன்



www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# அனலாய்க் காயும் அம்புலிகள்

# Analai Kaayum Ambuligal

Author:

## இந்திரா சௌந்தர்ராஜன்

**Indira Soundarajan**

For more books

http://www.pustaka.co.in/home/author/indira-soundarajan-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

# பொருளடக்கம்

அத்தியாயம் 1

அத்தியாயம் 2

அத்தியாயம் 3

அத்தியாயம் 4

அத்தியாயம் 5

அத்தியாயம் 6

அத்தியாயம் 7

அத்தியாயம் 8

அத்தியாயம் 9

அத்தியாயம் 10

அத்தியாயம் 11

அத்தியாயம் 12

அத்தியாயம் 13

அத்தியாயம் 14

அத்தியாயம் 15

அத்தியாயம் 16

அத்தியாயம் 17

அத்தியாயம் 18

அத்தியாயம் 19

அத்தியாயம் 20

அத்தியாயம் 21

அத்தியாயம் 22
அத்தியாயம் 23
அத்தியாயம் 24
அத்தியாயம் 25
அத்தியாயம் 26

# மதிப்புரை

திரு.சிவக்குமார் -திரைப்படக்கலைஞர், ஓவியர்.

(உலகக்களஞ்சியம் தொகுப்புக்களில் ‘ஏ’ முதல் ‘இசட்’ வரையிலான அத்தனை செய்திக் குறிப்புக்களையும் இருபத்தியோரு வயதுக்குள் சுவாமி விவேகானந்தர் மனப்பாடம் செய்துவிட்டாராம்.

பின்னாளில் அவர் சொன்னார், ‘புத்தகம் என்பது என்ன? பிற மனித மனம் உமிழ்ந்த எச்சில்-வாந்தி.’ எனவே கண்டதைப்படித்து மனதைக்குப்பைத்தொட்டி ஆக்காதீர்கள். எவை மனித நேயசிந்தனையை வளர்க்கிறதோ – எவை மனிதவாழ்வை மேம்படுத்தப் பயன்படுகிறதோ அவற்றை மட்டும் படியுங்கள் போதும் என்றார்.

அதிகப்படியான நூல்களுடன் பரிச்சயம் இருப்பது தான் பெரியவிஷயம் என்றால், கன்னிமாரா போன்ற நூல் நிலையங்கள்தானே போற்றுதலுக்கு உரியவையான இருக்கும்.

மனிதன் எத்தகையவன். அவன் வாழ்நெறி எவ்வளவு புனிதமானது. அவன் சிந்தனை எந்த அளவு உயரமானது, அவனுடைய மனித நேயம் மக்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதையே நாம் பார்க்க வோண்டும்.

கண்ணதாசன், வாலி, சோ போன்றோர் இந்துமதத்தின் சாரத்தையும் ராமாயணம், மகாபாரதம், போன்ற காவியங்களையும் மக்களுக்குப் புரிகின்ற வகையில் சமீபத்தில் நிறைய எழுதியிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தி அந்த அளவுக்கு விரிவாக எதையும் எழுதிவிடவில்லை. அவர் ஒன்றே ஒன்று தான் செய்தார்.

சொல்லுக்கும் செயலுக்கும் அதிக இடைவெளி இல்லாமல் பார்த்துக் கொண்டார். அதுதான் அவரை மகாத்மா ஆக்கியது.

“இந்த மண்ணில் வாழும் எவனும் தன்னை

அப்பழுக்கற்றவன் என்று சொல்லிக்கொள்ள முடியாது. நல்ல மனிதனிடம் நல்ல தன்மைகள் 85 சதவீதமும், கெட்ட குணங்கள் 15 சதவீதமும் இருக்கும். கெட்ட மனிதனிடம் 85 சதவீதம் கெட்டதன்மையும் 15 சதவீதம் நல்ல விஷயங்களும் இருக்கும்.

ஒவ்வொரு மனிதனும் தன்னை முழுமையான மனிதனாக்க – தம்மிடமிருக்கும் தீயவற்றை அகற்றி – பூரணத்துவம் பெற முயற்சிப்பதே வாழ்வின் நோக்கம்...

அந்த வகையில், நாம் எழுதும் எழுத்து, படிப்பவரின் சிந்தனையை – வாழ்வைச் செம்மைப்படுத்த சிறிதளவாவது உதவவேண்டும்.

**“இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்றுமில்லை**

**இல்லாளும் இல்லாளே ஆமாயின் – இல்லாள்**

**வலி கிடந்த மாற்றம் உரைக்கு மேல் அவ் இல்**

**புலி கிடந்த தூறு ஆய்விடும்-”**

என்கிறார் ஔவையார்.

குணவதியான மனைவி வீட்டில் இருப்பின் அங்கு இல்லாதது எதுவுமில்லை. நிறைவான இல்லம். குடியிருக்கும் கோயில் அது.

அப்படி ஒரு நல்ல மனைவி இல்லாது போனாலும் கணவனிடம் மனைவி கடுஞ்சொல் பேசினாலும், அவ்வீடு புலி வாழ்கிற புதர் ஆகிவிடும் என்கிறார்கள்.

‘அனலாய்க் காயும் அம்புலிகள்’ என்ற இந்த நாவல் ஔவையின் கருத்தையே வலியுறுத்துகிறது.

ராம்நாத்தின் மனைவி சுசிலா நல்ல இல்லாளாக இருந்து கணவனையும் மகளையும் அன்புடன் கவனித்திருந்தால் இந்த நாவல் எழுதுவதற்கு கருவே இருந்திருக்காது.

தாலிகட்டியவனைத்தலையில் தட்டி–தனது பேராசைக்கு

அவன் இணங்காத கட்டத்தில், அவனை வெட்டி விட்டு, அடுத்தவனைத் தேடிப்போன குரூரமான பெண் அவள்.

மனைவியின் செயலால் மனமொடிந்து போன ராம்நாத். குழந்தை மீது உயிரையே வைத்திருந்தபோதிலும், சோகமும் - பயமும் தன்னை ஆட்கொள்ளும் போதெல்லாம், தன்னை மதுவில் மூழ்கடித்துக் கொள்கிறார்.

இறந்த மனைவியின் கல்லறை காய்வதற்குள் அடுத்த பெண்ணைத் தேடி அலையும், மனிதர்கள் மத்தியில், மகளுக்காக தனிமரபாய் வாழ்கிறார் அவர். அந்தத் தியாக உள்ளத்திற்காகவே – தவிர்க்க முடியாமல் குடிக்கும் தந்தையை அவள் நேசிக்கிறாள்.

ஒரு ஏழை விதவைத்தாயிடம் வளரும் பிள்ளைக்குக் கிடைக்கும் சந்தோஷமும், எல்லா வசதியுமுள்ள ஒரு பணக்கார அப்பனின் அன்பில் தோயும் பெண்ணுக்குக் கிடைக்க முடியாது.

‘விதவை வாழ்வு முனிவர் தவ வாழ்வு’ போன்றது. முனிவர்கள் சிவன் - விஷ்ணுவை நெஞ்சில் நிறுத்தி உலகப்பற்றை ஒதுக்கி வாழ்கிறார்கள். விதவைகள், அப்படி ஒரு வாழ்வை, கணவனை நினைத்து வாழ வேண்டும் என்ற வாதத்தை அரவிந்தன் மூலம் ஒரு இடத்தில் ஆசிரியர் வைக்கிறார்.

பரிதவிக்கிற பெண்கள் மறுமணம் செய்துகொள்வதில் தவறில்லை. குணசேகர் மாதிரி காமவலை வீசுவோர் முன் அவள் நிலைப்பாடு என்ன? கணவன்ங்கற பாதுகாப்பு இருந்த இந்த மாதிரி ஆட்கள் வாலாட்டத்தோன்றுமா? – என்ற எதிர்வாதத்தையும் ரம்யா மூலம் பிற்பகுதியில் வைக்கிறார்.

வாழ்ந்து முடிந்து, பல்லும் சொல்லும் போன அரவிந்தனின் பாட்டிக்கு வேண்டுமானால் தவவாழ்வு என்கிற வாதம் பொருந்தும்.

திருமணமாகி மூன்று மாதங்கள்கூட முழுசாய்க்

கணவனுடன் சேர்ந்து வாழும் வாயிப்புக் கிடைக்காத சரண்யா போன்றோருக்குப் பொருந்தாது.

முப்பத்திரண்டு வயதில் கைம்பெண்ணாக, என் தாயார் கணவன் நினைவிலேயே வாழ்ந்து – என் தமக்கையையும் என்னையும் கரை சேர்த்தார்.

ஆனால் என் பெரியம்மா?

ஏழு வயதில் தாலிகட்டி எட்டுவயதில் அந்தத்தாலியை அறுத்து, பத்துவயதில் வயதுக்கு வந்து, தொண்ணூறு வயது வரை வெள்ளைச்சேலைக்குள் வெறும் நடைபிணமாய் உலவினாரே, அது தவ வாழ்வா?

எட்டு வயதுச் சிறுமியின் வாழ்வை இச்சமூகம், சடங்கு சம்பிரதாயம் என்ற பெயரில் பறித்துக் கொண்டது கொலை பாதகமில்லையா?

சரண்யா போன்ற பெண்களுக்கு அப்படிப்பட்ட தண்டனையை சமூகம் வழங்கக்கூடாது என்ற நல்லெண்ணம் ஆசிரியருக்கு இருப்பதில் மகிழ்ச்சி.

ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு, இருபத்தி ஏழு வயது வித்தியாசத்தில் - சாரதாதேவியை மணம் முடித்துவைத்தார்கள். நாற்பத்திரண்டு வயதில் சக்தி வடிவமாக மனைவி அவருக்குக் காட்சியளித்ததில் தவறில்லை.

ஆனால், சாரதா தேவி தன்னை சக்தியாக நினைத்திருப்பாரா? பதினைந்து வயதுப்பெண்ணின் உடல் இச்சை பற்றி யாராவது கவலைப்பட்டார்களா?

சீதையை ராமர் நெருப்பில் குளிக்கச்சொன்னது: பாஞ்சாலி ஐந்து பேரை மணக்க நேர்ந்தது – எல்லாம் ஆணாதிக்கச் செயல்கள் அல்லவா...

சலவைத்தொழிலாளியின் சந்தேகத்தைத் தீர்க்க: ராமபிரான் சீதையை நெருப்பில் இறங்கச்சொன்னது சரியா?

உனக்கு ஐந்து கணவன்மார்கள் தேவையா என்று

பாஞ்சாலியிடம் யாராவது கேட்டிருப்பார்களா?

பெண்ணினம் ரத்தக் கண்ணீர் வடித்துக்கேட்கும் கேள்விகள் இவை.

அரவிந்தன் - ரம்யா திருமணத்தை நோக்கி கதை சொல்வது எல்லோராலும் ஊகிக்கக் கூடியது தான். ஆனால், ராம்நாத் - சரண்யா திருமணம் உச்சக்கட்ட நிகழ்வாக அமைந்ததுதான் நாவலைத்தூக்கி நிறுத்தியது.

‘மேகக் கவிதைகளையும், ஒளி ஓவியமாய்த்திகழும் அந்தி வானத்தையும், பறவைகளின் நீச்சல் குளமாய் ஆகாயத்தையும் ரசிக்கும் அற்புதப்பாத்திரம் ரம்யா.

‘எனக்குத் தாய்ப்பால் கொடுத்தா தன் அழகு குறைஞ்சிடும்னு நெனைச்ச அவங்க என் அம்மா இல்லை. உங்களுக்கு ஒரு குழந்தையைப் பெத்துக்கொடுத்த வாடகைப் பொண்ணு’- என்று தாயை நினைக்கும் போது அனலாய்க்காய்கிறார்.

நாங்கள்ளாம் எண்பதாயிரம், ஒரு லட்சம் சம்பளத்துக்காக புலி வாலைப்புடிச்சிட்டு விடமுடியாம தவிக்கிறோம் என்கிறார் கௌரவமேனேஜர் ஞானப்பிரகாசம்.

முகம் என்பது, எழுத்திலும், சப்தத்திலும் இல்லாத ஒருமொழியைத்தன்வசம் வைத்திருக்கும் கரும் பலகை போன்றது...

ஒவ்வொரு விஷயத்திலும், உண்மையில் உண்மையாக இருந்தாலொழிய வாழ்க்கையில் மலிவாய்ப் பொய்பேசுவது தவிர்க்க முடியாது.

ஆண்பெண் இனச் சேர்க்கைக்கும் உருவாக்கத்திற்கும் ஆதாரமே பெண்கிட்ட இருக்கற வெட்கம் - பயம் அப்புறம் மடம்ங்கற ஒரு குணம்...

இரவு நேரத்து வானில் ஜிகினாத் தூள் தூவினது போல நட்சத்திரங்கள்! பூனைக்குட்டி வளைய வருகிறாற்போல ஒரு தினுசான காற்று...

ஒரு டைவர்சிக்கு வாழ்வு கொடுக்கறதா நெனைச்சு, மன நோயாளி ஒருத்திகிட்ட மாட்டி கிட்டேன்...

இந்த உலகத்தில் பெரிய கொலைகாரன் ‘டைம்’தான். இரண்டாயிரம் ரூபாய் ரெடிமேட் சட்டையில் வரிகட்டும் பணக்கார சொட்டைத்தலையர்கள்.

இந்த வரிகளில் ஆசிரியரின் அழகுணாச்சி, கூர்ந்தமதி, சொல்லாட்சி, சுட்டித்தனம் அனைத்தும் வெளிப்படுகிறது.

ஒரு திரைப்படம் பார்ப்பது போல, காட்சிகளிலும் உரையாடல்களிலும் அவ்வளவு தெளிவு.

குறைந்த கதாபாத்திரங்களைக் கொண்டு நிறைவாக ஒரு செய்தியைச் சொல்லும் இந்த நாவல் வாசகர்களை நிச்சயம் கவரும் என்று நம்புகிறேன்...

வாழ்த்துக்களுடன்

சிவக்குமார்

திரைப்படக்கலைஞர் - ஓவியர்

சென்னை - 17.

***

# மதிப்புரை

திரு.மா.மு.துரைசாயி
(துணைப்பொது மேலாளர், சுந்தரம் பாஸனர்ஸ் லிமிடெட்)

நான் தமிழ் நாவல்கள் படித்து பல வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் ஒரு முன்னணி நாவலாசிரியரின் படைப்புக்கு முன்னுரை எழுத முதலில் தயங்கினேன். "என்னை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்ற என் கேள்விக்கு ஆசிரியர் சொன்ன காரணங்களில் மிகவும் என்னைக்கவர்ந்தது – "உங்களைப்போன்றவர்கள்தான் சம்பிரதாய கோட்பாடுகளை மீறி உண்மையான உறைகல்லாக இருக்க முடியும். எனக்கு உங்களுடைய வெளிப்படையான விமர்சனம் தேவை"என்றார்.

என்னால இந்த அம்புலிப்பயணத்தை அனுபவித்து, துல்லியமாக உணரமுடியும்; காட்சிகளைத்தெளிவாகக் காணமுடியும்; ஆவலோடு கேட்பவர்களுக்கு ஒரளவு பேச்சுத்தமிழில் புரியவைக்கவும் முடியும்; ஆனால் முன்னுரை எழுதுமளவிற்கு என்னிடம் வார்த்தை வசதியில்லையே; வேண்டுமென்றால் நான் படித்துவிட்டு, என்கருத்தைத்தங்களிடம் நேரிடையாகப்பகிர்ந்து கொள்கிறேன் என்றேன். அதற்கு அவர், உங்களிடம் இருப்பது உங்களைவிட எனக்கு சற்று அதிகமாகவே தெரியும்; நீங்கள் முதலில் படியுங்கள்; மற்றவை தானாகவே நிகழும் என்று நம்பிக்கையூட்டினார். நானும் தமிழும் ஒருவரிடமிருந்து ஒருவர் தப்பித்துக் கொண்டவர்கள் என்பது எனக்குத்தானே தெரியும்? எப்படி எழுதப் போகிறோம் என்ற மலைப்பிலேயே சிலநாட்கள் நகர, பொறுப்பை உணர்ந்து ஒரு அமைதியான இரவுப்பொழுதில் அனலாய்க் காயும் அம்புலிகளில் ஆழ்ந்தேன். உறைந்துபோன என் தமிழிலக்கிய தாகம் தலை தூக்கியதை உணர்ந்தேன்.

நான் ஒரு பாலைவனப் பயணி. தோளில் தொங்கும் தண்ணீர்பையை எடுத்து தாகத்தைத் தீர்த்தால் எங்கே என் வேகம் குறைந்துவிடுமோ என்று என்(தமிழ்)தாகத்தைத்

தள்ளிப்போட்டவன். அப்படியொரு வேலைப்பளு – தொழில் சங்கடங்கள். இந்த தொடர்பயணத்தில் ஏற்பட்ட இலக்கிய இடைவேளைதான் இந்த அம்புலிகள்.

பச்சை வேர்க்கடலையில் ஒட்டியிருக்கும் ஈரமண்ணை ரசித்து, ரசித்து முகர்ந்துபார்த்துவிட்டு, “அப்பா எனக்கு இந்த வாசனைரொம்ப பிடிக்கும்”என்று என் குழந்தை சொல்லும் பொழுதும்; பசுக்களைப் பார்க்கும் போதெல்லாம் காரணமில்லாமல் அவன் பரவசப்படும் பொழுதும் அவனுள் இருக்கும் பாரம்பரிய படிமானங்கள என்னை அதிசயப்படவைத்திருக்கிறது. மேலும், நம் ஒவ்வொருவருக்குள்ளும் பாரம்பரிய வித்துக்கள் உறைந்து கிடக்கின்றன என்ற உண்மையையும் உணர்த்தியிருக்கிறது. ஈரமும், வெப்பமும் கிடைத்த மாத்திரத்தில் அவ்வித்துக்கள் உயிர்ப்பித்துக் கொள்கின்றன என்பதை இப்பொழுது உணர்கிறேன். என்னுள் உறைந்துகிடந்த என் தமிழிலக்கிய வித்தை முளைத்து எழவைத்த அந்த வெப்பமும், ஈரமும்தான் ஆசிரியர் இந்திராவின் ‘அனலாய்க் காயும் அம்புலிகள்.’

தெளிவான முற்போக்கு சிந்தனை கொண்ட ஒரு இளைஞனும் வசதியான வீட்டில்பிறந்த பெண்ணிற்குண்டான லட்சணங்கள் துளிகூட இல்லாமல், வாழ்க்கை தனக்களித்த சோதனைகளை சாதாரணமாக எதிர்கொண்ட ஒரு பெண்ணும் சந்தித்த கதைதான் அனவாய்க் காயும் அம்புலிகள். அரவிந்தன், ரம்யா, ராம்நாத், சரண்யா மற்றும் ஞானப்பிரகாசம் இவர்களையெல்லாம் நான் நெருங்கிப்பார்த்திருக்கிறேன், பழகியிருக்கிறேன். என்ற உணர்வு ஏற்படுகிறதே தவிர, இவர்கள் கதாப்பாத்திரங்கள் என்று எண்ணிப்பார்க்கக்கூட மனம் துளிகூட துணியவில்லை. ஒரு சினிமா இயக்குனர் தன் கற்பனைகளுக்கு காட்சி அமைப்புகளின் மூலம் வடிவம் கொடுத்துவிடலாம். ஆனால், ஒரு கதாசிரியரோ தன் பாத்திரங்களுக்கு தன்னுடைய எழுத்தின் மூலமே உயிர் கொடுக்க முடியும். இதற்கு துல்லியமான காட்சி அமைப்பும் அதை சித்தரிக்கும் வார்தைச் செரிவும் மிகமிக அவசியம். இதில் ஒவ்வொரு பாத்திரங்களின் உருவ அமைப்புகள், வாழ்க்கை முறைகள், பேசும் விதங்கள், அவர்களின்

தொழில் பற்றிய ஞானம் உளவியல் அம்சங்கள் போன்ற எண்ணற்ற கூறுகளின் நேர்த்தியான கலவைதான். அத்தகைய பாத்திரங்களுக்கு உயிரூட்டுகின்றன. கதையின் கருவுக்கேற்ற விஞ்ஞான விஷயங்கள் சமூகவியல், வாழ்வியல் சரித்திரம், நாகரிகம் மற்றும் தொழில் தொடர்பான விஷயங்களில் ஆழமாகச் சென்று ஆராய்ச்சி செய்தால் தான் இந்த படைப்பு பிரம்மாக்கள் வெற்றி பெற முடியும். அத்தகைய படைப்புக்கள்தான் சிறந்த இலக்கியப்பரிசைப் பெறமுடியும். இந்த இலக்கை இந்திராசௌந்தரராஜனின் ‘அனலாய்க் காயும் அம்புலிகள்’ விஞ்சி விட்டன். இந்திராசௌந்தரராஜனின் இந்த பாத்திர படைப்புகள் உயிருடன் என் உணர்வில் கலந்து வாழும் நிஜங்களாகவே நினைக்கிறேன். எப்படி ஒரு கர்நாடக சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள் உள்ளத்தை வருடுகிறதோ. அதேபோல் உணர்வுபூர்வமாக படைத்த இந்த பாத்திரங்கள் உள்ளத்தைத் தொட்டு கண்களைக் கலங்க வைக்கின்றன. வலுவான பாத்திரங்கள் மட்டுமல்லாமல் கதையில் பல சமுதாய கோணங்களைச் சித்தரித்து அதனால் ஏற்படும் சிக்கல்களை, தன் முற்போக்கு சிந்தனையுடனும், மதியூகத்துடனும் சரிசெய்து முடித்திருப்பது ஒரு நல்ல எழுத்தாளரின் கைவண்ணத்தையும் பாத்திரங்களின் கேரக்டர்களுக்குள் புகுந்து, அவர் களுடைய மனோபாவங்களையும் பழக்கவழக்கங்களையும் ஆராய்ந்து பார்த்து வகுத்திருப்பது ஆசிரியரின் சொல்லாற்றலையும் உளவியல் ஆளுமையையும் தெளிவுபடுத்துகிறது. சமூக பிரக்ஞை உள்ள ஒவ்வொரு மனிதனையும் நிம்மதிப் பெருமூச்சு விடவைக்கும் இந் நாவலின் முடிவு.

ஆக மொத்தத்தில் ‘அனலாய்க் காயும் அம்புலிகள்’ இந்திரா சௌந்தரராஜனை சிறந்த நாவலாசிரியராக அடையாளம் காட்டும் ஒரு ஒளிவட்டம். இந்த நாவல் இந்நாட்டின் மிகப்பெரிய இலக்கியப்பரிசைப் பெறும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. என்னைப் போன்ற நாவல் படிக்காதவர்களைக்கூட கவர்ந்த படைப்பு இது. என் தமிழார்வத்தையும், இலக்கிய தாகத்தையும் தூண்டி விட்ட இந்திராவிற்கு என் மனமார்ந்த நன்றிகள்.

தொடரட்டும் உங்கள் படைப்பு பணி.

வாழ்த்துக்கள்!

அன்புடன்

மா.மு.துரைசாமி.

13.3.05

சென்னை.

***

# என்னுரை

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக எழுதி வருகிறேன். எவ்வளவோ கதைகளை எழுதி விட்டேன். சமூகம், சரித்திரம். மர்மம் ஆன்மீகம், அமானுஷ்யம் என்று எல்லா களங்களிலும் வலம் வந்திருக்கிறேன். இதில் சிலகளங்களில் எனக்கு ராஜமுத்திரை விழுந்துள்ளது.

குறிப்பாக சரித்திரம், அமானுஷ்யம் இரண்டிலும் நான் வெகுவாக அங்கீகரிக்கப்பட்டேன். ஆனால் என் மனம் கவர்ந்த சமூக நாவல் தளத்தில் நான் உற்றுதான் நோக்கப்பட்டேன்! இத்தனைக்கும் சமூக நாவல் தளங்களில் நான் பல பெரியபரிசுகளையும் பெற்றவன். கலைமகள் குறுநாவல் போட்டியில் இரண்டுமுறை முதல்பரிசு, என்பெயர் ரங்கநாயகிக்கு தமிழக அரசின் விருது. கிருஷ்ணதாசி தொலைக்காட்சித் தொடர்களில் ஒரு பெரும் வெற்றி பெற்ற தொடர் என்கிற அனேக அங்கீகாரங்கள் கிட்டியும் அமானுஷ்யத்தில் விழுந்த முத்திரை சமூககளத்தில் என்மேல் விழ வில்லை. அப்படி ஒரு ஆதங்கத்தில் நான் இருந்த போது எழுதியதுதான் இந்த ‘அனலாய்க் காயும் அம்புலிகள்’ புதினம்.

கதை முழுக்க மொத்தமே நான்கு பாத்திரங்கள்தான். நடுவில் இரண்டுபேர் வந்து செல்வார்கள். சிலர் ஓரமாய் நிற்பார்கள். ஆனாலும் இந்தக் கதை பலநேரங்களில் என்னை உழுதது. உளவியல் ரீதியாக இக்கதையை நான் அணுகினேன். திடுக்கிடும் திருப்பங்கள் மயிர்க் கூச்செரியும சம்பவங்கள் என்று நான் செயற்கையாக இந்த கதையில் எதையும் செய்யவில்லை. பள்ளம்கண்ட இடத்தே பாயும் மழைநீர்போல சம்பவங்கள் தானாக என்னை இழுத்துச் சென்றன. அனுபவித்து எழுதுவது என்பார்களே... அப்படி ஒரு முயற்சி இது.

கருப்பொருளும் சற்று வித்தியாசமானது!

வயதான ஒரு தந்தை, வயதுக்குவந்த மகளுக்கு திருமணம் செய்துவைக்க பாடுபடுவது உலகில் நடக்கும் ஒரு விஷயம். அந்தத் தந்தைக்கு மகள் திருமணம் செய்து

வைக்க விரும்புவது மாறுபட்ட விஷயம்தானே?

எவ்வளவு நியாயங்கள் இருந்தால் இப்படி ஒரு முயற்சி எடுபடும் என்றும் எண்ணிப்பாருங்கள். நாயகி ரம்யா, நாயகன் அர்விந்த் இருவரும் காதலர்களா இல்லை நண்பர்களா என்பதில் கூட ஒரு சந்தேகம் கதை முழுக்கத்தெரியும்.

மொத்தத்தில் எனக்குப் பிடித்த நாவல் வரிசையில் இதுவும் ஒன்று. தினமணிக் கதிரில் வெளிப்பட்டு நல்லதொரு பார்வையை எனக்கு பெற்றுத்தந்தது.

அதன் பொறுப்பாசிரியர் இளைய பெருமாள் வித்தியாசங்களை மிக ஊக்கப்படுத்துபவர். என்னைக் கொண்டு ஒரு மர்மக்கதையைக் கேட்கவில்லை. உங்களை நீங்கள் உயர்த்திப்பிடிக்க இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்றார். அவருக்கு இவ்வேளையில் எனது நன்றிகள்.

ஒவ்வொரு அத்தியாய முகப்பிலும் கதைக்கு ஏதோ ஒருவகையில் உதவும் சான்றோர் பெருமக்களின் சிந்தனைகளை டுநுயுனு ஆக வைத்தேன். விருந்து சாப்பிட்ட சில மணிநேரத்திற்கு பிறகும் சில சுவையான துணுக்குகள் பல்லிடைத்தங்கி வெளிப்பட்டு உள்வாயில் ஒரு வித வாசத்தை மூட்டும். சொற்ப அந்த நொடிகளை எல்லோருக்கும் மிக பிடிக்கும். அப்படி ஒரு வாசம் மூட்டும் சிந்தனைகள் இந்த டுநுயுனு’கள்.

அச்சிந்தனைகளுக்கு உரியவர்களை இவ்வேளையில் எண்ணிப்பார்த்து என் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

பெரும்பாலும் என் நாவல்களுக்கு நான் மதிப்புரைகளை அமைப்பதில்லை. கோட்டைப்புரத்து வீடு, ரகசியமாய் ஒரு ரகசியம், பாண்டிய நாயகி, ஐந்துவழி மூன்றுவாயில் என்கிற சில நாவல்களுக்கு மட்டும் மதிப்புரை அமைத்து அந்த நாவல்களுக்கும் பெருமை சேர்த்தது.

இந்த நாவலுக்கு ஒரு மதிப்புரை இருந்தால் அழுத்தமான ஒரு பார்வை பெறும் என்று உள்ளுணர்வு சொன்னது.

யாரிடம் கேட்கலாம் என்று நான் சிந்தித்த போது எனக்கு நுணுக்கமாய் தோன்றியவர் தான் நடிகர் சிவக்குமார் அவர்கள்.

ஒரு பிரபல நடிகராக, அதன்பின் ஒரு ஓவியராகத் தான் இவரைப் பலரும் அறிவார்கள். ஆனால் இவர் ஒரு தேர்ந்த சிந்தனையாளர், மிகச்சிறந்த யோகாசன நிபுணர், தேர்ந்த படிப்பாளி, திட்டமிட்ட செயல்காரர், நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் குறிப்பிட்டது போல எதிரிகளே இல்லாத ஒரு அரிய மனிதர்.

திரைப்படத்துறையில் மனதில் பட்டதைப் பேசிக் கொண்டு ஒழுக்கமுடன் வாழ்வது எவ்வளவு சிரமம் என்பது நமக்குத்தெரியும். திரு.சிவக்குமார் அந்த சிரமத்தை சிரமமேயின்றிக் கடந்தவர். அவரிடம் நான் மதிப்புரை வேண்டியபோது மகிழ்வோடு சம்மதித்தார். ஆழ்ந்து வாசித்து முடித்து, சொன்ன நேரத்தில் மதிப்புரையை வழங்கி என்னைக் கௌரவித்தார்.

அவரது நூலகத்தில் என் நூல்கள் இருப்பது எனக்கு மிகப்பெருமையான ஒரு விஷயம். அவருக்கும் என் இதய நன்றிகள் என்றும் உரியது.

நடிகர் சிவக்குமாரைப் போலவே என் மதிப்புக்குரிய சிறந்த ஒரு சிந்தனையாளர் திரு.மா.மு.துரைசாமி அவர்கள். மனங்களை ஊடுருவுவதில் வல்லவர். தமிழ் ஆர்வலர். பொருள் பொதிந்த புதுக்கவிதைகளுக்குச் சொந்தக்காரர். இவரது பணியும் கூட பர்சனல் டிபார்ட்மெண்டில் மனித உறவு முறைகளையும் அவர்களின் எண்ண நலன்களையும் பராமரிப்பது தான். இவரால் உளவியல் ரீதியான படைப்பைச் சரியாக எடையிட முடியும் எனக் கருதினேன். தயங்கித் தயங்கியே தங்கம்போல எடையிட்டுவிட்டார். இவருக்கும் என் நன்றிகள்.

இதை நல்லதொரு நூல்வடிவில் வெளியிடும் திருமகள் பதிப்பகத்தாருக்கும் இவ்வேளையில் நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்.

நன்றி

அன்புடன்

இந்திரா சௌந்தர்ராஜன்

10.3.2005

மதுரை-3

***

# 1

'அகண்டு விரிந்து பரந்து ஓடுகின்ற தண்ணீரின் ஓட்டம்தான் காவேரி. தண்ணீர் தரையில் ஓடும்போது நதியாக இருக்கிறது. ஓடும் நதிக்கு தோஷங்களும் கிடையாது. அதன் விசேஷங்களும் வேறு விதமானது. ஆனால் அதையே தேக்கி நிறுத்தி, குளமாக மாற்றிவிட்டால் நாளாவட்டத்தில் நாற்றமடிக்கத் தொடங்கிவிடுகிறது. பாசி படிய ஆரம்பிக்கிறது. கொசுக்கள் வந்து முட்டையிடத் தொடங்கிவிடுகின்றன. ஓடிக்கொண்டேயிருக்கும் வரையில் இருந்த சிறப்பு தேங்கும்போது நீங்கி விடு கிறது. வாழ்க்கைக்கும் இது பெர்ருந்தும்.'

-பரமஹம்ஸ ஸ்ரீ நித்யானந்தர்

அசுரன் ஒருவன் தாம்பூலம் போட்டு விட்டுத் துப்பினாற்போல் இருந்தது கீழ்வானம். அங்கங்கே சாம்பல் தட்டிய மேகப் பொதிகள் வேறு! பார்ப்பதற்கு ரம்யமாக இருந்தது அந்த காட்சி. ராணுவத்தனமாய்ப் பட்சிக்கூட்டம் ஒன்றும் சீரான இடைவெளியில் எங்கோ போய்க் கொண்டிருந்தது. எதற்காக அவை இப்படி ஒரு வித ஒற்றுமையோடும் அணிவகுத்தும் பறக்கின்றன என்று யாருக்குமே தெரியவில்லை.

பூமியில் இருக்கும் மனிதர்கள் தங்களின் இந்த வானத்து அணிவகுப்பைப் பார்த்துச் சந் தோஷப்பட வேண்டும் என்பது அவைகளின் நோக்கமா, இல்லை அவைகளுக்கே அப்படிப்பறந்து திரிவதில் ஒரு திருப்தி கிடைக்கிறதா என்பதெல்லாம் ஆராய்ச்சிக்குரிய கேள்விகளாகத்தான் இருக்கின்றன.

ரம்யாவும் இப்படி ஒரு கேள்வியோடுதான் மொட்டைமாடியில் நின்று கொண்டிருந்தாள். அப்படியே சுற்றி ஒரு பார்வைபார்த்தாள். ஆகாயத்தில் ரசிப்பதற்கு ஆயிரமாயிரம் விஷயங்கள் இருப்பதை அப்போதுதான் உணர்ந்தாள்.

ஒரு பக்கம் மேகக் கவிதைகள்! ஒரு பக்கம் ஒளி ஓவியங்கள்! ஒரு பக்கம் பறவை நீச்சல் ஆகாயமாகிய அது இருக்கிறது இல்லாமலும் இருக்கிறது. எழுதாமல் எழுதப்பட்ட ஒரு மிக பெரிய பக்கம் ஆகாயப்பக்கமாகத்தான் இருக்க முடியும.

ஆனால் எத்தனை பேர் அதைப்படிக்கிறார்கள்...? எத்தனை பேருக்கு அதைப்படிக்கத் தெரியும்? இன்றைய ஓட்டமான வாழ்க்கையில் அண்ணாந்து பார்ப்பதற்கு எங்கே இருக்கிறது நேரம்?

இதெல்லாம் தெரிந்துதான் அந்த வாரப் பத்திரிக்கையில். ‘வானத்தைப் பாருங்கள். பார்த்ததை எழுதி அனுப்புங்கள்’ என்று கூறியிருக்கிறார்களோ?

ரம்யா தனக்குள் கேட்டுக்கொண்டால். கைவசம் பேனவும் பேட் ஒன்றும் இருந்தன. அந்த நெடி, ‘இந்த மாதிரி போட்டிகளிலெல்லாம் பங்கெடுத்துக் கொள்வது என்பது உன்னை மலிவாக்கிவிடும்’ என்றும் ஒரு குரல் மனதுக்குள் எதிரொலித்தது.

மாதம் முப்பது லட்சத்துக்கு, அதாவது தினத்துக்கு லட்ச ரூபாய்க்கு ஆட்டோ மொபைல் காம்பனன்டுகளைத் தயாரித்து விற்பனை செய்யும் ஒரு தொழிலதிபருக்கு மகளாக இருந்து கொண்டு அதற்கேற்ற பரபரப்பும் பந்தாவும் இல்லாமல் வாரப்பத்திரிகை எல்லாம் வாசிப்பதே அபத்தம் என்று கூட ஒரு எண்ணம் தோன்றியது.

இப்படித் தோன்றும் எண்ணங்களுக்கு அவள் ஒன்றும் பொறுப்பில்லை. எல்லாம் மற்றவர்கள் அவளுக்குள் போட்டவை.

அவள் கையில் ஒரு தமிழ் வாரப் பத்திரிகையைப் பார்த்த ஒருவர் “இந்தப் பத்திரிகை எல்லாம் இன்னும் வந்துட்டிருக்கா என்ன?” என்று கேட்ட தொனியே சரியில்லை. அந்த நொடி அப்படிக் கேட்டவரை. அவள் ஒரு முறை முறைத்தாலும் அவளுக்குள் ஒரு சின்னத் தடுமாற்றம்.

தான் மட்டும் இன்னும் இன்றைய நவீன உலகப் பிரஜை ஆகவில்லையோ? மற்றவர்கள் அவ்வளவு பேரும் வெகுவேகமாக மாறி வெகுமுன்னால்போய்விட்டார்களோ...?

இப்படிச் சில கேள்விகள் கேட்டுக் குழம்பித்தான் போனாள். ஆனாலும் அவளது சுயம் அவளை இடித்துத் திருத்தி விட்டது.

'முட்டாளே...'

படிப்பதை மறந்து ஒருவன் கேட்ட கேள்விக்குப் போய் இப்படிப் பாதிப்படைந்து விட்டாயே...நீ தான் மற்றவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டும். உன்னை யாரும் துளியும் பாதிக்க நீ விட்டு விடக் கூடாது.

மீறினால் இயற்கை உன்னைப்பாதிக்கட்டும். எவ்வளவு வேண்டுமானாலும் பாதிக்கட்டும். எந்த ஒரு மனிதனும் உன்னைப் பாதிக்க இடம் கொடுத்துவிடாதே... வாழும் வகை தெரிந்த மனிதன் ஒருவன்கூட இந்தப்பூமியில் இல்லை. அதை நீ முதலில் புரிந்துகொள் என்று அவளுக்குள் ஒருஅவள் அவளுக்கு உபதேசம் செய்து முடித்திருந்தாள்.

அது உண்மைதான்!

இந்த மனிதர்களுக்கு யாருக்குத்தான் வாழும் வகை தெரிந்திருக்கிறது.

வானத்தைப் பார்த்துச் செருமாந்து போனவள் அப்படியே கீழே தெருவைப் பார்த்தாள். ஓட்டமாய் ஓடிக்கொண்டிருந்தார்கள் மனிதர்கள்.

நான்கு வயசை முழுசாக எட்டாத ஒரு குழந்தை முதுகில் யு.கே.ஜி. சுமையோடு தன் பாட்டியின் கையைப்பிடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது.

முன்பெல்லாம் மனிதர்கள் நிறைய நடந்தார்கள். இப்பொழுது அவர்களுக்குச் சக்கரங்கள் தான் கால்கள்! யாரைப்பார், ஒரு மொபெட்டிலோ இல்லை பைக்கிலோதான் பறந்துகொண்டிருந்தனர்.

இல்லாவிட்டால் இந்தப் போட்டி உலகில் பல விஷயங்கள் கிடைக்காமல் போய் ஒதுக்கப்பட்டு விடுவோம் என்று ஒவ்வொருவருமே பயப்படுகிற மாதிரிதான் இருந்தது.

மனிதன் உட்கொள்ளும் நீரின் அளவைவிடக்கூடுதலாய் பெட்ரோலைச் செலவழிப்பது அந்த நெடி ஒரு ரகசியம் தெரிய வருவதுபோல அவளுக்குத்தெரிய வந்தது.

பூமிக்கடியில் எங்கோ பதுங்கி இருக்கும் ஒரு திரவம் அது... திரவ வடிவ நெருப்பு என்று கூடச் சொல்லலாம். அந்த நெருப்பின் உருமாற்றமாய் ஒரே புகை. எங்கு பார் புகை... யாரிடம் பார் புகை... அந்தப் புகை மேலேதானே போயாக வேண்டும். அய்யோ, இப்படியே போனால் இன்னும் சில வருடங்களில் வானத்தின் நிறம் நீலம் என்பது மாறி கறுப்பு என்று ஆகிவிடுமோ? அவள் கேட்டுக்கொண்டாள். திரும்பி வானத்தைப்பார்தாள்.

‘சபாஷ் ரம்யா...!நானும் உன்னிடம் அதைத்தான் கூற நினைத்தேன். என் கவலையை, பயத்தை நீயாவது உன் சக மனிதர்களிடம் சொல்வேன்.

கால்களை இறைவன் கொடுத்திருப்பது நடப்பதற்குத்தானே? தொங்கல் போட்டுக்கொண்டு உட்காரவும் சமயங்களில் பைக்கில் கிக்கரை உதைக்கவும் என்று இன்று உன் மக்கள் கூட்டம் நினைக்கிறதே...?

நூறடி தூரத்துக்கெல்லாம் வானத்தில் போனால், அட உங்கள் உடம்புதான் என்னாகும். என் உடம்புதான் என்னாகும்?

நடராஜர்கள் இப்படியா மடராஜர்களாக இருப்பது...? சொல். போதாக்குறைக்கு வீட்டுக்கு வீடு குளிர்பெட்டிகள். அவை விடும் விஷ வாயு வேறு... இதனால் எனது ஒரே சட்டையான ஓஸோன் சட்டையில் எவ்வளவு கிழிசல்கள் தெரியுமா?

அதனாலேயே மழை மேகங்களாலும் முன்போல வீரியமாகத் திரள முடியவில்லை. அப்புறம் எங்கிருந்து பெய்யும் மழை? எங்கிருந்து காவிரியில் தண்ணீர் ஓடும்?

அப்புறம் அது கர்நாடகத்துக்கு அழைத்துச் செல்லும் மணல்வழிப் பாதையாகிவிடும்... மன்னித்துக் கொள். ஆகிவிட்டது.

உனது மனிதர்களிடம் கொஞ்சம் திரும்பிப் பார்க்கச்சொல். யோசிக்கச்சொல். நான் நீலமாய் இருக்கும் வரைதான் பூமியில் நீங்கள் நலமாய் இருக்க முடியும். எனது சட்டையைக் கிழிப்பதும் என்னை பிச்சைக்காரன் ஆக்குவதும் தொடர்ந்தால், பைபிளில் உலகம் இரண்டாயிரம் சொச்சங்களில் அழிந்துவிடும் என்று சொல்லப்பட்டிருப்பது உண்மையாகிவிடும்.

இதை நீயாவது சொல்... இதுதான் நான் உனக்குச்சொல்லும் சேதி... என்ன காதில் விழுகிறதா?

-வானம் அவளைப் பார்த்துக் கேட்பது போலத்தோன்றியது. உடனேயே பேடைத் திறந்தவள் பேனாவையும் திறந்தாள்.

‘வானம் முதலில் அழகாகத்தான் இருந்தது. அப்புறம் அது அழத் தொடங்கிவிட்டது. நாம் அதன் நீல நிறத்தை மாற்றி கறுப்பாக்கிக் கொண்டிருக்கிறோமாம். அதற்கென இருப்பது ஒரே ஒரு சட்டைதானாம். ஓசோன் என்பது அதன் பெயராம். அதை நாம் கிழித்துக் குதறி அதைப் பிச்சைக்காரனாக்கி விட்டோமாம். அதனாலேயே மழை மேகங்களால் வலுவாகத் திரள முடிய வில்லையாம். இப்படியே போனால் பூமி அழிந்து, பைபிளில் சொல்லப்பட்டிருப்பது போல உண்மையாகிவிடுமாம்.

எந்திரமாகிவிட்ட மனிதன் கொஞ்சமாவது சுதந்திரமாக இயற்கையை மதித்து அதோடு ஒன்றி வாழக் கற்றுக்கொள்ளவேண்டும். மறுத்தால் பூமியில் நமக்கு வாழ்க்கை இல்லாமல் போய்விடும் என்றது!’

-சுருக்கமாகவும் இறுக்கமாகவும் எழுதியவள் அப்படியே அந்தத் தாளைக் கிழித்து ஒரு உறையில் போட்டு வாராப் பத்திரிக்கைக்கு அனுப்பவும் தயாராகிவிட்டாள்.

அதற்காகக் கீழே வந்தாள்.

விசாலமான பங்களா. முகப்பில் போர்டிகோவில் அவள் பயன்பாட்டுக்கென உள்ள ஜென் மாருதி கார்.

தோட்டத்தில் தோட்டக்காரன் தண்ணீர் பீய்ச்சிக் கொண்டிருந்தான். கிணற்றிலும் புதிதாய்ப் போட்ட போரிலும் கூடத் தண்ணீர் போய்விட்டது. லாரியில் மூன்று நாளைக்கு ஒருமுறை தண்ணீர் வருகிறது. அந்தத் தண்ணீரைத்தான் தோட்டக்காரன் பீய்ச்சிக் கொண்டிருந்தான். அவளுக்கு அதைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது.

அவள் அப்பாவான ராம்நாத் கூட "ஆயிரம் ரூபாக்குத் தண்ணி வாங்கி செடிக்கெல்லாம் விடனுமாம்மா?" என்று கேட்டிருந்தார்.

"ஷ்யூர் டாடி... சாப்பிடாம இருக்கோமா? நமக்குக்கூடப் பரவால்ல... எங்க இருக்கோ, எங்க எது கிடைக்குமோ அங்க தேடிப்போய் சாப்பிட்டுட்டு வந்துடுவோம். ஆனா இந்த மரங்களால, செடிகளால அப்படி நடந்த போய் கிடைக்கிற இடத்தில் சாப்பிட்டுட்டு வரமுடியுமா? நம்பளை நம்பித்தானே அது வளர்ந்திருக்கு. அதை நாம ஏமாத்தலாமா?" என்று கேட்டு அவர் வாயை அடைத்து விட்டாள்.

அவர்கூட, சரியான பெண் வள்ளலார்தான் தனக்கு மகளாக வந்து பிறந்திருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டார்.

அப்படி ஒரு பெண் வள்ளலாரான ரம்யாவுக்கு என்ன தோன்றியதோ, தான் எழுதிய வானம் பற்றிய குறிப்புக்குக் கீழே தன் புனைபெயராக 'வள்ளலாரிணி' என்றே எழுதித்திருத்தம் செய்தாள். அப்படியே அதைத் தபாலில் சேர்ப்பதற்காக பங்களாவை விட்டும் நடக்க ஆரம்பித்துவிட்டாள்.

மெயின் கேட்டில் இருந்து ஓடிவந்தான் வாட்ச்மேன்.

"அம்மா... எங்கம்மா கிளம்பிட்டீங்க?"

"போஸ்ட் ஆபீஸ் வரை போய்ட்டு வரேன் பெரியசாமி..."

“குடுங்கம்மா நான் போய் போட்டுட்டு வரேன்.”

“இல்ல... இதை நான் நடந்து போய் போஸ்ட் பண்ணினாத்தான் வானம் என்கிட்ட பேசினதுக்கே ஒரு அர்த்தம் கிடைக்கும். இல்லேன்னா பாவம் வானம்... என்னைப் பார்த்து வருத்தப்படும்.”

-அவள் பேச்சு அவனுக்கு விளங்கவே இல்லை. “வானம் பேசிச்சாமே... என்னடா கூத்து இது? அம்மாக்கு மறை லூசாயிடுச்சா?”-வாய்விட்டான். அவளோ சாலையில் இறங்கிவிட்டாள். கைவசம் அந்தக் காகித உறை. வள்ளலாரிணியிடம் வானம்சொன்ன சேதிகொண்ட உறை! பத்திரிகையிலும் படித்துவிட்டுச் சிரிக்கப் போகிறார்கள். ஹீம்... என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ?

ரம்யாவிடம் பத்திரிகை பற்றிய கவலையெல்லாம் இல்லை. தன் பிரக்ஞைகளுக்கு முதலில் தானே ஒரு வடிகாலாய் இருப்போம் என்று அவள் தீர்மானித்துவிட்டது போலத் தோன்றியது. வாஸ்தவத்தில் போஸ்ட் ஆபீஸ் எங்கு இருக்கிறது என்றே அவளுக்குத் தெரியாது.

நடைபெற்றுக் கொண்டிருப்பது ஒரு கூரியர் தபால் யுகம். அரசாங்கமும் ஜனங்களும் பேசாமல் பேசிக்கொண்டு தபால் துறையை அழித்து வருகிறார்கள். ஒரு கார்டு போட்டால் போய்ச்சேர நாலு நாள். அதன்பின் எதற்காக கார்டு எழுதப்போகிறோம்?

தபால்துறை பற்றி இப்படிப் பொதுவான கவலை தரும் விஷயங்கள் இருந்தாலும் ரம்யா அதுபற்றி அனுபவப்படாததால் போஸ்ட் ஆபீஸைத் தேடிக்கொண்டு ஓடினாள்.

அதுவும் கண்ணில் பட்டது. ஸ்டாம்ப் வாங்கி ஒட்டப்போகும் போதுதான். பணத்துடன் வராமல் வந்துவிட்டது ஞாபகத்துக்கு வந்தது.

‘ஐயய்யோ...’ கையை உதறிக்கொண்டாள்.

நாக்கையெல்லாம் மடித்துக் கடித்தாள். வெட்கமாகக்கூடப்

போய்விட்டது.

“அவசரத்துல பணம் எடுத்துகிட்டு வர மறந்துட்டேன்... சாரி” என்றபடியே கவருடன் திரும்பத் தொடங்கினாள். எதிர்பாராமல் அவன்மேல் மோதி நின்றாள்.

அவன்...?

அதிகபட்சமாக இருபத்தி எட்டு வயது இருக்கலாம்.

இப்பொழுதெல்லாம் வகிடு எடுக்காமல் அப்படியே வழித்து வாரிக்கொள்வதுதான் நாகரிகமோ என்னவோ... அவனும் அப்படித்தான் இருந்தான். ஆனால் சந்தனம், குங்குமம் என்று நெற்றியில் ஆலய அடையாளங்கள். கண்களில் ஒரு ஒளிர்மை.

“சாரி... சாரி...வெரி சாரி...” அவனிடமும் அவளது சாரி தொடர்ந்தது.

கையில் இருந்த கவரும் கீழே விழுந்துவிட்டது. அவன் குனிந்து அதன் முகவரியைப் பார்த்தபடியே எடுத்து அவளிடம் தந்தான்.

“தேங்க்ஸ்...”

“கவர்ல ஸ்டாம்ப் ஒட்டலை போல இருக்கே?”

“அ... ஆமாம். வீட்ல இருந்து புறப்பட்ட அவசரத்துல பர்ஸை எடுத்துக்க மறந்துட்டேன்...”

-அவள் சொல்ல, அவன் அவளது அனுப்புநர் முகவரியைக் கவனித்தான்.

‘வள்ளலாரிணி,

ரம்யா பேலஸ்,

9, பாரதியார் தெரு,

தி.நகர், சென்னை-17.’

முகவரியில் இருந்த பெயரும், ரம்யா பேலஸை அவள் வீடு என்று குறிப்பிட்டதும் ஒரு மென்முறுவலை ஏற்படுத்தியது.

“நீங்க...?”

“நான் ரம்யா...”-அவள் தயக்கத்துடன் பெயரைக் கூறிவிட்டு அங்கிருந்து விலகக் கால் எடுத்தாள். அதில் மட்டும் நல்ல வேகம்.

“ஒரு நிமிஷம்...” –அவன்தான் தடுத்தான். அவளும் திரும்பினாள். அந்த நொடியில் அவளது பின்னிய கூந்தல் பின் முதுகில் இருந்து முன் மார்பு மேல் ஒரு வித ஸ்லோமோசனில போய்ப் படிந்துகொண்டது. அந்தக் காட்சி அவனைச்சற்றுக் கிறக்கியது. அதற்குண்டான ரசனையோடு வாயைத்திறந்தான்.

“நீங்க ஸ்டாம்ப் ஒட்டத் தேவையில்லை. அந்தக் கவரை என் கிட்ட கொடுங்க. இதுக்காக நீங்க உங்க வீட்டுக்குப்போய்ட்டு வரவேண்டாம்.”

-அவன் பதிலில் அவள் முகத்தில் சற்றுத் திகைப்பு.

“தப்பாப் புரிஞ்சுக்க வேண்டாம்... நீங்க அட்ரஸ் பண்ணியிருக்கிறது எங்க பத்திரிகைக் குத்தான் நான் ‘திருமகள்’ பத்திரிக்கையோட ரிப்போர்ட்டர். அப்புறம் சப் எடிட்டர் எல்லாமே...”

அவன் பதில் அவள் கண்களை அகட்டியது. அவள் எங்கே நம்பாமல் போய்விடுவாளோ என்று ஐடென்டிட்டி கார்டை வேறு எடுத்துக் காட்டினான்.

“ஓ... நீங்க... நீங்கதானா?”

-அவள் குதூகலமானாள். அவன் தன் ஹேண்ட்பேக்கில் இருந்து கத்தையாகச் சில கடிதங்களை எடுத்து ரெஜிஸ்தர் தபாலுக்காகக் கவுண்டரில் இருந்தவரிடம் கொடுத்துவிட்டு, அவள் நீட்டிய கவரை வாங்கிக்கொண்டான்.

அவளிடம் ஒரு தவிப்புத் தெரிந்தது.

“என்ன ஏதாவது கதையா?”

“இல்ல... அந்த ‘வானத்தைப் பாருங்கள்’ போட்டிக்கு...”

“கவர்மேல ‘வானத்தை பாருங்கள் போட்டிக்கு’ன்னு எழுதணுமே...” –சொல்லிக்கொண்டே அவனே எழுதினான்.

“சாரி... சாரி...”

“நிறைய சாரி கேக்கறீங்க. இரண்டுவிதமான மனிதர்கள்தான் லை ஃப்ல சாரியை அதிகம் பயன்படுத்தவாங்க. கொஞ்சம்கூட சீரியஸ்நெஸ் இல்லாதவங்க முதல் கேடகரி. ரொம்ப பெரிய மனசு உள்ளவங்க இரண்டாவது கேடகரி. நீங்க...?”- அவன் கேட்ட விதம், இல்லையில்லை மடக்கியவிதம் அவளுக்கு மிகப் பிடித்துவிட்டது. அப்படியே வெட்கத்துடன் திரும்பினாள். சாலையில் மாருதி கார் ஒன்றில் ஒரு வயதான பெண்மணி, ஆனால் தூக்கலான மேக்கப்பில் அவளையே வெறித்தபடி போய்க் கொண்டிருந்தாள். ரம்யாவின் கண்களிலும் கண்ணீரின்- ஊற்று!

# 2

‘ஒரு பிடி உணவைக் கொடுத்து இதனை ரத்தமாக்கிக் கொடுங்கள் என்று சொன்னால் ஒரு விஞ்ஞானியில் கூட அதைச் செய்ய முடியாது. ஆனால் அனைத்தூடுருமாகின்ற, அனைத்துமாகின்ற, அனைத்துமாகின்ற பாய்மப் பொருளான இறைநிலைக்கோ, இவையெல்லாம் மிக எளிதான செயல்கள்!’

-வேதாத்தரி மகரிஷி

காரில் போன பெண்ணும், அவள் பார்வையும் ரம்யாவை ஒரு மெல்லிய அதிர்ச்சிக்குள் பிடித்துத் தள்ளியதுபோல் இருந்தது. அவனும் கவனித்தான்.

“எக்ஸ்யூஸ் மீ…அந்த கார்ல போறவங்கள உங்களுக்குத் தெரியுமா?” – கோட்டான்.

அவளிடம் உறை கட்டிக்கொண்டது போல ஒருவித மௌனம்.

“உங்களைத்தாங்க… யார் அவங்க? எதுக்காக உங்களை இப்படி முறைச்சுப் பார்த்துகிட்டுப் போறாங்க?” திரும்பவும் கேட்டான். இருந்தும் அவளது மௌனம் உடையவில்லை. மாறாகக் கண் களில் கண்ணீர் ஊற ஆரம்பித்திருந்தது.

அவனுக்கு விளங்கிவிட்டது.

இது ஏதோ ஒரு ஆழமான விஷயமாகத்தான் இருக்க வேண்டும்!

“சாரி மேடம்…”என்று ஒரு வார்த்தையோடு அவளுடனான தொடர்பையும் துண்டித்துக் கொண்டவன் திரும்பினான். கவுண்ட்டரில் அவனது கவர்களுக்கு ரசீது போட்டுத் தயாராக வைத்திருந்தார் போஸ்ட் ஆபீஸ் க்ளார்க்.

ரசீதைத் தரும்போது சன்னமாகச் சிரித்தார்.

“ரொம்ப நன்றி.”

“ஏன் சார்...இதுக்கெல்லாம் நீங்க வரணுமா? உங்க ஆபீஸ் பாயை அனுப்பலாமே...” - க்ளார்க்தான் கேட்டார்.

“அவருக்குக் கல்யாணம்ங்க. ஒரு வாரம் வரமாட்டார். வேற நபர்கிட்ட தரலாம். அவங்க நாங்க என்ன ஆபீஸ் பாயான்னு கேட்கலைன்னாலும் தங்களுக்குள்ள நினைச்சுக்கலாம். அதுக்கு நான் வர்றது நல்லது இல்லையா? பத்திரிகைத்துறையைச் சேர்ந்தவங்க எல்லா வேலைக்கும் தயாரா இருக்கனும். கேவலம்கறது இந்த வேலையைத்தான் நான் செய்வேங்கறதுல இல்லை. செய்யமாட்டேங்கறதுல தான் இருக்கு.”

அவன் பதில் அவரைக் கூட கொஞ்சம் குத்திவிட்டது. போஸ்ட் மாஸ்டருக்கும் அங்கே வெளிப்படையாகவே ஒரு இடைவெளி. அது அவர் முகத்தில் பளிச்சென்று தெரிந்தது. அவனும் திரும்பினான்.

ரம்யா போய்விட்டிருந்தாள்.

வெளியே வந்து சாலையைப் பார்த்தான்.

யார் யாரோ தெரிந்தவர்கள். அவளது உருவம் கண்ணில் படவில்லை. கொஞ்சம் போல அவள் நினைப்பு அவனுக்குள் பீறாயத் தொடங்கியது.

ஒரு பணக்காரப் பெண் வானத்தை பார்த்தெல்லாம் சிந்திக்கிறாள்! அதை ஸ்ரத்தையாகப் பத்திரிகைக்கு எழுதியும் அனுப்புகிறாள். பீஸா கார்னரில் பாய்ஃப்ரண்டுடன் கடலைபோடுவதுதான் தற்போதைய பணக்காரப் பெண்களின் சுதந்திர நியாயம். குறிப்பாகத் தலையை வாரிப் பின்னிக் கொள்ளக் கூடாது. கட்டாயமாகப் புடவை கட்டிக்கொள்ளக் கூடாது. தொடைப் பக்கத்தில் வெளிறிவிட்ட ஃபேடட் ஜீன்ஸ்தான் நித்ய வஸ்த்ரம். ஜென் மாருதியில் மைக்ரோ ஜாக்ஸனை ஹியரியபடி செல்ஃப் டிரைவ் செய்வதும், டிராஃபிக்கில் சிக்கும் போது, ‘புல்ஷிட், இடியட்ஸ், டர்ட்டி இண்டியா’ என்று முணுமுணுக்க வேண்டும் என்பதெல்லாம் தான் அவன் பார்த்துவரும் லட்சணங்கள். ரம்யா மாறுதலாகத் தெரிந்தது அவனுக்குள், ஒரு சுகத்தைப் பரப்பியிருந்தது. கையில் அவள் தந்த அந்த

‘வானத்தைப் பாருங்கள்’ கவர்.

அங்கேயே உடைத்துப் படிக்கக்கூட மனது பரபரத்தது. இருந்தும் அடக்கிக்கொண்டான். இவ்வளவுதூரம் தனித்துவத்தோடு தோன்றியவள், அந்தப்போட்டியிலும் தனித்துவத்தோடு வெற்றி பெறக்கூடும் என்றும் நம்பினான்.

அப்படியே தான் ஏறிவந்த பைக்கை உதைத்துக் கொண்டு கிளம்பினான்.

அந்த நொடி அவனுக்கொரு புதுக்கவிதைதான் ஞாபகத்திற்கு வந்தது.

‘பிரம்மா... இனி மனிதர்களுக்கு கால்களைத் தனியே படைக்காதே. அங்கே ஒரு சக்கரம் பொருத்த வழி இருக்கிறதா என்றுபார். ஏன் என்றால் உன் கால்களை இன்று மனிதர்கள் பணன்படுத்துவதேயில்லை! அவர்கள் சக்கரங்களுக்கு மாறிவிட்டார்கள்.’ – யாரோ ஒருவர் பத்திரிகைக்கு எழுதி அனுப்பியிருந்தார் நல்ல கருப்பொருள். ஞாபகத்தில் பசை போட்டு ஒட்டிக் கொண்டுவிட்டது.

கவிதையைத் தொடர்ந்து திரும்பவும் ரம்யாவின் நினைப்புதான். அவள் எதனால் அழுதிருப்பாள்? யார் அந்த கார்க்காரப் பெண்மணி...?

போர்ட்டிகோவைக் கடந்து வீட்டுக்குள் பிரவேசிக்கும் போது போர்ட்டிகோவில் தெரிந்த ஃபோர்ட் ஐகான் அவள் அப்பா ராம்நாத் வந்துவிட்டதை ஊர்ஜிதம் செய்தபடி நின்று கொண்டிருந்தது.

உண்மைதான்!

ஹாலில் ராம்நாத் தெரிந்தார். கூடவே அவரது அத்யந்த நண்பர் ஞானப்பிரகாசம். பிரகாசம் டிவிஎஸ் நிறுவனம் ஒன்றில் ர்சுனுயில் சீனியர் ஜெனரல் மேனேஜராக இருப்பவர். ஏதோ அவரைப் பார்த்தாலே சிந்தனை, எண்ணங்கள், அறிவு, பழமொழிகள் என்று பல மின்னல்கள் ரம்யாவுக்குள் தோன்றும். அவரது எடை எழுபது கிலோ.

அதில் அறுபது கிலோவுக்கு அவர் புத்தி மட்டுமே உடையவர் என்பது ரம்யாவின் எண்ணம்.

“வாங்க அங்கிள்...”

“நான் வர்றது இருக்கட்டும். நீ எங்கபோய்ட்டு வரே?”

“போஸ்ட் ஆபீஸ்க்கு அங்கில்...”

அடுத்த நொடி ஞானப்பிரகாசம் வெகு ஆச்சரியமாக அவளைப் பார்த்தார்.

“என்ன பாக்கறீங்க?”

“என்ன பத்திரிகை எதுக்காவது ஆர்ட்டிகிள் எழுதி அனுப்பினியா?”

“எக்ஸாட்லி.” பதிலோடு அவள் ராம்நாத்தைப் பார்த்த போது அவர் தலை தொங்கிப் போயிருந்தது. கோட்டின் மார்புப் பாகத்தில் கோட்டுவாயிலிருந்து ஒழுகிக் கொண்டிருந்த மதுவோடு கூடிய எச்சலின் ஈரப்பதம்.

“என்ன அங்க்கிள். இன்னிக்கும் அப்பா ரொம்ப ஓவரா குடிச்சிட்டாரா?”

“ஆமாம்மா... இப்பல்லாம் இவன் குடிக்கற அளவு கூடிகிட்டே போகுது. காரணம் கேட்டா அழுகிறான். ஆனா ஒண்ணு உறுதிம்மா. எப்பவாவது சில நாட்கள்தான் இவன் இப்படி நடந்துக்கறான். நேத்துப்பாரு... என்னை கார்ல அள்ளிப் போட்டுகிட்டு வடபழனி கோவிலுக்குப் போனான்.

நான் எந்த சாமியையும் எதுக்காவும் பார்த்து தொந்தரவு பண்றதில்லை. இவனோ, ‘வாடா... வந்து கும்பிடு...நீ பெரிய புத்திசாலிங்கற கர்வம்லாம் வேண்டாம்’னு எனக்கும் ஒரே அட்வைஸ். நானும் இவனுக்காகக் கும்பிட்டேன்னு வைச்சுக்கையேன்... அப்புறமா மனம் விட்டுப் பேசினான். உனக்கு நல்ல இடத்துல கல்யாணம் பண்ணிக் கொடுக்கணும். பிசினஸை இன்னும் டெவலப் பண்ணணும் அப்படி இப்படின்னுல்லாம் ரொம்ப எந்தூசியாஸ்ட்டிக்கா பேசினான். அதுதான் இவன் ரியல் கேரக்டர். ஆனா

இன்னிக்கு ஆபீஸ்லையே பாட்லைத் திறந்திருக்கான்.

“சம்திங் ராங்!”

ஞானப்பிரகாசம் ஒரு சர்கம் வாசித்தார். அப்படியே, “நீ கூட டல்லா இருக்கியே ஏன்?” என்றும் கேட்டார்.

“ஒண்ணுமில்ல அங்க்கிள்... நடந்து போய்ட்டு வந்தேன் இல்லையா? அந்தக் களைப்பு.” சமாளித்தாள்.

“சரிம்மா. கவனமா பார்த்துக்கோ, டாக்டர் வேற இவன் ஹெல்த் பத்தி நிறையவே கவலைப்பட்டுப் பேசியிருக்கார். நீ தான் இவனைப் பாத்துக்கணும், வேற யார் இருக்கா?”

அவர் பேசாமல் போயிருக்கலாம். ‘வேற யார் இருக்கா?’ என்று கேட்டதில் ஒரு பாரமான நங்கூரம் ஒன்று அவள் மனதில் விழுந்தாற் போல் இருந்தது.

ராம்நாத்திடமோ ஸ்மரணையே இல்லை.

கோட்டுவாய் ஒழுகலுக்கும் குறைவில்லை.

மளமளவென்று அவரைச் சீர்திருத்த ஆரம்பித்தாள். இறுதியாக அவரை படுக்கை அறைக்குக் கொண்டு போய் படுக்க வைத்து ஏ.சி.யையும் ஆன் செய்தாள். அறைக்கதவு வரை போனவள் திரும்ப வந்து அவரது வயிற்றைச் சற்று அமுக்கிப் பார்த்தாள். ஒரு மாதிரி கூர்மையாக யோசித்தவள் அதன்பிறகு மளமளவென்று இயங்கத் தொடங்கிவிட்டாள்.

அடுத்து அவள் கால்வைத்தது அடுப்படியில்தான். அருமையான கிச்சன் அறை அது!

பார்க்கும் இடமெல்லாம் நவீனம். கூடவே சட்டி, பானை என்கிற பழமையுடன் கும்முட்டி கரி அடுப்பும் கண்ணில் பட்டது. அறையில் ஒரு கரும்பலகை.

அதில், ‘சமையல்தான் உண்மையான முதல் கலை’ என்று ஒரு பளிச் ஸ்லோகன். ஃபிரிட்ஜின் மேல் இன்டர்காமும் இருந்தது. அதில் வாசலில் உள்ள வாட்ச்மேனை

அழைத்தாள்.

“பெரியசாமி, நான் கிச்சன்ல இருக்கேன். செடிக்கு நீ இன்னிக்குத் தண்ணி விட்டுடு...” என்றாள்.

“அப்படி ஒண்ணும் வாட்டம் தெரியல. நாளைக்கு விட்டுக்கலாம்மா...” என்றான் அவன்.

“அப்ப நீயும் நாளைக்கே சாப்பிட்டுக்க...” என்றாள் பட்டென்று. அடுத்த சில நிமிடங்களில் தோட்டத்துக்கிணற்று மோட்டார் ஓடத் தொடங்கிவிட்ட சப்தம் கேட்டது. தண்ணீர் -ஊறியிருக்கவேண்டும்!

அவள் கைகளும் மளமளவென்று சமைக்க ஆரம்பித்து விட்டன. காய்களை எடுத்து வைப்பது, கழுவுவது, பின்பு அரிவது, அதை ஒரு பேசனில் போடுவது என்று அவளது ஒவ்வொரு செயலும் ஒவ்வொரு வரியாகக் கவிதை எழுதுகிற மாதிரித்தான் இருந்தது.

இரவு ஒன்பது மணி.

டைனிங் டேபிளில் சமைத்ததை எல்லாம் கொண்டுவந்து நீட்டாக அடுக்கிவிட்டு ஒரு பூத்து வாலையால் கைகளையும் துடைத்துக்கொண்டே ராம்நாத் படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்தாள்.

ஏ.சி.சப்தத்தை மீறிய அவரது குறட்டை காதைத்திருகியது. அதுவே அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதை ஊர்ஜிதம் செய்தது.

மெல்ல நெருங்கிச் சென்று தோளைத் தொட்டாள். பின்பு மிருதுவாக உசுப்பி விடலானாள். அவரும் முனங்களுடன் அரைக்கண் திறந்து பார்த்தார். பிறகு முழுக்கண்... அதற்கும் பிறகு ஒரு வேகம் வந்து வேகமாக எழுந்தார்.

“என்னப்பா... நல்லா தூக்கத்துல எழுப்பிட்டேனா?” மிருதுவாகக் கேட்டாள்.

“சேச்சே... ஆமாம் நான் எப்ப...?” அவர் அடுத்து என்ன கேட்க வந்தார் என்பது அவளுக்கு விளங்கிவிட்டது.

“அங்க்கிள்தான் உங்களை வீட்டுக்குக் கூட்டிக்கிட்டு வந்து விட்டுட்டுப் போனார்...”என்றபடியே அவருக்குப் பக்கத்தில் அமர்ந்தார்.

அவிழ்ந்து போயிருந்தது அவரது லுங்கி. அவள் அதைப் பார்க்கவும் அவரே அதை சரிசெய்து கொண்டார். ஏனோ ரம்யாவை நேருக்குநேர் பார்க்கவே கூச்சமாக இருந்தது அவருக்கு.

“இன்னிக்கு ஆபீஸ்லையே ட்ரிங்க்ஸ் எடுத்துக்கிட்டீங்களாமே?” – அவள் கேள்வி அவரை மேலும் கூசவைத்தது.

“உங்களைத்தான்ப்பா... ஏன் குடிக்கறீங்கன்னு ரிக்ஷாக்காரங்க கிட்டே கேட்டா, உடம்பு வலின்னு சொல்லுவாங்க. அப்படி நீங்க என்னத்த சொல்லப் போறீங்க?”

-அவரிடம் மௌனம் தொடர்ந்தது.

“சரி எழுந்து வாங்க. சாப்பிட்டுகிட்டே பேசலாம்.”

-அவளும் எழுந்துகொண்டாள். அவருக்குக் கரித்தது. ஒரு பெரிய விசாரணை இருப்பதை ரம்யாவின் தோரணை சொல்லாமல் சொல்லிற்று. பொய் பேசவும் தெரியாது. மீறி முயற்சி செய்தால் செய்யும்போதே சாயம் வெளுத்துப்போகும். சிலரெல்லாம் எப்படித்தான் மொத்த வாழ்க்கையையே பொய்மயமாக வைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்று அவருக்கு வியப்பாகவும் இருக்கும்.

“உம் வாங்க... தண்ணி அடிச்சிருக்கும்போது வெறும் வயிறோட படுக்கவே கூடாது. அப்புறமா அசிடிடில அல்சர்தான் வந்து சேரும். வாங்க... பெங்களூர் கத்தரித்துவையல், வேப்பம்பூ, சுட்ட அப்பளம், நீர்விட்ட மோர்னு ஒரு வித்யாசமான மெனுப்பா இன்னிக்கு...”

-அவள் சொன்ன ஒவ்வொரு அயிட்டங்களும் அவருக்கு மிகப் பிடித்தவை. நாவுக்குப் பரமசுகமானவை உடம்பையும்

படுத்தாதவை. அவைகளைப் பொறுப்பாகச் சமைத்து வைத்துவிட்டுச் சாப்பிடவும் கூப்பிடுகின்ற ரம்யா அந்த நொடி அவர் முன்னால் ஒரு தேவதையாகத்தான் தெரிந்தாள்.

‘தான் ஒரு மிகப்பெரிய துரதிஷ்டசாலி... சாண் ஏறினால் முழம் சறுக்குகிறது... கடவுள் தன்வரையில் ஒரு அசுரன்...’ இதெல்லாம் அவரைப் பற்றிய அவரது சுயபச்சாதாபக் கருத்துகள்.

இப்பொழுது அதன் மேல் ஜில்லென்று மழை பொழிகிறாற்போல் தோன்றியது.

“ரம்யா... ஐ ஆம் சாரிடா! வெரி வெரி சாரிடா...” என்று சற்றே குழறியபடியே போய் டைனிங் டேபிளில் உட்கார்ந்தார்.

அவளோ மௌனமாக நல்ல பெரிய வட்டமான பளபளவென்ற வெள்ளித் தட்டை எடுத்து வைத்தாள். பக்கத்தில் வெள்ளித் தம்ளரில் ஜில்லென்ற தண்ணீர்.

“பொதுவுல வெள்ளில சாப்பிடறது ரெம்ப நல்லது. அன்னம்கறது தோஷத்துக்கு உட்பட்டது. தண்ணியைத் தான் யாராலும் தோஷப்படுத்த முடியாது. ஆகையால அதால சமைக்கும் போது தோசம் விலகறது. இருந்தாலும் வெள்ளிப் பாத்திரத்துல அந்தப் பதார்த்தம் பரிமாறப்படும் போது அது மேலும் சுத்தியாகிறது. கூடவே நித்ய அன்ன சுத்தியான நெய்யைச் சேர்க்கும்போது அது அமிர்தமாயிடறது.”

-ரம்யா ஒரு உபன்யாசத்தில் ஒரு உபன்யாசகர் சொல்லக் கேட்டதில் இருந்தே டைனிங்கில் பீங்கான் தட்டுகள் எல்லாம் விடைபெற்றுக்கொண்டு விட்டன. ராம்நாத்கூட வேடிக்கையாக் கேட்டார்.

“வெள்ளில சாப்பிட்டா விசேஷம்கறியே... இதை எப்படி நம்புவது?”

“உணவால ஒரு வியாதின்னு வராது. ஆஜீரணம் அது இதுன்னு அவஸ்தைகளும் இருக்காது. நீண்ட கால அளவுல

இதை உணரலாம்.” இந்தப் பதிலும் உபன்யாசகர் சொன்னதுதான். அவளும் சொல்லியிருந்தாள்.

சாப்பிட அமரும்போது அதெல்லாம் அவருக்குள் ஞாபகத்தில் வருகிறது.

இளவயது! ஆனால் முதிய அணுகுமுறை...

அவருக்குச் சற்றுப் பெருமிதமாகக்கூட இருந்தது.

‘கடவுளே... எல்லா வகையிலும் என்னைப் பழிவாங்கினாலும் இந்தத் தேவதையையாவது எனக்குப் பரிசாகத் தந்தாயே... உனக்குக் கோடி நன்றியப்பா’ என்றவர் பொலபொலவென்று இதன் எதிரொலியாக அழ ஆரம்பித்தார். ரம்யா அழட்டும் என்று விட்டுவிட்டாள். அவர் உள்ளுக்குள் பலவித எண்ணங்களில் தறி நாடா போலப் போய்ப் போய் வருகிறார் என்று அவளுக்குத் தெரியும். இன்னொரு விஷயமும் அவளுக்குத் தெரியும். அவரை இந்த உலகத்திலேயே ஒரே ஒரு ஜீவனால் மட்டும்தான் கலங்கடிக்க முடியும் என்று. இன்று அவர் அந்த ஜீவனைச் சந்தித்திருக்க வேண்டும். அது தான் பாட்டில் பக்கம் அவரைத் திருப்பி விட்டிருக்கும்.

யூகித்தபடியே உதிரி மல்லிகை போன்ற அன்னத்தை மெல்லிய ஆவி பிரிய தட்டில் போட்டு நெய்யையும் விட்டு ஒரு விழுது துவையலையும் போட்டாள். அந்தக் கூட்டணியின் வாசத்துக்கு எதை வேண்டுமானாலும் எழுதி வைக்கலாம்.

நாக்கிலும் வியர்த்தது போல் ஒரு ஊறல். ராம்நாத் அள்ளி அள்ளி விழுங்கினார். மனசிலும் ஒரு பரிபூரண நிறைவு.

உலகிலேயே நல்ல சமையல்காரர்களைப் போல பிறர் நிறைவைப் புண்ணியக்கணக்கில் மூட்டை கட்டிக்கொள்ளத் தவமிருக்கம் ஒரு மாடாதிபத்pயால் கூட முடியாது.

ஒருவழியாக அவரும் சாப்பிட்டு முடித்தார்.

உட்கார்ந்தது தெரியவில்லை. சாப்பிட்டாயிற்று. தட்டிலும் ஒரு பருக்கை இல்லை.

இதெல்லாம் நல்ல சமையலுக்கான அறிகுறிகள். இந்த மாதிரி சமயங்களில் ஆண் மனங்களில் நிறைய பூ பூக்கும். ஆனால், ராம்நாத் மனதிலோ ஒருவித அச்சம் தோன்றியது.

‘ரம்யாவுக்குக் கல்யாணமாகிவிட்டால் பிறகு தன் கதி?’ – அவர் மனது அதில் சிக்கிக் கொண்டு சற்றுத் தடுமாறவும் ரம்யா கூர்மையாக அவரைப் பார்த்தாள்.

அவள் மௌனத்தை எல்லாம் திரட்டி ஒரு கேள்வி கேட்கப் போகிறாள் என்பது அவருக்கும் புரிந்தது?

“என்னம்மா அப்படிப் பாக்கறே?”

“என் அம்மாவை, ஐ மீன் உங்க மாஜி மனைவியை நீங்க இன்னிக்குப் பாத்தீங்களாப்பா?” –அவளது கேள்வி கச்சிதமானது, சரியானது என்பது அவரது திக்குமுக்காடலில் புரிந்து போயிற்று.

“நான்கூட போஸ்ட் ஆபீசுக்குப் போன இடத்துல பார்த்தேன்.” அவளது தொடர்ந்த பதில் அவரை உலுக்கியது.

# 3

‘அலெக்சாண்டர் ஃப்ளெமிங் பெனிசிலின் மருந்தைக் கண்டுபிடித்தார் என்றால் அவர் தயார் நிலையில் இருந்தார் என்பதை நாம் உணர வேண்டும். இட்டிலியை இரண்டு நாட்கள் மூடிவைத்துவிட்டுப் போனால் அதில் பச்சை நிறக்காளான் வளர்வதை நீங்களும் நானும் நம் வீட்டுப் பெண்மணிகளும்தான் பார்க்கிறோம். ஆனால், அலெக்சாண்டர் ஃப்ளெமிங் அதைப் பற்றிய அறிவுடன் தயார்நிலையில் இருந்தார். எனவே அவர் பார்த்த பூஞ்சைக்காளான் அவருக்குப் பெரிய கண்டுபிடிப்பாயிற்று. எனவே நினைவில் கொள்வோம், எதை நாம் விரும்புகிறோமோ அதற்கு முதலில் நம்மைத் தயார் செய்துகொள்வோம். அதன்பின் அது தானாகவே வரும் நம்மை நோக்கி...’

- என்னைச் செதுக்கிய எண்ணங்க’ளில்

எம்.எஸ்.உதயமூர்த்தி.

ராம்நாத், ரம்யாவின் கேள்வியால் உலுக்கப்பட்டது போல ஆகி அவளையே வெறித்தார். ரசித்துச் சாப்பிட்ட சாப்பாடெல்லாம் அப்படியே வெளியே வந்தாலும் வந்துவிடும் போல இருந்தது? அந்த அளவுக்கு அவள் கேள்வி அவரைப் புரட்டி எடுத்துவிட்டது.

“இன்னுமா அந்தம்மா உங்க மனசுல இருக்காங்க?” -இது அவள் நிதானத்துடன் கேட்ட அடுத்த கேள்வி. அவர் வரையில் அது சுரீர் என்று தாக்கியது.

“அம்மாடி... என்ன கேள்வி இது?” –என்று வேகமாக வாய்விட்டார். அவளிடம் உடனே ஒரு தெற்றுச்சிரிப்பு. அவள் கேலியாகக் கேட்டது போல ஒரு உணர்வு.

“அவளை எப்படிம்மா என்னால மறக்க முடியும்? அவளும் நானும். வாழ்ந்த வாழ்க்கைக்குச் சாட்சியா நீ இருக்கும் போது எப்படி மறக்க முடியும்?” –ராம்நாத்தே தொடந்தார்.

ஏனோ சட்டென்று ஒருவித ஆவேசத்துக்கு மாறிய ரம்யா.

“அவங்க இப்ப வேற ஒருத்தர் மனைவி. ஆதை மறந்துட்டீங்களா?” என்றாள். அந்தஒரு கேள்வியே அவர் வரையில் சம்மட்டியால் வந்து தாக்கியது போல் இருந்தது. அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் மலங்கப் பார்த்தார்.

“சரி... என் கேள்விக்குப் பதில் சொல்லுங்க. அவங்கள எங்க, எப்ப பார்த்தீங்க?”

“மதியம் சரவணபவனுக்கு லஞ்ச் சாப்பிடப் போயிருந்தேன். அவளும் அங்க வந்திருந்தா...”

“சபாஷ்... அவங்க இன்னிவரை சமையலரைப் பக்கமே போகலைன்னு இதுல இருந்து தெரியுது. சரி... அவங்களப் பார்த்தீங்க... அப்புறம்?”

“மனசு கேட்கல, எப்படி இருக்க சுசீலான்னு நலம் விசாரிச்சேன்.”

“பதிலுக்கு என்ன சொன்னாங்க?”

“எதுவும் சொல்லலை.ஒரு முறைமுறைச்சுட்டுப் போய்ட்டா. ஆனா அடுத்தடுத்து அவ பேசின சில விஷயங்கள் என் காதுல விழுந்ததும்மா...”

“அங்கதானே விஷயமே இருக்கு... என்னபேசினாங்க, கமான் மனசுவிட்டுச் சொல்லுங்க.”

“நான் ஒரு திடீர்ப் பணக்காரனாம். அவ என்னை உதறினதாலதான இந்த அளவுக்காவது நான் வந்துருக்கேனாம். என்னென்னவோ இப்படியெல்லாம் பேசினாம்மா...”

“உண்மைதானே! இதுல வருத்தப்படவோ,அதுக்காகத் தண்ணி அடிக்கவோ என்ன இருக்கு?”

“என்னம்மா நீ... எதை யார்கிட்ட பேசறதுன்னு இல்லையா?”

“அப்பா... ஏன் இவ்வளவு பூஞ்சையா இருக்கீங்க. அவங்க போனா என்ன... நான் இல்லையா? நீங்க இப்படி தண்ணி

அடிச்சா உங்க உடம்பு,நம்ம பிசினஸ் இதெல்லாம் என்ன ஆகும்? யோசிச்சுப் பார்த்தீங்களா? குறிப்பா என்கல்யாணம். நீங்க ஆசைப்படற மாதிரி நல்லவிதமா நடக்குமா?’சரியான தண்ணி வண்டி அந்த ஆளு... ஒரு டைவர்சி வேற’ன்னு பேசமாட்டாங்களா?”

-நிறுத்தி நிதானமாக அழகாகக் கேட்டாள். அப்படிக் கேட்டபோது மார்புக்குமுன் இரு கைகளையும் நன்கு மடித்துக் கட்டிக்கொள்ளவும் செய்தாள். அவரோ தொடர்ந்து வெறித்தார்.

“என்னப்பா பார்க்கறீங்க?”

“பார்க்காம என்னம்மா பண்றது. ஆமா... உனக்குள்ள உன் அம்மா பத்தின நினைப்பே இல்லையா?”

-அவர் அப்படி ஒரு கேள்வியைக் கேட்பார் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. சட்டென்று பதில் கூற மடியவில்லை. சின்னதாய் ஒரு திணறல். இருந்தும் சமாளித்தாள்.

“எனக்கு அப்பா அம்மா எல்லாம் நீங்கதான்ப்பா. எனக்குத் தாய்ப்பால் கொடுத்தா தன் அழகு குறைஞ்சிடும்னு நினைச்ச அவங்க எனக்கு அம்மா இல்லை. உங்களுக்கு ஒரு குழந்தையைப் பெத்துக் கொடுத்த ஒரு வாடகைப் பொண்ணுதான் அவங்க...! கோர்ட்ல விவாகரத்து தீர்ப்பு வந்தப்பகூட, ‘எனக்கு அவர் சம்பந்தமான எந்தத் தொடர்புகளும் வேண்டாம். எங்களுக்குப் பிறந்த பெண்கூட அவர் சாயல்லதான் இருக்கா ஆகையால அவரே வளர்க்கட்டும்’னு சொல்லிட்டுப் போனவங்க எப்படிப்பா எனக்கு அம்மாவாக முடியும்?”

-உறுதியான ஒருவித முக பாவனைகளுடன், அவர் சொல்லியிருந்த தகவல்களை வைத்தே அவரைத் திருப்பிக் கேட்டவளை அவரும் தீர்க்கமமாகப் பார்த்தார்.

“சரிப்பா... இனியும் இதைப் பத்தின டிஸ்கஷன் வேண்டாம். இனி அவங்களப் பார்க்க நேர்ந்தா, சௌக்கியமான்னுல்லாம் போய் வழியாதீங்க. உங்க வேலையைப் பாருங்க. தயவு

செய்து தண்ணி பாட்டிலையும் இனி தொடாதீங்க. அதுக்காக எனக்கு சத்தியம் பண்ணுங்கன்னுல்லாம் உங்களை டார்ச்சர் பண்ணமாட்டேன். என் வார்த்தைகள் போதும். நீங்க கேப்பீங்கங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு...” என்றபடியே எழுந்தாள். சுவர்க் கடிகாரம் பத்து மணிக்குண்டான சப்தத்தைப் போடத் தொடங்கியது.

“போய்ப் படுங்கப்பா, குட் நைட்” என்றபடியே அவளுக்கான பெட்ரூம் நோக்கித்தான் நடந்தாள்.

அவருக்கு அவளது பேச்சும் செயலும் விசித்திரமாக இருந்தன. பரவசமாகவும் இருந்தது.

ஆனால், அவளுக்கோ படுக்கையறையில் தூக்கமே பிடிபடவில்லை. அப்பா முன் அழக் கூடாது என்று திடமாக வைத்திருந்த அவள் மனது சட்டென்று கீழே விழுந்து சுக்கல் சுக்கலாய்ச் சிதறிய பனிக்கட்டி போல உடைந்து போய்க் கண்களில் கண்ணீர் பெருக ஆரம்பித்தது.

பக்கத்திலேயே தலையணை அடியில் அவளது டைரி. அதை எடுத்துத் திறந்தாள். முதல் நாள் எழுதியது ரி◌ஃபிள் பேனாவுடன் கண்ணில் பட்டது.

‘பெண்மையைப் புனிதமானது, மென்மையானது என்று யார் சொன்னது? அதைவிட பேராசை பிடித்த ஒன்று இந்த உலகில் இருக்க முடியுமா?

என் வரையில், மன அழகே இல்லாத பல பெண்களுக்குப் புறத்தில் மட்டும் எதற்கு அழகிய மார்புகள்?

அதை அறுத்து எறிவதில் ஒரு தவரும் இல்லை. எனக்கு இந்த உலகில் மறுக்கப்பட்ட முதல் உணவே தாய்ப்பால்தான்.

இன்று டாக்டர் என் தலைவலிக்கான பரிசோதனையில் கூறிய விஷயங்கள் ஆச்சரியமானவை...

‘தாய்ப்பால் குடிக்காம வளர்ந்ததால விட்டமின் ‘ஏ’சத்தே உன் உடம்புல இல்ல. அன்றாட உணவுல கிடைக்கிற சக்தியெல்லாம் பார்ப்பதற்கே போதாத நிலை. இந்தத்

தலைவலி கூட கண்ணோட ஒரு சமிக்ஞை. நான் ரொம்ப கஷ்டப்பட்டு இந்த உலகத்தைப் பார்க்கறேன்னு அது சொல்லுது. குறிப்பா படிக்கறது, டி.வி. பார்க்கறதுன்னு உன் வாழ்க்கை நீடிச்சா ஐம்பது வயசுல நீ முழுப்பார்வையை இழந்துவிடுவே...' என்றார்.

அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. என் அம்மா சும்மா போகவில்லை. எனக்கான பாலையும் எடுத்துச் சென்றுவிட்டாள். அவளால் எப்படி அன்று அப்படிப் போக முடிந்தது என்று யோசித்துப் பார்க்கிறேன்.

நான் அப்படி என்ன பாவம் செய்துவிட்டேன்?'

-முதல் நாள் டைரியை வாசித்து முடித்தவள் அன்றைய டைரியில் அழுத்தமாக எழுதத் தொடங்கினாள்.

'நான் அப்பாவுக்காகவாவது வாழ்ந்தாக வேண்டும். அந்த அம்மாவையும் இரண்டில் ஒன்று பார்க்க வேண்டும். அழுவதால் ஒரு பயனும் இல்லை. ஆனாலும் இதயம்என்பது கல்லாக இல்லை. அது ஈரப்பதமாக இருக்கிறது என்பது அழும்போதுதான் தெரிகிறது. எனவே அழும்போதுகூட இனி ரசித்து அழுதிட வேண்டும் என்று கருதுகிறேன்.'

-என்று எழுதியவள் அப்படியே தலையணைக்கு அடியிவ் வைத்து விட்டு விளக்கையும் அணைத்தாள்.

அவன் நினைத்தது வீண்போகவில்லை. "அரவிந்தன் சார்... இந்த வானத்தைப் பாருங்கள் போட்டிக்கு வந்ததுல அஞ்சு பேரோட கட்டுரை சிறப்பா இருக்கிறதா சொல்லி நடுவர் குழுவுல எடுத்துக் கொடுத்துருக்காங்க. இதுல யாருக்கு முதல் பரிசுன்னு நீங்களே முடிவு செய்வீங்களாம்... ஆசிரியர் ஃபுட் நோட் போட்டிருக்கார்...' என்றபடியே அந்த ஐந்து பேரின் சிந்தனையுயையும் அவன் டேபிள் மேல் வைத்தாள் ஆசிரியரின் உதவியாளர் பெண்மணி.

அந்த ஐந்து பேரில் ரம்பாவுடையதும் இருந்தது! அவள் தாளில் ஆசிரியர் பச்சை மசியில் 'குட் தாட்' என்று எழுதியிருந்ததையும் பார்த்தான். மிகவும் பரவசமாக

இருந்தது. கட்டுரையை இன்னும் படிக்கவேயில்லை. ஆனாலும் ரம்யாவைப் பார்த்துவிட்டு மனதளவில் நினைத்தது அப்படியே நடந்துவிட்டது. கட்டுரையும் சிறப்பாகத்தான் இருக்கும் என்கிற முன்னோட்டத்துடன் அதைத் தூக்கித் தூர வைத்துவிட்டு மற்றவர்களின் எழுத்துக்களை முதலில் படிக்கத் தொடங்கினான். யார் யார் எந்த அளவுக்கு மனதைப் பாதிக்கிறார்கள் என்று பார்த்துவிட வேண்டிய துடிப்பு.

ஒருவர் எழுதியிருந்தார்.

‘இன்றுள்ள நிலையே தொடருமானால் வானமாகிய நானே நாளை இருக்கமாட்டேன். நொறுங்கிப்போய் உங்கள் பூமியில் உங்கள் மேலேயேதான் நான் விழ வேண்டியிருக்கும். எச்சரிக்கிறேன்…”

இன்னொருவர் எழுத்து சிரிக்க வைத்தது.

‘என்னைவிட பூமி சுத்தமாக இருக்கிறது. பறந்து திரியும் பறவைகள் அழுக்காவதால் அவைகள் குளிப்பதற்காக ஆறுகளைத் தேடுகின்றன. ஆனால் எந்த ஆற்றில் இருக்கிறது தண்ணீர்?’

-இப்படியாக வரிசையாக நான்கு பேர் சிந்தனைகளையும் படித்து முடித்தவன். ஐந்தாவதாக ரம்யாவின் சிந்தனைக்கு வந்தான். அதைப் படித்து முடித்த பிறகு அவனுக்கு வேலையே ஓடவில்லை. மேலே முதல் பரிசு என்று எழுதி ஒரு வட்டம் போட்டான். அவள் முகவரியில் தொலைபேசி எண் இருக்கிறதா என்று பார்த்தான். இருந்தது.

உடனேயே சுழற்றினான்.

இந்தச் சந்தோஷமான விஷயத்தை ரம்யாவிடம் கூற வேண்டும். அவள் மிகமிக மகிழ்வாள் என்பதோடு அந்த மகிழ்ச்சியில் அவளது முகம் எப்படி இருக்கும் என்றெல்லாம் கற்பனை செய்து பார்க்க ஆரம்பித்துவிட்டான்.

மறுமுனையில் இருந்தும் குரல் கேட்டது?

“ஹலோ... யார் வேணுங்க?’

“மிஸ் ரம்யா இருக்காங்களா?”

“நீங்க யாரு?”

“நான் ‘திருமகள்’ பத்திரிகைல இருந்து பேசறேன். என் பேர் அரவிந்தன்.”

“அப்படிங்களா... அம்மாக்குத் திடீர்னு விஷ ஜூரம்ங்க. படுத்த படுக்கையா இருக்காங்களே...”

“அப்ப நீங்க யாரு?”

“நான் வீட்டு வேலைக்காரிங்க...”

-அரவிந்தனாகிய அவனுக்கு அந்தப் பதில் அதிர்ச்சியைத்தான் தந்தது. ‘நேரில் போய்ப் பார்த்துவிட்டு நலமும் விசாரித்துவிட்டு இந்தப் பரிசுத் தகவலைச் சொன்னால் என்ன?’ – கேள்வியோடு சிந்தித்தவன் பதிலாக உடனேயே புறப்பட்டான்.

‘கற்றாரைக் கற்றாரே காமுறுவர்’ என்பது இதுதானோ?

ரம்யா பேலஸ்!

வாட்ச்மேன் ஏறஇறங்கப் பார்த்துவிட்டுத்தான் உள்ளே விட்டான்.

உள்ளே தோட்ட அமைப்பு பிரமாதமாக இருந்தது. பிரமிப்பு மூண்டது.

சென்னையில் ரோஜாக்களைப் பூக்க வைப்பது என்பது சாதாரண விஷயமில்லை. ஆனாலும் ஊட்டி போல தட்டுத் தட்டாய் ரோஜாக்கள்.

பார்த்துக்கெண்டே நடந்தான். ஒரு கையில் மலர்க் கொத்து... அப்புறமாய் ரத்தச் சிவப்பில் ஆப்பிள் பழங்கள்! அவைகளோடு வந்தவனை வரவேற்று ஹாலில் அவனை அமரச் சொன்ன வேலைக்காரப் பெண் தகவல் சொல்ல உள்ளே சென்றாள். அந்த இடைவெளியில் அவன் பார்வை

ஹாலை ஒரு பார்வை பார்த்தது.

பெரிய சைஸில் தெரிந்த ராம்நாத்தின் படத்தைப் பார்க்கவும் முகத்தில் ஏராளமான மாற்றங்கள்!

# 4

‘ஒருவனுக்கு வியாதி வந்தால் அதற்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கின்றன. தாது வித்தியாசத்தால் நோய் வந்தது என்பார் ஆயுர்வேத வைத்தியர். இங்கிலீஷ் வைத்தியர் ஏதாவது கிருமி காரணம் என்பார். தேய்வக் குற்றம் என்பார் மந்திர சாஸ்திரக்காரர். ஜோதிடரோ கிரகநிலை சரியில்லை என்பார். தர்மசாஸ்திரம் அறிந்தவர்களோ பூர்மஜென்ம பலன் என்று பளிச்சென்று கூறிவிடுவார்கள். மழை ஒன்றுதான். அது எவ்வளவோ விளைவுகளை உருவாக்கி விடுகிறது. பூமி ஈரமாகிறது. ஈசல் பறக்கத் தொடங்கி விடுகிறது. தவளை கத்துகிறது.செடிகொடிகள் பச்சையாகின்றன. இப்படி... மழை ஒன்றுதான், ஆனால் விளைவு வேறாவது போல் கர்ம பலன்தான் பலரால் பலவிதமாகக் கூறப்படுகிறது.’

- காஞ்சி முனிவர்

ராமநாத்தின் படம் அவனுக்குள் ஒரு புத்துணர்ச்சியையே உருவாக்கத் தொடங்கியிருந்தது. அவன் வரையில் அவர் யாரோ ஒரு தொழிலதிபர் இல்லை. அவனது பட்டப்படிப்புக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்து உதவிய நவீன தர்மர்.

மூன்று வருடங்கள்!

காலேஜ் ஃபீஸ், புத்தகச் செலவு என்று கணக்குப் போட்டு எடுத்துக்கொண்டு அவரை அவரது விருப்பப்படி அவரது ஆபீஸில் சந்தித்தவன். அப்போதொல்லம் அவர் அவன் நீட்டிய பேப்பரைப் பார்த்துவிட்டு அவன் எதிரிலேயே வேறு சிலரிடம், ‘அவ்வளவுதானா ஃபீஸ்... புத்தகம், நோட்டுக்கெல்லாம் அவ்வளவு செலவாகுமா?’ என்று கேட்பார். அந்த நொடிப் பொழுதுக்கு அரவிந்தனுக்கு மிக மிக கூச்சமாக இருக்கும்.

இப்படியொல்லாம் சந்தேகப்படும் பேர்வழியிடம் பணம் வாங்கிப் படிக்கத்தான் வேண்டுமா என்றும் தோன்றும்.

ஆனால், அவரோ அவன் கேட்டதைப் போல இருமடங்குத் தொகையை ஒரு கவரில் போட்டுக் கொடுத்து அவனை அசத்தியிருக்கிறார்.

“ஆத்துல போட்டாலும் அளந்து போடணும். அதே சமயம் செய்யற உதவியை முழுமையாச் செய்யணும். நான் விசாரிச்சது உனக்கு இன்சல்ட்டாக்கூட இருக்கலாம். ஆனா எனக்கு வேறு வழியில்லை. நான் ஒரு ட்ரஸ்ட அமைச்சு உதவி செய்யறதுனால சிலர் என்ன நினைச்சடறாங்கன்னா... ட்ரஸ்ட் பணம்தானே... நல்லா கறந்திடுவோம்’னு பொய்யாத் தகவல் தந்து பணத்தை வாங்கிட்டுப் போயிடறாங்க” அவர் அடித்த ஒரு லெச்சர் கொளுத்தும் கோடை மேல் பெய்த ஆலங்கட்டி மழையாட்டம் அப்படியே ஜில்லென்று தங்கிவிட்டது. அதெல்லாம் அப்பொழுது அவனுக்கு ஞாபகத்தில் வந்தது.

அதே வேளையில் ரம்யாவும் மிகமிக மெல்லிசான ஒருவித முனகலுடன் ஷால்வை ஒன்றைப் போர்த்திக் கொண்டு அந்த நிலையிலும் வணக்கம் சொன்னாள்.

“வாங்க சார்...வணக்கம்...நீங்க...?’

“என்னைத் தெரியலையா மேடம்? போன வாரம் போஸ்ட் ஆபீஸ்ல சந்திச்சுக்கிட்டோமே...”

“ஐ ஸீ...”

அவன் மிக சாதரணமாக அதை அங்கீகரித்தாள். உயிர்த்துடிப்பே இல்லை.

‘உங்களுக்கு முதல் பரிசு கிடைச்சிருக்கு’ என்று செல்ல வாயெடுத்தவன் அப்படியே மடக்கிக்கொண்டு, “உடம்புக்கு என்ன மேடம்?” என்றான்.

“தெரியலை... சந்திராம்மா அம்மையா இருக்கும்னு சொன்னாங்க.”

“அவங்க...?”

“பக்கத்து வீட்டு மாமி”

“உங்களுக்கு உங்களைப் பார்த்துக்க உங்க அம்மா, சிஸ்டர்ஸ் யாரும் இல்லையா?”

“ஸாரி... நான் ஒரு விசிறிவாழை. அது வீட்டுக்கு ஒண்ணுதான் இருக்கும். அதுக்குக் கன்டின்யூடியும் கிடையாது. ஆனா குலை தள்ளாது. இலையாலையும் யூஸ் கிடையாது. என்னைக் கேட்டா வாழை மரங்களெல்லாம் ஒண்ணு சேர்ந்து விசிறி வாழை மீது கேஸ் போடலாம். ‘எங்க பேரை வச்சுக்கிட்டு நீ தெண்டமா இருக்கே’ன்னு!

அந்த நிலையிலும் ரசனை ததும்பப் பேசிவிட்டு அவள் சிரித்தாள். அவனுக்கோ சிலிர்ப்பு. இப்படிக் கூடவா ஒரு பெண் தன்னைப்பற்றி ஒரு விளக்கம் தர முடியும்? இதற்குள் தான் எத்தனை சோகம்?

அவன் நினைக்கும் போதே, “நீங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?” அவளே கேட்டாள்.

“என்னைப் பார்த்துமா உங்களுக்குத் தோணலை. நான் ‘திருமகள்’ பத்திரிகையோடு சப் - எடிட்டர்னு சொன்னேன். என் கையிலதானே நீங்க ஒரு கவர் கூடக் கொடுத்தீங்க.. ஞாபகம் இருக்கா?”

“அந்த வானத்தைப் பாருங்கள் போட்டிதானே?’

“இப்பத்தான் பாயின்டுக்கே வந்திருக்கீங்க.” அவன் சிரித்தான்.

“அப்ப எனக்குப் பரிசு கிடைச்சிருக்கு. நேரிலேயே அதைச் சொல்ல வந்திருக்கீங்க. சரிதானே?”

“வெரி கரெக்ட். உங்களை வாழ்த்திட்டு நேரில் பாராட்டத்தான் வந்தேன்.”

“ஐ ஸீ...ஆமா... இப்படித்தான் யாரா இருந்தாலும் நடந்துக்குவீங்களா?”

ரம்யா சோபாவில் அமர்ந்து கொண்டபடியே கேட்ட விதத்தில் அவளுக்குள் இன்னொரு ராம்நாத் தெரிந்தார்.

அப்பாவும் இப்படித்தானே?

முதலில் சந்தேகம்... பிறகு இருமடங்காக உதவி. அவனுக்கு விளங்கிவிட்டது.

‘உங்களுக்கு ஃபோன் பண்ணித் தகவல் சொல்லத்தான் நினைச்சேன். அடுத்து அன்னிக்கு என்னை நம்பி கவர் கொடுத்தீங்க. அப்பவே எனக்கு ஆச்சரியம். உங்களுக்குப் பரிசு கட்டாயம் கிடைக்கும்ன்னு நான் நம்பினேன். அது அப்படியே பலிச்சிடுச்சு. இந்தத் தேர்வு நடுவர் குழுவோடது தான். உங்களை ஞாபகம் வெச்சுக்கிட்டு அட்ராக்ட் பண்றதுக்காக நான் நேர்ல வரலை. ஒரு பணக்காரப் பெண்ணாக இருந்தும் உங்களுடைய இலக்கிய நாட்டம் எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது. உங்க அந்தஸ்த்துள்ள எவ்வளவோ பெண்களை நான் தொழில் காரணமா தினம் தினம் சந்திக்கிறேன். அவங்க எல்லா வகையிலும் எங்களைப் போல ஒரு மேல் காரெக்டராக மாற ட்ரை பண்றது நல்லாத் தெரியுது. பாப் கட், டீ ஷர்ட், ஜீன்ஸ் பேன்ட், ஹேர்பின் பென்ட் மாதிரி வளைஞ்சு போன பேச்சுத் தமிழ், டூத் பேஸ்ட் நுரை மாதிரி கொப்பளிக்கிற இங்கிலிஷ்... இப்படித்தான் அவங்க இருக்காங்க. நீங்களோ சாரி கட்டிக் கிட்டிருக்கீங்க. வாரப் பத்திரிகையெல்லாம் படிக்கிறீங்க. அதுல போட்டிலயும் கலந்துக்கறீங்க. இன்ஃபாக்ட் உங்களுக்கு பர்ஸ்ட் ப்ரைஸ்னு சொல்லியும் பெரிசா எக்ஸைட் ஆகல. அதுக்காக என்னை மதிக்காமலும் இல்லை. சுருக்கமாச் சென்னா என்னை எல்லா வகையிலும் பாதிச்ச ஒரு பாத்திரம் நீங்க. அதனால நான் நேர்ல வந்துட்டாதா நினைக்கிறேன். வேற யாருக்காவது பரிசு கிடைச்சிருந்தா நான் இப்படிப் போயிருக்க மாட்டேன்தான். அதையும் உங்ககிட்ட சொல்லிக்கிறேன். எனவே உங்களுக்கு என் வாழ்த்துக்கள். என் அதிகப் பிரசங்கத்துக்கு மன்னிக்கும்படிக் கேட்டுக்கறேன். உங்க உடம்பைக் கவனமா பார்த்துக்குங்க. இன்பாக்ட் நீங்க விசிறி வாழையில்லை மிஸ் ரம்யா, வள்ளலாரிணி. நீங்க ஒரு துளிசிச்செடி. இல்லையில்லை... வில்வமரம் நான் புறப்படறேன்.”

ஒரு நொடி தான் அவசரப்பட்டு அப்படியொரு கேள்வியைக்

கேட்டுவிட்டோமோ என்றுகூடத் தோன்றி ஒரு தாங்க முடியாத வலியாக அவளுக்குள் பரவ ஆரம்பித்தது.

அந்தத் தொழிற்சாலை பார்க்க ஒரு நேர்த்தியோடு இருந்தது. ஆஸ்பெஸ்டாஸ் கூரை, ஓயாத இரைச்சல், ஆங்காங்கே காக்கி சட்டை போட்ட ஆப்பரேட்டர்களின் அரட்டைக் கச்சேரி, பர்க்கும்படியான பான் பராக் உரைகள், சிகரெட் துண்டுகள் என்கிற வழக்கமான தொழில் கூடமாக அது இல்லை. எந்திரங்களுக்கு நடுவில் கூட ரோஜாச்செடிகள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. கூரையில் ஆஸ்பெஸ்டாஸுக்கு இடையில் சூரியக் கதிர்கள் ஊடுருவத் தோதாகக் கண்ணாடிக் கூரைகள்.

ஆப்பரேட்டர்கள் அமருவதற்கு எந்திரம் அருகிலேயே நாற்காலி. அதை ஒட்டி சிறிய மேஜை. அதில் இன்டர்காம் ஒன்று. ஒர்க் ஹால் முழுவதுமே ஏர்கன்டிஷனில் இருந்ததால் தொழிலாளிகளின் முகத்தில் எண்ணெய்ப்பசையோ, வியர்வைப் புள்ளிகளோ இல்லை.

ஆயுத பூஜைக்கு ஆயுத பூஜைதான் சில அலுவலகங்கள் சுத்திகரிக்கப்படும். ஆதன் பின் அப்பி எடுக்கும் ஆயில் அழுக்கு, ஆங்காங்கே ராமெடீரியல்ஸ் என்று வருடம் முழுக்கக் கிடப்பது தான் பொதுவாகத் தொழிலகங்களின் லட்சணங்கள். ஆனால் ‘ரம்யா இண்டஸ்ட்ரிஸ்’ என்ற தொழிலகமோ அதற்கு நேர்மாறாக இருந்தது.

அலுவலக உட்புறம் மெஷின் ஹால் ப்ளோரிலேயே அமைந்திருந்தது கண்ணாடிச் சுவர்களுக் குள் ட்ரன்ஸ்பரன்டாக உள்ளே ஊடுருவ முடிந்தது. நடுநாயகமாக அங்கே ராம்நாத் தெரிந்தார். அவருக்கு இடது, வலது பக்கங்களில் ஷாப் ப்ளோர் சூப்பர்வைஸரும், அக்கவுண்டண்டும் உட்கார்ந்து பேப்பர்களில் மூழ்கியிருந்தனர்.

நடுவில் தொலைபேசி கமறவும் ராம்நாத் அதைக் கையில் எடுத்தார்.

“ராமா... நான் ஞானம் பேசறேன்.”

“சொல்லு ஞானப்பிரகாசம்.”

“இப்ப எப்படி இருக்கே... பிசியா இருக்கியா... இல்லை ஃப்ரியாவா?”

“என்ன விஷயம்?”

“எல்லாம் நல்ல விஷயம்தான். நான் சொல்லியிருந்தேனே ஒரு மாப்பிள்ளைப் பையன்...”

“உம்... உம்...”

“அவன் ஸ்டேட்ஸ்ல இருந்து வந்திருக்கான். இன்னிக்கு ஒரு நாள்தான் மெட்ராஸ்ல ஸ்டே பண்றானாம். நம்ம ஊர் வெயில் தாங்க முடியலையாம். அதனால இன்னிக்கு நைட்டே ப்ளூ மவுன்டன்ல ஊட்டிக்குப் போறானாம். நீ வந்தேன்னா பார்த்துப் பேசி ஒரு முடிவு பண்ணிடலாம்.”

“அது வந்து ஞானப்பிரகாசம்....”

“எதுக்கு இழுக்கறே...ரம்யாவுக்கு அம்மை போட்டிருக்கும்போது, எதுக்கு மாப்பிள்ளை பார்த்துக்கிட்டுன்னு கட்டைய போடாதே, சமயம் வரும்போதே பயன்படுத்திக்கனும். ஒரு பிஸினஸ் மேன் நீ. உனக்கு டயத்தோட வேல்யூ பத்தி நான் சொல்லத் தோவையில்லை. ஒரே ஒரு செகண்டுங்கிறோம். ஆனா அதுதான் ஒலிம்பிக்ல ரண்ணிங் ரேஸ்ல தங்கம். வெள்ளியத் தீர்மானிக்குது.

“யப்பா...சாதாரணமா ஃபோன்ல பேசும் போதுகூடவா உன் புத்தியில இவ்வளவு லைட் எரியனும்? இப்ப நான் என்ன பண்ணணுங்கிறே?”

“உடனே கிளம்பி வா. பையனைப் பார்த்துப் பேசு. நானே அறிமுகம் செய்து வைக்கிறேன். தங்கமான பையன் ரம்யாவுக்குப் பொருத்தமானவனா இருப்பான்னு எனக்குத் தோணுது.”

“சரிப்பா... இப்பவே கிளம்பி வர்றேன். சரியா?”

ராம்நாத் ஃபோனை வைத்துவிட்டு நிமிர்ந்தார். அக்கவுண்டண்ட் கணபதி கூர்மையாகப் பார்த்தார்.

“கணபதி...”

“என்ன சார்...மேடத்துக்கு வரன் பார்க்கப் போறீங்களா?”

“ஆமாம்... ஞானப்பரகாசம் கூப்பிடறான். நான் வர்றதுக்குக் கொஞ்சம் டயமாகலாம். கவனமா பாத்துக்குங்க. ஹோசூர் எல்.எஸ்.பி.குரூப்ல இருந்து அவங்களுக்கான ப்ராடக்ட் டிசைன் வரணும். மெயில் பண்றேன்னு சொல்லியிருக்காங்க. பாலோ பண்ணிக்குங்க. அப்புறம் லக்ஷமி பிரிசிஷனுக்கு இன்னிக்கு டை போயாகனும். சால்ஜாப் சொல்லாம அனுப்பி வையுங்க. நான் புறப்படுறேன்.

ராம்நாத் கிளம்பினார்.

தொழிலகத்துக்கு வெளியே சீனமல்லன் கணக்காக ஊட்டமாக வளர்ந்திருந்தது டாபூபியா என்ற மேற்கத்திய தாவரம். தமிழில் அதற்கு மங்கலி என்று பெயர் வைத்திருந்தாள் ரம்யா. காரணம் மரம் முழுக்க மஞ்சள் பூக்களாய்ப் பூத்துக் குலுங்கும். அந்தப் பூக்கள் ராம்நாத்தின். ஐகான் கார்மேல் அர்ச்சிக்கப்பட்ட மாதிரி விழுந்திருந்தன. அதை ரசித்தபடியே காரில் ஏறி அமர்ந்தார்.

‘சாதரணமாக ஞானப்பிரகாசம் எதையும் பார்த்துப் பார்த்துச் செய்பவன். அவன் ஒரு பையனைப் பார்த்திருக்கிறான் என்றால் அது சராசரியாக நிச்சயம் இருக்க முடியாது. பையனைப் பார்த்துப் பேசினால் அவன் மீது ஒரு பிடிப்பும் பற்றுதலும் ஏற்படலாம் அதன் பிறகு அது திருமணத்தில்தான் போய் நிற்கும். அதன் பிறகு ரம்யாவும் அவனோடு அமெரிக்கா போக வேண்டி வந்துவிடும். அவள் போன பிறகு தனியாக இந்த இண்டஸ்ட்ரியைக் கட்டிக் கொண்டு அழுவதிலோ... இல்லை மாளிகை போன்ற வீட்டில் சுவரைப் பார்த்துக் கொண்டு வாழ்வதிலோ ஏதாவது அர்த்தம் இருக்க முடியுமா?’

காரின் ஓட்டத்துக்கு நடுவில் அவரை எப்போதும் ஆட்டிப்

படைக்கும் கேள்வி அப்பொழுதும் ஆரம்பித்தது. சில நிமிடங்களில் கார் திசை மாறி ஞானப்பிரகாசத்தைப் பார்ப்பதற்காகச் செல்லாமல் ஒரு ஸ்டார் ஹோட்டலில் பார் நோக்கி ஓடத் தொடங்கியது.

# 5

'ஒருவனது கடந்த காலம் எப்படி இருந்த போதிலும், அவன் எவ்வளவுதான் தவறுகள் செய்திருந்தாலும். எவ்வளவு அஞ்ஞானத்தில் வாழ்ந்திருந்த போதிலும், அவனது உள்ளத்தின் ஆழத்தில் ஒரு மிக உன்னதமான தூய்மை உள்ளது. அது அற்புதமான சித்தியாக மலர்ந்து வெளிப்பட முடியும். தன்னுடைய கஷ்டங்கள், இன்னல்கள், தடைகள், இடையூறுகள் இவைகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிராமல் அந்த உள்ளத் தூய்மை மீது ஒருமுனைப்படுதல், அதைப்பற்றியே சிந்தித்தல் இதுவே அவன் செய்ய வேண்டியதெல்லாம்...

ஸ்ரீ அரவிந்த அன்னை

ராம்நாத்தின் கார் பார் நேக்கித் திரும்பிவிட்ட நலையில் ராம்நாத்துக்குள் ஏகத்துக்கு உறுத்தல்.

வழக்கமாகப் பயணிக்கின்ற சாலைதான். பளிச்சென்று மதியப்பொழுதுதான். சென்னைக்கே உரிய அதே டிராபிக்தான்... ஆனால் எல்லாவற்றிலும் ஒரு மாறுபாடு தெரிந்தது. எதையும் நேசிக்க முடியவில்லை. ஜனக்கூட்டம் மொத்தம் வாழ வழி தெரியாமல் அலைகிற மாதிரி எல்லாம் ஒருவித பிரமை தட்டிற்று.

எப்பொழுதும் இருக்கும் உலகம் தான். ஆனால், எண்ணம் மாறும் போது அந்த உலகில் பலவிதமான துன்பங்களின் சாயல்கள் அங்கங்கே படிவதுதான் ஆச்சரியம்.

தி. நகர் பாண்டிபஜாரில் அந்த பார் இருக்கும் ஹோாட்டல் முன் காரைப் பார்க் செய்வது மிகவும் சிரமமாக இருந்தது. சென்னையில் வீட்டில் போர்டிக்கோவில் காரை நிறுத்தாமல் பாண்டி பஜார் பக்கம் வந்து கிடைத்த இண்டு இடுக்கிலெல்லாம் செருகி நிறுத்திவிட்டு, 'எனக்கென்ன' என்று கார் வைத்திருப்பவர்கள் போய்விட்டாற் போலக்கூடத் தோன்றியது.

எரிச்சலுக்கு மேல் எரிச்சல். அத்தோடு கரை ஓட்டும் போது

ஒருவர் டி.வி.எஸ். 50-யில் நிதானமாகக் கடந்துபோனார். அந்த நொடி அந்த வாகனம், நிதானம் எல்லாவற்றையும் அழித்து அந்த மனிதரையும் ஆகாயத்தில் ஒரே வீசாக வீசி எறிந்துவிடக் கூடத் தோன்றியது.

எப்படியோ ஒரு இடுக்கில் காரைச் செருகி நிறுத்தி விட்டு இறங்கினார் ராம்நாத்.

ஒருவன் ஓடிவந்தான்.

“என்ன சார்... இப்படி நிறுத்தறீங்க... அந்த வண்டிக்காரர் வந்தா எப்டி சார் எடுப்பார்?”

“அதுக்கு நான் என்ன பண்ண முடியும்?”

“வண்டிய எடுங்க, சார்... இப்படி நிறுத்தக்கூடாது”

“எடுக்கல்லேன்ன...?”

“என்ன சார் இப்படியெல்லாம் பேசறீங்க. தகராறு பண்ணாம எடுங்க சார்”

“முடியாது. கார் பார்க்க பண்ண லோலோன்னு அலைஞ்சு ஓய்ஞ்சு போய்தான் இங்க வந்திருக்கேன். நீ சட்டம் பேசாதே.”

“எல்லாரும் இப்படியே சொன்ன எப்படி சார்?”

“அப்படித்தான். போறவன் வரவனெல்லாம் கார் வாங்கினா இப்படித்தான்.” எரிச்சல் பீரிட்ட பதிலோடு எனகென்ன என்று விலகி நடந்தார். அவன் துரத்திக் கொண்டே வந்தான். ஒரு இருபது ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினார். ஆந்தக் காகிதம் அவனை அப்படியே கட்டிப் போட்டுவிட்டது.

பாருக்குள்...

அதிக வெளிச்சமில்லாத சுமாரான ஏ.சி. ஹாலுக்குள் சிணுக் சிணுக்கென்று கண்ணாடி கிளாஸ்கள் உரசிக் கொள்ளும் சப்தங்களுக்கு நடுவில் அரக்கு வண்ணத்திரவத்தை ஒரே மடக்கிலும் கொஞ்சம் சப்பியும் கொஞ்சம் கோணல்

முகத்துடனும் பல மாதிரிகளில் பலர் குடித்துக் கொண்டிருக்க, அந்த ஜோதியில் ராம்நாத்தும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

அவரைப் பார்த்த உடனேயே அவருக்குப் பரிச்சயமான பேரர் ஒருவர் ஒரு விஸ்கி பாட்டில், ஒரு கப் ஐஸ் க்யூப்ஸ், லெமன் ஆனியன் பீஸ்கள் உள்ள ப்ளேட் என்று அவரை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான்.

ராம்நாத்துக்கு அந்தத் திரவத்தைப் பார்க்கும் போதே பரபரப்பாகிப் போனது. பூமியில் எவ்வளவோ வஸ்துக்கள். இந்த மதுவைக் கண்டுபிடித்த மனிதன்தான் நிஜத்தில் நிகரில்லாதவன். மின்சாரம், தொலைபேசி கண்டுபிடிப்பெல்லாம் கூட இதற்குப் பின்னால்தான் என்று ஒரு எண்ணம் வேறு ராம்நாத்துக்குத் தோன்றியது.

பேரர் கண்ணாடிக் கிண்ணத்தில் மதுவைப் பாயவிட்டு ஒரு ஐஸ் க்யூபைப் போட்டு அரைச் சிரிப்போடு அவர் முன் வைத்தான். சற்று திரும்பிய அந்த நொடி அதை ஒரே மடக்கில் குடித்தவராக அந்தக் கிண்ணத்தைக் கீழே வைத்தார்.

காதோரமாகக் கிருதா பக்கத்தில் கணகணவென சூடும். பிள்ளையார் எறும்புகள் உடலில் ஓடிவிளையாடுகிற மாதிரியும் பலவிதமான உணர்வுகள் பரவ ஆரம்பிக்க, காது மெல்ல கேட்கும் சக்தியை, இழப்பது போலவும் வழவழப்பான ஒன்றைக் கையானது மெல்ல நழுவ விடுகிற மாதிரியும் உணர்ந்தார்.

பாக்கெட்டில் இருந்த செல்போனிடமும் சிணுக்கல். ஆந்தச் சப்தம் கிணற்றுக்குள் இருந்து கேட்பது போல் இருந்தது. தடுமாறியபடியே செல்லை எடுத்து மூக்கருகே அதன் பேச வேண்டிய பாகத்தை வைத்துக் கொண்டு “ஹலோ...” என்றார் ராம்சாத்.

“ராம்நாத்... நான் ஞானப்பிரகாசம் பேசறேண்டா. எங்க இருக்க இப்போ?”

“நான்... எங்க இருக்கேனா? எங்க இருக்கேன்... கொஞ்சம்

இரு. ஸ்லைட்லி ஐ ஆம் கன்ஃப்யூஸ்ட்.”

“புடலங்கா... வார்த்தைக்கு வார்த்தை கேப் விடறதுலயே தெரியுது நீ தண்ணி அடிச்சிட்டு இருக்கேன்னு... நீ ஒரு இடியட். எந்த நேரத்துல என்ன காரியம்டா பண்ணிக்கிட்டிருக்கே...?

“சாரிடா ஞானா... ஐ ஆம் சாரி.”

“இந்த வார்த்தைக்கு அகராதில இல்லேன்னா என்னடா பண்ணுவே? வெட்கமாயில்ல உனக்கு இப்படிச் சொல்ல..”

“ஞானா... நீ என்னை ரொம்ப இன்சல்ட் பண்றே. யூ டசன்ட் நோ மை பெய்ன். யூ டசன்ட் நோ மை பிராப்ளம்ஸ். நீ ஒரு புத்தி வியாபாரி. உனக்கு உணர்ச்சிகள் பத்தியெல்லாம் கவலையே கிடையாது. அதை மைசூர் பாகு மாதிரி துண்டு போட்டு விலைக்கு விக்கிறவன் நீ...?

“நோ... நீ எதுவும் பேசக்கூடாது. பாவம்டா ரம்யா. உனக்கு மகளாப் பொறந்து அப்பவே அம்மாவைத் தொலைச்சா. இப்ப தினம் தினம் உன்னைத் தொலைக்கிறா. அவளை நினைச்சாத்தான் எனக்கு கவலையா இருக்கு.”

“போதுண்டா... மார்லயும் தோள்லயும் போட்டு நான் வளர்த்துவேன். படிக்க வைப்பேன். நகை நட்டு வாங்கி கொடுப்பேன். எல்லாம் பண்ணிக்கிட்டு இவ டாட்டா காட்டிட்டுப் போய்டுவா... நான் தனியாக கடந்து சாகணுமாக்கும். என் கிட்ட நடக்காது மச்சான். ஐ வோன்ட் அலவ்.”

அவ்வளவுதான். மறுமுனையில் ஞானப்பிரகாசத்திடம் பேச்சில்லை. அந்த நான்கு வரி பதிலில் அவருக்கு எல்லாமே விளங்கிவிட்டது.

போட்டிக்கோவுக்குப் பக்கத்திலேயே பிரம்பு நாற்காலியில் அமர்ந்து கொண்டு வாக்மேனில் மூழ்கிக் கிடந்தாள் ரம்யா.

உடம்பில அம்மைக் கொப்புளங்கள் ஆங்காங்கே தெரிந்தன. பிரம்பு நாற்காலியில் கூட வேப்பிலைக் கொத்து தெரிந்தது.

தனது பீயட் யூனோவோடு உள்ளே நுழைந்த ஞானப்பிரகாசம் காரை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கி ரம்யாவை நோக்கி நடந்தார்.

“வாங்க அங்கிள்.”

“என்னம்மா... இப்படி வெளியே உட்கார்ந்திருக்கே.”

“உள்ள அடைஞ்சு கிடக்க என்னவோ போல இருந்தது. அதான்...”

“இப்ப எப்டிம்மா ஃபீல் பண்ற?”

“ஓ கே.”

“பார்த்தா அப்படித் தெரியலையே... அம்மை வர்ற வயசா இது?” ரம்யா பதிலுக்கு சிரித்தாள்.

“சரி... உன் அப்பன் இன்னும் வரலியா?

“வந்திருந்த இங்க கார் இருக்குமே அங்கிள்...”

“இந்தப் பதில் எனக்குப் பிடிச்சிருக்கு... இல்லைன்னு ஸ்ரெயிட்டா சொல்லாம, இருந்தா எப்படி இருக்கும்ங்கிறத விஷீவலைஸ் பண்ணிச் சொல்றது ஒருவித புத்திசாலிதனம்மா.”

“நீங்க எங்க அங்கிள் இந்த டயத்துல? ஞாயிற்றுக்கிழமை பகல் பொழுது மட்டும்தானே நீங்கள் வாழறதுக்காகத் தரப்பட்டிருக்கு... மற்ற நாட்கள்ல உங்க ஆஃபீஸ் ஏ.ஸி.ரூமும் லேபர் பிராப்ளமும் தனே உங்க ரெகுலர் லைஃப்.”

“ஆமா... நீ எல்லா விஷயத்திலயும் எப்படி இவ்வளவு டெப்த்தா தாட்ஸை ஃபாம் பண்ற?”

“ரொம்ப சாதாரனமாகக் கேட்டேன். உங்களுக்கு டெப்த்தா தெரியுதா அங்கிள்?”

“இட்ஸ் வெரி டெப்த். சண்டே மட்டும்தான் நான் வாழறேங்கிறதை நானே நெனைச்சுப் பார்த்ததில்லே.

நாங்களெல்லாம் எண்பதாயிரம், ஒரு லட்சம் ரூபா சம்பளத்துக்காகப் புலியோட வாலைப் புடிச்சுடறோம. அப்புறம் விடமுடியாமப் போயிடுதும்மா. இதாம்மா ட்ரூத்.”

“சரி அங்கிள்... வந்த விஷயத்தைச் சொல்லுங்க.”

“உங்ககிட்ட நான் சுத்தி வளைக்க விரும்பல. நேராவே கேட்டுடறேன். உங்கல்யாணத்தைப் பத்தி நீ என்ன முடிவுல இருக்கே?”

“என்ன அங்கிள்... இப்படி திடீர்ன்னு சப்ஜெக்ட் மாறிட்டீங்க?”

“சொல்லுமா... உனக்குன்னு ஒரு நல்ல வரன் பார்த்திருக்கேன். மாதம் முப்பதாயிரம் டாலர் யு.எஸ்.ல சம்பாதிக்கிற ஒரு பையன்மா... ராம்நாத்தை வந்து பார்த்துப் பேசி முடிக்கச் சொல்லியிருந்தேன். ஆரம்பத்துல சரி, சரின்னு சொன்னவன் இப்ப பார்ல இருக்கான்ம்மா.”

பெருமூச்சுடன் அவர் நிறுத்தவும், அவரைப் பார்த்து ஒரு சிரிப்புச் சிரித்தாள் ரம்யா.

“என்னம்மா சிரிக்கிறே?”

“சிரிக்காம... அப்பாவை இன்னுமா உங்களுக்குப் புரியல அங்கிள்?”

“ஏன் புரியாம? உன்னைக் கல்யாணம் பண்ணி அனுப்ப அவன் விரும்பலே. ஒரு பொறுப்புள்ள அப்பாவா அவன் யோசிக்க மாட்டங்கிறான்.”

“ஏன் அங்கிள்... அப்பா அப்படி நினைக்கிறதுல என்ன தப்பு இருக்கு? பெத்து வளத்து ஒரு பொண்ணை ஆளாக்கி ஒரு ஆணோட அனுப்பி வைக்கிறதுங்கிறதுதான் ஒரு அப்பாவோட கடமையா? சாகிற வரைக்கும் என் கூடவே இரு. என்னால உன்னைப் பிரிய முடியாதுன்னு சொல்றவர் நல்ல அப்பா இல்லையா?”

“நிச்சயமா இல்லைம்மா. பொண்ணுங்கிறவ கொடிம்மா. கொம்புதான் புருஷன். படர விடலேன்னா கொடியோட இயல்பே கெட்டு அது அழிஞ்சி போய்டும்”.

ஸோ... நீங்க ஒரு பொண்ணு கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ்றதுதான் வாழ்க்கைன்னு நினைக்கிற மனிதரா? “

“அப்சல்யூட்லி... இதோ பாரும்மா நாம இந்த சப்ஜெக்ல இன்ட்ராக்ஷன்ஸைப் பிறகு வச்சுப்போம். அந்த மாப்பிள்ளைப் பையன்கிட்ட உன் அப்பன் சொதப்பிட்டுத் தண்ணி அடிக்கப் போயிட்டான். அவன் போனாப் போகட்டும். நீ என்ன சொல்றே. எதுக்குக் கேக்கறேன்னாஇ அந்தப் பையன் இன்னிக்கு ஊட்டிக்கு போறான். அப்புறமா சென்னை வரதுக்கு சமீபத்துல வாய்ப்பு இல்ல. எனக்கும் இந்த இடத்த விட மனசில்ல”.

“நான் யெஸ்னு சொல்லணும்னு சொல்றீங்களா?”

“அப்படிச் சொல்லல. பையனை நான் வீட்டுக்குக் கூட்டிட்டு வர்றேன். உங்க அப்பன் பிஸினஸ் மீட்டிங்னு டெல்லி போயிட்டான்ங்கிறேன். நீ பையன்கிட்ட பேசுஇ இரண்டு பேருக்கும் பிடிச்சிருந்தா கல்யாணம் பத்தி யோசிப்போம்”.

“இப்ப சம்மதிக்காத அப்பா அப்ப மட்டும் சம்மதிப்பாரா?”

“அவனை சம்மதிக்க வைக்கிறது என் பொறுப்பு”.

“வேண்டாம் அங்கிள். அவரை ஓவர் லுக் பண்ணி எனக்கு எதுவும் நடக்க வேண்டாம். ப்ளீஸ்.”

“ரம்யா... நான் நல்லா யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். நானும் உனக்கு ஒரு அப்பா மாதிரிதான்.”

“நானும் மறுக்கலை அங்கிள். இருந்தாலும்...”

“சந்தர்ப்பங்களைச் சரியா பயன்படுத்திக்கிறவன்தான் மனுஷன்.”

“மெடீரியலிஸ்டிக் மேட்டருக்கு அது பொருந்தும். இது ஃபீலிங்க்ஸ்... கொஞ்சம் கூடப பொருந்தாது.”

“சொல்றதைக் கேளும்மா?”

“இல்ல அங்கிள். அப்பா வரட்டும். அவர்கிட்ட பேசிட்டே ஒரு

முடிவுக்கு வருவோமே?”

ரம்யா பேச்சோடு வாஞ்சையாக ஞானப்பிரகாசத்தின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அப்போது ‘திருமகள்’ பத்திரிகையோடு உள்ளே நுழைந்து கொண்டிருந்தான் அருகில் இருக்கும் கடைக்காரச் சிறுவன். அட்டையில் ரம்யாவின் ஓவிய வரைபடம்!

# 6

‘ஒருவரிடம் எத்தனை தோஷங்கள் இருந்தாலும், தவறுகள் இருந்தாலும் அதைப்பெரிது படுத்தாதே. சிறிய குண விசேஷம் இருந்தாலும் அதையே கொண்டாட வேண்டும். தேய்ந்துபோன சந்திரகலைக்கும் கூட குளுமையும், பிரகாசமும் இருப்பதால் அதைப் பரமசிவன் தம் தலையில் தரித்து உலகமெல்லாம் பார்த்துப்ப் புகழும்படி செய்கிறார். அதே ஈஸ்வரன்தான், மகாகொடிய ஆலகால விஷத்தை யார் கண்ணிலும் படாதபடி தன் கண்டத்தில் ஒளித்து வைத்திருக்கிறார். இதைத் தண்டி என்ற கவி வெகு அழகாகப் பாடியுள்ளார்.’

காஞ்சி முனிவர்.

ரம்யா ‘திருமகள்’ இதழின் அட்டையை மாறி மாறிப் பார்த்தாள். அவள் திருமகளுக்குப் போட்டோ எதையும் அனுப்பவில்லை. இருந்தும் அவள் உருவம் தத்ரூபமாக வரையப்பட்டு அட்டையில் வந்திருந்தது. அதை அவளால் நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை.

திரும்பித் திரும்பிப் பார்த்தாள்.

ஞானப்பிரகாசமும் மெல்ல எட்டிப் பார்த்தார். அட்டையில் அவள் உருவத்தைப் பார்த்த உடனேயே அவருக்கு விளங்கிவிட்டது.

“என்ன ரம்யா...அட்டையிலேயே உன்படம். ஏதாவது தொடர் எழுதப் போறியா?”

“இல்ல அங்கிள். ‘வானத்தைப் பாருங்களேன்’ன்னு ஒரு போட்டி, அதுல கலந்துக்கிட்டேன்” என்றபடியே புத்தகத்தின் உள்ளே போனவள் எனக்குத்தான் “முதல் பரிசு”என்றாள் உற்சாகமாக.

“எங்க...? “ஞானப்பிரகாசத்தின் கை நீண்டது. அவளும் புத்தகத்தைத் தந்தாள். அவரும் ஆசையாகப் படித்தார். படிக்கப் படிக்க அவர் முகத்தில் ரசமான மாறுதல்கள்.

“வெரிகுட்... ஒண்டர்புல்... வாவ்! நல்லா இருக்கு ரம்யா உன்னோட தாட். பியூட்டிஃபுல்” என்று அவர் உதட்டிலிருந்து விமர்சனமும் விளைந்தது.

ரம்யாவுடன் அவர் பேசிய கல்யாணப்பேச்சு, அப்பா பற்றிய கவலை எல்லாமே தாற்காலிகமாக பூனையைக் கண்ட எலி போல ஓடி ஒளிந்து கொண்டுவிட்டன. பேச்சும் திசை மாறிப் பயணிக்கத் தொடங்கியது.

“நல்ல சிந்தனை ரம்யா. ஆகாயம்தான் இருக்கறதுலயே பெரிசு. அவ்வளவு பெரிய ஆகாயத்தை அழுக்காக்கற நம்மோட சுயநலமும், பொறுப்பின்மையும் இந்த ஆகாயத்தையே அச்சப்பட வைக்குதுன்னா... அது பெரிசா இல்லை... அதை நடுங்க வைக்கிற நாம தான் பெருசான்னு ஒரு சந்தேகம் வருது. அற்புதமா சிந்திச்சிருக்கே.”

விஸ்தாரமாகவே பாராட்டினார் ஞானப்பிரகாசம். நல்ல ரசனை உள்ளவர்களே எப்போதும் இப்படித்தான். பால் போல பொங்கிடுவார்கள்.

“ஆமாம்... இது என்ன உன் படத்தை வரைஞ்சு வச்சிருக்காங்க. போட்டோ தரலியா நீ?”

“இல்ல அங்கிள்... எப்படி வரைஞ்சாங்கன்னு எனக்கே தெரியல.”

“என்னம்மா சொல்றே... அச்சு அசலா இருக்கே. போட்டோவில பாக்காம இப்படி வரைய முடியாதே?”

அவர் பேசப்பேச அவள் பார்வை அந்த படத்தை யார் வரைந்தது என்று பார்த்தது. அதில் எந்த குறிப்புகளும் இல்லை. சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தவளாய் “அங்கிள்... உங்க செல்போனைக் கொஞ்சம் குடுங்க...” என்று கேட்டு வாங்கி புத்தகத்தில் இருந்த தொலைபேசி எண்ணைப்பார்த்து அதற்கு டயல் செய்து அரவிந்தனை எட்டிப் பிடித்தாள்.

“மிஸ்டர் அரவிந்தன்....?”

“யெஸ்... அரவிந்தன் ஸ்பீக்கிங்.”

“நான் ரம்யா பேசறேன்.”

“யூ மீன்’வானத்தைப் பாருங்கள்’ரம்யா?”

“அப்கோர்ஸ்... இப்பக் கூட வானத்தைப் பார்த்துக்கிட்டுத்தான் பேசறேன்.”

“ஓ... நல்ல பதில். இன்னிக்கு புஸ்தகம் மார்க்கெட் ஆயிடுச்சு. பார்த்தீங்களா?”

“பாத்துட்டுத்தான் போன் பண்றேன். என் படம் அட்டையில் வந்துருக்கு எப்படி?”

“உங்க படத்தைப் போடக்கூடாதா? நாங்க முதல் பரிசு வாங்கறவங்களை இப்படியெல்லாம் கௌரவப்படுத்துவது வழக்கம்.”

“அது சரி, சந்தோஷமும் கூட. ஆனா என் போட்டோ கூட இல்லாம எப்படி என்னை வரைய முடிஞ்சது உங்க ஆர்ட்டிஸ்டால?”

“அந்த ஆர்டிஸ்ட் நான் தான். உங்க உருவம் என் மனசுல பதிஞ்சு இருந்ததால உங்ககிட்ட போட்டோ கேட்கத் தோணலை.”

அவனது பதிலால் ரம்யா ஒரு விநாடி திக்குமுக்காடி விட்டாள். சட்டென்று ஒரு பதிலை அவளால் சொல்லவே முடியவில்லை.

ஞானப்பிரகாசம் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

“என்ன மேடம் நம்ப முடியலையா? இல்ல... என் பதில் சினிமா டயலாக் மாதிரி இருக்கா?”

“சினிமா டயலாக்?’

“யெஸ்... சினிமாலதான். ஃபுட்டேஜ் சென்ஸ்னு ஒண்ணு இருக்கு. அதுக்காக ரொம்பப் பேசி புரியவைக்க வேண்டிய விஷயத்தை ரொம்ப சென்சிடிவா இரண்டொரு வார்த்தைல சொல்ல முயற்சி செய்வாங்க. ஆக்சுவலா எந்த ஒரு

கேரக்டரும் உலகத்தில இப்படிப் பேசறதில்ல. சினிமால பேசிதான் தீரணும். வேறு வழியில்ல. நான் இரண்டுலையும் இல்ல.”

“அப்படின்னா?’

“இரண்டுங்கெட்டான்னு வெச்சுக்குங்களேன். பாருங்க... ஷார்ட்டாவும் பேசியிருக்கேன். லெங்த்தாகவும் பேசியிருக்கேன்.”

அரவிந்தனின் அடுத்தகட்ட பதிலால் திரும்பவும் ஒருவித மௌனம் ரம்யாவிடம். தன் சிறிய விழிகளால் நன்றாகவே மன்றாடினாள். அதையும் கூர்ந்து கவனித்தார் ஞானப்பிரகாசம்.

“என்ன ரொம்பப் பேசி அறுத்துட்டேனா? ஐயாம் ஸாரி... உங்கவரையில் நான் கொஞ்சம் ஓவராத்தான் போறேன். இல்லைன்னா முதல் சந்திப்பிலேயே உங்ககிட்டு கவரைக் கேட்டு வாங்கிக்கிட்டிருப்பேனா? அடுத்து வீட்டுக்கு வந்திருப்பேனா? எல்லாத்துக்கும் மேல உங்க படத்தை போட்டிருப்பேனா? நான் கொஞ்சம் அதிகப் பிரசங்கிதான். ஆனாலும் தப்பு இல்லைன்னுதான் நினைக்கிறேன். ஏன்னா, இன்னிக்கு எந்த பங்களா பொண்ணு சிம்பிளா இருக்குது? இப்படி இயற்கை பத்தியெல்லாம் சிந்திக்குது? எனக்கு நீங்க சிந்திக்கிற விதம் பிடிச்சிருக்கு மேடம்... ரெம்பப் பிடிச்சிருக்கு. பொறாமையாகக்கூட இருக்கு...”

அரவிந்தன் பேசிக் கொண்டே போனான். கேட்டுக் கொண்டிருந்த ரம்யாவால் ஒரு கட்டத்துக்கு மேல் அவனிடம் பேச முடியவில்லை.

“தேங்க்ஸ்...” என்று ஒரே வார்த்தையோடு செல்போனை அணைத்தாள். மனசெல்லாம் பனி மூட்டம் சூழ்ந்து காட்சிகளே தெரியாத மாதிரி ஒரு குழப்பம். அது குழப்பமா இல்லை. ஒரு வித இன்ப அனுபவமா என்னும் ஒரு கேள்வி. அந்தக் கேள்வியும்கூட ஒரு வித குழப்பமாகத்தான் இருந்தது.

“என்னம்மா ரம்யா? என்ன சிந்தனை?”

ஞானப்பிரகாசம் அவளைக் கலைத்தார். அப்படியே செல்போனைக் கேட்டு வாங்கிக் கொண்டார்.

“ஒண்ணுமில்ல அங்கிள்.”

“அப்படின்னா மனசு நிரம்பித் ததும்புதுன்னு அர்த்தம். கமான்... யார் கூடப்பேசினே? என்ன சொன்னாங்க?”

“அதை எப்படி அங்கிள் சொல்வேன்! நான் எங்க அங்கிள் பேசினேன்... என்னை எங்க அந்த அரவிந்தன் பேசவிட்டார்.”

“அரவிந்தனா... யார் அது.”

“அது... அது... அவர் தான் என்படத்தை வரைஞ்சவராம். எப்படி வரைஞ்சீங்கன்னு கேட்டா நீங்கதான் என் மனசுல பதிஞ்சு கிடக்கறீங்கன்னு ஏதேதோ...”

ரம்யா மெல்லிசாகத் தத்தளித்தாள்.

“என்னம்மா சொல்றே...? இந்த மனசுல பதிஞ்சிருக்கே... கண்ணுக்குள்ளயே இருக்கே’ன்னு பீலா விடறதெல்லாம் டர்ட்டி இண்டியன் சினிமாவோட இல்லாஜிக்தான். அந்த ஆள் என்ன கதை வுடறானா உங்கிட்ட?”

“நோ... நோ... அவர் அப்படிப் பட்ட மனுஷர் இல்ல. இன் ஃபாக்ட் இங்க என்னைப் பாக்க வந்திருந்தார் அதுக்கு முந்தி போஸ்ட் ஆபிஸ்ல மீட் பண்ணியிருக்கோம். “

“என்னம்மா சொல்றே... நீ சொல்றதையெல்லாம் கூட்டிக் கழிச்சுப் பர்த்தா...” ஞானப்பிரகாசம் முடிக்கும் முன் அலறத் தொடங்கினாள் ரம்யா.

“அங்கிள்... அங்கிள்... கண்டபடி கற்பனை பண்ணி கேக்கக் கூடாத கேள்வியெல்லாத்தையும் கேட்டுடாதீங்க.”

அழகாக அணை கட்டினாள் ரம்யா. ஞானப்பிரகாசம் பதிலுக்குக் கூர்மையாக ஒரு பார்வை பார்த்தார். பின் “சரி... உன் கல்யாண விஷயத்துக்கு வருவோம். அந்த பையனை நான் இங்க கூட்டிக்கிட்டு வரவா?” என்று தான் வந்து விஷயத்துக்கு மாறினார்.

அதற்கு என்ன பதில் கூறுவது என்று புரியாமல் ஒரு வினாடி திணறியவள் “வேண்டாம் அங்கிள்... ப்ளீஸ் “ என்றாள்.

“ரம்யா... இது ஒரு நல்ல சந்தர்ப்பம். வாழ்க்கையில் சந்தர்ப்பங்கள் எப்பவாவதுதான் வரும். இந்தப் பையனை எனக்கு நல்லாத் தெரியும். உனக்கு ரொம்ப ஏத்த பையன். நல்ல கல்ச்சர் உள்ள குடும்பம். இன்ஃபாக்ட் இவன் அக்கா ஒரு விடோ. ஆகையால் ஆண் துணையில்லாம ஒரு பெண் இருக்கிற சிரமங்களையெல்லாம் நல்லாப் புரிஞ்சிருக்கிற ஒருத்தன்.”

“தெரியும் அங்கிள்... உங்க செலக்ஷன் எப்பவுமே தப்பா இருக்காது. ஜாதகத்துல கூட பத்துப் பொருத்தத்தைத்தான் பார்ப்பாங்க. நீங்க நூறு பொருத்தம் பாக்கறவர்.”

“அப்புறம் ஏன் வேண்டாம்னு சொல்றே?”

“என்ன அங்கிள்? நான் சரின்னு சொன்னால் ஆச்சா? எனக்கு அப்பான்னு ஒருத்தர் இருக்காருல? அந்த அவரைக் கவனிச்சு முடியுங்க. அப்பா வந்து என் கல்யாணப் பேச்சை எடுக்கட்டும் அதுதான் அழகு.”

“ஐயோ... அவன் யோசிச்சு ஒரு நல்ல முடிவுக்கு வரதுக்குள்ள இந்தப் பையன் ஸ்டேட்ஸ் போயிடுவான். விட்டாப பிடிக்க முடியாது.”

“அப்படிப் பிடிக்க முடியாத ஒரு மாப்பிள்ளை எனக்கு வேண்டாம் அங்கிள்.”

ரம்யா சற்று ஆவேசமாகவே பதில் சொன்னவிதம் ஞானப்பிரகாசத்தை அப்படியே கட்டிப்போட்டு விட்டது.

“ரம்யா?”

“ப்ளீஸ் அங்கிள்.”

“ஒரு உண்மையை நான் இப்ப தெரிஞ்சிக்கிட்டேன். பெத்தவங்க ஸ்தானத்தை மத்தவங்களால எப்பவுமே நிரப்ப முடியாதும்மா, மூணாவது மனுஷர் மூணாவதாவே

இருக்கிறதுதான் அவருக்கு நல்லது.”

அத்தோடு எழுந்து கொண்டு தன் கார் நோக்கி நடையிட்டார். ரம்யாவுக்குக்கூட, தான் இன்னமும் நேர்த்தியாக வேறு வார்த்தைகளில் பதில் சொல்லியிருக்கலாமோ என்று தோன்றியது.

இரவு நேரம்!

கார் ஹாரன் சப்தம் கேட்டு மாடி பால்கனியிலிருந்து கீழே பார்த்தாள் ரம்யா. ராம்நாத்தான் நுழைந்து கொண்டிருந்தார். நடையில் பயங்கரத் தள்ளாடல். கூட யார் அது?

அரவிந்தனா?!

# 7

ஸார்... இந்த உலகம், புவனமே கடவுளின் சிருஷ்டி, கடவுள், ஜீவசக்தி, ப்ரும்மம் பெயர் எதுவானாலும் சரி... ப்ரும்மம் ஏன் சிருஷ்டி பண்ணிக் கொண்டே இருக்கிறது?

சிருஷ்டியின் அவசியம்தான் என்ன?

இது சுயநினைப்பில்லாமல் பொறுப்பற்றுச் செயல்படுகிறது என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் சிருஷ்டியில் - நடப்பு, அழிவு உள்படத்தான் ஒரு லட்சணம், அதில் நியதி, கோர்வை எல்லாமே தெரிகின்றன.

முரண்பாடு என்று நமக்குத் தோன்றுபவை கூட ஏதோ ஒரு முறை, கோட்டுக்குக் கட்டுப்பட்டுத்தானிருக்கிறது.

சிருஷ்டியினின்று அதன் ரசங்களை மனிதன் எவ்வளவோ பிடுங்கல் பிடுங்க இன்னும் பெருக்கிக் கொண்டுதான் போகின்றன.

ஆனால், ஓயாமல் பெருகிக் கொண்டிருக்கும் இந்த சிருஷ்டித் தொழிலுக்கு ஒரு நிப்பாட்டம், தடுத்தல் - நிறுத்தல் கிடையாதா? ப்ரும்மத்தால் சும்மாவே இருக்க முடியாதா?

- ‘த்வனி’யில் லா.ச.ரா.

பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருந்த ரம்யா, அப்பா ராம்நாத்துடன் தெரிந்த உருவமாக அரவிந்தனைக் கருதியது சரிதான். அவனேதான்.

அந்த நொடி ரம்யாவுக்குப் பனிக்குளத்தில் விழுந்த மாதிரிதான் இருந்தது. அவன் மட்டும் உடன் இல்லாத பட்சத்தில் அப்பாவாகிய ராம்நாத் ஒரு எரிச்சலூட்டும் மனிதராகத்தான் தெரிந்திருப்பார்.

சாதாரணமாகக் குடிகாரர்களிடம் அவர்கள் போதையில் இருக்கும்போது பேசுவதில் ஒரு பயனுமில்லை

என்பதோடு, நமக்கு நேர விரயம் என்கிற நஷ்டம் நேர்கிறது என்பதால் ரம்யா போதையில் உள்ள ராம்நாத்திடம் பேசுவதை விரும்புவதில்லை.

இப்பொழுது கூடவே அரவிந்தன் தெரியவும் ராம்நாத் குறித்த சர்ச்சையெல்லாம் அடங்கி ஒடுங்கிவிட்டதாகவே தோன்றியது.

எப்பொழுதும் ஒரு துன்பமான உணர்ச்சிக்குத் தனிமையில் ஒரு வித பலமும், சிலர் சூழ்ந்திருக்கும் போது ஒரு வித பலமும் ஏற்படுவதை அந்த நொடி யோசித்தவளுக்கு, உலகத்தில் இன்பதுன்பங்களை ஒப்பிட்டுப் பார்த்துத்தான் கூட்டியோ குறைத்தோ அனுபவிக்கிறோம் என்கிற ஒரு சன்னமான ஞானம் கூட ஏற்பட்டது. அத்துடன் கீழிறங்கி வந்தாள்.

கடந்த முறை அரவிந்தனிடம் நடந்து கொண்டதற்கு மாற்றாக நடந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டாலும் இவன் எப்படி அப்பாவுடன் கச்சிதமாக...? என்கிற ஒரு கேள்வியும் நெருடிற்று.

இன்றைய சினிமாக்கள் இளைஞர்களுக்கு நிறைய விஷயங்களைக் கற்றுக் தருகின்றன. அதில் ஒன்று, அவன் விரும்பும் பெண்களை நெருங்கும் விதங்கள். இவனும் அப்படி ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்துத் தன்னைக் குறி வைத்து வரும் ஒருவனா?

நிச்சயமாக ‘ஐ லவ் யு ரம்யா’ என்று கூடிய சீக்கிரத்தில் உளறப்போகும் ஒருவனா?

மாடிப்படி இறங்கி அவர்கள் இருவர் எதிரே நேர்ப்படுவதற்குள்தான் எத்தனைக் கேள்விகள்!

‘குட் ஈவினிங்’ – என்று அதைக் கலைத்தபடி சற்றுக் கலங்கிய முகமாகவே ரம்யாவைப் பார்த்தான் அரவிந்தன். ஹால் சோபாவில் தொங்கிய தலையும் ஜொள்ளு வாயுமாக ராம்நாத்.

“பாண்டிபஜார் பக்கமாக ஒரு வேலையாகப் போயிருந்தேன்.

கார் பார்க் பண்ற இடத்தில் மயங்கிக் கிடந்தார் சார். பார்த்துட்டுத் தாண்டிப்போக மனசு கேக்கல. நல்லவேளை எனக்குக் கார் டிரைவிங் தெரியும். உங்க வீட்டு முகவரியும் தெரியும். அதோட எதிரொலிதான் உங்க முன்னால பேசிக்கிட்டிருக்கேன்.”

அரவிந்தன் கச்சிதமாகவும் சுருக்கமாகவும் பேசினாலும், அவளுக்குள் அதை எவ்வளவு நம்புவது என்று ஒர சின்ன சந்தேகம்.அதன் எதிரொலியாக “ரொம்ப தாங்க்ஸ் உங்களுக்கு” என்று பொங்கிப்பெருக வேண்டியவள் அப்படி ஏதும் கூறாமல் ராம்நாத்தைப் பார்த்தாள்.

ஆனால், அவனுக்குப் புரிந்துவிட்டது.

“மிஸ் ரம்யா... சாரை இந்தக் கோலத்துல பாப்போம்னு நான் நினைக்கவேயில்லை, என் மனசுல சார் இருந்த விதமே தனி... அவர் போய் இப்படி...? சேம் டைம். ஒரு பத்து நாளைக்குள்ள உங்களை உங்க குடும்பத்தை அடிக்கடிச் சந்திக்க வேண்டி வந்துருச்சு. எல்லாமே ஆச்சரியமா இருக்கு! வாஸ்தவத்துல ஈவினிங்கிற பேரைக் கூட கொஞ்ச நாளைக்கு நினைக்க கூடாதுன்னுதான் நினைச்சேன். அடுத்த சில மணி நேரத்திலயே உங்கப்பாவைப் பார்த்துட்டு உங்க கூடவே பேசும்படி காலம் பண்ணியிருக்கு! எங்கம்மா அடிக்கடி சொல்லுவாங்க... ‘காலம்ங்கிறது ஒரு வெள்ளம். நாம் அதில் மிதக்கற துரும்பு. அது இழுப்புக்குத்தான் நாம போகமுடியும். நமக்குன்னு தனியா அதுல ஒரு விசை கிடையாது’ன்னு, இப்ப அனுபவபூர்வமா நான் அதை உணர்கிறேன். சாரை கவனமாப் பாத்துக்குங்க. இப்ப நான் அவர்கிட்ட எதுவுமே பேச விரும்பவில்லை. ஏன்னா அது வேஸ்ட். நாளைக்கு வருவேன். சில கேள்விகளை நான் சார் கிட்ட கேக்கணும். கேட்டே தீரணும். இப்ப வர்றேன்.”

அரவிந்தன் ஒரு ஐந்து நிமிஷ மண் வாசனை மழைபோல பேச வேண்டியதைப் பேசிவிட்டு விறுவிறுவென்று திரும்பி நடந்தான்.

ரம்யாவிடம் கொஞ்சம் குழப்பம். கொஞ்சம் ஸ்தம்பிப்பு! கொஞ்சம் சந்தோஷமும் கூட.

மயிலாப்பூரில் இருந்தது அரவிந்தனின் ஃப்ளாட். எதிர் ஃப்ளாட்டில்தான் டி.வி. நடிகன் குணசேகரன் குடியிருக்கிறான். அவன் வரும் போதும் போகும் போதும் “சார் இன்னிக்குப் பர்பாமென்ஸ் சூப்பர். ஆனா போட்டுக்கிட்டிருந்த டிரஸ்தான் சரியில்ல” என்பது போன்ற விமரிசனங்கள் காதில் விழும்.

அவனும் தலையாட்டியபடியே வந்து கீழே தனது மாருதி 800-ஐக் கிளப்புவான். அப்பொழுதெல்லாம் அரவிந்தனின் பைக்கைச் சற்றுத் தள்ளி வைக்க வேண்டிய ஒரு தர்மசங்கடம்.

“இந்த ஆளு தினமும் இப்படியே நிறுத்தறான்” என்கிற முணு முணுப்போடுதான் காரை எடுப்பான். இன்று அதற்கு அவசியமில்லாதபடி ஓரமாகவேதான் நிறுத்தியிருந்தான் அரவிந்தன்.

ஆனால், பைக் மேல் ஒரு ஃபைல் இருந்தது. சுற்றிச் சுற்றிப் பார்த்தான் அந்த நடிகன். அரவிந்தன் கண்ணிலேயே படவில்லை. ஒரு வேளை மறந்து வைத்துவிட்டுப் போய்விட்டானோ!

அருமையான கடற்காற்று வேறு. அந்தப் பைலைப் பிரட்டி அதன் பக்கங்களைப் படிக்க ஆசைப்படுகிற மாதிரி தோன்றியது. வானிலும் தூறல். அவனுக்கு மனம் கேட்கவில்லை. பைலைக் கையில் எடுத்துக் கொண்டான். அரவிந்தனைப் பார்த்து ஒப்படைக்கக் கிளம்பிவிட்டான்.

இந்த மாதிரி க்யூரியாசிடிக்குள்தான் மனிதனுக்குண்டான தனிச்சிறப்பான விஷயங்கள் கொஞ்சம் மஞ்சள் வெயிலாய் மின்னிக் கொண்டிருக்கின்றன.

பகலில் பைக்கில் விளக்கெரிய ஓட்டிச் செல்லும் போது எதிர்ப்படுபவர்கள் எவ்வளவோ பேர் ‘எரியுது’ என்று போகிற போக்கில் சிக்னல் கொடுப்பதெல்லாம் எத்தோடு சேர்த்தது?

பொதுநலன் என்பது காதுமடல் அழுக்காகக் கொஞ்சமாவது எல்லோரிடமும் இருக்கத்தான் செய்கிறது.

‘டொக்... டொக்...’ குணசேகரனாகிய அந்த நடிகன் ப்ளாட்டை நெருங்கிக் கதவைத் தட்டினான். திறந்து கொண்ட கதவுக்குப் பின்னால் ஒரு அழகிய பெண்ணுருவம். முப்பத்தைந்து வயது மதிக்கலாம்.

“யெஸ்...” என்றாள் சாதாரணமாக அவளும்.

“மேடம் நான்...”

“உங்களுக்கு என்ன வேணும்?”

“என்னைத் தெரியலையா? நான் குணசேகர். இதோ இது தான் என் ப்ளாட்.” அவன் தன் ப்ளாட்டைக் காட்டினான்.

“சரி... இருக்கட்டும். உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லலியே?”

அவள் முழுதாகக் கதவைத் திறக்காமல் மிக எச்சரிக்கையாக, அதே சமயம் படுபடு ரிசர்வ்ட் ஆன ஒரு பெண் போலப் பேசியது அவனைக் கொஞ்சம் நசுக்கியது. டி.வி. அவனுக்கொரு கர்வத்தைக் கொடுத்திருந்தது. தன்னைத் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது என்பதுதான் அது. இவளோ நேர் எதிராய் இருக்கிறாளே!

“அரவிந்தன் சார் இல்ல? “

“எதுக்கு?”

“இந்த ஃபைல அவர் பைக் மேல பார்த்தேன். ஆதைக் கொடுக்கத்தான் வந்தேன்.”

அவன் சொல்லும்போதே சாப்பிட்டுக் கையைக் கழுவிக்கொண்டு வெகு வேகமாக வந்தான் அரவிந்தன்.

“ஹலோ சார்... உள்ற வாங்க. என்ன வாசல்லயே நின்னுட்டீங்க? அக்கா...சாரை உனக்குத் தெரியலை? ஃபேமஸ் டி.வி.ஸ்டார்க்கா! வாங்க சார்... வாங்க உள்ற... அட பைலை மறந்துட்டு வந்துட்டேனா? ஓ...சாரி.”

அந்தப் பெண்ணுக்கும் சேர்த்து அரவிந்தனே வரவேற்று

முடித்தான். அவளும் முழுக்கதவைத் திறந்து அவனை உள்ளே அங்கீகரித்தாள். ஆனாலும் முகத்தில் அந்த இறுக்கம் நீங்கின மாதிரி தெரியவில்லை.

குணசேகரனை அவளது நிலைப்பாடு புலிக்காலாய்ப் பிராண்டத் தொடங்கிவிட்டது.

அகத்தின் ரியாக்டர்தானே முகம்?

அவனது மனப் புழுக்கம் வரிவரியாக முகத்தில் தெரியத் தொடங்கிவிட்டது. அரவிந்தன் அதைப் பார்த்து அழுகாய் சமாளித்தான் ஜர்னலிஸ்ட் ஆயிற்றே?

“இவங்க என் அக்கா. பேர் சரண்யா. ரொம்ப ரிசர்வ்ட் டைப். எப்பப் பார். புத்தகம் படிச்சுக்கிட்டே இருப்பாங்க. டி.வி. இவங்க வரைக்கும் ஒரு இடியட் பாக்ஸ். ஆதனால அதைப் பாக்கறதே இல்லை. அதான் உங்களை ஐடெண்டிபை பண்ணலை.”

குணசேகரனுக்குக் கொஞ்சம் போல நிம்மதியாயிற்று. சிலர் இருக்கிறார்கள். லட்ச ரூபாய் எரிந்துவிட்டது என்றால் கூடச் சுலபமாக எடுத்துக் கொள்வார்கள். ஆனால் யாராவது பொருட்படுத்த வேண்டிய அளவைக் குறைத்துக் கொண்டாலே போதும் செத்துச் சுண்ணாம்பாகிவிடுவார்கள். அதிலும் கலைஞர்களிடம் இந்த மாதிரி விஷயத்தில் வேதனை அதிகமாகவே இருக்கும்.

குணசேகரனும் அப்படித்தான் போல் இருந்தது. சகஜமாக முடியாமல் தத்தளித்தாலும் சுதாரிக்க முயன்றான்.

“அக்காங்கறீங்க... மாப்பிள்ளை என்ன பண்றார்?”

சாதாரணமாகத்தான் அந்தக் கேள்வியைக் கேட்டான். எல்லோரும் யதார்த்தமாகக் கேட்கக் கூடியகேள்விதான். ஆனால், இது சரண்யா என்கிற அந்த பெண்ணை க்ஷணத்தில் ஒரு துன்பச் சுழலுக்குள் தள்ளிவிட்டது. மளுக்கென்று கண்ணில் நீர் திரண்டுவிட்டது. விசுக்கென்று அங்கிருந்து விலகி உள்ளே ஓடினாள்.

குணசேகரனுக்கு கொஞ்சம் பகீரென்றது. அரவிந்தன் முகம்

கசங்கிவிட்டது.

“என்ன மிஸ்டர் அரவிந்தன்? நான் தப்பா ஏதாவது கேட்டுட்டேனா?”

“அதெல்லாம் ஒண்ணுமில்லை அக்கா வரையில் அவ கல்யாணமே தப்பாப் போயிட்டதால அந்தப் பேச்சு வந்தாலே எல்லாம் தப்பாயிருது?”

“யூ மீன் அவங்க ஹஸ்பென்ட்...?”

“அவர் பேர் பிரபாகர். மிலிடரியில காப்டனா இருந்தார். இரும்பாலைல பஞ்சு மாதிரி மிலிட்டரியில் அவர்! ரொம்ப நல்ல மனுஷன். ஆனா பாருங்க... அக்காவோட சேர்ந்து வாழ ஆயுசு இல்லாமப் போயிடுச்சு. இந்த கார்கில் போர்ல அவர்...”

அரவிந்தன் முழுவதும் முடிக்காமல் சற்று தொண்டை குமற, தேங்கினான்.

“ஐ ஆம் சாரி... ஐ ஆம் சாரி...! நான் பழசையெல்லாம் ஞாபகப்படுத்திட்டேன்... ப்ளீஸ். இட் ஈஸ் ரியலி அன்பார்ச்சுனேட். நான் கிளம்பறேன்... ப்ளீஸ்.”

குணசேகரன் உடனேயே அந்தச் சூழலைத் தவிர்க்க முனைந்தான். அரவிந்தனும் தடுக்கவில்லை.

“பைலைக் கொண்டு வந்து கொடுத்ததற்கு ரொம்ப நன்றி.”

கதவைத் தாண்டும் போது மறந்து போன நன்றியை வெளிப்படுத்தினான் அரவிந்தன்.

குணசேகரனும் அதை ஒரு தோள் குலுக்கலோடு அங்கீகரித்தபடி தன் காரைத் தேடி வந்து கிளப்பினான்.

அந்த நொடி மனசுக்குள் வக்கிரமாய் ஒரு எண்ணம்.

‘சரண்யா... பேரும் அழகு. விடோ வேற. அப்ப டிரை பண்ணிப் பாக்க வேண்டியதுதான்!’

அவனின் எண்ணத்தைப் போலவே காரிடமும்

பின்னோட்டம்!

# 8

‘ஒருவரது நல்ல அம்சத்தைக் கொண்டாடுவதால் அவருக்கு மேலும் உற்சாகம் உண்டாகிறது. அந்தக் குணங்களையும் அவர் விருத்தி செய்துகொள்கிறார். ஆனாலும் ஒருவரைப் புகழுவதிலும் நமக்குக் கட்டுப்பாடு இருக்க வேண்டும். ஒரேயடியாய்த் தோத்திரம் செய்து ஒருவரை அகங்காரத்துக்கு ஆளாக்கிவிடக்கூடாது.

புகழ்ச்சி ஒரு நுட்பமான விஷயம். இதனால்தான் பெரியோர்கள், ஈஸ்வரனையும், குருவையும் மட்டுமே நேரில் துதிக்கலாம்’ என்றனர். பந்து மித்திரர்களைக்கூட நேரில் புகழக்கூடாது. மற்றவர்களிடமே அவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேச வேண்டும்.(சவாரி முடிந்த பின்பு குதிரையைத் தட்டிக் கொடுப்பது போல) வேலையை முடித்த பின்னரே ஊழியரைப் பாராட்டலாம். பிள்ளையை ஒரு போதும் புகழக் கூடாது!”

-காஞ்சி முனிவர்

குணசேகரின் கார் அந்த அபார்ட்மென்ட்டை விட்டுக் கிளப்பிச் செல்வதைத் தன் ப்ளாட் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினான் அரவிந்தன்.

சரண்யா அழுதபடி இருந்தாள்.

மெல்ல அவளருகே சென்றான்.

“அக்கா.”

“உம்...”

“நீ அத்தானோட ஒரு வருஷம் வாழ்ந்திருப்பியா?”

அவன் கேள்வியின் நோக்கம் தெரியாமல் அவனைப் பார்த்தாள். பார்க்கும்போதும் கண்ணீர்.

“கேக்கறேன்ல... பதில சொல்லேன்.”

“எதுக்கு கேக்கறே?”

“நீ முதல்ல சொல்லு... அப்புறம் நான் வரேன்.”

“கிட்டத்தட்ட ஒண்ணரை வருஷம்.”

“இதுல அவர் மிலிட்டடரி காம்பில் கழிச்ச காலங்களும் அடக்கம்தானே?”

“நிச்சயமா?”

“அப்புறம் அவர் தூங்கினது, குளிச்சது, அங்க இங்க போனதுன்னும் இதுல நேரங்கள் அடங்குது இல்லியா?”

“என்னடா கேள்வி இது?”

“இதுதான்கா கேள்வி... மொத்தமா அவர் அருகாமையில் இருந்த நேரங்களை இதுல கணக்கெடுத்தா ஒரு ரெண்டு மூணு மாசம் தேறுமா?”

அவள் பதிலுக்கு வெறித்தாள்.

“வெறிக்காதே... யோசிச்சுப் பதில் சொல்லு.”

“எதுக்கு இந்த பீடிகை?”

“இல்லை... மிகக் குறுகியகால உறவுக்குள்ற அத்தான் உன்னைப் பாதிச்ச அளவை நினைச்சுப் பார்த்தேன். அதான்...”

“அவருக்கென்ன... அவர்பாட்டுக்கு போயிட்டாரு. இங்க போறவங்க வரவங்களெல்லாம் கேள்வி கேட்கும் போது எனக்குத்தானே வலிக்குது?”

“இல்லக்கா... உனக்கு நிஜமா வலியே கிடையாது. ஆனா நீ வலிச்சா பரவால்லன்னு நினைக்கிறே.”

அரவிந்தன் சற்று உரத்த குரலுக்கு மாறினான்.

“என்னடா சொல்றே?”

“ஆமாக்க... உனக்குள்ளறையே நீ மாட்டிக்கிட்டு இருக்கே. இது பெரிய கொடுமைக்கா. அத்தான் இறந்தது ஒரு துர்லபமான விஷயம்தான். ஆனால் இந்த உலகத்துல வாழற கோடி கோடிக்கணக்கான மக்களோட விதம் விதமான துன்பங்கள் முன்னால இந்த மரணம் ஒரு சாதாரண சம்பவம்கா. எப்பேர்ப்பட்ட துன்பத்தையும் காலம் சரி செய்திடும்னு சொல்வாங்க. ஆனா உன் வரையில காலம் துன்பத்தை அதிகரிச்சிகிட்டேதான் போகுது. அதுக்கு உனக்கு உண்மையான காரணம் தெரியுமா?”

அரவிந்தன் மெல்ல உஷ்ணமாக மாறினான். சரண்யா கூர்மையாகப் பார்த்தாள்.

“உனக்குன்னு இல்லை... உன் மாதிரி இளம் வயது விதவைகள் அவ்வளவு பேருமே கணவன் இல்லையேன்னு வருத்தப்படுறதை விட மற்றவர்களுக்கெல்லாம் கணவன் இருக்க... நமக்கு மட்டும் இல்லாமப் போயிட்டாரேன்னு வருத்தப்படுறதுதான் உண்மை. அடுத்து ‘பாழாய் போன அந்த ஆள் சொஸைட்டி முன்னாடி நம்மை அமங்கலச் சின்னமா ஆக்கிட்டுப் போயிட்டானே’ங்கிற வருத்தம். உண்மையில விதவை வாழ்க்கை முறைங்கிறது முனிவர்களின் தவ வாழ்க்கை போன்றதுக்கா. முனிவர்கள் சிவனையோ விஷ்ணுவையோ நினைச்சு உலகப் பற்றில்லாம இருப்பாங்க. விதவைகள் கணவனை நினைச்சு அப்படியிருக்கனும். அதைப் பாக்கற மத்த பெண்களும் இந்தக் கணவன் உறவுதான் எவ்வளவு உயர்ந்ததுன்னு நினைக்கனும். நம்மோட இளைய தலைமுறைக்கு ஒரு விதவையோட வாழ்க்கைங்கிறது மறைமுகமாக எவ்வளவோ விஷயங்களைப் போதிக்குது. நம்ப பாட்டியை எடுத்துக்கோ. தாத்தா செத்துட்டாலும் அவர் நினைப்பு பாட்டிக்குள்ள சாகலை. ‘உங்க தாத்தா நடந்தா சிங்கம் மாதிரி இருக்கும்’னு அவங்க பெருமைப்பட்டுக்கிட்டதெல்லாம் வெறும் பழம் பெருமை இல்ல... இறந்த பிறகும் தாத்தா, பாட்டி மூலம் உயிர் வாழ்ந்ததற்கான விட்னஸ் அது. இந்த முன்னுதாரணம்தான்கா நம்மை நல்லபடி வழி நடத்தும். பாட்டி மட்டும் தாத்தா செத்த உடனே, ஒழிஞ்சது சனின்னு சொல்லி இஷ்டத்துக்கு நடந்திருந்தா அது நல்லாவா

இருந்திருக்கும்?”

அரவிந்தன் தன் பேச்சில் ஒரு உச்சததுக்கே போனான்.

“டேய் நீ என்னடா சொல்லவரே...? எதுக்கு இந்த உபன்யாசமெல்லாம்?” சரண்யாவும் பதிலுக்கு சீறினாள்.

“சுருக்கமாச் சொல்றேன்கா. அத்தான் செத்துட்டத்துக்காக அவரைப் பிரிஞ்சதுக்காக நீ வருத்தப்படுற மாதிரியே தெரியலை. அப்படி நீ வருத்தப்படுற அளவுக்கு ஒரு ஷார்ட் பீரியட்ல அவரும் ஒண்ணும் அன்பு மழை பொழிஞ்சிடலை. உன் வருத்தமெல்லாம். ‘ரைட் ராயலா பொட்டு வச்சுக்க முடியலையே... பூ வச்சுக்க முடியலையே... நம் வாழ்க்கை இப்படி ஆயிடுச்சே’ங்கிறதுல தான் இருக்கு. அக்கா... திரும்பவும் சொல்றேன். கைம்மைங்கிறது ஒரு தவம். ரொம்ப ரொம்பப் புனிதமான விஷயம். என் வரையில் ஒரு சுமங்கலியைவிட கணவனின் நினைப்பாய் இருக்கிற விதவை நூறு மடங்கு மேலானவை. உண்மையிலேயே அந்த நினைப்போட இருக்க முடிஞ்சா அந்தத் தவத்தை அனுபவிச்சுச் செய். இல்லையானா தயவு செய்து வெளிப்படையாச் சொல். நீ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறது எந்த விதத்திலும் குற்றமாகாது. இரண்டுக்கும் நடுவில ஒரு தெளிவில்லாம உன்னைப் போட்டுக் குழப்பிக்காதே.”

-பொட்டென்று போட்டு உடைத்தான் அரவிந்தன். சரண்யாவிடம் பதிலில்லை. ஸ்தம்பிப்பு.

விடிந்துவிட்டது.

ரம்யாவும் நைட் டிரஸ்ஸோடு பால்கனியில் அதிகம் உடல் வருந்தாதபடியான யோகாசனங்களைச் செய்து கொண்டிருந்தாள்.

அம்மைப் பொருக்குகள் உதிர்ந்து அவள் குணமாகிக் கொண்டிருக்கிறாள் என்பது பார்க்கும் போதே தெரிந்தது. பழைய உடல் தெம்பில்லை. இருந்தாலும் நல்ல பழக்கத்தை விட்டுவிட அவள் தயாரில்லை.

இடையில் கிச்சன் வரை சென்று காபி போட்டு அதன் வாசத்தை மூக்கில் சுகித்தபடியே குடித்துக் கொண்டே வந்தாள்.

சங்கீதமாய்ச் சப்தமிடும் சுவர்க் கடிகாரம் நடுவில் சப்தமிட்டு மணியைச் சொன்னது. ராம்நாத்தும் எழுந்து விட்டார். ஆனால் படுக்கையை விட்டு எழுந்து வெளியே வந்து ரம்யா முகத்தில் எப்படி விழிப்பது என்பதில்தான் கூச்சம் பிராண்டிக் கொண்டிருந்தது.

அதற்காகப் படுத்துக் கொண்டேயும் இருக்க முடியாதே!

ஒரு மாதிரி சமாளித்து எழுந்தார். மெல்ல அறைக்கு வெளியே எட்டிப் பார்த்தார். ரம்யா தென்படவில்லை. பிறகு பாத்ரூம் போய் வந்தார். போர்ட்டிகோ முன்னால் வாட்ச்மேன் கொண்டுவந்து வைத்திருந்த அன்றைய இண்டியன் எக்ஸ்பிரஸ், தினமணி இதழ்களை அள்ளிவந்து பேருக்கு விரித்து ஒரு பார்வை பார்த்தார். நடு நடுவே சப்தமாய் இருமிக் காட்டினார். ரம்யா தானாக முன் வந்து என்ன செய்கிறாள் என்று பார்க்கும் விருப்பம்.

நிச்சயமாக மனது நொந்து போகும்படியோ, வலிக்கும் படியோ அவள் நடந்து கொள்ள மாட்டாள் என்கிற நம்பிக்கை மட்டும் நிறையவே அவரிடம் இருந்தது. அது உண்மைதான் என்கிற மாதிரி காபியோடு வந்தாள். சாதரண நாளில் ‘பல் விளக்கிட்டு வாங்க. அப்பத்தான் காப்பி’ என்பாள். இன்று அந்தக் கண்டிப்பு துண்டிக்கப்பட்டு பதிலுக்கு ஒரு மௌனம் மட்டுமே.

இப்படிப்பட்ட மௌனங்கள் சமான்யமானவையல்ல. லட்சம் கோடி வார்த்தைகளால் ஆகாததை இவை ஆக்கிக் காட்டிவிடும். பேச்சு வலியதென்று யார் சொன்னது?

ராம்நாத்துக்கு வலித்தது. அதிலும் முதல் நாள் செயல்பாடுகள் பற்றி எதுவுமே கேட்காமல், அதேசமயம் மிக சகஜமாக இருப்பவர்களைப் பார்க்கும்போது வலியோடு ஒரு பயமும் தோன்றும்.

உணர்ச்சிகளை அடக்கி ஆளத் தெரிந்தவர்களுக்குத்தான்

பிறரிடம் இப்படி வலி, பயம் எல்லாவற்றையும் உருவாக்க முடியும்.

வலி, பயம் இரண்டைத் தொடந்து ராம்நாத்துக்குள் தர்மசங்கடம் என்கிற ஒன்றும் தொற்றிக் கொண்டது. வியாதியால், பசியால் பிறரின் துன்பம் கண்டு உணர்ச்சிகளால் ஒரு மனிதன் தனக்குள் வருத்தப்பட்டால் அது அர்த்தமுள்ள துன்பம். ஆனால் இப்படிப்பட்ட காரணங்களெல்லாம் எதுவுமில்லாமல் தன் செய்கைகளாலும் அதன் எதிரொலி நடவடிக்கைகளாலுமே ஒரு மனிதன் தனக்குள் சிக்கிக் கொண்டால் அது பரிதாபத்துக்குரியது. ராம்நாத்தைப் பார்த்தபோது பரிதாபமாக இருந்தது. அவருக்கே அவர் மேல் பரிதாபம். பிறகு அப்படிப் பரிதாபப்பட்டுக் கொண்டதற்காகத் துளி கோபம். பிறகு அதுவும் மாறி கோபப்படுவது கையாலாகாத்தனம் என்ற ஒரு சின்ன தெளிவு. அதற்குப் பின் இப்படி ஒரு தெளிவு முக்கியமான சமயங்களில் இல்லாமல் போய்விடுகிறதே என்றும் ஒரு வருத்தம்.

மொத்தத்தில் எண்ண வலைக்குள் தொட்டுத் தொட்டு கை, கால், கழுத்து, இடுப்பு என்று உறுப்புகள் மாட்டிக் கொண்டால் எப்படி இருக்கும்? அப்படித்தான் இருந்தது ராம்நாத்தின் நிலை.

“ரம்யா எதுக்கும்மா இப்படி மௌனமா இருந்து என்னைக் கொல்றே?” என்று ஒரு மாதிரி வலையை அறுத்துக்கொண்டு ஆவேசமாக நிமிர்ந்தார்.

“நான் ஒண்ணுமே பண்ணலப்பா. உங்க குற்றம்தான் உங்க எல்லா குழப்பத்துக்கும் காரணம். இத்தனைக்கும் நான் அதை அனுபவிக்கிறேன். இருந்தும் என் மேல கோபப்பட்டா என்னப்பா அர்த்தம்?”

பதிலுக்கு ரம்யாவும் நிமிர்ந்தாள்.

“எதுக்கும்மா என்னை அனுசரிக்கிறே... அதுதாம்மா என்னைப் பாடாப்படுத்துது.”

“நிஜமாவாப்பா?”

“என்னம்மா கேள்வி இது...? என்னைப் பார்த்தாலே தெரியலையா?”

“உங்களுக்கு ஒரு உண்மை தெரியுமாப்பா?”

“என்னாம்மா?’

“நான், உங்க தடுமாற்றம். அப்புறம் குடிபழக்கம் இதுக்காக உங்ககிட்ட கோவிச்சுக்கிட்டு சண்டை போட்டா உண்மையிலேயே என்ன நடக்கும் தெரியுமா?’

“என்னம்மா சொல்ற நீ?”

“இப்படி எங்கிட்ட நீங்க வருத்தத்தோடெல்லாம் பேசிக்கிட்டிருக்க மாட்டீங்க.”

“இப்ப குற்ற உணர்ச்சியோட குடிக்கப் போற நீங்க அப்புறம், நான் குடிக்கிறதுல ஒரு தப்பும் இல்லைன்னு சொல்லிவிட்டு நெஞ்சை நிமிர்த்திக்கிட்டு பாருக்குப் போவீங்க. என்னை யாரும் புரிஞ்சிக்கலைன்னு புலம்புவீங்க.”

“அம்மாடி...”

“என்ன அம்மாடி? அதுதான் நடக்கும். சரி அதை விடுங்க. உங்களுக்கு ஒரு வேண்டுகோள்ப்பா. கேட்பீங்களா?”

“என்னம்மா?”

“உங்களுக்குக் குடிக்கணும்னு தோணினா இந்த வீட்டிலயே குடிங்களேன்பா. எதுக்கு பாருக்குப் போய் நாலுபேர் பார்க்கக் குடிச்சிட்டு அசிங்கப்படணும்?”

“அம்மாடி என்ன சொல்றே நீ! இது நீ இருக்கிற இடம் கோவில்! இங்க என்னால அந்தத் தப்பையெல்லாம் பண்ண முடியாதும்மா.”

-அலறிவிட்டார் ராம்நாத்.

அந்தப் பதில் ரம்யாவுக்குக்கூட இதமாய் இருந்தது. கண்கள் கசிந்துவிட்டன. அதைப் பார்த்தவர் மேலும் பதற

ஆரம்பித்தார்.

“சாரிடா... வெரி சாரி... நான் இனி நிச்சயமா குடிக்கமாட்டேன். நீ எவ்வளவு சங்கடப்படறேன்னு எனக்கு நல்லாவே தெரியுது. சாரி... வெரி சாரி... இந்தத் தடைவ நீ வேணாப் பாரு. நான் வார்த்தையைக் காப்பாத்தறேனா இல்லையான்னு...”

அவர் அப்படிச் சொல்லும்போது தொலைபேசி கூப்பிட்டது. ‘காலர் ஐடி’ தொலைபேசி அது. மேலும் திரையில் எண்கள் தெரிந்து, அழைப்பது ஞானப்பிரகாசம் என்றது.

“அப்பா, உங்க மனசாட்சி கூப்பிடுறார்’ என்றாள் ரம்யாவும். ராம்நாத்துக்கும் அடுத்த நொடியே கை காலெல்லாம் உதற ஆரம்பித்துவிட்டது.

அந்தச் சமயம் பார்த்து போர்ட்டிக்கோவில் தன் பைக்கிலிருந்து அரவிந்தனும் இறங்கிக் கொண்டிருந்தான்.

# 9

‘ஒரு சிறைச்சாலையைப் பார்த்தவுடனே நமக்கு எதிர்மறைச் சிந்தனைகள் வர ஆரம்பிக்கும். ஒரு சின்ன பரிசோதனை செய்து பார்க்கலாம். உங்கள் உடல் நலம் நன்றாக இருந்தாலும் ஒரு நான்கு நாட்களுக்கு மருத்துவமனையில் உங்கள் நண்பரைப் பார்த்துவிட்டு வாருங்கள். நீங்களே நோயாளி ஆனது போல உணர்வீர்கள்.

ஏனென்றால் அந்த இடத்தினுடைய வைப்ரேஷனானது தொடர்ந்து வியாதியஸ்தர்களால் பாதிக்கப்படுவதால் உங்கள் பிராண சக்தியையும் உறிஞ்சி எடுத்து விடுகிறது.

எங்கே எதிர்மறை அலை இயக்கங்கள் அதிகமாக இருக்கின்றதோ அங்கே நீங்கள் சென்றால் உங்கள் மனமும் அதே மாதிரி ஆக முயற்சிக்கும்.’

-பரமஹம்ஸ ஸ்ரீநித்யாணந்தா

ஒரு பக்கம் ஞானப்பிரகாசத்தின் தொலைபேசி அழைப்பு. மறுபக்கம் தன்னை பார்க்க வரும் அரவிந்தன் என்று இருவருக்கும் நடுவே ராம்நாத் தவிக்கத் தொடங்கும்போது, ரம்யா சட்டென்று ராம்நாத்தைக் காப்பாற்றத் தொடங்கினாள்.

தொலைபோசியை எடுத்தவள், “அங்கிள்...அப்பா ரொம்ப டெலிகேட்டா ஃபீல் பண்றார். நீங்க நேர்ல வாங்க. எல்லாத்தையும் விவரமாப் பேசலாம்” என்றபடியே தொலைபேசியைக் கட் செய்தாள், அப்படியே நெருங்கி விட்ட அரவிந்தனை உட்காரச் சொல்லி புன்னகைத்தார்.

ராம்நாத்துக்கு அரவிந்தனை அடையாளம் தெரியவில்லை. குறிப்பாக அவரைப் பட்டை உரிக்கத்தான் வந்திருக்கிறான் என்கிற பிரக்ஞையே கூட அவனிடம் இல்லை.

“அப்பா...இவர் பேர் அரவிந்தன். அரவிந்தன்தானே?” – அறிமுகத்துக்குத் தயாரானாள். அவனும் இருக்கமாக ஆமோதித்தான். ராம்நாத் பதிலுக்கு ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

“சொல்லுங்க மிஸ்டர் அரவிந்தன். அட்வைஸ் பண்ண வந்திருக்கீங்களா?”

அவள் அப்படிக் கேட்கவும் ராம்நாத்துக்குச் சுரீர் என்றது. வெடுக்கென்று நிமிர்ந்தார்.

“நீங்க என்னைப் பார்த்துக் கேக்கற தொனியே சரியில்லையே மிஸ் ரம்யா. நான் வேணும்னா கிளம்பட்டுமா?”

அரவிந்தனும் படுவேகமாக விஷயத்துக்கு வந்து அவனைச் சற்றுத்தடுமாறச் செய்தான். ராம்நாத்துக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை.

“என்னம்மா... என்ன குழப்பம்?”

“ஒண்ணுமில்லேப்பா... நேத்து நீங்க போதையில இருந்தப்ப இவர்தான் கொண்டு வந்து விட்டார். அப்பவே உங்களை நினைச்சு வருத்தமெல்லாம் பட்டார். ஒரு தொழிலதிபரான நீங்க குடிச்சுட்டு ரோட்ல கிடக்கிறது எந்தவித்துல சரியின்னு கேட்கனுங்கிறது இவரோட எண்ணம். ஆனா போதையில இருந்ததால, இவர் அப்ப எதையும் கேக்க விரும்பலை. இப்ப கேக்க வந்திருக்காருன்னு நினைக்கிறேன். சரிதானே மிஸ்டர் அரவிந்தன்..??”

அவன் பதிலுக்குத் தலையாட்டினான். அதே சமயம் இவள் தன்னைப் பேசவிடப் போவதில்லை என்கிற மாதிரியும் நினைத்தான்.

“அது...அது...நேத்து நீங்க என்னை எங்க பார்த்தீங்க?”

-ராம்நாத் திக்கித் திணறிப் பேச்செடுத்தார்.

“நான் எங்க பார்த்தேன்... எப்படிப் பார்த்தேன் எதுவும் இப்ப முக்கியமில்லை சார். இனியொருமுறை நான் உங்களைக் குடிகாரனாப் பார்க்க விரும்பலை. உங்களை நான் பல விஷயங்களில் ரோல்மாடலா நினைச்சிக்கிட்டிருக்கேன் சார். என்னை ஏமாத்திடாதீங்க...”

-நறுக்கென்று நாலே வார்த்தை. எழுந்துவிட்டான்

அரவிந்தன். அவனை எழுந்திருக்கச் செய்தவள் ரம்யாதான் அவளது பாடி லாங்வேஜ், பார்க்கும் பார்வை, அவன் ராம்நாத்தைப் பார்த்து வருத்தப்படப் போவதை முந்திக் கொண்டு சொன்னவிதம் என்று எல்லாவற்றிலும் அவளிடம் ஒரு வேகம் தெரிந்தது.

சாதாரணமாக இப்படி ஒரு நிலையில் பெண்கள் தங்களுக்குச் சப்போர்ட் தேடுவார்கள். ‘நீங்களே சொல்லுங்க சார்... நான் சொல்லி அலுத்துப் போய்விட்டேன்’ என்றுதான் ஆரம்பிப்பார்கள். ஒரு சிறு துரும்பு கிடைத்தாலும் மலைபோல நினைத்துக் கெட்டியாகப் பிடித்துக் கொள்வார். ஆனால், ரம்யாவோ நேர் எதிராகத் திகழ்ந்தது அவனை அதிகமாகப் பாதித்துவிட்டது. அதுதான் எழுந்து விட்டான். ரம்யாவும் அவனை ஒரு சம்ப்ரதாயத்துக் கூட, “உக்காருங்க... எங்க கிளம்பிட்டீங்க...” என்றெல்லாம் கேட்கவில்லை. அது கூட அவனுக்குள் நெருடியது.

‘இந்தப் பெண் வித்தியாசமானவள் மட்டுமல்ல...இதயம் சிறிதாக உள்ள வித்தியாசமானவள்’ என்று நினைத்துக் கொண்டே நடந்தான். ராம்நாத் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரால் அவ்வளவுதான் முடிந்தது. அதே சமயம் ரம்யாவுக்கு அவன் அப்படி வேகமாகக் கிளம்பியது கொஞ்சம் போல உறுத்தியது.

வாசலைத் தாண்டி போர்ட்டிகோவை நெருங்கி விட்டவனை ஒரு மாதிரி பார்த்தாள். அதே சமயம் அவனும் அங்கே தேங்கி நின்றான். திரும்பிப் பார்த்தான். ஜாடையாலேயே அவளை, ‘ஒரு நிமிடம் அருகே வரமுடியுமா?’ என்கிற பாவனையோடு அழைத்தான். அவளும் அவனை நெருங்கினாள்.

“மிஸ் ரம்யா, நான் ஒரு எம்.ஏ., எம்ஃபில் பட்டம் வாங்கிய பட்டதாரி. அதுல ஹைஸ்கூல் ஸ்டடீஸ் வரை எங்கப்பா எனக்கு உதவி செய்தார். அதுக்கு மேல என்னோட ஒட்டியிருக்கிற பட்டத்துக்குக் காரணம் உங்க அப்பாதான். அவரோட ஸ்காலர்ஷிப்ல படிச்சு வளர்ந்தவன் நான். அந்த நன்றிதான். இந்த காலை நேரத்துல இங்கே வந்து இவ்வளவு பேசவே காரணம். கடவுள் எனக்கு ஒரு சக்தியைக்

கொடுத்திருக்கார். எதிரில் இருக்கிறவங்க என்ன நினைக்கிறாங்கன்னு ஓரளவு சரியவே ஊகிச்சிடுவேன். ஒரு முறை கூட நீங்க என்னை நம்பிக்கையோடு பார்க்கலை. நாகரிகம் கருதி அதை வெளிக்காட்டிக்கலையே தவிர, உங்க மனசுல ஒரு அவ நம்பிக்கையும் பய உணர்வும் நிறைய இருக்கு. அதை நான் பிழைன்னு சொல்லமாட்டேன். பெண்களைப் பொருத்தவரை பயம் தான் அவங்க பலம். தைரியமுள்ள பெண் சாதிக்கிறதை விட அச்சமுள்ள பெண் சாதிக்கிறது அதிகங்கிறது என்னோட கருத்து. அதனால உங்க மேல பெரிசா எனக்குக் கோபமும் வரலை. இதையெல்லாம் ஏன் கூப்பிட்டுச் சொல்றேன்னும் எனக்குத் தெரியலை. நீங்க நம்பாம பாக்கிறதும் பேசறதும் எனக்குப் பிடிக்கலையோ என்னவோ? எனி ஹவ்... இனி நான் இந்த வீட்டுக்கோ, இல்லை உங்களைப் பார்க்கவோ வந்து தர்ம சங்கடப் படுத்தமாட்டேன். இதை மேக்ஸிமம் நான் பாலோ பண்ணுவேன், பை...ஆங்! உங்க ஹெல்தைக் கவனிச்சுக்குங்க. எங்க பத்திரிக்கைக்கு நிறைய எழுதுங்க. வரேன்.”

அவன் பேசியது அவள் மனத்தைக் கூர்மையாக ஒரு கலப்பையினால் உழுதுவிட்டது போல இருந்தது.

வாழ்க்கை மிக விசித்திரமானது. வாழ்க்கை முழுக்க முழுக்க மாயையால் ஆனது என்று தத்துவங்களில் சொல்லப்படுவதெல்லாம் மகா பெரிய சத்தியம். இங்கே கூட இனி சந்திக்க மாட்டேன் என்று அவன் சொன்னதிலும் கூட ஒரு நேர்மறையான விளைவுதான். வெட்டிக் கொள்வதாக நினைத்துக் கொண்டு அவள் மனத்தோடு பசைபோட்டு ஒட்டிக் கொண்டுவிட்ட அவன் சொல் பற்றி அவனுக்கு எதுவும் தெரியாதுதான்.

அவளோ சன்னமாய்ச் சிரித்தபடித் திரும்பி வந்தாள். ராம்நாத் மகளைக் கூர்ந்து பார்த்தார். குற்ற உணர்ச்சிகள் சங்கிலிக் கண்ணிகளாகி அவரைக் கட்டிப் போட்டிருந்ததால் அவரிடம் ஒரு அப்பாவுக்குண்டான கேள்விகள் எதுவுமே இல்லை. இருந்தும் அவளே அவர் கேட்காமல் பதிலைச் சொன்னாள்.

“அவர் உங்க ஸ்காலர்ஷிப்பில் படிச்சவராம். அந்த நன்றிதான் அவர் உங்ளை இங்கே கொண்டு வந்து விடக் காரணமாம். நான் அவர் எதிர்பாக்கிற சென்ஸ்ல பேசல... குறிப்பா அவர் உங்க மேல பாய நான் இடம் கொடுக்கலை. அந்த ஆதங்கம். அந்த ஆச்சர்யம்னு ஏதேதோ பேசிட்டுப் போறாரு. பட் நைஸ் மேன்.”

ரம்யா கடைசியாக அவனை நைஸ் மேன் என்றது ராம்நாத்தைக் கொஞ்சம் கொத்தியது.

“சரிப்பா...நீங்க குளிச்சிட்டு உங்க வேலையெல்லாம் பாருங்க. இன்னிக்குக் குடிக்கணும்னு தோணினா எனக்கு ஃபோன் மட்டும் பண்ணுங்க. இங்க உங்க ரூம்லயே தயார் பண்ணி வெச்சிடறேன். குடிச்சிட்டுப் படுத்துக்குங்க. இன்பாக்ட் அப்ப நான் ஆஃபீஸைப் பார்த்துக்கப் போயிடுவேன். ஏன்னா இங்க நீங்க ஆடினா நான் தாங்கிடுவேன். அங்க கம்பெனி ஆடினா யாரால தாங்க முடியும்?”

ரம்யாவின் பேச்சும் கேள்வியும் அவரது செவிகளில் அவள் அறைந்தால் கூடத் தேவலை போல் இருந்தது.

அவளோ அடுத்தடுத்த காரியங்களில் இறங்கத் தொடங்கி விட்டாள். மறக்காமல் தனது டைரியில் அரவிந்தன் பற்றி ஒரு குறிப்பை எழுதினாள்.

‘அரவிந்தன் ஒரு நல்ல ஆத்மா. சராசரி ஆண்களைப் போல இவரையும் நினைத்து ஏமாந்து விட்டேன். ஏமாற்றங்கள் துன்பங்களைத் தருவது என்று யார் சொன்னது? இந்த ஏமாற்றம் எனக்கு மிக மிக இன்பம் தருகிறது.’

பேக்டரிக்குள் ஃப்ரிப்கேஸீடன் ராம்நாத் நுழைந்த போது அக்கவுண்டண்ட் கணபதி பார்த்த விதமே ஒரு மாதிரியாக இருந்தது. உள்ளுக்குள் குற்ற உணர்ச்சியும் ஒருவிதத் தாழ்வுமனப்பான்மையும் இருக்கும் போது யாரைப் பார்த்தாலும் எதிராளியின் பார்வையில் தனக்கே தனக்கென்று ஒரு வித கேலி, பரிகாசம், வெறுப்பு என்று மனசுக்குக்கட்டோடு ஆகவே ஆகாத உணர்ச்சிகள் ஒளிந்து கொண்டிருப்பதாகத் தோன்றும். ராம்நாத்துக்கும்

தோன்றியது. எங்கே கணபதி அந்த அமெரிக்க மாப்பிள்ளை பற்றிக் கேட்டுத் தர்மசங்கடப் படுத்திவிடுவாரோ என்றும் நெஞ்சக்கூட்டில் ஒரு தவிப்பு.

கணபதி அப்படியெல்லாம் எதையும் கேட்கவில்லை. பதிலுக்கு ஒரு இன்விடேஷனைக் காட்டினார்.

“என்னய்யா?”

“கொஞ்சம் முந்தி கூரியர் தபால்ல வந்துச்சு சார்.”

“இல்ல சார்... நம்மைப் போலவே நாம தயாரிக்கிற அதே ஆட்டோமொபைல் காம்பனன்ட்ஸ்களைத் தயாரிக்கிற ஒரு கம்பெனியோட இனாகுரேஷன் இன்விடேஷன்.”

-கணபதியின் பதில் ராம்நாத்தின் நெஞ்சில் ஒரு குத்துவிட்டது. வேகவேகமாக இன்விடேஷனைப் பிரித்தார்.

“சுசிலா இன்டஸ்ட்ரீஸ்’ என்ற பெயரிலேயே ஒரு பளார் அறை! அவரது மாஜி மனைவியின் பெயரில் ஒரு கம்பெனி. கீழே ஒரிடத்தில் ‘சுசிலா ராஜரத்தினம்’ என்று அவள் கையொப்பத்தோடு பொதுவாக அந்த இன்விடேஷன் தயாரிக்கப்பட்டிருந்தது. கணபதிக்கும் அரசல் புரசலாக சுசிலா யார் என்பதெல்லாம் தெரியும். ராம்நாத்தின் முகத்தைப் பார்த்தார். ராம்நாத்தால் தாள முடியவில்லை.

“நான் நிம்மதியா இருக்கக் கூடாதுன்னு இவ கங்கணம் கட்டிக்கிட்டு அலையறாய்யா!” என்றார் வேகமாக.

“யார் சார்... இந்த சுசிலா ராஜரத்தினமா சார்?” –கணபதியும் அப்பாவித் திலகமாகப் பதில் கேள்வி கேட்க, ராம்நாத் வாயை இறுக்க மூடிக்கொள்ளப் பார்த்தார். முடியவில்லை.

“கணபதி... எது வந்தாலும் சரி...இவளோட கம்பெனி டெவலப் ஆகக் கூடாது. நம்ம ரேட்டெயல்லாம் எவ்வளவு குறைக்கனுமோ அவ்வளவு குறைச்சு அவளை அலற வைக்கனும்” என்றார்.

“அட என்ன சார் இது... இன்னிக்கு உலகமே காம்படீஷன்ல தான் ஓடிக்கட்டிருக்கு. எங்க சார் இல்லே...இவங்களுக்காக

நாம ரேட்டைக் குறைச்சா பிஸினஸே பண்ண முடியாது சார். ஏன்னா நாம இப்பவே அப்படித்தான் பிஸினஸை நடத்திக்கட்டிருக்கோம்.”

“நாம் சும்மா சப்ளை பண்ணுவோம்யா...அவளால முடியுமா?”

என்ன பேசுறோம் என்பதே தெரியாமல் ராம்நாத் பேசியதைக் கேட்டு ஷிப்ட் சூப்பர்வைஸர் முதல், சகல ஆப்பரேட்டர்களும் திரும்பிப் பார்த்தனர். நல்ல வேளையாக ரம்யா வந்து கொண்டிருந்தாள். அம்மை போட்டுப் பொலிவிழந்த நிலையிலும் அவள் நடையில் ஒரு கம்பீரம். காட்டன் சாரியை அவள் கட்டியிருந்த விதத்திலும் நல்ல பாந்தம். அவளை அங்கு யாரும் எதிர்பார்க்கவில்லை.

“மேடம் வர்றாங்க... மேடம் வர்றாங்க” என்று பரபரப்பாயினர். ராம்நாத்துக்கு அவளைப் பார்க்கச் சற்று தெம்பாக இருந்தது. இன்விடேஷனைக் காட்டியபடியே, “நீ எங்கம்மா இங்க வந்தே?” என்று கேட்டார்.

“இந்த இன்விடேஷன்லயிருந்து உங்களைக் காப்பாற்றத் தான்...” என்றபடியே தன் ஹான்ட் பேகில் இருந்தும் வீட்டு முகவரிக்கு வந்த ஒரு இன்விடேஷனை எடுத்துப் போட்டாள். அப்படியே கணபதியைப் பார்த்து, “கணபதி...இந்த பாக்டரி இனாகுரேஷனுக்கு நான் அவசியம் போறேன். நம்ம காம்படீடரை நாம விஷ் பண்றதுதானே நல்ல பண்பாடு. அப்படியே ஒரு பிரசன்டேஷனும் தரனும். அதை நான் தயார் பண்ணிக்கிறேன்” என்றும் கூற, கணபதியின் முகத்தில் ஒரே ஆச்சரியம்.

# 10

‘சமூகம் என்பது தனிமனிதர்களின் சங்கம். அதற்கு பலமும் உண்டு. பலவீனமும் உண்டு. ஆனால், அது தனிமனிதனின் பலத்தையும் அனுமதிக்காது. அதுவே சமூக நியாயம். சமூக தர்மம்!

தனிமனித ஞானம் இதைப் புரிந்து கொள்கிறது. ஆனால் அதை எதிர்த்துப் போராடுவதில்லை. அதில் லாபமுமில்லை. இரண்டு தனிமனிதர்களுக்கிடையே ஏற்படுகின்ற வழக்கில் வேண்டுமானால் சமூகம் ஒரு நியாயமான தீர்ப்பை வழங்கலாம். ஆனால், ஒரு தனிமனிதனுக்கும் சமூகத்துக்கும் ஏற்பட்ட வழக்கில் ஒரு நியாயமான தீர்ப்பைச் சமூகத்திடம் எதிர்பார்ப் பதில் அர்த்தமேயில்லை.’

‘சமூகம் என்பது நாலுபேர்’

– ஜெயகாந்தன்

ரம்யாவின் அந்தத் தீர்கமான முடிவை, துளியும் கலக்கமின்றி அவள் பேசியதையெல்லாம் பார்த்து ராம்நாத் திகைத்துவிட்டார். அக்கவுண்டண்ட் கணபதியோ ஒரு படி மேலேயே போய்விட்டார்.

“மேடம்... சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. அவங்க நம்ம கூட மோதனும்னே இப்படி இண்டஸ்ட்ரி போடறாங்க. இவங்களைப் போயா விஷ் பண்றது?” – கணபதியின் கேள்வியில் உலகின் ஒட்டுமொத்தச் சராசரித்தனம் இருந்தது.

“கணபதி சார்... ‘ஒருத்தர் அரிசியை எடுத்து ஒருத்தர் சாப்பிட முடியாது’ன்னு ஒரு ப்ராவெர்ப் உண்டு. உங்களுக்குத் தெரியுமா?”

“யெஸ் மேடம்.”

“அதெல்லாம் தெரிஞ்சிருந்துமா இந்தப் பயம்?”

“பயப்பட வேண்டியதுக்குப் பயப்படத்தானே செய்யணும்?”

“இது பயப்பட வேண்டிய விஷயம் கிடையாது. எச்சரிக்கையா இருக்க வேண்டிய விஷயம். அவ்வளவுதான். அதுவும் நாமெல்லாம் நார்மல் ஹியூமன் பீயிங்ஸா இருக்கிறதுனால! எச்சரிக்கையா இருக்க வேண்டிய இடத்துல பயப்படுறது: பயப்படற இடத்துல எச்சரிக்கையா இருக்கிறதுங்கிற நம்ப டிஸ்ஆர்டர் பர்சனாலிடி. நம்ம முடிவுகளைப் பெரிய அளவுல மாத்திடும். போங்க... போய்த் தைரியமா உங்க ஒர்க்கைக் கவனிங்க. நம்ப பிஸினஸ் இனிமேத்தான் அதிகரிக்கப் போகுது.”

மிகுந்த தன்னம்பிக்கையோடு பேசிய மகளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் ராம்நாத். அவருக்கு அவளிடம் வாய்கொடுக்கப் பயமாக இருந்தது. கணபதி எதிரிலேயே தான் அவளிடம் மடங்கிச் சமாதானமாகப் போகும் ஒரு நிலை ஏற்படுவது தன் மதிப்பைக் குறைக்கலாம். “நம்ம எம்.டி. தெண்டம். அவர் மக என்ன போடு போடறாங்க தெரியுமா? பேசாம இவர் போய் ரெஸ்ட் எடுக்கலாம்” என்று கணபதியைப் புறத்தில் பேச வைக்கலாம் என்றெல்லாம் யூகித்தவர் ரம்யாவிடம் வாய் கொடுக்காமல் ஒரு ஃபைலைத் திறந்து கொண்டார்.

ரம்யாவும் அருகில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். இன்றைக்கு அவர் முயன்றாலும் மது அருந்த வழியில்லை. அதை அவளது செயல்பாடுகள் தடுக்கத் தொடங்கிவிட்டன.

அப்பார்ட்மெண்டில் சரண்யா.

அது என்னவோ தெரியவில்லை...அரவிந்தன் கொஞ்சம் அவள் மனசை உரித்துப் பார்க்கிற மாதிரி பேசிய பேச்சினால் அவளுக்குள் ஏராளமான பாதிப்புகள். அரவிந்தனிடம் கூடச் சரியாகப் பேசுவதில்லை. மளமளவென்று சமைத்து வைத்துவிட்டு சோபாவில் உட்கார்ந்து ஸ்ரீராமஜெயம் எழுத ஆரம்பித்து விடுகிறாள்.

ஒரு இயந்திரத்துக்கு எழுதச் சொல்லிக் கொடுத்தால் எப்படி

இருக்குமோ அப்படி இருந்தது. அரவிந்தனும் கவனித்தான். ஆனால், ‘ஏன் இப்படி இருக்கே?’ என்றெல்லாம் கேட்டு அவளுக்குள் ஷூட்டம் போட அவன் விரும்பவில்லை.

இந்த கசப்புகள் உள்ளுக்குள் புழுக்கமாக உருவாகி விரவிப் பரவுவதெல்லாம் நல்லதற்குத்தான். அப்பொழுது தான் ஒரு விடிவு பிறக்கும். ஆபரேஷன்களுக்கு அஞ்சினால் வேர் பிடித்த நோய்களுக்குக் கொண்டாட்டமாகிவிடுமே!

இருந்தும் அரவிந்தன் அலட்சியமாக இருப்பதை சரண்யாவால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவன் தன்னை ஒரு பாரமாக உணர்வதாக எண்ணினாள். அப்பாவும் அம்மாவும் இல்லாமல் இப்படி ஒரு சகோதரன் துணையில் வாழ்க்கையை நடத்த வேண்டிய அவளுடைய அமைப்பை எப்படி எடுத்துக் கொள்வதென்று தெரியவில்லை.

பக்கத்து ப்ளாட்டில் வனிதா என்று ஒருத்தி இருக்கிறாள். அவள் அப்பா பத்து நாளைக்கு ஒரு தடவை திருவாரூர் பக்கம் கிராமத்திலிருந்து தோட்டத்தில் விளைந்தது என்று ஏதையாவது ஒன்றை எடுத்துக்கொண்டு பலாப்பழம் பூசணி, பீர்க்கங்காய்களுடன் வந்திருந்தார்.

அப்படி வந்தால் அதில் ஒரு சிறு பாகம் அக்கம் பக்க வீடுகளிலெல்லாம் அளிக்கப்படும். எல்லோரும் சாப்பிட வேண்டும் என்பதல்ல வனிதாவின் நோக்கம். தன் பிறந்தவீட்டுப் பலத்தை எல்லோருக்கும் உணர்த்தி அதில் கொஞ்சம் கர்வம் கொள்வதுதான் உண்மையில் அவள் உள் உணர்வின் நோக்கம்.

கேட்டால், “சாகும்போது எதைக் கொண்டு போகப் போறோம், எதுவாக இருந்தாலும் எனக்கு நாலு பேருக்குக் கொடுக்கனும்கா...” என்பாள். ஏனோ அந்த நாலு பேரில் அவள் மாமியாரே அடங்கியிருக்கவில்லை. கிராமத்தில் உறவினர்களிடத்தில்தான் விட்டு வைத்திருக்கிறாள். மனிதர்களை கூர்ந்து கவனித்தால் இப்படி ஜெகஜ்ஜாலமாக நிறைய முரண்பாடுகளையும் இடுக்கு அழுக்குகளையும் பார்க்கலாம்.

சரண்யாவுக்கு அவைகளை ஊடுருவும் சக்தியெல்லாம் இல்லை. இந்தத் தேசத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு பெண்களுக்கு அதுவெல்லாம் இல்லவே இல்லைதான்.

இல்லாவிட்டால் மோட்சத்துக்கு இட்டுச் செல்ல வேண்டி தபஸ் உணர்ச்சியில் எழுதிப் பார்க்க வேண்டிய ஸ்ரீராமஜெயத்தை ஒரு சராசரி மன உளைச்சலுக்கு மருந்தாகக் கையாளுவாளா இந்த சரண்யா?

கச்சிதமாக “ஹலோ” என்றபடி எட்டிப் பார்த்தான் குணசேகர் என்கிற அந்த நடிகன். அவன் கையில் ஒரு பூங்கொத்து. அவனைப் பார்க்கவும் அவளிடம் லேசான திகைப்பு. கதவைத் திறந்து வைத்திருந்தது அவனுக்கு சௌகரியமாகப் போய்விட்டது.

“என்ன பாக்கறீங்க... கமான் பிடிங்க... மெனி மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் தி டே...” என்றபடி பூங்கொத்தை வேறு அவளிடம் அளித்தான். அவளிடம் திகைப்புக்கு மேல் திகைப்பு.

“என்னங்க... இன்னுமா எதுக்குன்னு தெரியலை... இன்னிக்கு உங்க பர்த் டேங்க.”

அவன் அப்படிச் சொல்லவும்தான் அவளுக்கே தெரிந்தது. “அட ஆமாம்!” என்றபடியே காலண்டரைப் பார்த்தவள் உனக்கு எப்படித் தெரியும் என்கிற மாதிரி அவனையும் பார்த்தாள்.

“என்ன பாக்கறீங்க... இந்த ப்ளாட்ல யார் வீட்ல யாருக்கு பர்த்டேன்னாலும் நான் இப்படி வாழ்த்துச் சொல்லப் போயிடுவேன். ஏன்னா, என் வரையில ஜனங்கதான் என்னோட பலம். நீங்களெல்லாம் நான் நடிக்கிற சீரியலைப் பார்க்கலைன்னா நானெல்லாம் நடிக்க முடியுமா?”

“தேங்க்ஸ், உட்காருங்க.” –சிரமப்பட்டு நன்றி கூறினாள். உட்கார இடமும் காட்டினாள். படுவேகமாக அதில் அமர்ந்தவன் சிரித்தபடியே பார்த்தான். பின், “உங்க பர்த்டேயே உங்களுக்குத் தெரியலையே. ஆச்சரியமா இருக்கு” என்றான்.

“ஆமாம்...நான் அதைப் பத்தியெல்லாம் நினைச்சதே இல்லை,” –அவள் லேசாகத் திணறினாள்.

“எப்படி நினைக்க முடியும்? காலம்தான் உங்களை பனிஷ் பண்ணத்துடிக்குதே. ஆனா ஒண்ணு சொல்வேங்க. நீங்கள்லாம் தான் டேம் வாட்டர் மாதிரி அப்படியே பாய்ஞ்சு வெளியே வரணும். வாழ்க்கை என்கிறது வாழறதுக்குத்தாங்க. எதையும் எப்படிப் பார்க்கறோம்ங்கிறதுலதான் எல்லாமே இருக்கு.”

அவன் பேசப் பேச அதைக் கேட்டபடியே நெளிய ஆரம்பித்தாள் சரண்யா.

“என்னங்க... பர்த்டே ட்ரீட்டெல்லாம் கிடையாதா?”

அவன் அவளுடன் ஒரு உறவை உருவாக்கிக் கொண்டே ஆக வேண்டும் என்பது போல அடுத்தடுத்து அடிகளை எடுத்துவைத்தான். அவளுக்குப் பதிலுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

“என் ஃப்ளாட்ல இருக்கும்போது உங்க சமையல் வாசம் மூக்குல ஏறும் அதுலையும் நீங்க சாம்பார் வைக்கும்போது ஒரு வாசனை வரும் பாருங்க... கஷ்டப்பட்டு அடக்கிக்குவேன். அந்த நிமிஷம் கல்யாணம்னு ஒண்ணு பண்ணினா அது இப்படி சாம்பார் வைக்கத் தெரிஞ்ச பொண்ணாத்தான் இருக்கனும்னு நினைச்சிப்பேன்.”

-தொட்டுத் தொட்டு அவன் கல்யாணம் வரைக்குமே வந்து விட்டான். நல்ல நிதானம். அதுக்குள்ளே நல்ல வேகமும் கூட. அவள் அதைக் கேட்டுச் சிரிப்பதா, இல்லை சிந்திப்பதா, அதுவுமில்லை குழம்புவதா, இதெல்லாம் எதுவுமில்லை கோபிப்பதா என்று வகை தொகை தெரியாமல் தடுமாறினாள்.

அவன் அடுத்த சப்ஜெட்டுக்குத் தாவத் தொடங்கிவிட்டான்.

“மேடம்... நீங்க இப்ப சும்மாத்தானே இருக்கீங்க?”

“...”

“இல்ல... எதுக்குக் கேக்கறேன்னா இப்ப டி.வி. ஃபீல்டுக்கு ஆர்ட்டிஸ்டுங்க நிறையத் தேவைப்படுறாங்க. கடந்த பத்து வருஷத்துல இந்தக் குளோபலைசேஷன்ல எல்லா இண்டஸ்ட்ரியும் அடிவாங்கிடிச்சு. வி.ஆர்.எஸ். கொடுக்காத கம்பெனியே கிடையாது. ஆனா பூமிங்கா ரைஸ் ஆன ஒரே இண்டஸ்ட்டரி டி.வி. இண்டஸ்ட்ரிதான். ஒரு நாளைக்கு ஆவரேஜா ஐம்பது மெகா சீரியல் எல்லா சேனல்களிலும் டெலிகாஸ்ட் ஆகுது. அப்பா ரோல், அம்மா ரோல், அக்கா ரோல், அண்ணி ரோல்னு ஏகப்பட்ட கேரக்டர்ஸீக்கு ஏகப்பட்ட டிமாண்ட். நீங்களும் டிரை பண்ணலாம். நல்ல அக்கா ரோல் கிடைக்கும். இன்ஃபாக்ட் ஹீரோயினுக்கே நான் ரெக்கமெண்ட் பண்ணுவேன். வருமானத்துக்கு வருமானம். புகழுக்குப் புகழ். பொழுதும் போகும். என்ன சொல்றீங்க?”

மூச்சுவிடாமல் அவன் பேசி முடிக்கவும் ‘ஐயய்யோ’ எனறு அவள் கையை உதறினாள். ‘இல்லீங்க... எனக்கு இதெல்லாம் சுத்தமாப் பிடிக்காது” என்றாள் படுவேகமாக.

“நிஜமாவா?”

“இதுல... இதுல நான் பொய் சொல்ல என்ன இருக்கு?”

- அவன் உணர்ச்சி பாவனையோடு கைகளை ஆகாயத்துக்கு உயர்த்தினான். எதிரே டைரக்டர் இருந்து ஆக்ஷன் சொல்லாமலேயே அற்புதமாக நடித்தான். கட் சொல்லாமலேயே உரிய இடத்தில் நிறுத்தினான். சட்டென்று எழுந்தவன், “உங்களைப் போல என்னோட இன்டஸ்ரியைப் பெரிதா நினைக்காத, குடும்பம்தான் பெரிசுன்னு நினைக்கிற ஒரு பொண்ணுதாங்க எனக்கு மனைவியா வரணும்னு ஆசைப்படுறேன். பார்ப்போம். நாம்ப நினைச்சா ஆச்சா... அவர் நினைக்கணுமே. ஒண்ணு உறுதிங்க. இந்தக் கடவுள் சத்தியமா கல் நெஞ்சக்காரன். இல்லேன்னா இவ்வளவு கிழடு கட்டைகள்லாம் இன்னும் உயிர் போகலையேன்னு நினைச்சு அழுதுக்கிட்டிருக்கும் போது உங்க இளம் கணவரைக் கூட்டிட்டுக்கிட்டுப் போயிருப்பானா? சாரிங்க... நான் ஏதேதோ பேசிட்டேன். என்னமோ தெரியலை... உங்களைப் பார்த்தாலே ஒரு

பரிதாப உணர்ச்சி... என்னால அடக்க முடியலை... சாரி... வெரி சாரி... நான் வர்றேங்க.”

- லேசாகக் குரல் விம்ம கொஞ்சம் அழும் நிலைக்குச் சென்று பின்பு அடக்கிக் கொண்டு ஒரு சூப்பர் ஜென்டில்மேன் போல விருட்டென்று புறப்பட்டுவிட்டான்.

அவள் மனம் முழுக்கத் திட்டம் போட்டு அவன் தூவிய விதைகள்.

வளருமோ... இல்லை கருகுமே... போகப் போகத் தெரியலாம்.

‘திருமகள்’ பத்திரிகை அலுவலகம்.

ஒரு ஹேண்ட் பேக்குடன் வெங்காயச் சருகுச் சேலைக்குள் ஸ்லிம்மாக வந்து நின்ற ரம்யாவை ரிசப்ஷனிஸ்ட் பார்த்த மாத்திரத்தில் தெரிந்து கொண்டாள். அவள் டேபிள் மேலும் அந்த வார இதழ் கிடந்தது. அதில் ரம்யா முகம்!

“நீங்க ரம்யாதானே?”

“எக்ஸாட்லி.”

“யாரைப் பாக்கணும்?”

“மிஸ்டர்... அரவிந்தனை.”

“வெயிட் பண்ணுங்க. வரச்சொல்றேன்.”

ஓர் ஓரத்து சோபாவைக் காட்டி அமரச் சொன்னவள் இன்டர் காமில் உள்ளே தொடர்பு கொண்டாள்.

“எக்ஸ்கியூஸ் மீ... உங்களைப் பார்க்க மிஸ் ரம்யா வந்திருக்காங்க. இந்த வார அட்டைப்பட நாயகி!”

“...”

“சார்... நான் ரிசப்ஷனிஸ்ட் நந்திதா பேசறேன். ஆர் யூ ஹியரிங்?”

“யெஸ்... யெஸ்... பட் இப்ப ரொம்ப பிசியா இருக்கேன். நந்திதா. நீங்களே என்னன்னு கேட்டுப் பேசி அனுப்பிடுங்களேன்.”

நந்திதா என்ற அந்த ரிசப்ஷனிஸ்ட் அதைக் கேட்டுச் சற்று வியந்தாள்.

# 11

‘ஒரு பெண் பொக்கிஷமாய்த் தன்னை நினைத்துக் கொள்ள, ஆண் காவல் ஆளாய் மாறுகிறான். இன்னொரு ஆண் தன் வீட்டுப் பெண்ணைத் திருட முடியாமல் காபந்து செய்கிறான். காவல் காக்கிற அதே ஆணே வேறு வீட்டில் திருடுகிறான். எனக்கு வெறும் காவல் வேண்டாம் என்று பெண் எழுந்து சூலத்தை எடுக்கும் வரை இந்தக் கற்புத் திருட்டு, பெண்மை இழிதல் நடக்கத்தான் செய்யும்!’

-‘கைவீசம்மா கைவீசு’ நாவலில் பாலகுமாரன்

ரம்யாவை நீயே பேசி அனுப்பிவிடு என்கிற அரவிந்தனின் பதில் நந்திதாவுக்கே ஆச்சரியமளிக்கப் பல காரணங்கள் உண்டு. அவள் ‘திருமகள்’ பத்திரிக்கையில் ரிசப்ஷனிஸ்டாகி ஒரு வருடமாகிறது. இந்த ஒரு வருடத்தில் ஒரு நாளைக்கு நாலைந்து முறையாவது அவளை அரவிந்தன் வியக்க வைத்திருக்கிறான். அதில் முக்கியமான ஒன்று எவர் வந்தாலும் அவர்களைத் தேடி வந்து சந்தித்து அன்போடும் மதிப்போடும் வந்தவர்களிடம் பேசுவது என்பதுதான் அது. அவனா இன்று இப்படி நடந்து கொள்கிறன்? ஒரு வேளை ஏதாவது நியாயமான காரணம் இருக்கக்கூடும். இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டே வந்தவள் ரம்யா அமர்ந்திருந்த சோபாவில் அவளுக்கு அருகே சென்று அமர்ந்தாள். கொஞ்சம் அளவோடு ஒரு சிரிப்புச் சிரித்தாள். சில சமயங்களில் சிரிப்பு நூறு இருநூறு விஷயங்களை ஒரு சொடுக்கில் சொல்லிவிடும். ரம்யாவுக்கும் அது புரிந்தது.

“என்ன சார் ரெம்ப பிஸியா இருக்காராமா?’

“யூ ஆர் கரெக்ட், இஷ்யூவோட டெட் லைன் இன்னிக்கு... அதான்...”

“நிஜமா பிஸியாத்தான் இருக்காரா... இல்ல...”

ரம்யா கொஞ்சம் அழுத்தம் கொடுத்துப் பார்த்தாள்.

“நோ... நோ... அரவிந்தன் சார் எனக்குத் தெரிஞ்சு ஒரு ஜென்டில்மேன். இதுவரை அவர் யாரையும் காக்க வெச்சதில்லை. நீங்கதான் பர்ஸ்ட் பர்ஸன். ஏன் சொல்றேன்னா அவருக்கு நிஜமாகவே வேலை இருக்கறதாலதான் இப்படிச் சொல்லியிருக்கார்.”

நந்திதாவின் பதிலில் கிட்டத்தட்ட அரவிந்தன் எப்படிப்பட்டவன் என்பதிலே இருந்து அவன் திட்டமிட்டே தன்னைத் தவிர்க்கிறான் என்பதும் அவளுக்கு விளங்கி விட்டது.

அவன் அப்படி நடந்து கொள்வதை நினைக்க சந்தோஷமாகக் கூட இருந்தது. நல்ல ஆண்மக்கள் செயல் இது. ஒரு மாதிரி புருவம் வளைத்து பெருமூச்சுவிட்டு மார்பு தழைய எழுந்தவள் நந்திதாவை ஒரு அர்த்தபுஷ்டியுள்ள பார்வை பார்த்தாள்.

“நல்லது...நான் புறப்படறேன்” என்று விலகவும் தொடங்கினாள். சிறிது தூரம் சென்றவள் திரும்பி வந்தாள். நந்திதா அவள் ஆழமாக எதையோ கேட்கப் போகிறாள் என்று புரிந்து அவளைப் பார்க்க...

“சாரோட வீட்டு முகவரி தரமுடியுமா?”

-நந்திதாவுக்கு நிஜமாலுமே தர்மசங்கடமாகிவிட்டது. திணறத் திணற அவளைப் பார்த்தவள், “அவசியம் அவரைச் சந்திச்சாகணுமா?” என்றாள்.

“ஆமாம்... நான் அவரைக் கொஞ்சம் வருத்தப்பட வச்சுட்டேன். ஐ வான்டு சே ஸாரி.”

“நிஜமா இதுதான் விஷயமா?”

“நீங்க தயார்னா எப்படி வருத்தப்பட வச்சேன்னு விலாசாரியாச் சொல்றேன். ஆனா அதுக்காக நான் இப்ப வருத்தப்படலை. ஏன்னா வருத்தங்கள்தான் நமக்குப் பல உண்மைகளைப் புரியவைக்குது?”

ரம்யாவின் பதிலில் வார்த்தைக்கு வார்த்தை சீரியல் செட் பல்பு போல் ஒரு வெளிச்சம். நந்திதா அதை ரசித்தாள்.

சிரித்தபடியே, “அந்த ‘வானத்தைப் பாருங்கள்’ சிந்தனை போலவே இருக்கு உங்க பேச்சு. எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. இன்பாக்ட் அவர் அட்ரஸைக் கொடுக்றதால எனக்கு எதுவும் குறைஞ்சுடப் போறதில்லை. ஆனா நான் கொடுத்தேன்னு சாருக்குத் தெரிஞ்சா என் மேல இருக்கிற நம்பிக்கை போயிடும்” என்றாள்.

“ஸோ... உங்களால எனக்கு உதவ முடியாதுன்னு சொல்லுங்க.”

“முடியும்... கிருஷ்ணர் மாதிரி.”

“எப்படி?”

“புராணக் கதைகள்ல ராமர் ஒரு ஸ்ட்ரையிட் பார்வர்ட் பர்சனாலடி. ஆனால், கிருஷ்ணர் ரிசல்ட் ஓரியண்டட், பெரிய தர்மத்தைக் காப்பாத்தறதுக்காகச் சின்ன நியாயங்களைக் கொஞ்சம் மீறுவார். நானும் அப்படித்தான் இப்ப உங்களுக்கு அட்ரஸ் தரப்போறேன். ஒரு ரிசப்ஷனிஸ்டா அவர் அட்ரஸை என்னால கொடுக்க முடியாது. ஆனா டி.வி. நடிகர் குணசேகர் வீட்டுக்கு நேர் ப்ளாட்லதான் சார் இருக்கார்னா பிரபலமானவர்கள் முகவரி புத்தகத்தைப் பார்த்து கண்டுபிடிக்க உங்களுக்குத் தெரியாதா என்ன? ‘குணசேகரைப் பார்க்க வந்தேன். இங்கதான் நீங்க இருக்கீங்களா’ ன்னு கேட்டு சாரையும் பார்த்துடுங்கன்னு நான் உங்களுக்குச் சொல்லித்தரமாட்டேன். ஏன்னா அதெல்லாம் உங்களுக்கே நல்லாத் தெரியும்.”

நந்திதாவின் புத்திசாலித்தனம் பிளஸ் நல்லெண்ணம் ரம்யா வரையில் அவள் கைகளைத் தேடிப்பிடித்து நன்றி கூற வைத்தது.

“உங்க பேர்?’

“நந்திதா.”

“இல்ல... நந்திதா கிருஷ்ணா!” –ரம்யா சொன்னபடியே சிரித்தாள். பின் பிரிந்தாள். படிகளில் இறங்கும் போது, “ஆல்

த பெஸ்ட்” என்றாள் நந்திதா. கச்சிதமாக அப்பொழுது அவள் பின்னால் வந்து நின்றான் அரவிந்தன். அவளைக் கொஞ்சம் தர்மங்கடத்துடன் பார்த்தான்.

“சமாளிச்சு அனுப்பிட்டேன் சார்...” என்று அவனையும் சமாளித்தாள் நந்திதா.

“தாங்ஸ் நந்திதா.”

“பரவாயில்ல சார்.”

“ஆமா... நான் மாட்டேன்னு சொன்னது அவங்களை ரொம்ப பாதிச்சிருக்குமா?”

அரவிந்தன் ஏதோ தவறு செய்துவிட்ட பாவனையில் கேட்டான்.

“அப்படித்தான் தெரியுது. நான் கூட எதுக்குச் சந்திக்க விரும்பறீங்கன்னு கேட்டேன். உங்களைக் கொஞ்சம் வருத்தப்பட வச்சுட்டாங்களாம். அதுக்காக வருத்தப் பட்டு ஸாரி சொல்லிட்டுப் போக வந்ததாகக் குறிப்பிட்டாங்க.”

“அப்படியா?” அரவிந்தன் கேட்டதில் ஒரு பளீர் பிரகாசம் கூடவே, அடடா.. சந்திக்காமப் போயிட்டோமே’ என்ற ஒரு வருத்தமான எண்ணம். அது மாறி மாறி அவன் முகத்தில் தோன்றி மறைந்தது. நந்திதாவுக்குக் கொஞ்சம் முகம் படிக்கத் தெரிந்திருந்தது. அதை வைத்துக் கொண்டு, “பாவம் சார் அவங்க...” என்றவள், “நிச்சயமாக அவங்க உங்களை எப்படியும் சந்திப்பாங்க,” என்றாள். அப்படியே அவனிடம், ஆல் த பெஸ்ட் சார்” என்றாள் சிரித்துக் கொண்டே.

“எதுக்கு நந்திதா இப்ப ஆல் த பெஸ்ட் சொல்றீங்க?”

அதற்கு மட்டும் நந்திதா பதில் சொல்லவில்லை. ஒரு மாயச் சிரிப்பு மட்டும் சிரித்தாள்.

ரம்யா இண்டஸ்ட்ரீஸ் என்னும் அந்த பாக்டரி காம்பசுக்குள் அந்த மாலை வேளையில் ஞானப்பிரகாசத்தைத் துளி கூட எதிர் பார்க்கவில்லை. ராம்நாத்தின் முகத்தில் அது நன்றாகவே எதிரொலித்தது.

“வா ஞானா...”

“நான் வர்றது இருக்கட்டும். என்னாடா அதிசயமா பாக்டரியில் இருக்கே?”

ராம்நாத்தின் ஒரு தர்மசங்கடமான பார்வை.

“நல்ல வேளை...உன் ஒர்க்கர்ஸ் எல்லாம் வீட்டுக்குக் கிளம்பிப் போயிட்டாங்க. ஆமா... ஆபிஸ் ஒர்க்கர்ஸையும் எட்டுமணி நேரம்தான் வேலை வாங்கிறியா?”

“ஞானா...விஷயத்துக்கு வா.”

“அதுக்குதானே வந்திருக்கேன். என்னோட பாக்டரியில ஒய்ட்காலர்ஸின்னா மினிமம் டென் அவர்ஸ் ஒர்க் பண்ணியாகணும். இந்த எயிட் அவர் நியாயமெல்லாம் யூனியன் பசங்களுக்குக்குத் தான். மேனேஜ்மென்ட் ஸ்டாப்னா பன்னிரெண்டு மணி நேரம்கூட இருந்தாகணும். இல்லேன்னா ப்ரமோசன் ஃபியரைக் கிரியேட் பண்ணி நல்லாவே கஞ்சி காச்சுவோம்.”

“இப்ப இதையெல்லாம் எதுக்கு எங்கிட்ட சொல்றே?”

“உனக்கு தெரியாதாக்கும்? நான் யுனிவர்சிட்டி ராங்குல பாஸ் பண்ணுனவனையெல்லாம் பாடாப்படுத்துறது எச்.ஆர்.டி. ஹெட்டுடா. நீ என்னையே பாடாப்படுத்திட்டே பாத்தியா?”

“எங்க உன் தலையக் காட்டு கொஞ்சம்?”

“எதுக்குடா? நான் எவ்வளவு தூரம் தலையைப்பிச்சிக்கட்டிருக்கேன்னு பாக்கவா?”

“இல்லை... கொம்புகிம்பு முளைச்சருக்கோன்னு பாக்கவிரும்பினேன். உன்னைப் பத்தி உனக்குள்ள இவ்வளவு கர்வமா? டூ மச் ஞானா!”

“என்னை நீ விமரிசிக்கிறயா? உன்னை நான் விமரிச்சா தாங்குவியா?”

“தாங்குவேண்டா, தப்பு பண்றது இரண்டு விதம். ஒண்ணு தெரிஞ்சு பண்றது. இன்னொண்ணு தெரியாமப் பண்றது. நான் இரண்டுவிதத்திலயும் சேராதவன்.”

ராம்நாத்தின் பதில் ஞானப்பிரகாசத்தைக் கொஞ்சம் குழப்பியது.

“என்ன பாக்கறே. நான் சொல்ல வர்றது உனக்கு புரியல இல்ல. நான் தெரிஞ்சும் பண்ணலை, தெரியாமயும் பண்ணலை. முடியாமப் பண்ணறேன். அதை நீ புரிஞ்சிக்கல. ரம்யாவைப் பிரியுறதை என்னால நெனச்சே பாக்க முடியலடா. நா எப்பவோ செத்துப் போயிருப்பேன்டா. அவ இருக்கிறதாலதான் நான் உயிரோடு இருக்கேன்.”

“உனக்கு என்ன கேடு? பேரன், பேத்தி பாக்கணும்னு நினைக்காம அவளைப் பிரிய மனசு இல்லைன்னா என்ன அர்த்தம். ரம்யா ஒரு இன்டலிஜென்ட் கேர்ள். நல்ல சிந்தனை உள்ள பெண்ணுடா. அவள் உன் பொண்டாட்டியா... சாரி மாஜி மனைவியைக் கொண்டிருந்தா, இந்த நிமிஷம் இந்த ஆபீஸில ஒரு நல்ல இன்ஜினியர் பையனையாப் பார்த்து இழுத்துக்கிட்டு ஓடிப் போயிருப்பா அது தெரியுமா உனக்கு?”

“...”

“இப்படி மெத்தனமா இருந்தா எப்படி? எனக்கு ஒரு உண்மை தெரியலை ராம்நாத். ஒரு மனுஷன் நூறு எதிரிகளை ‘ஊடு’ கட்டிச் சமாளிச்சிடலாம். ஆனா தன் உடம்பை ஜெயிக்கிறது, ரொம்ப ரொம்பக் கஷ்டம். காலைல அஞ்சு மணிக்கு எழுந்துக்கணும்னு நினைச்சு படுக்கிற நூறு பேருல தொண்ணூறு பேர் எழுந்துக்கறது கிடையாது. ஒரு தூக்கத்தை ஜெயிக்க முடியாத உடம்புடா இது. மன உறுதிக்கும் உடம்புக்கும் நடக்கிற போட்டியில் யார் யார் உடம்பை ஜெயிச்சு மார்க் வாங்கறாங்களோ அவங்கதான் சாதனையாளராகவே ஆகறாங்க. மத்தவங்க அவ்வளவு பேரும் அவங்க சாதனையாளராகத் துணையாக இருக்கிறவங்கதான். இதை ஏன் சொல்றேன்னா. உடம்பை ஜெயிச்சு போறபோக்குல போறது ரொம்பக் கஷ்டம்டா.

எதுக்கு விஷப்பரீச்சைன்னுதான் அந்தக் காலத்துல ஒரு ஆணுக்கு மீசை முளைக்கிறதுக்கு முன்னாடியும் பெண்ணு வயசு வரதுக்கு முந்தியும் கல்யாணத்தைப் பண்ணிவெச்சாங்க. இன்னிக்குச் சட்டப்படி இது குற்றம். ஏன்னா இப்ப இருக்கிற கவர்மென்டால எல்லாருக்கும் சோறு போட முடியல. கரண்ட் கொடுத்து, தண்ணி கொடுத்து வழி நடத்த முடியல. அவங்க இன்னெபிஷியன்ஸியை கன்வர்ட் பண்ணி குடும்பக்கட்டுப்பாடு... கொத்தரவங்கான்னு ஏதோ கூத்தடிச்சிட்டிருக்காங்க... என்ன பாக்கறே? எங்கேயோ ஆரம்பிச்சு எங்கயோ போறேன்னா? நோ மேன். எனக்கு எப்பவுமே ஒரே லைன்தான். சட்ட நியாயம் வேற... தர்ம நியாயம் வேற. கவர்மென்டும் சரி... நீயும் சரி... சட்ட நியாயத்துல இருக்கீங்க. இது கவைக்கும் உதவாது. ரம்யாங்கற உன் பொண்ணோட இன்னொரு பக்கத்தையும் தயவுசெய்து பாரு. உன் பொசசிவ் மைண்டால அவ எதிர்காலத்தைப் பாழடிச்சுடாதே."

ஞானப்பிரகாசத்தின் நீண்ட பேச்சு ராம்நாத்தைத் திக்குமுக்காட வைத்துவிட்டது. இறுகினாற் போல ஒரு மௌனம் அவரிடம். மெல்ல அதனின்று விடுபட்டவர், "யூ ஆர் ரைட் ஞானா. நீ ஒரு நல்ல நண்பன்கிறதை நிரூபிச்சுட்டே. எனக்கென்னன்னு போகாம தேடி வந்து புத்தி சொன்ன பார்... ரியலீ நீ கிரேட். இப்ப சொல்றேன்டா... ரம்யா கல்யாணம்தான் இனி என்னோட அடுத்த குறி."

ராம்நாத் இப்படிச் சொல்லவும் ஞானப்பிரகாசம் அவரை இழுத்துக் கட்டிக்கொண்டார்.

அரவிந்தன் ஃப்ளாட்டில் சரண்யா எதிரில் மீண்டும் குணசேகர். கடந்த முறை பிறந்த நாள் வாழ்த்து... பூங்கொத்து. இந்த முறை கோயில் பிரசாதம்.

"என்ன பாக்கறீங்க...வடபழனி கோயில்ல இன்னிக்கு என் அபிஷேகம்தான். அதான் பிரசாதம் கொண்டு வந்தேன்" என்றபடி குங்குமத்தை அவள் எதிரில் நீட்டினான். அவள் ஒரு மாதிரி வெறித்தாள்.

“உம்...இட்டுக்குங்க.”

“இல்ல...இது குங்குமம்.”

“தெரியும்...காரணமாத்தான் நீட்டறேன். புரிஞ்சிக்கிட்டு வச்சுக்குங்க.” – அவன் பதிலில் நல்ல அழுத்தம். கச்சிதமாக அந்த வேளையில் ரம்யாவும் எட்டிப் பார்த்தாள்.

# 12

‘ஒரு மனிதன் விதைகளை எடுத்துக் கொண்டு ஆராய்வோம். அந்த விதைக்குள் முழுமையாக ஒரு மரமே அலைவடிவில் சுருங்கியிருக்கிறது.

மரம், கிளைகள், இலைகள், பூ, காய், கனி அனைத்தும் அந்த வித்தில் அடங்கியுள்ளன. நீர், காற்று, சூரிய ஒளி இவற்றால் விதையிலுள்ள ஜீவகாந்தம் தூண்டப்படுகிற போது காலத்தால் ஒவ்வொரு பகுதியாக அந்த விதையிலிருந்து மரம் வளர்ச்சி பெற்று புலன்களுக்கு விளங்குகின்றது. மனிதனின் செயலிலும் பிறக்கும் இலைகளைச் சுருக்கி இப்படித்தான் ஜீவகாந்தம் தன்னுள் இருப்பாய் வைத்துக் கொண்டிருக்கறது.’

-வேதாத்திரி மகரிஷி

ரம்யாவைப் பார்த்த சரண்யாவுக்கு அவள் யாரென்றே தெரியவில்லை. குணசேகரும் சிவபூஜையில் கரடியாக ரம்யா வந்து நிற்கவும் எரிச்சல் கொள்ளத் தொடங்கினான்.

“ஹலோ...” ரம்யா வலிந்து உள்ளே நுழைந்தாள்.

“ஹாய்... வா... வா... எப்ப வந்தே? இப்பதானா?” –சரண்யா சட்டென்று வரவேற்பது போல் வரவேற்கத் தொடங்கினாள். ரம்யாவுக்கே அது ஆச்சரியம்தான்.

குணசேகருக்குத்தான் அடுத்து என்ன செய்வதென்று தெரியவில்லை.

“வாம்மா... வா உள்ற போகலாம். வீட்ல அம்மா, அப்பாவெல்லாம் சௌக்கியமா? உனக்காத்தான் காத்துக்கிட்டிருக்கேன். நேரம் ஆகவும் நீ வராம போயிடுவியோன்னும் நினைச்சேன். நல்ல வேளை நீ வந்துட்டே.” – சரண்யா அவள் தோளில் கைபோட்டு அழைத்துக் கொண்டே நேராகச் சமையல் கட்டுப்பக்கம் சென்றாள்.

குணசேகருக்கும் இனி தனக்கு அங்கே வேலை இல்லை

என்பது விளங்கிவிட்டது. எரிச்சலுடன் திரும்பி ஒரு பார்வை பார்த்துவிட்டு வெளியேறினான்.

அவன் ‘வெளியேறுவதைத் திரும்பிப் பார்த்த சரண்யாவும் ஓடிப்போய் கதவைத் தாளிட்டாள். அப்படியே கதவு பின்னால் முதுகைச் சாய்த்து நின்றபடி ஒரு பெருமூச்சுவிட்டாள்.

ரம்யா ஒரு நொடியில் அதைப் பார்த்து அவள் நிலையைப் பரிந்துகொண்டாள். பக்கமாய் மேஜைமேல் குங்குமப் பொட்டலம். சுவரில் அவள் கணவனின் மாலையிடப்பட்ட படம். அங்கு அவள் நிலையைத் தெரிந்து கொள்ள அதிகம் வார்தைகளே ரம்யா வரையில் தேவைப்படவில்லை.

“என்னங்க... யார் அந்த நபர்? வெளியே போனா போதும்னு நினைக்கிறா மாதிரித் தெரியுதே?” –ரம்யா தன் சந்தேகத்தைக் கேள்வியாக்கினாள்.

“ஆமாம்மா...இவனை உனக்குத் தெரியலையா? இவன்தான் அந்த டி.வி. ஆக்டர் குணா. நான் ஒரு விடோ. ஆண் துணையில்லாதவங்கிறதத் தெரிஞ்சிக்குட்டு யாரும் இல்லாதப்ப எதையாவது சொல்லிக்கிட்டு என்னைப் பாக்க வந்துடறான். பாரு... குங்குமப் பிரசாதத்தைக் கொண்டு தந்திருக்கான்! எனக்குக் கொடுக்கிற பிரசாதமா இது! அன்னிக்கு மலர்க்கொத்தோட வந்தான்.”

சரண்யா குங்குமத்தைக் காட்ட அதைப் பார்த்த ரம்யாவின் முகம் சஷணத்தில் சிவந்துபோனது. குணசேகரை நினைத்து அவள் கொதிக்க ஆரம்பிக்கவும், “ஆமா... நீ யாரும்மா? நான் அதைக் கேக்காம ஏதேதோ பேசிக்கிட்டிருக்கேன் பார்.” –சரண்யா அவளைப் பற்றி அறிய முன்வந்தாள். அப்படியே, “உக்காரும்மா” என்று பிரம்பு நாற்காலியையும் காட்டினாள். ரம்யாவும் உட்கார்ந்தவள், “நான் மிஸ்டர் அரவிந்தனுக்குத் தெரிஞ்சவ. அவரைப் பார்க்க வந்தேன். நீங்க...?”

“நான் அவனோட அக்கா. அவனை விட எட்டு வயசு பெரியவ. என்னைப் பத்தி என் தம்பி உன்கிட்ட சொன்னதில்லையா?”

“ஆங்... சொல்லியிருக்கார். உங்க பேர் கூட...”

“சரண்யா... நல்லாவேளைம்மா. நல்ல சமயத்துக்கு நீ வந்தே. இல்லைன்னா அந்த குணசேகர் என்னைப் பாடா படுத்தியிருப்பான்.”

திரும்பவும் சரண்யா குணசேகரிடமே போய் நின்றாள்.

“என்னங்க நீங்க? இந்த மாதிரி ஆட்கள் கிட்டயெல்லாம் கொஞ்சம் கூடப் பயப்படக் கூடாது. அவசியம் ஏற்பட்டா கன்னம் சிவக்க ஒரு அறை கூட அறையலாம்.”

“அறையா...ஐய்யோடா!” சரண்யா அந்த மாதிரி வன்மைச் சிந்தனையே தனக்குப் பிடிக்காது என்பது போல முகத்தைச் சுழித்ததை ரம்யா ரசித்தாலும் அவளது இந்த இயல்பு அவளுக்குக் கவலையைத்தான் தந்தது.

“அரவிந்த் வந்தா இந்த ஃப்ளாட்டை முதலில் மாத்தச் சொல்லணும். நல்ல வேளைம்மா.. நீ வந்தே.”

சரண்யா திரும்பத் திரும்ப நடந்து முடிந்ததில் போய் நின்றது ரம்யாவை மேலும் அதிரச் செய்தது. மிக மென்மையான பூப்போன்ற உள்ளம் அவளுக்கு என்பது ஒரு நொடியில் புரிந்தது.

“எங்கையாவது யாராவது மூட்டைப் பூச்சிக்காகக் கட்டிலையேவா கொளுத்துவாங்க? நீங்க ஏன் இவ்வளவு பயப்படறீங்க? நான்தான் சொன்னேனே... அடுத்து அந்த ஆள் வந்தா மரியாதையா வெளியே போகச் சொல்லுங்க. கேக்கலைனா ‘போலீசுக்குப் போவேன்னு சொல்லுங்க.

ரம்யா திரும்பத் தேற்றினாலும் அவளிடம் தான் வந்த விஷயத்தை எப்படி ஆரம்பிப்பது என்றே தெரியவில்லை. சரண்யா சேலை முந்தியால் கழுத்துப் பக்கம் விசிறிவிட்டுக் கொள்வதும், பின் வாசல் கதவுப் பக்கம் பார்ப்பதுமாகவே இருந்தாள். ரம்யாவுக்கு அவன் விஷயம் தீர்ந்துவிட்டது என்று அவள் உணராதவரை வேறு எதையும் பேச முடியாது உன்பது தெரிந்தது.

“ஆமா... அரவிந்த் இன்னுமா வரலை?”

“அவன் என்னிக்கு நேரத்துக்கு வந்திருக்கான்? தினமும் ராத்திரி எட்டு மணி, ஒன்பது மணி. கேட்டா யோக கிளாஸ் போனேன். ரெய்கி கிளாஸ் போனேன்னு சொல்வான்.”

“அதுல எல்லாம் கூட இன்ட்ரஸ்ட் உண்டா?”

“என்னம்மா... உனக்கு அரவிந்த் பத்தி எதுவுமே தெரியாதா? ஆமா... நீ என்ன பண்றே? உன் பெயரையே நீ சொல்லலியே?”

“சாரிங்க... என் பேர் ரம்யா. ரம்யா இண்டஸ்ட்ரீஸ் ஓனர் ராம்நாத்தின் டாட்டர் நான். ‘திருமகள்’ பத்திரிகை மூலமாத்தான் அரவிந்தன் சார் பழக்கம். பெரிசா அவரைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. என் கட்டுரை ஒண்ணுக்குப் பரிசு கிடைச்சிருக்கு. அதனால அவரைப் பார்த்து நன்றி சொல்லிட்டுப் போக வந்தேன்.”

“அப்படியா... அவன் வர நேரமாகும். அதுவரை நீ இங்க இருக்கலாம் இல்லியா?”

“இருக்கலாம் ஆனா...?”

“என்ன... எதுவாவது வேலை இருக்கா? இருந்தாலும் நாளைக்கு அதைச் செய்யப் பாரேன். நீ இருந்தா எனக்குக் கொஞ்சம் தெம்பா இருக்கும். எதுக்குச் சொல்ல வரேன்னா...” –சரண்யா திரும்பவும் அந்த குணசேகரிடம் போகப்பார்த்தாள். கூர்ந்து கவனித்த ரம்யாவும் ஒரு முடிவுக்கு வந்தவள் போல, “கவலைப்படாதீங்க. நான் போகலை. உங்களுக்குத் துணையா உங்க கூடவே இருக்கேன். அதுக்கு முந்தி அந்த குணசேகரைப் பார்த்து ஒரு நாலு வார்த்தை பேசிட்டு வந்துடட்டுமா?”

“என்னது...என்னது...அவனைப் பார்த்துப் பேசப் போறியா? ஐயோ...எதுக்கு இதெல்லாம்?”

“நான் அவரோட விசிறிங்க...ஒரு ரசிகையா அவரைப் பாத்துட்டு வர்றேன்,”

“அப்படியா? பாத்தும்மா...அவன் நல்லவன் இல்லே. ஆதான் நீயே பார்த்தியே... எதுக்கும் நான் என்ன சொல்ல

வர்றேன்னா...”

சரண்யா தொடர்பில்லாமல் ஏதேதோ பேசப்பார்த்ததும் ரம்யா அதைப் பொருட்படுத்தாமல், “தைரியமா இருங்க... வந்துடறேன்” என்றபடியே அங்கிருந்து கிளம்பினாள்.

சோபாவில் அமர்ந்து கொண்டு எதிரில் கிடந்த மோடாவில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு எதிரே டி.வி.சீரியல் பார்த்துக் கொண்டிருந்தான் குணசேகர்.

“ஹலோ சார்...” என்றபடியே அவனுக்கு எதிரில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தாள் ரம்யா.

ஆச்சரியத்துடன் நிமிர்ந்தவன் ரிமோட்டை எடுத்து டி.வி.யில் சவுண்டைக் குறைத்தான்.

“அந்த சீரியலைக் கொஞ்சம் அணையுங்களேன். நான் உங்க கூட கொஞ்சம் பேசணும்.”

ரம்யா சொன்ன விதமும் பார்த்த பார்வையும் அவனைக் கொஞ்சம் அரட்டின. பாடி லாங்வேஜ் பற்றி நிறையத் தெரிந்த நடிகன் என்பதால் அவனை ஊன்றிப் பார்த்த படியே டி.வி.யை அணைத்தான்.

“ஆமாம்...நீங்க மட்டும்தான் இருக்கீங்களா? வீட்ல யாரையுமே காணோமே?”

“நான் பேச்சிலர்மா... ஆமா... நீ யாரு? நீ பாட்டுக்கு உள்ற வந்தே... உக்காந்தே... அதிகாரமா டி.வியை எல்லாம் அணைக்கச் சொல்றே...?”

“அது சரி... டி.வி.யை அணைக்கச் சொன்னா உங்களுக்குப் பிடிக்குமா? சிஸ்டர் சரண்யா மாதிரி ஆண் துணையில்லாதவங்களையா பாத்து அணையுங்கன்னா ஆஹான்னு சொல்வீங்க... அப்படித்தானே?”

ரம்யாவின் நறுக்கென்று பதில் ஊசி போல அவனைக் குத்தியது. வேகமாக நிமிர்ந்து, “வாட் டூ யூ மீன்? நான்சென்ஸ்!” என்று எழுந்தான்.

“ஐ மீன் நீ ஒரு கல்பிரிட். நாக்கைத் தொங்கப் பொட்டுக்கிட்டு அலையிற பொம்பளைப் பொறுக்கின்னு என் வாயால நான் சொல்லணும்னு ஆசையா மிஸ்டர் குணசேகர்?”

ரம்யா சீற்றத்துடன் எழுந்து அவன் முன் நின்று ஆவேசமாகக் கைகளை உயர்த்தினாள். நாலு பேர் ஒன்று கூடி அவனை அடிக்கிற மாதிரி இருந்தது. திணறலோடு வெறித்தான்.

“லுக் மிஸ்டர் குணசேகர்... நீங்க போன பிறகு சரண்யா தற்கொலை பன்னிக்கப் பாத்தாங்க. நான்தான் தடுத்துக் காரணம் கேட்டேன். நீங்க அடிக்கடி அவங்களைச் சந்திச்சு டார்ச்சர் குடுக்கிறதா சொன்னாங்க. ‘அட... என்னங்க நீங்க... கையில வெண்ணெய வச்சிக்கிட்டு நெய்க்கு அலயறீங்களே...உங்க பிரதர் கையில பத்திரிகைங்கிற பெரிய சாதனம் இருக்கு. அதுல உங்க மனக்குமுறலை வெளியிடுங்க...அந்த ஆள் மானம் போகட்டும்’னு சொன்னேன். ‘இல்ல...அதெல்லாம் வேண்டாம். இனி அந்த ஆள் எங்கிட்ட வராம இருந்தாப் போதும்’னு அவங்க சொன்னதாலதான் இங்க வந்து பேசிட்டிருக்கேன். இது வார்னிங்! இனிமே மலர்கொத்து, குங்குமப் பிரசாதம்னு எதையாவது எடுத்துக்கிட்டு வந்து வாலாட்டினே...! ஓட்ட நறுக்கிடுவேன்.”

-ஒரு அருவிபோலக் கொட்டி முழுங்கிவிட்டு சாதாரணமாக எழுந்து வெளியேறத் தொடங்கினாள் ரம்யா.

அவனுக்கோ தீக்குளிக்கிற மாதிரி இருந்தது.

அரவிந்தன் கீழே பைக்கைப் பார்க் பண்ணும் போது இறுகிய முகத்துடன் குணசேகர் காரை எடுத்துக் கொண்டிருந்தான்.

“ஹலோ சார்...” என்று அரவிந்தன் அவனைப் பார்த்துப் பேசியும் அவனிடம் பதிலுக்குச் சிரிப்பில்லை. வெகு வேகமாகக் காரைக் கிளப்பிக்கொண்டு போனான். அரவிந்தனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அப்படியே நடந்து தன் ப்ளாட்டுக்குள் நுழைந்தபோது அதிர்ச்சியாகக் கூட இருந்தது ரம்யாவைப் பார்த்து.

அவனைப் பார்க்கவும் அவளும் எழுந்து சிரித்தாள் அவனோ வெறித்தான்.

“சாரி...ஆபீஸிலதான் நீங்க பிஸி. உங்களைப் பாக்க முடியலை. அதான் வீட்டுக்கு வந்துட்டேன்.” –அவளே ஆரம்பித்தாள்.

“அரவிந்தா... வா... இப்பத்தான் வரியா? இந்தப் பொண்ணு ரம்யா, உனக்காக ஈவ்னிங்கிலிருந்தே காத்திருக்கா பார்.” அவள் மாலையிலேயே வந்துவிட்டதாக சரண்யா கூறியது அவனுக்கு மேலும் அதிர்ச்சி அளித்தது.

எதுவும் கூறாமல் இறுக்கமாக ஷீவைக் கழற்றத் தொடங்கினான். அவளோ பேசாமல் அவனையே பார்த்தாள். ஷீவைக் கழற்றியவன் விறுவிறு வென்று பெட்ரூம் நோக்கிச் சென்றான். உடை மாற்றி வந்தான். அவளிடம் என்ன விஷயம் என்று மட்டும் கேட்கவில்லை.

“என்னடா நீ... அந்தப் பொண்ணுகிட்ட பேசி அவளை வீட்லயும் கொண்டு போய்விட்டுவிட்டு வா. இன்னிக்கு இவ மட்டும் இல்லைன்னா நான் நானாகவே இருந்திருக்க மாட்டேன்.”

-சரண்யா மெல்ல அந்த அதிர்ச்சிக்குரிய விஷயத்தில் கை வைத்தாள்.

# 13

‘சில காரியங்கள் செய்தால் சில காலம் கழித்தே பயன் உண்டாகும். சாப்பிட்டவுடன் பசி தீருகிறது. அது போல் மருந்து உண்டவுடன் நோய் தீராது. சிறிதுநாள் ஊறி உடம்பிலுள்ள தீங்குகளை எல்லாம் போக்கிய பிறகுதான் மருந்தின் பயன் வெளிப்படும். தென்னை மரத்தை நட்டு அது சில ஆண்டுகளுக்குப் பிறகு பயன்தரத் தொடங்கினால் அது நெடுங்காலம் வாழும். நேற்றுக் காளையில் விதைத்த கீரையை நாளைக்கே அறுத்துச் சமையல் செய்து சாப்பிடலாம். விரைவில் பலன் தரும் காரியங்கள் நெடுநாள் நில்லா!’

- ஒரு சொற்பொழிவில் வாகீச கலாநிதி

கி.வா.ஜகன்னாதன்.

சற்று கலகலப்பாகவும் அதே சமயம் ரம்யாவைச் சுட்டிக் காட்டி, இவளால்தான் நான் பிழைத்தேன் என்று பேசிய சரண்யாவை வெகு ஆச்சர்யத்தோடு பார்த்தான் அரவிந்தன்.

ரம்யா முகத்தில் அவனால் இனம் பிரித்துப் பார்க்க முடியாத உணர்ச்சிகள். பொதுவாக முகம் என்பது எழுத்திலும் சப்தத்திலும் இல்லாத ஒரு மொழியைத் தன் வசம் வைத்திருக்கும் ஒரு கற்பலகை போன்றது. அதைப் படிப்பதில் சிலர்தான் புலிகள். புலர் இம்மட்டில் திணறுபவர்கள்.

அரவிந்தனும் ரம்யாவைப் பார்த்துத் திணறவே செய்தான். அவன் வரவும் அவள் எழுந்து நின்றுவிட்டாள். அதற்காகக் காலால் கோலமெல்லாம் போடவில்லை. அவள் நிற்பதில் ஒரு அழுத்தமான மரியாதை தெரிந்தது.

“உக்காருங்க ரம்யா” என்றான்.

அவளும் அமர்ந்தாள். சரண்யா தன் ஆலாபனையை தொடர்ந்தாள்.

“அரவா...அந்த டி.வி.ஆக்டர் குணா இப்பல்லாம் அடிக்கடி

வாரண்டா. ரெண்டு நாளைக்கு முந்தி, பிறந்தநாள் வாழ்த்துன்னு சொல்லிட்டு பொக்கே கொடுத்தான். உங்களைப் போலத்தான் ஒரு பொண்ணைத் தேடிக்கிட்டிருக்கேன்னு வழிஞ்சு வழிஞ்சு பேசினான். இன்னிக்கும் வந்துட்டான். உங்களுக்கு நல்ல முகவெட்டு இருக்கு. நீங்களும் டி.வி.யில நடிக்கலாம்னு ஆரம்பிச்சுட்டான். நல்லவேளை ரம்யா வந்ததால இவங்களைப் பிடிச்சுக்கிட்டு நான் அவனைச் சம்மாளிச்சு அனுப்பிட்டேன்” என்று முடித்தாள்.

அரவிந்தனுக்கு எல்லாமே விளங்கிவிட்டது. சட்டென்று இறுக்கமாகி சோபாவில் போய் அமர்ந்தான். ரம்யா அவனது பாடிலேங்வேஜிலேயே கவனமாக இருந்தாள். நெடுநேரம் அவனிடம் பேச்சில்லை. பிறகு வேகமாக நிமிர்ந்து சரண்யாவைப் பார்த்தான். “அந்த ஆள் உன் பர்த்டேக்கு விஷ் பண்ணியதை நீ ஏன் எங்கிட்ட சொல்லலை...” என்று ஆரம்பித்தான்.

“நீ எங்கடா என்கிட்ட கலகலன்னு பேசினே? உர்ருனுதானே இருந்தே. ஆதான் எனக்கும் உங்கிட்ட சொல்லணும்னு தோணலை.”

“நல்லவேளை இப்பாவாவது சொன்னியே... இட்ஸ் ஓ.கே. குணா ஒரு ஜோவியல் கேரக்டர். அவங்க பீல்டுல ஆண் - பெண் பேதமில்லாமப் பழகறதெல்லாம் ரொம்ப சகஜமான விஷயம். நிச்சயம் நல்ல எண்ணத்தோடயும் நட்போடயும்தான் பழகியிருப்பார். அதை நாம ஏன் தப்பா எடுத்துக்கணும்? இது ஒருவித மிடில் க்ளாஸ் அவசரம்.”

அவனது கன்க்ளூஷனை மிக ரசித்தாள் ரம்யா. அப்படியே ஒரு அமட்டல் சிரிப்பும் சிரித்தாள். அதை அரவிந்தனும் கவனித்தான்.

“மிஸ் ரம்யா...”

“உம்...”

“உங்க சிரிப்புக்கு என்ன அர்த்தம்னு தெரிஞ்சிக்கலாமா?”

அவள் அவனை நெற்றி சுருங்க ஒரு பார்வை பார்த்தாள். பின், “மிடில் கிளாஸ் அவசரம்னு சொன்னீங்களே, அதை நினைச்சு சிரிச்சேன்” என்றாள்.

“அதுல தப்பு ஒண்ணும் இல்லையே?”

“ஒரு கோணத்துல தப்பெல்லாம் இல்லேதான். அதே சமயத்துல நீங்க சமாளிக்க முயற்சி செய்யிறதும் பளிச்சினு தெரிஞ்சிச்சு. இப்படிச் சமாளிக்கிறதெல்லாமும் மிடில் கிளாஸ் குணமான்னு எனக்குத் தொரியல.”

-அவள் பதில் அவனுக்கு நடுமுதுகில் இழுத்துச் சூடு வைத்த மாதிரி இருந்தது. கொஞ்சம் வெலவெலத்துக் கூடப் போனான்.

“அரவா... ஒரு விஷயம் தெரிஞ்சிகடா. ஒரு பெண்ணுக்கு ஒரு ஆம்பளை கிட்ட இருக்கிற நல்ல விஷயம் தெரியாமப் போகலாம். கெட்ட விஷயம் நிச்சயமா தெரிஞ்சிடும். இதுல அப்பர் கிளாஸ், லோயர் கிளாஸ், மிடில் கிளாசெல்லாம் கிடையாது. அவன் வந்து நிச்சயமா ஒரு அயோக்கியன். நான் ஒரு ஆண் துணை இல்லாதவங்கிறத நல்லாத் தெரிஞ்சுக்கிட்டு அப்படியே வாலை ஆட்டிப் பாக்கறான். நான் சொன்ன உடனே ரம்யாவால புரிஞ்சிக்க முடிஞ்சது. ஆனா நீதான் புரிஞ்சுக்கலை. நீ செய்ய வேண்டியதை அவங்க செய்துட்டாங்க.”

சரண்யா அடுத்த கட்ட அதிர்ச்சியளித்தாள்.

என்ன செய்தாள் ரம்யா?

அரவிந்தன் அவளைப் பார்க்க அவளிடம் திரும்ப அதே அமட்டல் சிரிப்பு.

“ரம்யா... என்ன செய்தீங்க?”

“ஒண்ணுமில்லே... இது மாதிரி விஷயத்துல நெருப்பு மாதிரி நாம இருப்பதை உணர்த்திடணும். இல்லைன்னா காலம் நமக்குச் சந்தர்ப்பம் கொடுக்கும்போது அதைப் பயன்படுத்திக்கத் தவறினவங்களா ஆயிடுவோம். ஸோ... நானே போய் அந்த ஆக்டரைப் பார்த்தேன். ‘உங்க நடிப்பை

டி.வி.ஸ்கிரிப்ட்டோட வெச்சுக்குங்க. வரம்புமீற முயற்சி செய்ய வேண்டாம். அது ஆபத்து'ன்னு எச்சரிச்சிட்டு வந்தேன்."

-அவள் சொல்லவும் அவனுக்குத் திரும்பவும் முதுகில் பொளேர் என்று ஒரு அறை விழுந்தது மாதிரி இருந்தது.

"என்ன ரம்யா நீங்க...? ஆமா...நீங்க எதுக்கு என் வீட்டுக்கு வந்தீங்க? முதலில் அதைச் சொல்லுங்க." அரவிந்தன் பேச்சில் கோபமான கோபம். அவளுக்கும் புரிந்தது. நிச்சயமாக அந்தக் கேள்வியைக் கொஞ்சம் தர்மசங்கடமாக உணர்ந்தாள்.

"என்ன அரவிந்தன்... நீங்க என் வீட்டுக்கு மூணு தடவை வந்திருக்கீங்க. பதிலுக்கு நான் தடவை வந்தாத் தப்பா?"

சரண்யா அதைக் கேட்டு அதிர்ந்தாள். இவர்களுக்குள் இருப்பது எந்த மாதிரியான உறவு என்கிற குழப்பம் பரவ அவனைக் கவனித்தாள். அவனும் சமாளித்தான்.

"நான் வந்ததுக்கு காரணம் இருக்கு. நீங்க வந்ததுக்கு எது காரணம்னு பளிச்சுனு சொல்லுங்க."

"ஜஸ்ட் கர்ட்டசி... என் அப்பா மேல நீங்க காட்டின அக்கறையை உண்மையில நான்தான் ஒருவித மிடில் கிளாஸ் அவசரத்தோட அணுகிட்டேன். அதுக்கு சாரி சொல்ல வந்தேன்."

"சரி... சொல்லிட்டீங்களா?"

"ஆமா... எதுக்கு இப்படி ஒரு அவசரமான கேள்வி?"

"இது கேள்வியில்ல... பதில். நீங்க ஒரு சாரியையும் சொல்ல வேண்டாம். எனக்கு எந்த சாரியும் தேவையில்லை. அப்புறம் குணா மாதிரி விஷயத்துல அந்த ஆள் ஒரு ஜொள்ளுப் பார்டியாகவே இருக்கட்டும். அதுக்காகக் கண்ணகி மாதிரி போய் நியாயம் கேட்டதெல்லாம் டூ மச்! இந்த மாதிரி விஷயத்துல ரொம்ப நீக்குப் போக்கா நடந்துக்கணும். அந்த ஆள் பதிலுக்கு ரொம்ப விகாரமா ரியாக்ட் பண்ணா அக்கா பேர்தான் கெடும். நெருப்பில்லாமப்

புகையுமா? ஊசி இடம் கொடுக்காம நூல் நுழைய முடியுமான்னு நம்ப தமிழ்மொழியில வம்பு பேசறவங்களுக்குப் பயப்படற மாதிரி நிறைய பழமொழிங்க இருக்கு. இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்? இந்த பங்களாவுல பொறந்து பங்களாவுல வளர்றவங்களுக்குப் பக்கத்து வீடுன்னே ஒண்ணு கிடையாது. அதனால அவங்களுக்கு இன்னொரு குடும்பம் தெரியவே தெரியாது. அப்பா பொண்ணாகவே இருந்தாலும் குட்மார்னிங் சொல்லிக்கிறது: குட் நைட் சொல்லிக்கிறது, என் ரூம், என் லெட்டர் என்று ஒவர் பிரைவஸி மெயின்டெயின் பண்றது. எந்தப் பிரச்னையையும் விலைக்கு வாங்க முயற்சி செய்யிறது, இதெல்லாம்தான் 'பங்களாஸ்' கல்ச்சர். ஆனா மிடில் கிளாஸ் அப்படிக் கிடையாது. சமுதாய நசுங்கல்கள் எங்களுக்கு அதிகம். புழுக்கங்களும் அதிகம். ஜில்லுனு காத்து வீசினா அது கூட எங்களைப் பொறுத்துவரை லக்ஜீரியான ஒரு விஷயம். உங்களுக்கெல்லாம் ஏர்கண்டிஷனே ரொம்ப நார்மலான விஷயம்."

அரவிந்தன் பீறிட்டான். ஒரு மைக் அவன் எதிரில் இல்லாதுதான் குறை. ரம்யா காதைப் பொத்திக் கொள்ளாத குறை.

"சரி சார்....முடிச்சிட்டீங்களா?" சற்று தீனமாகக் கேட்டாள். அவனும் பதிலுக்கு மலங்க மலங்கப் பார்த்தான்.

"என்னன்னு தெரியலை... நம்மால சகஜமாகவே பேசிக்க முடியல. இத்தனைக்கும் தனிப்பட்ட முறையில நம்பகிட்ட பெரிசா எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனா ஒரு விஷயம் சரியான இன்னொரு விஷயம் வந்து நமக்குள்ள குருத்து வேற்றுமையை உருவாக்குது. நான் எல்லாம் டைம் படுத்துற பாடுங்கிற டயலாக்கை வெறுக்கிறவ. ஒரு மனுஷனை டயம் எப்படிப் படுத்த முடியும்'ன்னு கேட்டுச் சிரிச்சநவ. ஆனா இனி அப்பச் சிரிக்க மாட்டேன். அந்தக் கேள்விக்கு விடை எனக்கு உங்க ரூபத்துல கிடைச்சிடுச்சி. சாரி ஃபார் இன்கன்வீனியன்ஸ். குட் பை..."

-ரம்யா பளிச்சென்று ஒரு பதிலைச் சொல்லிவிட்டு, "வரேங்க..." என்று சரண்யாவிடமும் சொல்லிக்கொண்டு

புறப்பட்டாள்.

அவனுக்குத் தடுத்து நிறுத்தத் தோன்றவில்லை. அவள் வீட்டில் அரவிந்தன் பேசிவிட்டுப் புறப்பட்ட போது ஏற்பட்ட அதே திணறலான மனோநிலை.

“அரவா... என்னடா இது? எதுக்கு இப்ப இந்தப் பொண்ணுகிட்ட இப்படி அப்பர் கிளாஸ், மிடில் கிளாஸ் உபன்யாஸம்? அவ எனக்கு உதவி செய்தவடா, மத்த பொண்ணுங்களா இருந்த இவ்வளவு ஆக்டிவா நடந்துக்கட்டிருக்க மாட்டாங்க. வெளியே போயி புரளிதான் பேசியிருப்பாங்க... ஆமா... உங்களுக்குள்ளே என்ன பிரச்சினை? நீ எதுக்கு இந்தப் பொண்ணு வீட்டுக்கு மூணு தடைவ போனே?”

சரண்யா எங்கோ ஆரம்பித்து எங்கோ வந்துவிட்டாள். அவள் கேட்ட கேள்வி அவனை மேலும் எரிச்சல்படுத்தியது. முறைத்துப் பார்த்தான்.

“போக்கா... போய் காபி கொண்டு வா. நானே ஆடி அலைஞ்சு வந்திருக்கேன். இதுல விசாரணை வேற. போ...”- எரிந்து விழுந்தான்.

அதே சமயம் கீழே பார்க் செய்துவிட்டு குணா அந்த அபார்ட்மென்ட்டைச் சேர்ந்த ருக்மணி பாட்டியிடம் விஷமமாப் பேசிக் கொண்டிருந்தான். அந்தப் பாட்டியும் அவன் சீரியல் ஒன்றைப் பற்றித்தான் கருத்துச் சொல்லியிருந்தாள்.

“அது என்னமோ பாட்டி! டி.வி.சீரியலில் மட்டும் இல்லை. நிஜத்துலேயும் நிறைய பெண்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கு. என் முகராசி அப்படி. இங்கயே கூடப் பாருங்களேன். நம்ப அரவிந்தன் சிஸ்டர் சரண்யா இருக்காங்களே... அவங்களுக்கு நான்னா உசுரு. எதிர் ப்ளாட்தான் இருந்தாலும் ஃபோன் பண்ணி விடிய விடியப் பேசுவாங்க.”

திட்டமிட்டு அவன் பற்ற வைத்தது நன்றாகப் பற்றிக் கொள்ளவும் செய்தது. ருக்குமணிப் பாட்டி முகத்தில் அதன்

எதிரொலிகளை அவனால் உணர முடிந்தது.

ஹாலில் உட்கார்ந்து சுந்தரகாண்டம் படித்துக் கொண்டிருந்தார் ராம்நாத்.

வேட்டி, ஜிப்பாவில் நெற்றியில் விபூதிப் பட்டையோடு பார்க்க திவ்வியமாய இருந்தார். உள்ளே நுழைந்த ரம்யாவுக்கே அந்தக் கோலம் ஆச்சரியத்தையும் சந்தோஸத்தையும் அளித்தது. மகள் வரவும் அவர் நிமிர்ந்து பார்த்தார்.

“எங்கம்மா போயிட்டு வர்றே?”

“ஜஸ்ட் ஷாப்பிங்...” சட்டென்று பொய் வந்து விட்டது. தைரியமாய் அரவிந்தன் வீட்டுக்குப் போய் வந்தேன் என்று சொல்ல முடியாதபடி ஏதோ தடை செய்வதை உணர்ந்தவள். ஒவ்வொரு விஷயத்திலும் உண்மையில் உண்மையாக இருந்தாலன்றி வாழ்க்கையில் மலிவாகப் பொய் பேசுவதைத் தவிர்க்கவே முடியாது என்றும் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

“என்னம்மா... ஷாப்பிங்னு சொன்னே? கையில ஒரு திங்ஸீம் இல்லையே?”

“அது...அது... சாரிப்பா... ஐ ஆம் நாட் இன் த மூட். எதையும் வாங்கத் தோணலை. எல்லாமே யானை விலை... குதிரை விலை...”

திரும்பவும் ஒரு பொய். பொய் மட்டும் எப்படிச் சரளமாக வருகிறது என்று ஆச்சரியமாகவும் இருந்தது. அவர் அதற்கு மேல் குடையவில்லை.

“அம்மாடி....நீ அதிருஷ்டக்காரி! அந்த அமெரிக்கா பையன் இன்னும் ஸ்டேட்ஸ் கிளம்பல்லே. நம்ப ஞானப்பிரகாசம் இப்பத்தான் சொன்னான். உடனே அந்தப் பையனை வீட்டுக்கு வாடான்னு சொல்லிட்டேன். போடா...போய்க் கொஞ்சம் உன்னை ப்ரஷ் பண்ணிக்கோ. பையன் வரான். இரண்டு பேரும் நல்ல மனசு விட்டுப் பேசுங்க. எல்லாம் நல்லபடியா முடிஞ்சா அதுவே எனக்குப் போதும்.”

-ராம்நாத் சொல்லச் சொல்ல ரம்யாவிடம் திணறல். அவள் முற்றிலும் எதிர்பாராத விஷயம் ஒன்று நடக்கப் போகிறது. திடீரென்று ராம்நாத் எப்படி இப்படி மாறினார். எல்லாம் ஞானப்பரகாசம் அங்கிள் வேலையோ? குழம்பத் தொடங்கினாள்.

வாசலில் கார் வந்து தேங்கும் சப்தம். ஞானப்பிகாசமும் அந்த மாப்பிள்ளைப் பையனும்தான் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

# 14

‘உலகில் எந்த இனமாக இருந்தாலும் அதில் ஆண் - பெண் பிரிவு தவிர்க்க முடியாதது. உயிர்கள் ஒன்று ஆயினும் அதன் பிரிவு இரண்டு. ஒன்று இரண்டாக இருந்தாலே மூன்றாகி நான்காகி பெருக இயலும்.

இதில் ஆண் விதை தருபவன். பெண் அதற்கு சதையோடு உயிரும் தருபவள். பெண்ணுக்குள் ஆண் ஒடுங்கினாலே உயிர்த் தெழுதல் உலகமெல்லாம் நிகழும்.

இத்தகைய பெண்ணைக் காக்கவே ஆண் வடிவமைக்கப்பட்டான் என்றால் மிகையில்லை.

இயற்கைத் தர்மம் பெண்ணைக் காக்கத் தவறும் ஆண்களை மன்னிப்பதில்லை.’

-சாக்த பிரமாணத்திலிருந்து...

சிலரது வாழ்க்கை தடதடவென்று திரும்பிவிடும். அதற்கு நொடிப் பொழுதுகள் போதுமானவை. எங்கெங்கோ இழுத்துக் கொண்டு போய்விடும். ரம்யாவுக்கு அப்படித்தான் தோன்றியது. ராம்நாத் அவள் திருமணத்திற்கு உயிர் தர, காலம் அதற்கு துணை செய்கிற மாதிரி ஞானப்பிரகாசத்துடன்அந்த மாப்பிள்ளைப் பையனையும் அழைத்துக்கொண்டு வந்து விட்டது.

ராம்நாத்திடம் உற்சாகம் தொற்றிக் கொண்டது. ரம்யா உடை மாற்றிக் கொண்டு வருவதாகக் கூறிவிட்டு வேகமாய் உட்பக்கம் மறைந்தாள்.

ஞானப்பிரகாசமும் அந்த இளைஞனும் கைவீசிக் கொண்டு உள்ளே வர ராம்நாத்தும் எழுந்து சற்று முன் சென்று, “வாங்க வாங்க...” என்று வரவேற்றார்.

அந்த இளைஞனிடம் நல்ல செழுமை. அவனை மட்டுமே வைத்து அமெரிக்காவில் யாருமே தண்ணீர் குடிப்பதில்லை: அதற்குப் பதிலாகப் பால்தான் குடிக்கிறார்கள் என்று உறுதி செய்யலாம். அவ்வளவு வெண்மை...புஷ்டி!

“ஹாய்ய்...” என்று அவன் கைநீட்டியபடி தன் அன்பைக் காட்டிய விதத்திலும் நல்ல அமெரிக்கத்தனம். சென்னை வெயில் மட்டும் அவனை நிறையவே சேதப்படுத்திக் கொண்டிருந்தது. மெல்லிய பாலிஸ்டெர் முழுக்கைச் சட்டை வியர்வையால் உடம்போடு ஒட்டிக் கொஞ்சம் பெருமூச்சோடு அமர்ந்தான். சென்ட்ரலைஸ்ட் ஏ.சி. இல்லாதது அவனைக் கொஞ்சம் மூட் அவுட் ஆக்க ஆரம்பித்திருந்தது.

“யோகேஷ், திஸ் ஈஸ் மிஸ்டர் ராம்நாத். மை டியர் பிரண்ட் அண்ட் டியரஸ்ட் ப்ரெண்ட் எப்படின்னா ஒண்ணாம் கிளாஸில கடலூர் பாதிரிக்குப்பம் பள்ளிக்கூடத்துல... ஐ மீன்... எலிமென்டரி ஸ்கூல்ல குடுமி வெச்சிருக்கிற கஸ்தூரி ரங்கன் வாத்தியார் கிட்ட இரண்டு பேரும் ஒண்ணாவே மிதி வாங்குவோம். திருக்கை மீனுன்னு ஒரு மீனு இருக்கு. அதோட வால் ரொம்ப ஷார்ப்பா இருக்கும். அதுல இன்ஜெக்ட் பண்ணினா அவ்வளவுதான். அவ்வளவு பாய்சன். அந்த மீன் வாலுக்கு! ஆவூன்னா இவன் அந்த வால் பாய்ன்டோட ஸ்கூலுக்கு வந்துடுவான். கடலூர் பீச்சுலதான் அது நிறையக் கிடைக்குமே! இவனைக் கண்டாலே எல்லாரும் பயப்படுவாங்க. ஒரு தடைவ இவன் அப்துல்லாங்கிற பையனோட இடுப்புல அதைக் குத்தி அவன் இடுப்பு புசுபுசுன்னு வீங்கி ஒரே கலாட்டா...”

ஞானப்பிரகாசம் கொஞ்சம் பழைய நினைவுகளில் மூழ்கிப் போனார். யோகேஷ் என்று அவர் அழைத்த அந்த இளைஞனுக்கு அவர் மாவு அரைக்கிற மாதிரி இருந்தது.

“டேய் விட்றா...இப்ப எதுக்கு அந்தப் பழைய குப்பையெல்லாம் கிளர்றே... அப்புறம் மாப்ள சார்...என்ன சாப்பிடறீங்க...?”

“இங்க ஹால்ல ஏஸி இல்லையா?”

“ஏஸி... ஏஸி...? சாரி ஹால்ல ஏஸி இல்ல... ஆனா பெட்ரூம்ல இருக்கு. உங்களுக்குப் புழுக்கமா இருந்தா பெட் ரூமுக்குப் போயிடலாமா?”

“ப்ளீஸ்... ஐ காண்ட் ஸ்டே ஹியர். ஐ ஆம் ஹைலி

இரிடேடிங் இட், ஏன் இந்தியா இப்படி இருக்கு?"

அவன் பெருமூச்சோடும் முணுமுணுப்போடும் எழுந்திருப்பதை ரம்யாவும் உள்ளிருந்தபடியே கேட்டுக் கொண்டிருந்தாள். வேகமாக ஆடை மாற்றுவதில் குறியாக இருந்த அவளுக்குள் மனப்புழுக்கம். இவன் பேச்சும் அலட்டலும் அதைக் கொஞ்சம் கூட்டின. ஒரு நமுட்டுச் சிர்ப்புச் சிரித்தாள். அவர்கள் ஹாலை விட்டு ராம்நாத்தின் பெட்ரூம் நோக்கிச் சொன்றபடி இருந்தனர்.

"யோகேஷ், ஸ்டேட்ஸ்ல பிவர்கிரிக்-ங்கிற இடத்துல இருக்கான். கால்ப் விளையாட்டுக்குப் பேர்போன ஊர் அது. சுத்தி பனி மலை வேற. சூரியனையே பார்க்க முடியாத ஒரு ஊர் அது. தென் இண்டியா க்ளைமேட் இவனைப் படுத்துது" என்று வக்காலத்து வாங்கிக் கொண்டே நடந்தார் ஞானப்பிரகாசம்.

ராம்நாத்தின் பெட்ரூம் நல்ல நீள அகலத்தில்தான் இருந்தது. இருந்தும், "இட்ஸ் வெரி ஸ்மால் ரூம்" னெறு தோளைக் குலுக்கி மேனரிஸம் காட்டினான் யோகா என்கிற யோகேஷ். ஞானப்பிரகாசத்துக்கே அவன் வார்த்தைக்கு வார்த்தை சகிப்புத் தன்மையற்றவனாக அடையாளம் காட்டிக் கொள்வது போல் தோன்றியது.

அந்த அறைக்குள் அங்கும் இங்குமாக இரண்டு நாற்காலிகள் கிடந்தன. இழுத்துக் கொண்டு வந்து போட்டார் ராம்நாத். அதற்கு முன் ஓடிப்போய் ஏஸியை ஆன் செய்துவிட்டு, ஃபேனையும் போட்டுவிட்டு வந்து உட்கார்ந்தார். அவனுக்குச் சற்று அப்பாடா என்று இருந்தது.

"யோகேஷ்... ஒரு நாளைக்கே இப்படித் தவிச்சுப் போறியே நாங்களெல்லாம் டெய்லி எவ்வளவு கஷ்டப்படுவோம்னு யோசிச்சுப் பார்," – ஞானப்பிரகாசம் பேச்சை ஜாலிக்குக் கொண்டு போனபடி ஆரம்பித்தார்.

"ஓய் யு லிவ் ஹியர்? உங்க ப்ராப்பர்டீஸையெல்லாம் சேல் பண்ணிட்டு ஸ்டேட்ஸீக்கு வந்துடுங்க," அவனிடம் துளியும் தயங்காத பதில்.

“பாத்தியாடா... யோகேஷ் கிட்ட எந்த விஷயத்திலையும் தயக்கம். தடுமாற்றமே கிடையாது. பளிச்பளிச்சுன்னுதான் பதில் சொல்வான் ஒண்டர் புல் கை” என்று யோகேஷ் பக்கம் திரும்பியவராகச் சொன்னார் ஞானப்பிரகாசம்.

“லுக் யோகேஷ்...இண்டியா கொஞ்சம் ஹாட்டான கண்ட்ரிதான். ஆனா உன் அமெரிக்காவில இல்லாத விஷயமெல்லாம் இங்க மட்டும்தான் உண்டு. அங்க நிறைய வாட்டர் இருக்கு. நிறைய ஸ்பேசும் இருக்கு. உங்களுக்கு ஒரு மிஸிஸிபி ரிவர் போதும். ஆனா என்ன பிரயோஜனம்? கிளைமேட் எப்பவும் அங்க இம்பாலன்ஸாதான் இருக்கு. இங்க அப்படி இல்லை. மார்கழி மாசம்னா குளிர். சித்தரைன்னா வெயில். ஆடின்னா காத்து. ஐப்பசின்னா அடைமழை. இங்க நேச்சரே எல்லாத்தையும் செக்ரிகேட் பண்ணிவச்சிருக்கு. அப்கோர்ஸ்... இப்ப சென்னை கொஞ்சம் ஹாட்டாதான் இருக்கு. அதுக்கும் ரீசன் இருக்கு. டூ வீலரும், போர்வீலரும் பெருகிப் போச்சு. ஒரே பெட்ரோல் புகை. விண்டுலையும் ஃப்ளைட் சர்வீஸ் கன்னாபின்னான்னு, ரொம்ப சீப்பா டவுன்பஸ் சர்விஸ் மாதிரி ஃப்ளைட் சர்விஸ் வரப்போகுது. இப்பவே ஜஸ்ட் ஆயிரத்து ஐநூறு ரூபா இருந்தா மதுரை போயிடலாம். உன் டாலர் வேல்யுபடிப் பார்த்தால் முப்பது முப்பத்தைஞ்சு டாலர்தான். இங்க ஆட்டோவுக்குக் கொடுக்கிற மாதிரி கொடுத்தாலே போதும். டேக்கான் ப்ளைட் உன்னை சென்னையிலிருந்து மதுரைக்குத் தூக்கிட்டுப் போய் போடுது. இனி ப்ளைட்டுக்குள்ள கடலை, வெள்ளரிப்பிஞ்சுசெல்லாமும் விக்கப்போறாங்க” –ஞானப்பிரகாசம் கொஞ்சம் விஸ்தாரமாகப் பல விஷயங்கள் பேசிச் சிரித்தார். அப்படியே, “எங்கடா ரம்யா இன்னும் வரலை” என்று அவர் சொல்லும் போதே அவளும். “ஹாய்” என்றபடி உள்ளே நுழைந்தாள். ஒரு எளிய ஆர்கண்டி நூல் புடவைக்குள் சின்ன முற்றுப்புள்ளி அளவு நெற்றிப்பொட்டோடு ஒரு மோனாலிசா சிரிப்பு உதட்டில் ஒட்டியிருக்க ராம்நாத் அருகில் வந்து அமர்ந்தாள்.

“வா... வா... வந்துட்டியா? நீ ரெம்ப லக்கி ரம்யா. அதான் இந்த நிமிஷம் ஸ்டேட்ஸ்ல இருக்க வேண்டிய யோகேஷ் இன்னும் போகாம இருக்கான். ஒருவேளை உன் கழுத்துல

தாலி கட்டி ஹஸ்பென்ட் அண்ட் வைஃப்பாதான் போகணும்னு இருக்கோ என்னவோ? ஹீ நோஸ் த ஃபேட்?”

-ஞானப்பிரகாசம் ரம்யாவை வரவேற்றுச் சிரித்தார். அவள் தலை வெட்கத்தில் சற்றுத்தாழ்ந்திருந்தது. யோகேஷோ அவளை அளப்பது போல் பார்க்கத் தொடங்கியிருந்தான். இடையில் ஆரஞ்சு எசன்ஸை எடுத்து கூல் வாட்டரில் கலந்து ஜீஸ் தயாரித்தவராக முன் வந்தார் ராம்நாத். நல்ல வேகம் அவரிடம். யோகேஷையும் ரம்யாவையும் அருகருகே பார்த்து ஜோடிப் பொருத்தம் பிரமாதமாக இருப்பதாகவெல்லாம் ஒரு கணக்கை வெகு வேகமாகப் போட்டு முடித்துவிட்டார்.

யோகேஷ் பேருக்குக் கொஞ்சம் போல ஜீஸ் குடித்தான். அப்படியே, “யுவர் குட் நேம் ப்ளீஸ்” என்றான் ரம்யாவைப் பார்த்து.

“ரம்யா.”

“ஐ ஆம் யோகேஷ் எம்.ஈ.எம்.எஸ். மேட்டலர்ஜி சயன்ஸ். ஆர் யூ...”

-அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். ஞானப்பிகாசம் ஒளி பெருகிய கண்களோடு அதைப் பார்த்தவராய் ராம்நாத்துக்கு சமிக்ஞை கொடுத்தார். இருவரும் நைஸாக நழுவி வெளியேறினார்கள். வெளியில்...

“எப்படிடா இருக்கான் யோகா?”

“நல்ல ஜோடிப் பொருத்தம். ஆனா இந்த டெம்ப்ரேச்சரைத் தாங்க முடியாம அலட்டிக்கிறாரே?”

“அவ்வளவு ரிச்சா வளர்ந்த பிள்ளை. பதிலுக்கு அதே ரிச்நேஸோடு ரம்யாவையும் வச்சுப்பாரு. அதை நீயே யோசிச்சுப் பார்.”

“வாஸ்தவம்தான். எப்படியோ... நல்லா இருந்தா சரி...” – ராம்நாத் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டார்.

லேசாகக் கண்கள் கலங்கிப் போயின.

“டேய் ராம்நாத்... என்னடா... ரம்யா கல்யாணமாகிப் போயிட்டா என்ன பண்றதுன்னு யோசிக்கிறியா? நீயும் அமெரிக்கா போயிடுடா. உன் மகளோடயே இரு. யோகேஷுக்கு அப்பா கிடையாது. அம்மா மட்டும்தான். உன் விஷயம் நான் சொல்லியிருக்கேன். மாமனார், மாமியாரைத் தன்னோட வச்சுக்கிற விஷயம் இந்தியாவில்தான் பாரமான விஷயம். ஆனா எகனாமிகலா சவுண்டா இருக்கிறவங்களுக்கு இதெல்லாம் ஒரு விஷயம் இல்ல. உன் கவலை ஒரு மிடில் கிளாஸ் கவலை.”

ஞானப்பிரகாசம் தேறுதல் சொல்லச் சொல்ல ராம்நாத்துக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் ஒரு புறம் தயக்கமாகவும் இருந்தது.

“இல்லடா... எனக்கு என் இன்டஸ்ட்ரி இருக்கு. என்னை நம்பி எவ்வளவு ஒர்க்கர்ஸ்? அதெல்லாம் பிறகு பார்த்துக்கலாம்.” சமாளித்தார். அதே சமயம் உள்ளே...

“நீ ஆலன் டிரெவர் எழுதின ‘அன்டர் த ஸ்கை’ படிச்சிருக்கியா?”

“கேள்விப்பட்டதேயில்லை.”

“உனக்குக் கவிதை நல்ல வரும்னு ஞானா அங்கிள் சொன்னார். ஐ ஆல்சோ லைக் கவிதை. பை த பை உன்கிட்ட ஒரு ருபர்சனல் கேள்வி கேட்கலாமா?”

யோகேஷ் தன் பேச்சின் முக்கியக் கட்டத்துக்கு வந்திருந்தான். அவளும் ஆமோதிப்போடு பார்த்தாள்.

“உன் அம்மா இந்த ஊர்லதான் இருக்காங்கன்னு ஞானா அங்கிள் சொன்னார். டைவர்ஸ் ஆகிவிட்ட விஷயமெல்லாம் எனக்குத் தெரியும். ஆமா...உன் அம்மா ஏன் உன் அப்பாவைவிட்டுப் பிரிஞ்சு போனாங்க. உங்க அப்பா கொடுமைக்காரரா?”

-ரம்யா அந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. சரேலென்று நிமிர்ந்தாள்.

அவனே தொடர்ந்தான்.

“பிகாஸ் என் ஃபாதர் ஒரு ராட்சஸன். என் அம்மாவை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டான். அங்கயும் டைவர்ஸ்தான். இந்த ஆம்பளைங்களே ரொம்ப மோசம்னு என் அம்மா நினைக்கிறாங்க. இன்க்ளூடிங் மைசெல்ப். என்னையும் அவங்க தப்பாத்தான் நினைக்கிறாங்கன்னா பார்த்துக்கோயேன்” –யோகேஷ் மனம்விட்டுத்தான் பேசினான். ஆனால்...

# 15

'பெண்களுக்குப் பதியேதான் குரு. புழைய காலத்தில் காமம் உள்ளே புகுமுன் காயத்ரீ புகுந்துவிட வேண்டும் என்று கருதி எட்டு வயசுக்குள் புருஷப் பிள்ளைகளுக்கு உபநயனம் செய்து குருவிடம் சேர்த்தார்கள். அதே வயசில பெண்களுக்குக் கல்யாணம் செய்து புருஷனிடம் சேர்த்தார்கள். அவனையே அவளுக்குக் குருவாகவும் தெய்வமாகவும் வைத்தார்கள். பிற்பாடுதான் காமமும் ஏற்பட்டு அவனைப் பதியாகப் பார்ப்பதே! எனவே குருபக்தியும் பதி பக்தியும் பெண்களுக்கு ஒன்றேதான்!'

அது என்னவோ தெரியவில்லை. யோகேஷ் பேச்சு திரும்பத் திரும்ப ஆண்கள் கெட்டவர்கள், பெண்கள் நல்லவர்கள் என்பது போன்ற பாவனையிலேயே இருந்தது. ரம்யாவை அது சற்று சகதியாக்கி விட்டது.

"மிஸ்டர் யோகேஷ்" என்றாள் வெகு கூர்மையாக.

அவள் நெஞ்சை முன்தள்ளிக் கொண்டு நிமிர்ந்த விதம், அவனைப் பார்த்த விதத்தில் கணிசமான அளவு கோபமும் கூட.

"யெஸ்..."

"ஆண்களைப் பற்றின உங்கம்மாவோட கருத்துக்கள் மிகவும் ஒருதலை பட்சமானது மிஸ்டர் யோகேஷ். இன்ஃபாக்ட் நிறைய ஆம்பளைங்க தப்பாவும் இருக்காங்க. குடி, கூத்துன்னு ஆட்டமும் போடறாங்க. இருந்தாலும் சொல்றேன்... ரொம்ப ரொம்ப ரொம்ப மோசமான ஒரு ஆண்மகனைவிடவும் சுமாரான மோசமுள்ள ஒரு பெண்ணால ஏற்படற பாதிப்புதான் அதிகம்னு...டூ யூ நோ தட்?"

ரம்யாவின் அழுத்தமான பாய்ச்சல் யோகேஷை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. அவன் அவளிடம் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அவளையே கூர்ந்து பார்த்தான். அது தொடர்ந்து பேசு என்பது போலவே இருந்தது.

“டூ யூ நோ தட்...நான் சொல்றது உங்களுக்குப் புரியலையா? இந்த சொஸைடியில எப்ப ஆண் பெண்ணுன்னு இரண்டு இனம் ஒண்ணா சேர்ந்து வாழ ஆரம்பிச்சிச்சோ அப்ப இருந்தே இது தான் உண்மையும் கூட யோகேஷ்.”

“ரம்யா... எதுக்கு இப்படி எமோஷனலாயிட்டே? நான் நாம ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிக்கிறதுக்காகப் பேசிக்கிட்டுருக்கேன். வாழ்க்கையில ஒண்ணா சேரப்போற நம்மை நாமே தெளிவுபடுத்திக்க வேண்டாமா?”

“அப்கோர்ஸ்... அதனாலதான் நானும் ஸ்ட்ராங்கா என் கருத்தைச் சொல்ல விரும்பறேன்.”

தென்... வாட் யு ஸே...? ஏங்க அம்மாவோட கருத்து தப்பானதா?”

“ஸாரி... அந்தக் கருத்து உங்கப்பாவுக்கு மட்டும்தான் பொருந்தலாம். என் அப்பாவுக்குப் பொருந்தாது.”

“அப்படின்னா?”

“என் அப்பா ஒரு சொக்கத் தங்கம். சரியான வாயில்லாப் பூச்சி. என்னைப் பிரிஞ்சு வாழ முடியாத நிலையில் இருக்கிற ஒரு பத்தாம்பசலி. ரொம்ப இளகின மனசு உள்ளவர். அன்பார்சுனேட்லி என் மதர் இதற்கெல்லாம் டெட் எகைன்ஸ்ட். நேர் எதிர்!”

“அப்ப விவாகரத்துக்குக் காரணம் உங்கம்மாதானா?”

“ஆமாம்... என் அம்மாவுக்குத் தினம் மூணு புடவை கட்டணும். எல்லாவிதமான நகைகளையும் போட்டுக்கணும். மேக்கப் கலையவே கூடாது. தன்னை எல்லாரும் எப்பவும் ஒரு தேவதையாகவே பாக்கணும்கிறது அவங்க எதிர்பார்ப்பு.”

“இதுல ஒரு பெரிய தப்பு இருக்கிறதா எனக்குத் தெரியலை...”

“நான் உங்களுக்கு மனைவியான நிலையில எங்க அம்மா மாதிரி மாறி உங்களைப் படுத்தும்போதுதான் அதை

உங்களால உணர முடியும்.”

“இடியட் மாதிரிப் பேசாதே... எக்ஸ்ப்ளெய்ன் மீ...ஐ ஆம் நாட் எ கிட். என்னால நீ சொல்றதைப் புரிஞ்சிக்க முடியும்.”

“அப்படியா?”

“அப்படித்தான்.”

“ஓ.கே, இப்ப உங்க சம்பளம் எவ்வளவு?’

“எதுக்கு என் சாலரி பத்திக் கேக்கற?”

“முதல் கேள்வியிலேயே எரிச்சலா? நான் இப்ப ரம்யா இல்லை. என் அம்மா சுசீலா.”

“ஒ.கே...ஒ.கே... ஐ வல் டெல்...நியர் தேன் பிப்டீன் தௌசன் டாலர்ஸ்.”

“பில்கேட்ஸ் ஒரு நாளைக்கு நியர்தேன் ரெண்டு லட்சம் டாலரைச் சாதாரணமாச் சம்பாதிப்பாராமே?”

“அவர் பில்கேட்ஸ்...நான் யோகேஷ் அவர் பாஸ்... நான் எக்ஸிகியூடிவ். வித்தியாசம் இருக்கே?”

“நோ... நீங்களும் பாஸ் ஆகணும். ரெண்டு லட்சம் டாலர் சம்பாதிக்கணும்.”

“பார்ப்போம்”

“இப்படிப் பார்ப்போம்... செய்வோம்ங்கிற கேரக்டரையே எனக்குப் பிடிக்காது. முடிக்கிறேன்னு சொல்லுங்க.”

முதல் முறையாக யோகேஷ் திணறினான். ரம்யா எங்கு வருகிறாள் என்று அவனுக்கு விளங்கியது.

“ரம்யா... உன் மதருக்குப் பணம்னா வெறியா?”

“பணவெறி மட்டுமில்ல... எதுலயும் தனக்கு மிஞ்சி யாரும் இருக்கக் கூடாது...”

“ஸ்லைட்லி. சைக்கோவாக்கூட இருக்க வாய்ப்பு இருக்கிற மாதிரித் தெரியுதே?”

“மே பி... இப்படிப்பட்ட அம்மாவை ஒரு சாதாண சூப்பர்வைசர் உத்யோகம் பாக்கற அப்பாவால எப்படிச் சமாளிக்க முடியும்?”

“உன் அப்பா கூட ஒரு பேக்டரி ஓனர் தானே?”

“அது இப்போ. ஆனா நான் பிறக்கறதுக்கு முன்னாடி என் அப்பா இண்டஸ்ட்ரி சூப்பர்வைஸர். அன்னிக்கு அவர் சம்பளம் மாசம் ரெண்டாயிரமோ, மூவாயிரமோதான்.”

“ஐ ஸீ...”

“நான் பிறந்த நிலையில எனக்குத் தாய்ப்பால் கூடத் தரலை என் மதர்... தெரியுமா உங்களுக்கு?”

அந்தச் செய்திக்கு முன், அதிகமாகவே அதிர்ந்தான் யோகேஷ்.

“அவ்வளவு ஏன்? நார்மலா ஒரு விவாகரத்துல குழந்தைங்க தாய்கிட்ட இருக்கத்தான் விரும்புவாங்க. கோர்ட்டும் தாய் கிட்ட ஒப்படைக்கத்தான் முயற்சிக்கும். சில கேஸ் மாறுபடலாம். ஆனா என் வரையில கோர்ட்டிலேயே என் அம்மா நான் என் அப்பாகிட்டதான் இருக்கணும். எனக்கு ரம்யா வேண்டாம். அவ உடம்புல அந்த ஆள் ரத்தம் தான் ஓடுது. தலைமுடியில இருந்து முகம் முழி வரை எதுலையும் அவ என்னைக் கொள்ளலை’ன்னு ஓபனாகவே சொல்லிட்டாங்க. அப்ப எனக்கு வயசு மூணோ நாலோ... எனக்குக் கோர்ட்டோட அந்தக் கூண்டும் அதுல அப்பா நின்னு அழுததும் அப்படியே ஞாபகம் இருக்கு மிஸ்டர் யோகேஷ்...”

-ரம்யா பீறிட்ட கண்ணீர் விழிகளோடு லேசாக விம்மவும் செய்தாள். அதன் பிறகு நெடுநேரம் வரை மௌனம். பின் மெல்ல யோகேஷ்தான் ஆரம்பித்தான்.

“கிட்டத்தட்ட என் அப்பாவும் இந்த மாதிரித்தான். ஆனா தாய்ப்பால் கூடத்தராத உன் அம்மா டூ மச்.”

“இப்ப புரியுதா? ரொம்ப ரொம்ப மோசமான ஆண்களைவிட அதுல பாதி தப்புக் கூடப் பண்ணாத பெண்ணால ஏற்படும் பாதிப்பு அதிகம்னு?”

“ஒரு ஆச்சரியம் என்னன்னா நீயும் ஒரு பெண். நீயே அதைச் சொல்றே பார்...அதான்.”

“யார் சொன்னா என்ன? சொல்லாட்டா என்ன? உண்மை உண்மை தானே?”

“ஒரு சந்தேகம்.”

“கேளுங்க.”

“உன் கருத்துப்படி பார்த்தா பெண் என்கிறவளுக்குத் தான் அதிகமான பொறுப்பு. ஆண் செகண்டரிதான்னு ஒரு மீனிங் வருதே?’

“இல்லையா பின்னே?”

“அப்ப நீங்கதான் சுப்பீரியரா?”

“இல்லைங்கிறீங்களா?”

“ஏன் சம அளவு பலம் உள்ளவங்கன்னு சொல்லக் கூடாது?”

“அப்படியா?”

“என்ன அப்படியா? அதே கை, அதே கால், அதே முகம். அப்கோர்ஸ் உங்களுக்குத் தலைமுடி கூட. எங்களுக்குக் கிராப். கொஞ்சம் மென்மையான தோல் உங்களுக்கு. உங்களுக்கு கொஞ்சம் ர.:.ப். எங்களுக்கு ஸ்ட்ராங் .:.பிசிக் உங்களுக்கு அவ்வளவு ஸ்ட்ராங் பிசிக் கிடையாது. இருந்தாலும் எக்ஸைஸெல்லாம் பண்ணினா யூ ஆல்சோ பிகம் ஸ்ட்ராங். பழக்க வழக்கங்களில வித்தியாசம் இருக்கு. பழக்கங்களை மாத்திக்கிட்டா அதுவும் மாறிடப் போகுது. இப்படி இருக்க எதுல நீங்க கூட இருக்கீங்க?”

“அப்ப ஏன் கர்ப்பப்பையை உங்க வயித்தில அந்தக் கடவுள் வைக்கலை?”

“அது...அது...”

“எது?”

“என்ன ரம்யா... எங்களுக்கு மீசை முளைக்குது. உங்களுக்கு முளைக்கல. இது ஜெனடிக் நேச்சர். உடம்பை விடு. மனசுக்கு வா.”

“வந்துட்டேன். வெட்கம் இல்லாத பெண்ணை ஆண்களால விரும்ப முடியுமா?”

“இது கொஞ்சம் கஷ்டமான கேள்விதான்?”

ஆண் பெண் இனச்சேர்க்கைக்கும் உருவாக்கத்துக்கும் ஆதாரமே பெண்கிட்ட இருக்கற வெட்கம். அப்புறம் பயம். அப்புறம் மடம்ங்கிற ஒரு குணமும் இருக்கு. இதெல்லாம்தானே?”

“ஸோ?”

“இதெல்லாம் மனசு சார்ந்தது தானே?”

யோகேஷ் முதன் முறையாக ரம்யாவிடம் தான் தோற்றுவிட்டதைப் போலப் பார்த்தாள்.

“என்ன யோகேஷ்... ஒரு பனியன் கூட இல்லாம இங்க இருந்து நீங்க வெளியில போக முடியும். நான் போக முடியுமா? போனா நல்லா இருக்குமா?”

“அப்ப இயற்கையாகவே பெண் இனம் ஒரு ஸ்பெஷல் லிஸ்ட்டுல வருதா?”

“எதுக்கு ஸ்பெஷல்ங்கிற வார்த்தையெல்லாம். மனித உயிர்களில் பெண் என்பவள் செய்யும் தவறுக்கு சக்தி அதிகம். அதைப் புரிஞ்சிக்கிட்டா போதும். அவள் செய்யும் நல்லதுக்கும் சக்தி அதிகம்.”

“இந்தக் கருத்தை பெமினிஸ்டுங்க ஒத்துப்பாங்களா?”

“இந்த தேசத்துல ஃபெமினிசம்ங்கிறது ஒரு குழப்பமான சிந்தனையா இருக்கு. ஆண் இனத்தோட போய் அவங்க

தேவையில்லாம போட்டி போடாறாங்க. ஆண் பைக் ஓட்டினா எங்களாலயும் ஓட்ட முடியும்... ஆண் மரம் ஏறி தேங்காய் பறிச்சா, எங்களாலயும் முடியும்னு சொல்றதெல்லாம்தான் இப்படி பெமினிச சிந்தனையா இருக்கு. ஆண் இனம் வேற...பெண் இனம் வேற. தென்னை மரத்துல மாங்காய் காய்க்க முடியுமா? ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒரு சிறப்பும் பொறுப்பும் இருக்கு. இதை எப்படிப் புரிஞ்சுக்கணும்னும் இருக்கு.”

“நீ முடிவா என்னதான் சொல்லவாரே... பெண்களுக்கு விடுதலை வேணும்ங்கிறதுதான் இப்ப பெமினிஸ்டுகளோட மேஜர் அஜெண்டா. இந்த பிசிகல் கம்பாரிசனை விடு.”

“என் வரையில ஆண் இனம்தான் பெண்கள் கிட்ட அடிமையாக இருக்கு யோகேஷ். இதை வீட்டுக்கு வீடு உதாரணங்களோட நிரூபிக்க முடியும். ஒரு கணவன் தன் மனைவியை வாடீன்னு சொல்றதும் அப்படிப் பூனையா வச்சிருக்கிறதும் அடிமைப்படுத்தணுங்கிற எண்ணத்தில் இல்லே. அது ஒருவிதமான பொசசிவ்நெஸ். தங்கம், வெள்ளியைப் பூட்டிப் பூட்டி வைக்கிறது அதைத் தண்டிக்கிற நோக்கத்தில இல்ல. பாதுக்காக்கிற நோக்கத்துலதான். சில இடங்களில் அறியாமையால இந்தப் பாதுகாப்பே ஜெயிலாப் போயிடுச்சுங்கிறதை நான் மறுக்கலை. அதுக்காக பாதுகாப்பைச் சிறையா நினைக்கிற ஃபெமினிஸ்டுகளை நான் மதிக்கத் தயாரா இல்லை. தாங்கள் அடிமைப்படுத்தப் படறோம்னு சொல்ற ஃபெமினிஸ்டுகள் ஆண்களை அடிமைப்படுத்துற அம்சங்களையும் எதிர்க்கணுமா வேண்டாமா? பெண்ணினத்துக்குப் பெண் இனமே எதிரியாக திகழற கொடுமைகளைக் கண்டிக்கணுமா வேண்டாமா?”

“நீ ரொம்பத் தெளிவா சிந்திக்கிறே... எனக்கு ஒரு கோர்ஸ் அட்டெண்ட் பண்ண மாதிரி இருக்கு. இருந்தாலும் சொல்றேன். ஆம்பளையளவு பொம்பளை மோசமில்ல. இதுக்காக நாம சண்டை போட்டுக்க வேணாம். நாம கல்யாணம் பண்ணிக்கிறதப் பத்தி நீ என்ன நினைக்கிற...?

இறுதியாகப் பாயின்டுக்கு வந்தான் யோகேஷ்.

“இந்த நிமிஷம் நான் எதையும் நினைக்கல்ல யோகேஷ். அப்பா என் கல்யாணத்தைக் கடமையா நினைக்கிறார். அது ஒரு யூஷீவல் திங்கிங்.”

“இப்படிச் சொன்னா எப்படி ரம்யா... என்னை உனக்குப் பிடிச்சிருக்கா? அதுக்குப் பதில் சொல். அப்புறம் இந்த வாங்க... போங்க வேண்டாம் ப்ளீஸ். நீ என்னை வாடா. போடான்னே கூப்பிடலாம்.”

“சாரி... வாங்க போங்கன்னு சொல்றது அடிமைத்தனமில்ல.”

திரும்பவும் அவளை ஆழமாக ஒரு பார்வை பார்த்தவன், “அப்ப என்னைக் கல்யாணம் பண்ணிக்க உனக்குச் சம்மதமா?” என்று கேட்டான்.

அவள் மௌனமாக நின்றாள்.

“இஷ்டமில்லையா ரம்யா?”

“இதுக்கு பொருள் அது இல்ல மிஸ்டர் யோகேஷ். என் வரையில் என் அப்பாவின் விருப்பம்தான் என் விருப்பம். அவர் விரும்பினா நாம கல்யாணம் பண்ணிக்கிலாம்தான். அப்ப எனக்கு சம்மதம்தான்.”

இதைக் கேட்டு யோகேஷ் உற்சாகமானான். இருவரும் சிரித்தபடியே வெளியே வருவதைப் பார்த்த ராம்நாத்துக்கும், ஞானப்பிரகாசத்துக்கும் கூட மகிழ்ச்சி.

அந்த மகிழ்ச்சி குலையாதபடி ராம்நாத்தை விழுந்து வணங்கிய யோகேஷ் விடை பெற்றான். ரம்யா சமையல் கட்டுக்கு நடந்தாள். ராம்நாத்துக்கு மனத்துள் வித்யாசமான பதற்றம். இன்னும் சில நாட்களிலோ, சில வாரங்களிலோ ரம்யா போய்விடுவாள். அதன் பின்? அவரால் அந்தக் கேள்வியைச் சுமக்க முடியவில்லை. ஓசைப்படாமல் சட்டையை மாட்டிக்கொண்டு காரைக் கிளப்ப ஆரம்பித்தார்.

கார் பார் நோக்கி ஒடத் தொடங்கியது.

# 16

‘மனைவி, குழந்தைகளை விட்டுப் பிரிவது, நிலையான குடித்தனத்தை நடுவில் குலைப்பது, நிச்சயமானதொரு நிலையிலிருந்து நிச்சயமற்ற நிலைக்குப் போவது ஆகிய இவை யாவும் ஒரு கனம் எனக்கு வேதனை தருவனவாகவே இருந்தன. ஆனால் நிச்சயமற்றதான வாழ்வைக் கண்டு அஞ்சாத தன்மை எனக்கு இருந்தது. சத்தியமாக இருக்கும் கடவுளைத் தவிர மற்ற எல்லாமே நிச்சயங்களற்றவைதான். இவ்வுலகத்தில் நிச்சயமானதொரு வாழ்வை எதிர்பார்ப்பதைத் தவறு என்று எண்ணுகிறேன்!”

-சத்தியசோதனை’யில் மகாத்மா காந்தி.

ராம்நாத்தின் கார் சர்ரென்று கிளம்பிவிட்டது. ரம்யாவும் அவர் சாதாரணமாக வெளியே போவதாகத்தான் நினைத்துக்கொண்டாள். அந்த நேரமாகப் பார்த்துத் தொலைபேசியிடம் வேறு சிணுங்கல். காதைக் கொடுத்தாள்.

“மேடம் நான் அக்கவுண்டண்ட் கணபதி பேசறேன்.”

“என்ன கணபதி சார்?”

“நாளைக்கு நாம அந்தப் போட்டி கம்பெனித் திறப்பு விழாவுக்குப் போகணுமா.”

“அதுக்கென்ன போய்ட்டாப் போச்சு…”

“இல்ல… ஒரு நல்ல கி ஃப்ட் ஒண்ணு வாங்கச் சொன்னீங்க. அப்பறமா நீங்களே வாங்கிட்றேன்னும் சொன்னீங்க…”

“ஞாபகம் இருக்கு. நான் பார்த்துக்கறேன். ஆனா நீங்க இன்னும் வீட்டுக்குப் போகலையா?’

“இல்ல மேடம்.”

“முதல்ல கிளம்புங்க. இப்படி நீங்க இருக்கறதுக்குப் பேர்

சின்சியார்டி கிடையாது. இது ஒருவித லேக்நெஸ். டயத்துக்கு உங்களுக்கு வேலையைச் செய்யத் தெரியலேன்னும் அர்த்தம் பண்ணிக்க வாய்ப்பிருக்கு...”

-ரம்யா சொன்னதன் எதிரொலி மறுமுனையில் கணபதி உடனே ரிசீவரை வைத்துவிட்டார். ரம்யாவுக்கே கொஞ்சம் அதிகப்படியாக தான் விமர்சித்துவிட்ட மாதிரி கூட இருந்தது.

எல்லா விஷயத்திலும் ஒரு அவசரம் தன்னிடம் இருக்கிறதோ? கேட்டுக்கோண்டாள். மொட்டை மாடியில் ஆகாயம். ஜிகினாத்தூள் தூவினது போல நட்சத்திரங்கள். பூனைக்குட்டி வளைய வருகிறாற்போல ஒரு தினுசான காற்று. மொட்டை மாடி மதில் சுவர் என்பது சமயங்களில் சிம்மாசனங்களுக்குச் சமமான உணர்வுகளை அதன் மேல் அமரும்போது தரவல்லது. அவளுக்கும் அப்படித்தான் இருந்தது. அக்கம்பக்க வீடுகளில் மெகாசீரியல் தொடர்களின் பாத்திரக்குரல்கள்.

“என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?”

“அதை எப்படிச் சொல்றதுன்னு தெரியல...”

“தயவு செய்து பிடிக்கலேன்னு மட்டும் சொல்லிடாதே,”

இந்தக் கேள்வியை இன்னும் எத்தனை முதலிரவுல எத்தனை பேர் கேக்கப் போறாங்களோ?

மெகா சீரியல் வசனக் குரல்கள் அவளுக்குள்ளும் ஒரு சிரிப்போடு யோகேஷ் பற்றித் திரும்பவும் நினைக்க வைத்தது. அதிகபட்சம் அவனோடு ஒரு மணி நேரம் பேசியிருந்தால் அதிகம். ஒரு வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்ய ஒரு மணி நேரம் போதுமானதா என்ன? குழப்பமாகக் கூட இருந்தது. ஒரு கோணத்தில் தனக்குக் கிடைத்த ஒரு மணி நேரம் கூட அதிகமான சலுகையாகத் தோன்றியது. இந்த நாட்டில் பல பொண்கள் முதலிரவின் போதுதான் கணவன் முகத்தையே பார்க்கிறார்கள். அதன்பின் மெல்லப் புரிந்துகொள்ளத் தொடங்குவது ஆரம்பமாகிறது.

தெருவில் கூர்க்கா விசில் கொடுத்தபடி போகும் சப்தம்கேட்டது. அப்படி என்றால் மணி பதினொன்றைக் கடந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவள் பிரக்ஞை வயப்பட்டாள். மளமளவென்று கீழிறங்கியும் வந்தாள். கடிகாத்தையும் பார்த்தாள். மணி 11.20.

வெளியே போன ராம்நாத்தும் திரும்பி வந்த மாதிரி தெரியவில்லை. இப்படி அவர் நள்ளிரவில் எல்லாம் வீட்டைவிட்டு வெளியே இருந்ததே கிடையாது. முதல்முறையாகக் கொஞ்சம் பயமாகக்கூட இருந்தது. ஒரு வேளை ஞானப்பிரகாசம் வீட்டுக்குச் சென்று கல்யாணம் பற்றி நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறாரோ? சந்தேகம் அந்த இரவிலும் ஞானப்பிரகாசம் வீட்டுக்கு ஃபோன் செய்ய வைத்தது.

வாயில் கொட்டாவி பிரிய ஞானப்பிரகாசம் “ஹலோ...” என்று சொல்லும் போதே அங்கே ராம்நாத் இல்லை என்பது ரம்யாவுக்கு விளங்கிவிட்டது.

“அங்கிள் நான் ரம்யா பேசறேன்.”

“என்னம்மா இந்த நேரத்துல?”

“அப்ப அங்க வந்தாரா?”

“யார் ராம்நாத்தா... இல்லையேம்மா.”

“நீங்க போகவும் ஒரு பதினைஞ்சாவது நிமிஷம் கிளம்பிப் போனவர்தான்.”

“மை குட்நெஸ்... ஃபேக்டரிக்கு ஃபோன் பண்ணினியா?”

“அங்கிருந்து கணபதியே பேசினார். அங்கையும் இல்ல...”

-ரம்யா சொல்லச் சொல்ல ஞானப்பிரகாசத்துக்கு விளங்கிவிட்டது.

“இடியட்... திரும்பவும் பாருக்குப் போயிட்டான் போல இருக்கு...”என்றார். அவ்வளவுதான். ரம்யாவுக்கு ஆடிக் கொண்டிருந்த இதயம் அப்படியே அறுத்து வயிற்றுக்குள்

விழுந்தது. பல நொடிகளுக்குப் பேச்சே வரவில்லை.

“ஆமா செல்ஃபோன் எடுத்துட்டுப் போயிருக்கானா?”

“அது எப்பவும் அவர்கிட்டதான் இருக்கும். இன்னிக்குன்னு பார்த்து இங்க டேபிள்மேல இருக்கு.”

“சரிம்மா...நீ தைரியமா இரு. நான் இப்பவே கிளம்பிவர்றேன்.”

“அங்கிள்...”

“நான் ஆம்பளைம்மா... எனக்கென்ன? இன்னிக்கு உன் அப்பனைத் தேடிக் கண்டுபிடிச்சு இரண்டுல ஒண்ணு பார்த்துட்றேன். விட்டா உன் கல்யாணத்தையே கூட நடக்கவிடாதபடி ஏதாவது பண்ணிடுவான். யோகேஷ் உன் மேல எவ்வளவு பிரியமாயிட்டான் தெரியுமா? நீ வெயிட்பண்ணு. அதிகபட்சம் முப்பது நிமிஷத்துல நான் உன் வீட்ல இருப்பேன்.”

-ஞானப்பிரகாசம் தடதடவென்று பேசிவிட்டு ஃபோனை வைத்தார். ரம்யாவுக்குள் பூச்சி பறக்கத் தொடங்கிவிட்டது.

அப்பா நிஜமாகவே பாருக்குத்தான் போயிருப்பாரா?

அந்த ராத்திரியில் வேறு போக்கிடம் தான் ஏது?

அவள் மனம் புழுங்க ஆரம்பித்துவிட்டது. ‘இனி குடிக்க மாட்டேன்’ என்கிற அவரது சங்கல்பத்துக்கு இவ்வளவுதானா ஆயுள்?எரிச்சல்கூட வந்தது. குட்டி போட்ட பூனைபோல நடக்கத் தொடங்கிவிட்டாள். சாப்பிடாத பசி வேறு. நல்ல வேளை. இருபதாவது நிமிஷமே வந்து விழுந்தார் ஞானப்பிரகாசம்.

“என்னம்மா வந்துட்டானா?’ – என்றபடியேதான் உள்ளே நுழைந்தார். உதட்டைப் பிதுக்கிக் காட்டினாள் ரம்யா. எரிச்சலோடு சோபாவில் விழுந்தார்.

அடுத்து என்ன செய்வது என்று அவர் தீவிரமாக யோசிக்கத் தொடங்கிவிட்டதை அவரது முகக் குறிப்பிலேயே உணர

முடிந்தது.

“அங்கிள்...”

‘சாரிம்மா. இவன் திருந்திட்டான்னு மனசார நம்பினேன். ஒரு சேரிக் குடிகாரன் மாதிரி நடந்துப்பான்னு கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை நான்.”

“ஒரு வேளை வேற எங்கயாவது கூட போயிருக்கலாம் இல்லையா?” –அவள் கேட்கும் போதே கார் ஹாரன் சப்தம் கேட்டது.

“அப்பா கார்தான்...”என்றபடியே வாசலுக்கு அவள் முன்னால் ஓட, பின்னால் ஓடினார் ஞானப்பிரகாசம்.

ஞானப்பிரகாசத்தின் யூகம் மிகச் சரி என்பதுபோல் டிரைவிங் சீட்டில் யாரோ ஒருவன். இறங்கியவன் பின்கதவைத் திறந்து போதையில் இருந்த ராம்நாத்தைக் கீழே இறக்க முயன்றான். ஞானப்பிரகாசம் ஓடிச்சென்று உதவவும் அவன் அவரிடம் ராம்நாத்தை ஒப்படைத்துவிட்டு, “பார்ல மயங்கிக் கிடந்தார். எங்க மேனேஜர்தான் கார்ல இருக்கற ஆர்.சி.பேப்பர் காபியில இருக்கற அட்ரஸைப் பார்த்து விட்டுட்டு வரச் சொன்னார். கவனமாப் பார்த்துக்குங்க. அளவுக்கு அதிகமா குடிச்சிருக்கார்” என்றான் அவன்.

ஞானப்பிரகாசத்தின் பார்வை பதிலுக்கு ரம்யாவைப் பார்த்த போது அவள் முகத்தில் சுரத்தே இல்லை.

ஒன்பது மணியிருக்கும். அரவிந்தன். படு ஃப்ரெஷ்ஷாகக் குளித்து முடித்தவனாக நெற்றியில் சின்ன விபூதிக் கீற்றுடன் பத்திரிகை அலுவலகத்துக்கும் புறப்பட்டு விட்டான். அவன் புறப்படுவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தான் குணசேகர். அவனது டூவீலர் சப்தமிட்டபடி புறப்படுவதுவரை கவனித்தவன் வேகமாக நெருங்கி தொலைபேசி அருகில் வந்தான். அரவிந்தன் ஃப்ளாட் எண்களைத்தான் அமுக்கினான். சரண்யாவும் நெருங்கி வந்து தொலைபோசியை எடுத்தாள்...

“ஹலோ...”

“...”

“ஹலோ யார் பேசறது?”

“...” –அவன் பதிலுக்கு ஹலோ சொல்லவில்லை. மாறாக அமைதியாக இருந்தபடியே அப்படியே அவள் ரியாக்ஷனைக் கவனிக்கவும் செய்தான். அவள் ஒரு கட்டம் வரை பார்த்துவிட்டுச் சலிப்புடன் ரிசீவரை வைத்தாள். சிரித்துக் கொண்டே திரும்பவும் அவளுக்கான அந்த ஃபோனின் எண்களை அமுக்கினான். சரண்யா சமையல்கட்டு வரை போனவள் திரும்பி வந்து ரிசீவரை எடுத்தாள். இந்த முறையும் அதே போல மௌனம். ஒரு முறைக்கு “ஹலோ...” என்றவள் திரும்பவும் ரிசீவரை வைத்தாள்.அப்படியே அதைச் சிறிது நேரம் வெறித்துப் பார்த்தாள். பிறகு திரும்பி நடந்தாள். சமையலறை வாசலில்கூட கால் வைத்திருக்கமாட்டாள். திரும்பவும் ரிங்டோன். அவளுக்கு உதைத்துக்கொண்டு கத்த வேண்டும் போல் இருந்தது. இருந்தும் சகித்துக் கொண்டு வந்த ரசீவரை எடுத்தாள்.

“ஹலோ...”

“...”

“ஹலோ யாருங்க நீங்க? எதுக்கு இப்படி ஃபோன் பண்ணிட்டு மௌனமா இருக்கீங்க?”

“...”

“இப்ப பேசப் போறீங்களா இல்லையா?”

“...”

“இப்ப சொல்றேன். அடுத்த தடைவ ரிங்டோன் வந்தா எடுக்கவே மாட்டேன். ஞாபகம் வச்சுக்குங்க...”

எரிந்து விழுந்தவளாக ரிசீவரை வைத்தாள். சில விநாடிகள் நின்று வெறிக்கவும் செய்தாள். அந்தச் சமயம் பார்த்து

குணசேகர் போட்டுவிட்ட பாட்டி வேறு ஒரு மாதிரி பார்த்துக் கொண்டே போனாள்.

அதையும் கவனித்த குணசேகர் முகத்தில் ஒரு குரூரச் சிரிப்பு.

ஒரு ஐந்து நிமிடம் விட்டுவிட்டான். திரும்பவும் அவனது டார்ச்சர் விளையாட்டு தொடங்கியது. நம்பரை அமுக்கினான். அதுவும் அலறத் தொடங்கியது. முன்பு சொன்னதைப் போலவே சரண்யாவும் அப்படியே விட்டுவிட்டாள். ஆனால் அவன் விடுவதாக இல்லை. ஒரு ஓயாத சப்தம் எழுப்பியாக அந்தத் தொலைபேசியை மாற்றுவது என்று சபதமெடுத்தவன் போல தொடர்ந்து எண்களை அமுக்கி சப்தம் எழுப்பினான். மனதுக்குள், என்னையா ஆள் வைத்து மிட்டினாய்?' என்று வேறு கேட்டுக்கொண்டான்.

சரண்யாவுக்கு ஒரே தலைவலியாகிவிட்டது. வேகமாக வந்தவள் ரிசீவரை எடுத்துப் பிரித்து வைத்தாள். அப்படியே அருகில் அமர்ந்துகொண்டு, இது யாருடைய வேலையாக இருக்கும் என்று யோசிக்கவும் ஆரம்பித்தாள். ஏனோ அவளால் குணசேகரை அம்மட்டில் எண்ணிப்பார்க்க முடியவில்லை. பதிலுக்கு ரம்யா ஞாபகம்தான் வந்தது. அவள்தான் ஒருவேளை எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்பது தெரியாமல் தவிக்கிறாளோ?

அவளுக்குள் தப்பான ஒரு போக்கு.

அவனோ கழுகு போலப் பார்த்துக்கொண்டே இருந்தான். அவளது வாளிப்பான உடம்பை அவன் கண்கள் விழுங்கிக் கொண்டிருந்தன.

# 17

‘கிணற்றுத் தவளைகளில் இரண்டு விதங்கள் உண்டு. சின்னக் கிணற்றில் வாழ்கிற தவளை. எம்.ஏ. படித்துவிட்டு சென்னை போன்ற பெரிய கிணற்றில் வாழ்கிற தவளை. ஆனால் குணம் இரண்டிற்கும் ஒன்றுதான்.’

-’கமலம்’ நாவலில் தி.ஜானகிராமன்.

ஓயாத அந்தத் தொலைபேசிச் சிணுங்கலும் ரிசீவருக்குக் காதைக் கொடுத்தால் மறுபுறம் மௌனமும் சரண்யாவை வெகுவாகப் பாதித்துவிட்டது.

முதலில் ரிசீவரை பிரித்துவைத்தவள் பிறகு அரவிந்தன் ஃபோன் செய்ய விரும்பினால் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விடும் என்பதை உணர்ந்தவளாகப் பயந்துகொண்டே ரிசீவரைத் திரும்பவும் வைக்க, அதைக் கவனித்துக் கொண்டேயிருந்த குணசேகர் அடுத்த நொடியே எண்களை பிரஸ் செய்து ஆட்டம் காட்டத் தொடங்கிவிட்டான்.

மீண்டும் சிணுங்கல் சப்தம்

சரண்யாவுக்கு உடம்பெல்லாம் நடுங்கியது.

எடுத்துக் காதைக் கொடுத்தாள். வழக்கம்போல் மௌனம். அவளோ ரம்யாதான் பேசத் தயங்குகிறாளோ என்று எண்ணியபடியே, “ரம்யா...ரம்யாதானே ஃபோன் பண்றது? சொல்... என்கிட்ட பேச உனக்கு என்ன தயக்கம்?’ என்று கேட்க, மௌனம் தொடர்ந்தது.

“ச்சை” - ஃபோனைத் திரும்ப வைத்தாள்.

அதே சமயம் குணசேகரைப் பார்க்கவும் யாரோ வந்துவிட அவனும் கொஞ்சம் கவனம் திரும்பினான். சரண்யாவோ தொலைபேசியையே பார்த்துக்கொண்டு வெறுப்புடன் அருகில் அமர்ந்துவிட்டாள். அடுத்து அவள் அழைக்கப்படும் முன் ஒரு காரியம் செய்தால் என்ன என்று யோசித்தவள்

கடிகாரத்தைப் பார்த்தாள். மணி பத்தைக் கடந்துவிட்டிருந்தது. அரவிந்தன் ஆபீஸ் சீட்டில் உட்கார்ந்திருப்பான். அவனுக்கான எண்களை அமுக்கியவள் அவனைத் தொடர்பு கொண்டாள்.

“அரவா...”

“என்னக்கா?’

“ஒரு முக்கியமான விஷயம் சொல்லலாமா?”

“அதுக்குதானே ஃபோன் பண்ணியிருக்கே... சொல்லு.”

“யார்னு தெரியலை... நீ போனதிலிருந்து ஓயாம ஃபோன் சப்தம். ரிசீவரை எடுத்துக் காதைக் கொடுத்தா அந்தப் பக்கமாக ஒரு ஹலோ கூட கிடையாது. மௌனமா இருந்து எந்தப் பதிலும் சொல்லாம என்னைப் பாடாப் படுத்தறாங்க. ஒரு பத்துப் பதினைஞ்சு தடவையாவது இப்படிப் பண்ணியிருப்பாங்கன்னா பார்த்துக்கயேன்.”

“விசித்திரமா இருக்கே?”

“விசித்ரம் இல்லை இது. விபரீதம். நான் நினைக்கிறேன்...நேத்து வந்துச்சே ஒரு பொண்ணு... அதான் ரம்யாவோ ராதாவோ...”

“அவங்களுக்கென்ன?”

“அந்தப் பொண்ணாயிருக்குமோன்னு எனக்கு ஒரு சந்தேகம்.”

“அவங்களா?”

“அவங்கன்னு தீர்மானமா சொல்லலை. இது ஒரு யூகம். ஏன்னா நீ நேத்து மூஞ்சியில அடிச்ச மாதிரி பேசிட்டே. அந்தப் பொண்ணும் கொஞ்சம் சூடா பதில் சொல்லிட்டுத்தானே போனா... போய் ஒருவேளை யோசிச்சுப் பார்த்திருப்பா. வருத்தமா இருந்திருக்கும். அதே சமயம் பளிச்சினு பேசத்தயக்கமாயிருக்கலாம். ஆகையால் அவ ஒருவேளை...”

“காலர் ஐ.டி.வச்சிருந்தா பிரச்சினை இல்லை. இப்ப அதைப்பத்தி யோசிக்கிறதுல அர்த்தமும் இல்லை சரி...நீ ரிசீவரைப் பிரிச்சு வை. நான் ஃபோன் பண்ணமாட்டேன். அந்தப் பெண்கிட்ட நான் பேசிப் பார்க்கிறேன்.

“பார்த்து அரவா... பொலைட்டா பேசு. திரும்பக்கத்தாதே. ஆக்சுவலா அவ ரொம்ப நல்ல பொண்ணு. அவளை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.”

“போதும்கா... இருபத்தி நாலு வருஷமா உன் கூட நான் இருக்கேன். என் கூட நீ இருக்கே. நாமே ஒருத்தரை ஒருத்தர் சரியாப் புரிஞ்சிக்கலை. நீ சில மணி நேரம் பழகிட்டு உடனே நல்ல பொண்ணுன்னு சர்ட்டிபிகேட் கொடுத்திடறே... ஃபோனை வை. ராத்திரி மிச்சத்தை யோசிக்கலாம்.”

சரண்யாவும் ரிசீவரை முதலில் ஒழுங்காக வைத்தவள். பிறகு பிரித்து வைத்தாள். அப்படியே அந்த ரிசீவராகத் தன்னையும் நினைத்துக் கொண்டாள்.

காரில் தனியே வந்து இறங்கிய ரம்யாவைப் பார்த்த அக்கவுண்டண்ட் கணபதி, “சார் வரலையா மேடம்...” என்றபடியே கதவைத் திறந்துகொண்டு அந்த ஃபேக்டரியின் போர்ட்டிகோவுக்கு வந்தார்.

“அவர் வரலை... நானும் இப்ப அந்த சுசிலா இண்டஸ்ட்ரிஸ் துவக்க விழாவுக்குப் போகப்போறேன். இன்விடேஷன் கார்டைக் கொஞ்சம் எடுத்துக்கிட்டு வர்றீங்களா?” என்று கேட்டுவிட்டுக் கார் அருகிலேயே நின்றாள்.

“உள்ற வாங்க மேடம்.”

“டைம் இல்ல. நீங்க கார்டை எடுத்துக்கிட்டு வாங்க...” அவரும் ஓடிப்போய் எடுத்துவந்தார். அதைப் பிரித்து முகவரியைப் பார்த்துக் கொண்டாள். காரின் பின் சீட்டில் அவ்வையார் சிலை இருந்தது. கணபதி கவனித்தவராக, “அது அவ்வையார் சிலை தானே மேடம்?” என்றார்.

“ஆமாம்... அதுதான் சுசிலா இண்டஸ்ரிக்கு நான் கொடுக்கப் போற பிரசன்ட்...”

“அவ்வையாரையா...?” –கணபதியின் தொனியிலேயே இது ஒரு பொருத்தம் இல்லாத பரிசு என்கிற செய்தி. ரம்யாவோ சிரித்தாள்.

“ஒரு பெண் மேதை அவ்வையார். இளமையை இறைவனுக்குக் கொடுத்துவிட்டு முதுமையைப் பதிலுக்குக் கேட்டு வாங்கிக் கிட்டவங்க. தன் உருவம் கூடத் தன் பயணத்துக்குத் தடையா இருக்கக் கூடாதுங்கிற எச்சரிக்கை உடையவங்க...பெண்ணா இருந்தும் தப்பான பெண்களை விமரிசிச்சும் கண்டிச்சும் எழுதத் தயங்காதவங்க...என்னைப் பொறுத்தவரைக்கும் நமக்கெல்லாம் பொதுவான பாட்டி இவங்கதான். என் அம்மாவுக்கு இந்தப் பாட்டியை விட யாராலும் புத்தி சொல்ல முடியாது. அதுலயும் சொல்லாம சொல்றதுன்னு ஒண்ணு இருக்குல்ல...அதுல இந்தப் பாட்டி எக்ஸ்பர்ட்.”

ரம்யா நெத்திக்காயை உடைக்கிற மாதிரி உடைத்தாள்.

“சுசிலா உங்க அம்மாவா?” –அதிர்ச்சி, ஆச்சரியம் விலகாமல் கேட்டார் கணபதி.

“கணபதி சார்...உங்களுக்கு எல்லா விஷயமும் தெரியும். எதுக்கு இப்படி தெரியாத மாதிரி ஒரு பாவனை. என் வரையில இது ஒண்ணும் பெரிய ரகசியமெல்லாம் கிடையாது.”

கணபதி அதன் பின் எதுவும் பேசவில்லை. அவளது கார் புறப்பட்டது.

அவ்வையாரை அழகாகப் பேக் செய்து எடுத்துக் கொள்ளாமல் அப்படியே எல்லோரும் பார்க்கும் படியாகக் கைகளில் பிடித்தபடியே நடந்த ரம்யாவை சுசிலா கொஞ்சம் கூட எதிர் பார்க்கவில்லை.

படு ஆடம்பரமான உடையில் சென்ட் வாசம் கமகமக்கக் காட்சியளித்தவள் ரம்யாவையே வெறித்துப் பார்த்தாள்.

ரம்யா முகத்திலோ எந்தச் சலனமுமில்லை. சகஜமான ஒரு சிரிப்பு. சுற்றிலும் பலர் நின்றிருந்தார்கள்.

தொழிற்சாலையும் பெரிதாக எல்லா வசதிளுடனும் இருந்தது.

எடுத்த எடுப்பிலேயே சென்ட்ரலைஸ்டு ஏ.சி.மினரல் வாட்டர் டேங்க். தொழிலாளர்களிடமும் நேம் பாட்ஜ் முதல் ஷீ வரை சர்வமும் காணப்பட்டன.

கண்களால் சகலத்தையும் அளந்து குறித்துக் கொண்டாள். ஆனால் சுசிலா வாயைத் திறக்காமல் பேசக் கூடாது என்பது போல மௌனம்.

சுசிலாவின் கணவரும் கவனித்தார். கொஞ்சம் இன்ப அதிர்ச்சி அவருக்கு. அவளை நெருங்கியவர், “வாம்மா... வெல்கம்...!”என்றார். ரம்யா அவரது பண்பை ரசித்தாள். “தேங்க்யூ...”என்றாள்.

“எப்படியம்மா இருக்கே?” இதமாக விசாரிப்பைத் தொடங்கினார்.

“நல்லா இருக்கேன். நீங்க?”

“நானும் நல்லா இருக்கேன். ஆமா...இன்விடேஷன் பாத்துட்டு வந்தியா? இல்ல...?”

அவர் கேட்ட விதத்தில் எனக்குத் தெரியாமல் உன்னை யார் அழைத்தது என்பதுபோல ஒரு சந்தேகம். பதிலுக்கு ஹேண்ட் பேகில் இருந்து இன்விடேஷனை எடுத்துக் காட்டியவள். “என்னதான் காம்படீடர்னாலும் இன்விடேஷன் அனுப்பினதுக்கு ஒரு பதில் மரியாதை செய்துதானே தீரணும்.”

“ஓ... நீ சொல்றதுதான் கரெக்ட். ஆமா... இது அவ்வையார் ஸ்டாச்சுதானே?”

“ஆமா... இது என் பிரசன்ட்.”

“கொடும்மா...எனக்கு அவ்வையாரை ரொம்பப்பிடிக்கும்.”

“அவ்வையாரை ரொம்பப் பிடிச்ச உங்களுக்கு எப்படி என் அம்மாவையும் பிடிச்சிருக்கு. தெரியலையே?” என்று அவள்

கேட்க. சுசீலாவும் ஒருவித விதர்விதிர்ப்போடு கவனித்துக் கொண்டேயிருந்தாள். ஆனால் அவரோ, “அவ்வையாரை ஒருத்தருக்குப் பிடிச்சுப் போச்சுன்னா உலகத்தில் அப்புறம் அவங்களுக்கு எல்லாரையும் பிடிச்சுத்தான் தீரணும்” என்று சற்று அசடு வழிந்தவாறு சமாளித்தார்.

இருவரும் மிக சகஜமாகப் பேசிக்கொள்வது சுசீலாவுக்குப் பலவிதமான எண்ணங்களைத் தோற்றுவித்துவிட்ட மாதிரி இருந்தது. மெல்ல ரம்யா அருகில் வந்தவள், “ரொம்ப கறுத்துட்டே... வயசுக்கேத்த உடம்பும் இல்ல. உன் அப்பாகிட்ட சொல்லி ஒரு நல்ல சமையல்காரியை அப்பாயின்ட் பண்ண வேண்டியதுதானே?” என்றாள் சற்று கிண்டலாக.

“கிடைக்கலியே...வீட்டோட இருக்க யாரும் தயாரா இல்லை. பொண்டாட்டியே அவருக்கு அமையலை. சுமையல்காரியா அமைஞ்சுடப்போறா?” –ரம்யாவும் பதிலுக்கு நன்றாக ஊசி ஏற்றினாள். சுசீலா முகம் ஷணத்தில் அதைக் கேட்டு சிவந்துவிட்டது.

“உங்க அப்பா மாதிரியே உனக்கு வாய்.”

“தேங்க்ஸ்,”

“நான் உன்னைத் திட்டினேன். அதுக்குப் போய் தேங்க்ஸ் சொல்றியே.”

“அது திட்டு இல்லை. உங்களைப் போல எனக்கு வாய்ன்னாதான் நான் வருத்தப்படணும். என் அப்பாவை மாதிரிங்கிறது எனக்குப் பெருமையான விஷயம் தெரியுமா?”

சுசீலாவுக்கு இரு கன்னங்களிலும் ஒரே சமயத்தில் அறை விழுந்தது மாதிரி இருந்தது.

“போதுண்டி... ரொம்ப அப்பா பெருமை பீத்திக்காதே... நீ ஒரு வீட்டுக்குக் கல்யாணம் ஆகிப் போக வேண்டியவ. காலமெல்லாம் கூட இருக்கப்போற உறவு கிடையாது.”

“அது என்னவோ வாஸ்தவம்தான். பெத்த தாய் உயிரோட

இருந்தும் இல்லாமப் போற அளவுக்கு ஒரு அதிர்ஷ்டசாலியாயிற்றே நான். அப்பா இல்லாமப் போறதா எனக்கு பெரிசு?”

அவளது பதில் மடக்கல் சுசீலாவின் கணவர் ராஜரத்தினத்தை என்னவோ செய்தது.

“சுசீ...என்ன இது...கீப் கொயட்” –சற்று கோபத்தோடு அதட்டியவர் ரம்யாவைச் செயற்கைச் சிரிப்போடு பார்த்து, “காரில் வந்திருக்கியா? இல்லை ஆட்டோவுலயா?” என்று பேச்சை மாற்றினார்.

“ஒரு காருக்கு இரண்டு கார் இருக்கு சார் எங்களுக்கு. கார்லதான் வந்திருக்கேன். எதுக்குக் கேட்டீங்க?”

“அது வந்தும்மா... நீ ஆட்டோவில வந்திருந்தா உன்னை என் காரிலயே கொண்டு போய் டிராப் பண்ணிடலாம்னு கேட்டேன்.”

“அப்ப வந்த வேலை முடிஞ்சது கிளம்புன்னு சொல்லாமச் சொல்றீங்க...அப்படித்தானே?’

“எங்க இன்விடேஷன் உன் அப்பாவுக்கு ஒரு எச்சரிக்கைக்காகத்தான் அனுப்பப்பட்டது. நான்தான் அனுப்பினேன். ஆனா நீவருNவுன்னு நான் நினைக்கலை” என்று திரும்ப வாயைத் திறந்தாள் சுசீலா.”

“நானும் அது தெரிஞ்சுதானே வந்திருக்கேன். உன் எச்சரிக்கையில கொஞ்சம் கூட அர்த்தம் இல்ல. அது வெறும் ஆத்திரம். இப்ப நான் உன்னை எச்சரிக்கிறேன். அதை முதல்ல நல்லாக் கேட்டுக்க. ஒரு தொழிற்சாலை எந்த நிலையிலும் முழு சௌகர்யங்களோடு தொடங்கவே கூடாது. தொழிற்சாலை கொஞ்சம் கொஞ்சமா லாபம் சம்பாதிச்சு அதுக்குப் பிறகுதான் கொஞ்சம் கொஞ்சமா சலுகைகளையும் தரணும்... அதுதான் தொழிலாளி, தொழிலகம் இரண்டுக்கும் நல்லது. இங்கே தலைகீழா இருக்கு. இப்படியே ஆறு மாசம் தாக்குபிடிச்சா அது ரெம்பப் பெரிய விஷயம். ஞாபகம் வச்சுக்கோ...வர்றேன்.”

ரம்யா படபடவென்று பேசிவிட்டு வேகமாகத் திரும்பி நடந்தாள். ராஜரத்தினம் முகத்தில் ஈயாடவில்லை.

வெளியே காரை நெருங்கியவள் காரில் ஏறும் சமயம் அவளது செல்ஃபோனில் சிணுங்கல். காதைக் கொடுத்தாள். அரவிந்தன் மறுமுனையில்.

# 18

“கேள்வி இல்லாமல் முடியாது, வாழ்க்கை ஓடிக்கொண்டிருப்பதே - இல்லையில்லை – வாழ்க்கையே கேள்விகளின் பின்னல் கோலம்தான்.

கேள்வி உயிரின் சிறப்பு. துடிப்புக்குப் பொருள் காண முயல்வது, கேள்வியெனும் தூண்டிலில் மாட்டிக் கொண்டு அந்ததத் துடிப்பின் வேதனையிலிருந்து விடுபட வழி தேடுவது சிந்தனையின் இயல்பு. இந்த வழிக்குப் பிடித்த வெளிச்சம், துணைதான் பாஷை!”

-’சிந்தாநதி’யில் லா.ச.ரா.

தனது செல்ஃபோன் திரையில் தெரிந்த அரவிந்தனின் எண்கள் அவளுக்கு ஆச்சரியத்தை அளித்தன. சுசீலா இண்டஸ்ட்ரீஸ் தொழிலக வாழை மரக்காட்டுக்கு அருகிலேயே நின்றுகொண்டு காதைக் கொடுத்தாள். அதை ராஜரத்தினமும் பார்த்துக் கொண்டிருந்தார்.

“சொல்லுங்க மிஸ்டர் அரவிந்த்...”

“...”

“என்ன அரவிந்த்...கமான் பேசுங்க. உங்க காலை நான் எதிர்பார்க்கவேயில்லை. என்ன...நேத்து பேசின பேச்சுக்காக வருத்தப்பட்றேன்னு சொல்லப் போறீங்களா? இட்ஸ் ஓ.கே. அதை நான் அப்பவே மறந்துட்டேன். இப்ப என் மனசுல வேற ஒரு பிரச்னை. ஏன்ன அரவிந்த்... நான் பேசிக்கிட்டேயிருக்கேன். உங்ககிட்ட பதிலே இல்லையா... அரவிந்த்...நான் உங்ககிட்டதானே பேசிகிட்டிருக்கேன்?”

-ரம்யாவிற்கு அரவிந்தன் மௌனம் சந்தேகத்தை ஏற்படுத்த அரவிந்தனுக்கோ அவளது தயக்கமில்லாத சரளமான பேச்சு, அவன் கேட்க நினைத்த கேள்வியை கேட்க விடாமல் செய்தது.

எடுத்த எடுப்பில் நம்பரை வைத்தே தன்னை அடையாளம் கண்டுகொண்டு பேசும் இவளா அத்தனை முறை ஃபோன்

செய்து பேசாமலும் இருந்திருப்பாள்?

வெகு வேகமாய்க் கேள்விக்குள் விழுந்து விடையையும் எட்டியவன். "ஒண்ணுமில்ல மிஸ் ரம்யா...சும்மாதான் ஃபோன் செய்தேன். நான் பேச நினைச்சதை எல்லாம்தான் இப்ப நீங்களே பேசிட்டீங்களே...ரொம்ப சந்தோஷம்" என்றான்.

"இதைச் சொல்ல இவ்வளவு தயக்கமா அரவிந்தன். எனக்கு ஃபோன் பண்ணிட்டு மௌனமா இருக்கறவங்களைத் துளிகூடப் பிடிக்காது. தேவையில்லாதபடி ஒரு டென்ஷனை இவங்க உருவாக்கறாங்க...அதுக்காக நான் உங்களை அப்படிச் சொல்றதா நினைக்க வேண்டாம். இட் ஈஸ் மை ஒபீனியன்."

"அந்தக் கருத்து சரிதான். ஊண்மையைச் சொல்லப் போனா நான் உங்களுக்கு ஃபோன் பண்ணினதே நீங்க எதிர்க்கிற இந்த மௌனம் தொடர்பாதான்..."

"புரியும்படிச் சொல்லுங்களேன்..."

"யார்னு தெரியலை... என் சிஸ்டருக்கு ஃபோன் பண்ணிக் கிட்டேயிருக்காங்க. ரிசீவரை எடுத்தா மௌனமா இருந்து கழுத்தறுக்கறாங்க. அவ வந்து நீங்கதான் பேசறதுக்குத் தயங்கி அப்படி ஃபோன் பண்றீங்களோன்னு நினைச்சுட்டா. அதுக்காக உங்ககிட்டையே விசாரிக்கத்தான் ஃபோன் பண்ணினேன்."

"..."

-அரவிந்தனுக்குள் இந்த முறை ரம்யாவின் மௌனம் எரிசல் மூட்டியது.

"என்ன மிஸ் ரம்யா... இப்ப உங்களோட மௌனம் என்னைக் கொஞ்சம் குழப்புது. உங்களைக் குறிப்பிட்டதால அதிர்ச்சியா இருக்கா?"

"சாரி அரவிந்த். உங்க சிஸ்டர் என்னை நினைச்சதுக்காக வருத்தப்படலை. ஆனா இது அதிர்ச்சிக்குரிய விஷயம்தான். என் சந்தேகம் இப்ப அந்த நடிகன் மேல... அவன்தான்

என்னோட தாக்குதலுக்குப் பதில் தாக்குதலை இப்படி நடத்தறானோன்னு தோனுது.”

-ரம்யா தன் பேச்சில் குணசேகரைத் தொடவும் அப்பொழுது தான் அவன் நினைப்பே அரவிந்தனுக்குள்ளும் எழும்பியது.

“அப்ப இது அவரோட வேலைங்கறது உங்க யூகமா?”

“ஒரு சின்ன திருத்தம். இது அவனோட வேலைதான். அவரோட வேலையில்லை...” –ரம்யாவின் பதிலில் நல்ல கோபம் வெளிப்பட்டது.

“என்னால் நம்ப முடியலை மிஸ் ரம்யா...எனிவே நான் அதை என்னன்னு பாக்கறேன். அநாவசியமா உங்களுக்குத் தொந்தரவு கொடுத்துட்டேன். மன்னிச்சிடுங்க.”

-மிக வேகமாகக் கொஞ்சம் பெருமூச்சு, கொஞ்சம் பதற்றம். கொஞ்சம் வருத்தம் என்று பேசி மறுமுனையையும் கத்தரித்தான்.

ஆனால், ரம்யா மனதுக்குள்ளோ சந்து முனைச்சுழல் காற்று போல ஒருசின்னப்புயல்! அது அவள் முகத்தில் நன்றாகவே எதிரொலித்தது. செல்ஃபோனை ஹேண்ட் பேக்கில் வைத்தவள் காரை நோக்கி நடந்தாள்.

பார்த்துக் கொண்டேயிருந்த ராஜரத்தினமும் உள்ளே திரும்பினார். அவர் முகத்திலும் ஏராளமான சலனம். அதைத் துல்லியமாகக் கணித்தபடி அருகே வந்தாள் அவரது மூத்த சகோதரியும் மாதர் சங்கம் ஒன்றுக்குத் தலைவியாகவும் இருக்கும் ராஜேஸ்வரி என்பவள்.

“ராஜா...எனிதிங் ராங்.”

“ஆமாங்க்கா... இந்த சுசீலாவை என்னால புரிஞ்சுக்கவே முடியல. இவ ஒரு நார்மல் லேடியா, அப்நார்மல் லேடியான்னு எனக்குச் சந்தேகமா இருக்கு...”

“சந்தேகமா...ஸ்டுப்பிட், அவ ஒரு அப்நார்மல் வுமன்கறது தான் என்னோட டெசிஷன். ஆமா இப்ப எதுக்கு இந்தச் சிந்தனை?”

“அதோ கார்ல போறாளே ஒரு பொண்ணு...அவ யார் தெரியுமா?”

“தெரியும். அவ வந்ததுல இருந்தே இங்க பல பேர் மூட் மாறிப் போச்சு. பர்ட்டிகுலரா சுசீலா ரொம்பவே மூட் அவுட். ஐ திங்க் அந்தப் பொண்ணை அவ இங்க எதிர்பார்க்கலைங்கறது என் எண்ணம்...”

“நானுந்தான்க்கா...ஆனா இன்விடேஷன் அனுப்பினா வரத்தானே செய்வாங்க... அதையும் இவதான் பண்ணியிருக்கா. எதுக்கு அந்த மனுஷனையும் இவ பொண்ணையுமே சீண்றான்னு தெரியலை. ஆனா இந்த பொண்ணு ரொம்ப மெச்சூர்டா, டைனமிக்கா பிஹேவ் பண்ணினா. ஐ லைக் இட் வெரிமச்.”

“அவளையா பாராட்றே... பழைய பாசத்துல உறவு கொண்டாட வந்தா என்ன பண்ணுவே? இந்த சென்னை இன்னும் நியூயார்க், நியூஜெர்சியால்லாம் முழுசா மாறலை. ஞாபகம் வெச்சுக்கோ...”

“இல்லக்கா... உறவைப் புதுப்பிக்கல்லாம் அந்தப் பொண்ணு வரலை. புதிலடி கொடுக்கத்தான் வந்துருக்கா. ஒரளவு கொடுத்ததையும் பார்த்தேன். போகப் போக பிசினஸ்லையும் அவளோட அட்டாக் இருக்கும். சுசீலா திணறப் போறா...”

“அப்ப இந்த இண்டஸ்ட்ரியை நீ மேனேஜ் பண்ணப் போறதில்லையா? என்னடா சொல்றே?”

“இத நான் என் விருப்பத்துல தொடங்கியிருந்தா நான் மேனேஜ் பண்ணுவேன். இது சுசீலாவோட பிடுங்கலால, நான் போகட்டும்னு தொடங்கினதுதானே...?”

“அவளுக்கு ஏன் வயசான காலத்துல இப்படி ஒரு இண்டரஸ்ட்!”

“இது இண்டரஸ்ட் இல்ல...பொறாமை. அந்த ராம்நாத் மேல இருக்கற ஆத்திரம், கோபம் எல்லாத்தையும் இவ இப்படிக் காட்றா...அந்த நபர் எந்த நிலையிலையும் இவளைவிட

மேல போயிடக் கூடாதுங்கறதுல ரொம்பக் குறியா இருக்கா. அழிக்க நினைக்கறா...”

“என்னடா ராஜா இது எண்ணம்? டைவர்ஸ் ஆகி உனக்கு மனைவியும் ஆயிட்ட நிலைல இவ இப்படி சிந்திக்கறது எந்த அளவுக்குடா சரி?”

“சரியில்லாதான்கா. அதை ஒரு அவ்வையார் சிலையை எனக்கு பிரசன்ட் பண்ணிச் சொல்லாமச் சொல்லிட்டுப் போய்ட்டா அந்தப் பொண்ணு. அவ்வளவுதான். ‘ஏறுக்கு மாறாக ஒருத்தி இருப்பாளே ஆயின் கூறாமல் சன்யாசம் கொள்’ளுன்னு பாடினவ...”

“நோ... நீ சன்யாசியானா அது கோழைத்தனம். இவளுக்கு நீ பாடம் கத்துக் கொடுக்கணும்...”

“என்னவோக்கா... ஒரு டைவர்சிக்கு வாழ்வு கொடுக்கறதா நினைச்சு ஒரு மனநோயாளிகிட்ட நல்லா மாட்டிக்கட்டு முழிக்கறேன். வெளிய தெரிஞ்சா வெட்கக்கேடு...”

-ராஜரத்தினம் பேச்சில் ஆயாசமும் துக்கமும் போட்டி போட்டன.

ரம்யா அபார்ட்மெண்டை எட்டி லிஃப்டைப் பிடித்து மேலேறும்போது, கூடவே சிலரும் ஏறினார்கள். எல்லோரும் ரம்யா இறங்க வேண்டிய மூன்றாவது ப்ளோருக்கான பட்டனையே அழுத்தியதிலிருந்து அவர்களும் அந்த பிளாட்டில் குடியிருப்பவர்கள் என்பது சொல்லாமலே புரிந்தது.

ஒரு மாமி தன் சக மாமியிடம், “இந்த ஜர்னலிஸ்ட் பிளாட்ல ஓயாம டெலிஃபோன் மணி அடிச்சபடியே இருக்கு கேட்டியா நீ...” என்றாள்.

“உம்... என் காதுலையும் விழுந்தது. பாவம் அந்த அரவிந்தன்! அவன் வெளியே போனவுடன், அவன் அக்காகாரிக்கு போன் பேசறதுதான் பொழுதுபோக்கு போல இருக்கு...பார்க்க பூனையாட்டம் இருக்கா,ஆனா உள்கதை நிறைய இருக்கும் போலத் தெரியறது...”என்றாள் அந்த

மாமியும். அதற்குள் மூன்றாவது ப்ளோர் வந்து லிப்ட்டும் நின்றது. இறங்கி வெளியேறினார்கள். ரம்யாவிற்குக் கொஞ்சம் அமிலம் காதில் கசிந்த மாதிரி இருந்தது.

பிளாட் கல்ச்சர் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாள்.

இன்றைக்கு நிதர்சனமாகப் பார்க்க முடிந்தது.

பிளாட்டில் பூனைபோலப் பதுங்கி வாழத் தெரிந்திருக்க வேண்டும். கொஞ்சம் பெரிய தொண்டை உள்ளவர்களுக்கெல்லாம் காம்பவுண்ட் வாலுடன் கூடிய தனி வீடுதான் தோது. புரளிகிளப்புவது, பீதியை உருவாக்குவது இதெல்லாம் பிளாட்டில் வெகு சகஜமாய் செய்ய முடிந்த விஷயங்கள். மணக்க மணக்கச் சமையல் செய்துகூட பிளாட் கல்ச்சரில் ஆபத்தான விஷயம்.

“எனன இன்னிக்கு முள்ளங்கிச் சாம்பாரா... மூக்கைத் துளைச்சது வாசனை... ஒரு கரண்டி கொடேன்...”என்று அன்பு உபத்திரவங்கள் மிகச் சாதாரணமாக ஏற்படும். போனாலும் நோட்டீஸ் போர்டில் போட்டது போலத் தெரிந்துவிடும். பெரிதாக ஒரு சாமானை வாங்கிக் கொண்டு எனக்கென்ன என்றும் வரமுடியாது...எவ்வளவு விலை? எங்க வாங்கினே? ஏது பணம் என்று ஆளுக்குத் தகுந்த மாதிரி கேள்விகள் முளைவிடும்.

ரம்யா இந்தச் சிந்தனைகளைப் புறந்தள்ள முடியாமல் நடந்தாள். அவள் போய் வீட்டு வாசலில் நின்ற போது ஒரே நிசப்தமாக இருந்தது. பெல்லை அழுத்தினாள். சரண்யா மிகுந்த தாமதத்திற்குப் பிறகுதான் கதவைத்திறந்தாள். எடுத்த எடுப்பில் ரம்யா பார்வை பிரிந்துகிடக்கும் தொலைபேசி மேல்தான் சென்றது.

“அட ரம்யா...வாம்மா...வா...” –சரண்யாவுக்கோ புதிதாகத் தெம்பே வந்திருந்தது.

“என்னங்க ரிசீவர் பிரிஞ்சு கிடக்கு?” –ஆரம்பித்தாள்.

“அதை ஏம்மா கேக்கறே...காலைல இருந்து ஒரே சப்தம். யார்னு தெரியலை... நான் ஒருவேளை நீயா

இருப்பியோன்னு கூட நினைச்சேன். பார்த்தேன்... அரவிந்தன்கிட்ட சொல்லிட்டுப் பிரிச்சு வெச்சுட்டேன்...”

“அரவிந்தனும் எனக்கு ஃபோன் பண்ணி விசாரிச்சார்” என்றவள், தனது பெரிய பையில் இருந்து ஒரு காலர் ஐ.டி. ஃபோனை எடுத்தாள்.

“ஐய்யோ என்ன இது?”

“உஸ்ஸ்...சப்தம் போடாதீங்க. இது காலர் ஐடென்டிஃபிகேஷன் உள்ள ஃபோன். யார் ஃபோன் பண்ணாலும் அவங்க நம்பர் இதுல வந்திடும். அப்படி ஒரு ஃபோன் இது இல்லேங்கற எண்ணத்துலயும், உங்களுக்கு டார்ச்சர் தரவும்தான் அந்த இடியட் ஃபோன் பண்ணிகிட்டிருக்கான். இதெல்லாம் ரொம்ப சீப்பான ஷார்ட் கட்ஸ். இப்ப பாருங்க...”

ரம்யா மளமளவென்று இணைப்பை மாற்றினாள். திரும்பி ஜன்னல், கதவு என்று பார்த்தாள். மூடியே இருந்தது.

“கொஞ்ச நேரத்துல பாருங்க...யார்னு தெரிஞ்சிடும்” என்றவள், “நான் கொஞ்ச நேரத்துல வரேன். நீங்கபாட்டுக்கு வேலையைப் பாருங்க...” என்று கதவைத் திறந்துகொண்டு மெல்ல வெளியேறினாள்... வாசலிலிருந்து வெளியேறும் முன் வேண்டுமென்றே, “நான் நாளைக்கு வாரேங்க...”என்று சப்தமாகக் குரல் கொடுத்தாள். குணசேகரும் அவனது பிளாட்டில் இருந்து லேசாகத் திரைச்சீலையை விலக்கிக் கொண்டு பார்த்துக் கொண்டேயிருந்தான். ரம்யா லிப்டில் சென்று ஏறவும் தொலைபேசி சப்திக்க ஆரம்பித்தது. தொடர்ந்தது சப்தம். உள்ளே சரண்யா அதையே வெறித்துப் பார்த்தாள். சிறிது நேரம் ஒலித்து அதன் ட்யூரேஷன் டைம் முடியவும் அடங்கியது. மீண்டும் ஆரம்பித்தது. இப்படியே ஒரு நான்கைந்து முறைதான் நடந்திருக்கும். ரம்யா திரும்பி வந்து காலிங் பெல்லை அழுத்தவும் பாய்ந்து வந்து திறந்தாள் சரண்யா. வேகமாக உள்ளே நுழைந்த ரம்யா கதவைச் சார்த்தியவளாக காலர் ஐ.டியில் எண்ணை எட்டிப் பார்த்தாள். மளமளவென்று டைரக்டரியைத் திறந்து குணசேகர் என்கிற பெயர்ப் பட்டியலுக்குள் புகுந்து

கச்சிதமாக அந்த எண்ணிடமும் போய் நின்றாள். பார்த்துக் கொண்டேயிருந்த சரண்யாவுக்குக் குப்பென்று வியர்த்துவிட்டது.

“இந்த ராஸ்கலா என்னை இந்தப்பாடு படுத்தியவன்?” என்றாள் காற்றுக் குரலில்.

“இதுதான் எவிடென்ஸ்...ஓயாம ரிசீவர் சப்தம் போட்டதுக்கு இந்த பிளாட்வாசிகளே சாட்சி. நாம இப்ப போலிசுக்குப் போகப் போறோம்...”என்றாள்.

“போலீசுக்கா?” –அதிர்ந்தாள் சரண்யா.

“அதுதான் சரியான வழிங்க. இல்லேன்னா இவன் மாதிரி ஆட்கள் அடங்கமாட்டாங்க...” என்றவள் வேகமாகக் கதவைத் திறந்துகொண்டு வெளியேறிப் பக்கத்து வீட்டு மாமிகளைத் திரட்டினாள். அவர்களை இழுத்து வரும்போது குணசேகர் சுதாரித்துக்கொண்டு வெளியே புறப்படத் தயாராகிவிட்டான். ஆனால் அவன் லிப்டை அதற்கென நெருங்கியபோது சப் இன்ஸ்பெக்டர் ஒருவரும் கான்ஸ்டபிள் ஒருவரும் அதே லிப்டில் வெளிப்பட்டு அவனை ஒருமாதிரிப் பார்த்துச் சிரித்தனர். அவனும் பதிலுக்கு வழிசலாகச் சிரித்தான்.

“என்ன எஸ்கேப்பா...?” –கான்ஸ்டபிள் நக்கலாகக்கேட்டார். குணசேகர் மிடறுகட்டினான்.

“எப்படி வசதி? உங்களை எல்லோரும் பார்க்க அடிச்சு இழுத்துகிட்டுப் போகவா, இல்லை நீங்களே மரியாதையா வர்றீங்களா?” –சப் இன்ஸ்பெக்டர் கொஞ்சம் குரலை உயர்த்தினார்.

“என்ன சார் சொல்றீங்க... வாட் யூ மீன்?” என்று அவனும் கொஞ்சம் பிரயாசை எடுத்தான்.

“யோவ் வாய்யா பேசாம...நீயெல்லாம் ஒரு மனுஷன்...” என்று கான்ஸ்டபிள் கத்தும்போதே பிளாட் மாமிகள் சூழ்ந்து கொண்டுவிட்டனர். ஆவனை அதிர்ச்சியும் ஆச்சரியமுமாகப் பார்த்தனர்.

“ஏண்டாப்பா...உன் மெகா சீரியல் மாதிரியேவிடாம ஃபோன்பண்ணிப் பாடாப் படுத்திட்டியே... என்ன குரூரமான புத்தி உனக்கு...” என்றாள் ஒரு மாமி!

சரண்யா முகம் மட்டும் ஏராளமாய் வெளிறிப்போயிருந்தது. கண்ணிரண்டும் நன்றியுடன் ரம்யாவைப் பார்த்தன.

மோட்டார் பைக்கில் அரவிந்தனையும் சரண்யாவையும் ஒருசேரப் பார்த்த வாட்ச்மேன் கதவைத் திறந்துவிட பைக் உள்ளே நுழைந்தது. முன்பக்கத்து தோட்டத்துப் பசுமையும், போர்டிகோவில் நிற்கும் காரும் சரண்யாவைக் கொஞ்சம் வாயைப் பிளக்க வைத்தது. “இதுவா ரம்யாவோட வீடு...” என்று கேட்கவும் வைத்தது.

“ஆமாம்...அதிகபட்சம் ஐந்து நிமிஷம்தான். அழுத்தமா ஒரு தேங்க்ஸ் சொல்லிட்டுக் கிளம்பிடனும். ஏன்னா நான் இங்க வந்து சந்தோஷமா ஒரு தடைவகூடத் திரும்பினதில்ல...”என்றான் அரவிந்தன்.

# 19

“ஏமாற்றங்களைத் தேடி யாருமே போவதில்லை. ஒருசிறு விஷயமானாலும் கூட உள்ளமெங்கும் ஒரு நம்பிக்கையை நிரப்பிக்கொண்டு அந்த நம்பிக்கையிலேயே விரைகிறது மானுட இயக்கம்.

ஆனால், தேடிவந்து ஏமாற்றிவிட்டுப்போகும் ஒரு அவலம் குறுக்கிட்டுவிட்டால் அதை எப்படிச் சமாளிப்பது?

தடைகளை மீறிக்கொண்டு போய் ஏதோ ஒரு நம்பிக்கையில்லாமல் இருக்காது என்று தூண்டப்பட்டு அதற்குப் பிறகும் ஏமாறுவது இருக்கிறதே அதைப்போல ஒரு கொடுமை இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.”

-தனது ‘உயிர்த்துடிப்பு’ புதினத்தில் மகரிஷி.

சரண்யாவும் அரவிந்தனும் அந்த மாளிகை போன்ற வீட்டினுள் நுழைந்தபோது ரம்யா உள்ளே சமையல்கட்டில் இருந்தாள். அரவிந்தனும் சரண்யாவும் வந்து நிற்கவும் துளியும் எதிர்பார்த்திராத ஒரு பாவனை காட்டினாள். ஒரு கையில் கரண்டியுடன், ஒரு கையில் பெருங்காய டப்பாவுடன் வெளிப்பட்ட அவளை சரண்யா ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

“வாங்க... வெல்கம்... உங்களை நான் இப்ப கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை...” என்கிற முகமன்களுடன் அவர்களை ஹாலில் சோபாவில் உட்காரச் சொன்னாள். பின் உள்ளே ஓடினாள். நைட்டியில் இருந்து புடவைக்கு மாறியவளாகத் திரும்பி வந்தபோது அரவிந்தன் ராமநாத்தின் படத்தை சரண்யாவுக்குக் காட்டி, “இவர்தான் நான் படித்து முடிக்கவே காரணம். இவர் ஸ்காலர்ஷிப்புலதான் மேல வரமுடிஞ்சது” என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அவளும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

ரம்யாவுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள். இந்தச் சந்திப்பில் சண்டை எதுவும் வந்துவிடக் கூடாது என்கிற மாதிரி ஒருவித எச்சரிக்கைக்கும் தன் மனத்தை ட்யூன்

செய்து கொண்டவள், “அரவிந்தன் சார்...முதல்ல கொஞ்சம் உக்காருங்க. உங்க சிஸ்டரையும் உக்காரச் சொல்லுங்க” என்றாள்.

அவர்கள் இருவரும் வந்து அமர்ந்தனர். சரண்யா ஆச்சரியம் விலகாமலேயே ரம்யாவைப் பார்த்தாள்.

“என்ன பார்வை இது...அப்புறம் இப்படி திடீர் விஜயம் செய்யக் காரணம் என்னன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?”

உனக்கு நன்றி சொல்லத்தான் ரம்யா வந்திருக்கோம். நீ செஞ்ச உதவிக்கு வார்த்தையாலே நன்றி சொன்னால் போதாது.” சரண்யா விஸ்தாரமானாள்.

“போதும்...போதும்...நான் இந்த உலகத்துல யாராலயும் பண்ண முடியாததையா பண்ணிட்டேன். நன்றியெல்லாம் ரொம்ப ஃபார்மலான விஷயம். எதுக்கு அதெல்லாம்?”

“இல்ல மிஸ் ரம்யா... ரொம்பக் க்ளெவரா, ரொம்ப ஃபாஸ்டா நடந்து அந்த குணசேகரைக் கையும் களவுமா பிடிச்சுக் கொடுத்திருக்கீங்க. விட்டிருந்தா அவன் எங்க குடும்ப நிம்மதியையே கெடுத்து மானத்தை வாங்கியிருப்பான்.”

“இப்ப எதுக்கு அந்தப்பேச்சு, அது முடிஞ்சுபோன விஷயம். இனி நீங்க போல்டாவும் தைரியமாகவும் நடந்துக்க முயலுங்க. அப்புறம் என்ன சாப்பிடறீங்க? நானே பண்ணின ஐஸ்கிரீ ம் இருக்கு...கொண்டு வரவா?”

ரம்யாவின் கேள்வி முடியும் முன் வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம். “அப்பா வந்துட்டார்” என்றபடி எழுந்தாள் ரம்யா. அரவிந்தனும் சரண்யாவும் திரும்பி வாசலைப் பார்த்தனர். ராம்நாத் இறங்கிக் கொண்டிருந்தார். அவரது நடையில் தடுமாற்றம். கார் கதவை இழுத்து மூடுவதில் அதீத சப்தம். ரம்யாவுக்குப் புரிந்துவிட்டது. வேகமாகப் போர்ட்டிகோவுக்குச் சென்றாள். அதற்குள் அவர் சுருண்டு விழுந்துவிட்டார்.

“ஐயோ... அப்பா...”என்றபடி அவரைத் தூக்க முயன்றாள். அவளால் முடியவில்லை. அரவிந்தன் புரிந்துகொண்டு

ஓடிப்போய் கை கொடுத்தான். சிரமப்பட்டுத் தூக்கி நிறுத்தினான்.

“என்ன சார் இது...?” நீங்களா சார் இப்படியெல்லாம் நடந்துக்கிறீங்க?” என்று அலமந்தான். சரண்யாவும் அப்பொழுதுதான் அவரைப் பார்க்கின்றாள். கம்பீரமான தோற்றம். ஆனால் ஆல்கஹால் அவரைக் கோணல் மனிதனாக்கிவிட்டிருந்தது. அரவிந்தனும் ரம்யாவும் அவரை உள்ளே நடத்திச் செல்ல முயலும்போது அவருக்கு வயிற்றைப்பிரட்டி வாந்திக்கு வரும்போல் தோன்றியது.

“உவ்வேய்ய்...” என்றவரின் வாயிலிருந்து தெரிந்த வாந்தித் திப்பிகள் அப்படியே கொச்சையாக அருகில் நின்று கொண்டிருந்த சரண்யாவின் முகம், கழுத்து, மார்பு என்று பட்டு அவளை அருவருப்பில் பிடித்து அழுத்தியது. ரம்யாவுக்கு தர்மசங்கடமாகிவிட்டது. அவரை அப்படியே அருகாமை சோபாவில் சரியவிட்டவள் சரண்யாவிடம் ஓடிவந்தாள்.

“சாரிங்க...வெரி சாரி...வாங்க பாத்ரூமுக்குப் போகலாம். ப்ளீஸ்...” என்று கைகளை உதறினாள்.

சரண்யாவும் அவள் பின்னால் சென்றாள்.

அரை மணிநேரம் கழித்து வேறு உடையில் வெளிப்பட்டாள். “உங்க உடையை தோய்ச்சு சலவை பண்ணிக் கொண்டு வந்து கொடுத்துடறேன்” என்று அவள் சொல்வதிலிருந்தே மிச்சத்தை அரவிந்தன் ஊகித்துக் கொண்டுவிட்டான்.

“உடையை விடுங்க ரம்யா...சார் ஏன் இப்படி நடந்துக்கிறார்?” என்று கசகசப்பான குரலில் கேட்டான். ராம்நாத்தோ அந்த சோபாவிலேயே சரிந்துவிட்டிருந்தார்.

ரம்யா ஒரு தெற்றுச் சிரிப்புச் சிரித்தாள்.

ரம்யா எனக்குக் கூட நீங்க அப்புறமா பதில் சொல்லலாம். இப்ப முதல்ல சாரை உள்ள கொண்டு போய்ப் படுக்க வையுங்க...” என்றான் அரவிந்தன். அவளும் அவரை அவன் உதவியுடன் எழுப்பி உள்ளே படுக்க வைத்துவிட்டுத்

திரும்பினாள். அப்போது ஞானப்பிரகாசம் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

வரும்போதே அவரிடம் நல்ல வேகம்.

“வாங்க அங்கிள்...”

“நான்தான் டெய்லி வரேனே...எங்க உன் அப்பன்?”

“இப்பத்தான் வந்தார். உள்ற படுக்க வச்சிருக்கிறேன்.”

“படுக்க வச்சிருக்கேன்னா? திரும்ப சுருதி ஏத்திக்கிட்டு வந்திட்டானா?”

“விடுங்க அங்கிள். அவர் குடிக்கிறதை நிறுத்தணும்னா அதுக்கு ஒரே வழிதான் இருக்கு.”

“என்னம்மா அது?”

“உக்காருங்க அங்கிள். ஆங்...இவங்களை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்க மறந்துட்டேன் பாருங்க...இவர் மிஸ்டர் அரவிந்தன். ‘திருமகள்’ பத்திரிகை சப்-எடிட்டர். இவங்க இவரோட சிஸ்டர் சரண்யா.”

“ஹலோ சார்...” என்றபடியே குலுக்கினார் ஞானப்பிரகாசம்.

“ஹலோ...நான் சாரோட ஸ்காலர்ஷிப்ல படிச்ச ஒரு ஏழை மாணவனும் கூட...”

“ஓ...வெரிகுட்! உங்க வரையில தர்மப்பிரபுவா இருந்தவர், இப்ப மொடாக் குடியனாகிட்டு வர்றார். பார்த்தீங்கல்ல... போகட்டும்...ரம்யா நீ ஏதோ வழி இருக்குன்னு சொன்னியே?”

ஞானப்பிரகாசம் ரம்யாவைக் கச்சிதமாகப் பிடித்தார். ரம்யா சற்று நெளிந்தாள்.

“அட என்னன்னு சொல்லும்மா...இந்த வாணியம்பாடில ஒரு டாக்டர் குடியை நிறுத்த ஏதோ மருந்தெல்லாம் தர்றாராமே...அந்த மாதிரி ஏதாவது வழியா?”

“இல்ல அங்கிள்.”

“பின்ன என்னம்மா வழி? இதெல்லாம் யோகேஷீக்குத் தெரிஞ்சதுன்னா ரெம்ப ஃபீல் பண்ணுவான். கொஞ்சம் முந்தி கூட வெட்டிங் கார்ட் டிசைன் பார்க்க என்னைக் கூப்பிட்டான். நான் உன்னைக் கூப்பிட்டேன். கப்பிள்ஸ் நீங்க செலக்ட் பண்ணாத்தான் நல்லா இருக்கும். ஆனா இவன் குடிச்சி கலாட்டா பண்ணா நல்லாவா இருக்கு?”

“கொஞ்சம் கூட நல்லா இல்லைதான்...என்ன பண்ண...அவராலே அவரை அடக்கவோ ஜெயிக்கவோ முடியல...என் அம்மா அவர் மனசுல போட்ட சூடு அப்படி.”

“அட போம்மா...இப்ப எதுக்கு அந்த பழைய குப்பைய எல்லாம் கிளறரே...எல்லோருக்கும் ஒரு தோல்வி இருக்கும்மா. ஒரு வெற்றியும் இருக்கும்மா. ஆனா வெற்றியை நாம அடையறதுக்கு முந்திதான் பெருசா நினைக்கிறோம். அடைஞ்ச பிறகு அதை நினைக்கிறதே இல்லை. பிடிக்காத தோல்வியை நினைச்சு நினைச்சுச் சாகறோம்.”

“கரெக்ட் அங்கிள்... அப்பா அப்படிச் சாக முடியாமதான் குடிக்கிறார்.”

“நீ என்ன சொல்றே?”

“இந்தக் கல்யாணம் நடக்கப் போறதில்லைன்னு சொல்லுங்க...அப்பாவும் குடிக்கிறதை நிறுத்திடுவார்.”

ரம்யா சொன்னது ஞானப்பிரகாசத்துக்கு ஷாக் அடித்த மாதிரி இருந்தது.

“உளறாதே...”என்றார் படு உக்கிரமாக.

“இதுதான் சத்தியம்” என்றாள் ரம்யாவும்.

அரவிந்தனுக்கும் சரண்யாவுக்கும் கிட்டத்தட்ட எல்லாமே விளங்கிவிட்டன.

“ரம்யா... யாருக்குக் கல்யாணம்? உங்களுக்கா?” கேட்டான்

அரவிந்தன். அவள் தலை ஆடி ஆமோதித்தது.

“எப்போ...என் கிட்ட சொல்லவேயில்லையே?”

“ஒரு இரண்டு நாளில் முடிவான விஷயம் இது அரவிந்த். அப்பா வராம இருந்திருந்தா இப்ப நான் என் கல்யாண விஷயத்தைத்தான் உங்ககிட்ட பேசிக்கிட்டிருப்பேன்.”

அவள் அப்படிச் சொல்லவும் சரண்யாவுக்கு என்னவோ கேட்கக் கூடாததைக் கேட்டது போல இருந்தது.

அரவிந்தன் முகத்திலும் ஏராள மாறுதல்கள்.

“அரவிந்த் என்ன ஆச்சு?”

“இல்ல... ஷாக்கா இருக்கு.”

“எனக்குக் கல்யாணம்கறது உங்களுக்கு ஷாக்க...?”

“அது இல்ல... பெண்ணோட கல்யாணத்தை அப்பாவால ஜீரணிக்க முடியலைங்கிற அந்த நிஜம் ஷாக்கா இருக்குன்னு சொன்னேன்.”

“பாவம் அப்பா...அவர் நிலை அப்படி.. எப்ப என் அம்மா விவாகரத்து வாங்கிட்டு என்னையும் கைக் குழந்தையா விட்டுட்டுப் போனாங்களோ... அப்ப இருந்தே அப்பா ரொம்ப பாவம்தான்.”

“ரம்யா... ஐயாம் வெரி சாரி... உங்க லைப்ல இவ்வளவு வெப்பமான உள்ளடக்கமா? இதுக்கு நடுவில்தான் நீங்க இலக்கிப் பற்றோட எழுதறீங்களா? ர்pயலி ஒண்டர்!”

“வலிதான் அரவிந்தன் என் வரைக்கும் வலிமை.”

“ரம்யா... உன் உபன்யாசத்தை முதலில் நிறுத்து. நீ பேசறதைப் பார்த்தா இந்தக் கல்யாணம் நின்னாகூடத் தேவலைன்னு நீயே நினைக்கிறா மாதிரிதான் எனக்கு இப்ப தோணுது.” ஞானப்பிரகாசம் குறுக்கிட்டுக் கத்தினார்.

“அப்கோர்ஸ் அங்கிள்... நான் பொய் சொல்ல விரும்பல...”

“அதுக்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஆனா ரொம்ப தப்பா சிந்திக்கிற நீ...”

“கல்யாணம் வேண்டாம்னு நான் சிந்திக்கிறது தப்பான எண்ணமா?”

“நிச்சயமா...முப்பத்திரண்டு வயசில கல்யாணம் பண்ணி ரிடையர் ஆகற வயசுல பசங்க காலேஜீக்குப் போகும்போது, அதைப் பார்த்து மலைச்சுப் போய் சம்பாத்தியமும் இல்லாம உடம்பில் தெம்பும் இல்லாம புழுங்கற மனுஷன்கிட்ட போயிக் கேள்... ‘பருவத்துல பண்ணிக்கிறதுதான் சார் கல்யாணம்... மத்ததெல்லாம் தண்டனை’ம்பான்.”

“இதோ பாருங்க...நான் இப்ப கல்யாணம் வோண்டாம்னு சொன்னதுக்குப் பல காரணங்கள் இருக்கு...நீங்க சொல்றதுல எவ்வளவு நியாயங்கள் இருக்கோ...அவ்வளவு நியாயம் என் பக்கமும் இருக்கு அங்கிள்.”

“தயவு செய்து ஆர்க்கியூ பண்ணாதே ரம்யா...கல்யாணம் நடக்கட்டும். ஒரு மாசம் போகட்டும். அப்புறமா நீ இப்படியெல்லாம் பேசமாட்டே... இங்க இவனை நான் பாத்துக்கறேன்.”

ஞானப்பிரகாசமும் ரம்யாவும் ஒருவர் மாற்றி பேசிக்கொண்டதிலிருந்து அவள் கல்யாணத்தில் அவருக்கு இருக்கும் அக்கறை...ஆனால், மகள் பிரிந்து போவதைச் சகித்துக்கொள்ள முடியாத ராம்நாத்தின் கோழை மனசு, இப்படி ஒரு சூழலில் எதற்குத் திருமணம் என்று எண்ணும் ரம்யாவின் நியாயமான எண்ணம் என்று எல்லாமே விளங்கிவிட்டன. சரண்யாவும் விளங்கிக் கொண்டது போல அரவிந்தனைப் பார்த்தாள்.

இடையில் ஞானப்பிரகாசத்தின் செல்ஃபோன் அவரைக் கூப்பிட்டது. அவரும் காதைக் கொடுத்தார். அடுத்த நொடியே தலையில் இடிவிழுந்தது போல ஆனார் ஃபோனில் அவர் மனைவிதான் பேசினாள்.

“என்னஙக... அந்த யோகேஷீக்கு ஆக்சிடென்ட் ஆகி ஸ்பாட்லயே உயிர் போயிடிச்சாம். இப்பதான் நம் வீட்டுக்கு

ஃபோன் வந்தது. கொஞ்சம் உடனே கிளம்பி வர்றீங்களா?”

ஞானப்பிரகாசத்திடம் நிலைகுலைவு!

# 20

மௌனமும் ஒரு த்வனிதான்.
ஒலியே நீ மோனத்துள் புகுந்து கொண்டதால் உன்னைக் கேட்கவில்லை என்று உன்னை நீயே ஏமாற்றிக்கொள்கிறாயா? கண்ணாடியில் பிம்பம் விழும் த்வனி கூட எனக்குக் கேட்கிறது. நீ அதை அறிவாயோ?

எல்லாம் நெஞ்சு நிற்கும் மீட்டலுக்கேற்ப... ஆனால் அறிவது, கேட்பது இவையெல்லாம் என்ன? வெறும் வார்த்தைகள் தானே? அவைகளின் பொருளும் உண்டான பொருளல்ல. அவ்வவ் வார்த்தை வரம்புள் சொல், ஓட்டம் நீடித்தவரை நாம் நமக்கு ஆக்கிக்கொண்ட பொருள். ஆனால் சொல் தாண்டிய உயிர், அவ்வுயிரைக் குடித்து, உயிருடன் உயிர் தந்த பொருளையும் விழுங்கிய இருள் பற்றி நாம் என்ன கண்டோம்?

-த்வனியில் லா.ச.ரா.

ஞானப்பிரகாசம் கிட்டத்தட்ட ஆகாயமளவு கண்ணாடி ஒரு மலை மேல் விழுந்து சிதறி நொறுங்கினார்ப் போல ஆகிவிட்டார். அந்தச் செய்தி அப்படிப்பட்டதாயிற்றே?

கவனித்தபடியே இருந்த ரம்யாவும் பதறிப்போனாள்.

“அங்கிள்...என்ன அங்கிள்...எனிபேட் நியூஸ்?”

அவள் கேள்விக்கு அவரிடம் பதில்லை. கண்கள் இரண்டும் அவர் வரையில் செருகிக்கொள்ளும் போல் தோன்றியது.

“அங்கிள்...என்ன விஷயம் அங்கிள்? சொல்லுங்க?” –அருகே சென்று அவர் முகத்தின் முன் குனிந்து கொண்டு சற்று குரலெடுத்துக் கேட்டாள்.

“என்னத்தம்மா சொல்வேன்? என்னத்த நான் சொல்வேன்? வாகனங்களை மனுஷன் கண்டுபிடிச்சிருக்காமலே இருக்கலாம். கால நேரத்தை ஜெயிக்க அவன் எடுத்த முயற்சியிலேயே சமயத்துல பலர் காலமாயிடறாங்க.”

“இப்ப யார் காலமானங்க... அதைச் சொல்லுங்க...”

“யோகேஷ்...” -அந்தப் பெயரைச் சொன்ன நொடி அவளும் அப்படியே மறுபேச்சின்றி சோபாவில் சாய்ந்துவிட்டாள்.

அரவிந்தனுக்கு விளங்கிவிட்டது.

“சார்... ரம்யாவுக்கு நிச்சயம் செய்யவிருந்த மாப்பிளையா சார் அவர்?” –சன்னமான குரலில் கேட்டான்.

ஞானப்பிரகாசம் திரண்ட கண்ணீருடன் தலையை ஆட்டினார்.

“கடவுளே” –அவன் உதடு துடிக்கத் தொடங்கியது. சரண்யாவும் சற்று சிலிர்த்தாள். ஞானப்பிரகாசம் மெல்ல எழுந்து நின்றார். அவர் உடம்பில் ஒருவித பதற்றம்.

“உன் அப்பன் இந்த விஷயத்தைக் கேட்டா சந்தோஷப்படுவான். உனக்கும் கூட இந்த ஆக்சிடென்ட் ஒருவகையில் உதவிகரமான விஷயம்தானே...? ஆனா நான்தான் எல்லா வகையிலயும் ஏமாந்திட்டேன். நிஜமாச் சொல்றேன் ரம்யா. நீ ஒரு நாள் பீல் பண்ணுவே...நிச்சயம் பீல் பண்ணுவே. நான் புறப்படறேன். பாடியக் கூட இன்னும் போலீஸ் வந்து எடுக்கலையாம். ஹீம்...அந்தக் கொடுமையான காட்சியைப் போய்ப் பார்க்கறேன். வர்றேன்” என்று பல மாதிரியே பேசிக் கொண்டே நடந்தார்.

அரவிந்தனுக்கு அவரை அந்த நிலையில் அனுப்புவது சரியானதாகப் படவில்லை. ரம்யாவும் அதை உணர்ந்தவள் போல “இருங்க அங்கிள்...நானும் வர்றேன்” என்றாள். அப்படியே அரவிந்த், சரண்யா இருவரையும் பார்த்தாள். அதற்குப் பொருள் நீங்களும் கிளம்புங்கள் என்பதே.

அரவிந்தனுக்குப் புரிந்தது.

“ரம்யா நான் போறேன். நீங்க வேண்டாம். சொன்னாக் கேளுங்க. சாரோட நான் போறேன். நான் பத்திரிகைக்காரன். எனக்கு ஆக்ஸிடெண்ட் பார்மாலிட்டீஸெல்லாம் ஓரளவு தெரியும். நான் பாத்துக்கறேன்” என்றவன். “அக்கா நீ ஒரு ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போயிடு. நான் வந்துடறேன்”

என்றபடியே ஞானப்பிரகாசத்தோடு வெளியேறினான். அவர்கள் இருவரும் சென்றுவிட்ட நிலையில் சில நிமிடங்கள் அங்கே நிசப்தம்.

“ரம்யா...உன் மனநிலை எனக்கு நல்லா புரியுது. ஒரு வகையில் நீ என்னைவிடப் புண்ணியம் பண்ணவ. உங்க கல்யாணத்துக்குப் பிறகு இப்படி ஆயிருந்தா எப்படி இருந்திருக்கும்னு யோசிச்சுப் பாரு. இது நல்லதுக்கு தான்”என்று அவளுக்குத் தோன்றிய விதத்தில் ஆறுதல் கூறினாள். ரம்யா பதிலுக்கு ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இறுக்கமான மௌனம் அவளை வளைத்துப் பிடித்திருந்தது.

சரண்யாவுக்கு அவளைத் தனிமையில் விடுவது நல்லது என்று தோன்றியது. மெல்ல எழுந்தாள், கெடிகாரத்தில் கச்சிதமாக பத்துமணிக்கான பெண்டுல சப்தம். அந்த சப்தம் ரம்யாவை நிமிர்த்தியது.

“சரிம்மா நான் புறப்படறேன்.”

“மணி பத்தாயிடுச்சே...”

“இல்ல ஆன்ட்டி நீங்க இப்ப போக வேண்டாம்.”

“என்ன ரம்யா இது புதுசா?”

“எது?”

“இந்த சரண்யா எப்போதிருந்து ஆன்ட்டியானேன்?”

“...”

“என்ன நான் கேட்டப்பறம்தான் உனக்கு நீ அப்படிக் கூப்பிட்டதே தெரியவருதா?”

“ஆமாம்... நம்மை விடப் பெரியவங்களை ஆன்ட்டீன்னு கூப்படறது கொஞ்சம் சௌகரியமாத்தான் இருக்கு.”

“இல்ல...நீ என்னை சும்மா பேர் சொல்லியே கூப்பிடு.”

“இல்ல...முடியாது...சிலரோட பர்சனாலிடி பார்க்கும் போதே

நம்மை அமுக்கும். அவங்ககிட்ட நமக்கு ஃப்ரியாவே ஒரு ஓபனிங் கிடைக்காது. உங்க வரையில கூட நான் அப்படித்தான் கஷ்டப்பட்டேன். நிச்சயம் பேரெல்லாம் சொல்லிக் கூப்பிடமாட்டேன். என்னால அது முடியவும் முடியாது.”

அந்தப் பதிலின் போதே ஒரு தும்மல் போட்ட ரம்யா பின் வரிசையாய் சங்கிலிப் பிணைப்புப் போல தும்பினாள்.

“என்ன ஜலதோஷமா?”

“ஆமாம்...திடீர்னு பிடிச்சிக்கிச்சு. ஐ திங்க் வெளியில கிளைமேட் மாறுதுன்னு நினைக்கிறேன்.”

“நீ இப்ப தும்மறதைப் பார்த்தா தொண்டை கிழிஞ்சிடும் போலிருக்கு. சுக்குக் கஷாயம் போட்டுச் சூடாக் குடி. கொஞ்சம் இதமா இருக்கும்.”

“எனக்கு அதெல்லாம் போடத் தெரியாதே?”

ரம்யாவின் அந்த பதிலைத் தொடர்ந்து சரண்யாவின் பார்வை சமையல்கட்டு எங்கே என்றுதான் பார்த்தது.

“என்ன பாக்கறீங்க?”

“சமையல்கட்டு எங்க இருக்கு...? சொல் நான் போட்டு எடுத்துக்கிட்டு வர்றேன்.”

“ஐயோ...வேண்டாம். எங்கிட்ட அமிர்தாஞ்சனம் இருக்கு.”

“அது எல்லாக் கடையிலயும்தான் இருக்கு. ஆனா இப்ப உனக்கு நாட்டு மருந்துதான் தோது” என்றபடியே எழுந்தாள் சரண்யா.

“ஐயோ ஆண்ட்டி வேண்டாம். சொன்னாக் கேளுங்க. உக்காருங்க.” –அவள் தடுத்துப் பார்த்தும் பயனில்லை. ரம்யாவும் எழுந்து பின் தொடர்ந்தாள்.

சரண்யா பாத்திரம், பால், சர்க்கரை, சுக்கு என்று கேட்கக் கேட்க எடுத்துத் தந்தாள். அப்படியே சமையல்கட்டை ஒரு

பார்வை பார்த்தவள் “இன்னும் கூட நீ பெட்டராக இந்த ரூமை வச்சுக்கலாம்” என்றாள்.

“வெச்சிக்கணும். எனக்கு எல்லாமே அழகா இருக்கணும். ஆனா கொஞ்ச நாளா ஒரு மனச் சோர்வு...”

“அப்பா இப்படி இருக்காரேன்னா?”

“அதுவும் ஒரு காரணம்.”

“உன் அம்மா?”

“வேண்டாம். அவங்களைப் பத்திப் பேசவேண்டாம். நான் அந்த வகையில ரொம்பப் பாவம் பண்ணினவ.”

“உனக்குப் பாவ புண்ணியங்களில் நம்பிக்கை இருக்கா?”

“நிச்சயமா? ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம் கர்மவினைதான்கறது என் நம்பிக்கை.”

“ரொம்ப ஆச்சரியமா இருக்கு உன் கருத்து.”

“இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு?”

“நிறைய இருக்கு ரம்யா. நம்ம நம்பிக்கைகள் வினோதமானது. பெரும்பாலும் உணர்ச்சி பூர்வமானது. ஒரு பூவை நாம நேசிக்கறோம்னா அது அழகா இருக்குங்கிறதால...தங்கத்தை விரும்பக் காரணம் அது கறுக்காததால மட்டுமில்லை. அது விலைமதிப்புமிக்கதுங்கிதாலயும்தான். இதே நிலைப்பாடுதான் நாம் வெறுக்கிற விஷயங்கள் மேலயும். சொரியும் சிரங்குமா இருந்தா உடனே மனசு அதை வெறுத்து ஒதுக்குது. அதேபோல நாற்றத்தையும் நாம சுயநலத்தோடதான் நடந்துக்கறோம். எல்லா இடங்களிலேயும் மனுஷ மனசு தனது உணர்ச்சி சார்ந்த நலன்களை மையமாகவெச்சே முடிவுகள் எடுக்கும். ஒரு வேடிக்கை என்னன்னா கடவுள் நம்பிக்கை சார்ந்த, அப்புறம் இந்தக் கர்மா அப்படி இப்படிங்கிற விஷயத்துல மட்டும் எந்த தெய்விக அனுபவமும் இல்லைன்னாலும் செயற்கையா ரொம்பப் பரவசப்படுவோம்.”

“எப்படி? எப்படி?”

“இப்ப எனக்கு விஷ்ணு மேல பக்தின்னா விஷ்ணு என்னைப் பாதிச்சிருக்கணும். ஆனா அதுக்கு எனக்கு சந்தர்ப்பமே இல்லை. இந்த நிலையில நான் பரம விஷ்ணு பக்தையா மூச்சுக்கு முன்னூறு தடவை ‘நாராயணா’ ‘நாராயணா’-ன்னு சொன்னேன்னா அது எப்படிப்பட்டதா இருக்கமுடியும்?” சரண்யாவின் கேள்விக்கு முன் ரம்யாவால் பதிலே கூற முடியவில்லை.

சுக்குக் காபியோ தயாராகிவிட்டிருந்தது. அதை ஒரு டம்ளரில் நுரைக்கக் கொட்டி ஆற்றியபடியே... “பல விஷயங்கள்ல நாம் எப்படிப்பட்டவங்கன்னு நமக்கே தெரியாது. அதுதான் உண்மை. அதைத்தான் சொல்ல வந்தேன்” என்றாள் சரண்யா.

ரம்யாவிடம் திகைப்பு. இவ்வளவு தூரம் இவள் சிந்திக்கக் கூடியவள் என்பதே அதுவரையில் புதிது. மிகவும் ரிசர்வ் டைப்... பயந்த சுபாவி...என்று நினைத்ததெல்லாம் ஒரு பிழை போலத் தோன்றியது.

அதே சமயம் சரண்யா அந்த சமையல்கட்டை தன்னையுமறியாமல் சீர் செய்யத் தொடங்கவிட்டாள்.

“ஆன்ட்டி போதும்... வாங்க பாத்துக்கறேன்.”

ரம்யா அழைத்தும் வராமல் எல்லாவற்றையும் சரி செய்து அழகாக அடுக்கி வைத்துவிட்டு பைப்பையும் இறுக்க மூடினாள். அப்படியே “பைப்பை சரியா மூடாதவங்களைக் கண்டா எனக்குப் பத்திக்கட்டு வரும். அவங்கள்ளாம் ரொம்ப கவனக்குறைவானவங்க மாத்திரமில்ல... அவங்க கையில காசே தங்காது... தெரியுமா உனக்கு? இது என் நம்பிக்கை.”

பைப்பை இறுக்க மூடியதற்காக அவள் கொடுத்த விளக்கத்தில் புதிய செய்தி.

“இது என்ன உங்க கண்டுபிடிப்பா...இல்லை யூகமா?”

“இது என் நம்பிக்கை. கொஞ்சம் அசட்டு நம்பிக்கை தான். ஆனா வெரிவெரி ஸ்ட்ராங். இதுவரை ஒரு ஐம்பது பேரைப்

பத்துட்டேன். என் நம்பிக்கைதான் அவங்க கிட்ட ஜெயிச்சிருக்கு.”

“நிஜமாவா?”

ரம்யா சற்று வாயைப் பிளந்தாள். சுக்குக் காபி வேறு பரமசுகமாக இருந்தது. தொண்டை ஒரு புது சுகத்தை உணர்ந்தது. ஒரு அரை மணிப் பொழுதுக்குள் எல்லாமே மாறி மிகமிக சகஜமாக அவள் ஆகிவிட்டது போலவும் இருந்தது. குறிப்பாக சரண்யா எடுத்துக் கொண்ட உரிமையும் அக்கறையும் வெளிப்படையான பேச்சும் யோகேஷின் கொடுமையான மரணத் தாக்குதலையே ஒன்றுமில்லை என்று செய்துவிட்டது.

அந்தச் சூழலில் யோகேஷ் பற்றி நினைக்கக் கூட அவளுக்குத் தோன்றவில்லை. டாபிக் அப்படியே மாறி வெளவேறு விஷயங்களுக்குப் போனபடியே இருந்தது.

ஒரு மணி வரை இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். அப்படியே தங்களை மறந்து உறங்கிப் போனார்கள்.

மணி இரண்டு.

நள்ளிரவைக் கடந்த அந்த வேளையில் ஜி.எச் இல் இருந்து தனது குடியிருப்புக்குள் நுழைந்த அரவிந்தன் வீடு பூட்டியே இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்.

சரண்யாவை அந்த இரவில் அனுப்பித்தர ரம்யா உடன்பட்டிருக்கமாட்டாள் என்று மின்னல் வேகத்தில் யூகித்தவன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

யோகேஷின் மரணம் அவன் மனத்தில் ஒரு முள்ளாக உறுத்திக் கொண்டுதான் இருந்தது. கூடவே ஒரு இனம்புரியாத மகிழ்ச்சியும் இருப்பது மட்டும் எதனால் என்று தெரியவில்லை.

சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டியபடி பேன் ஸ்விட்சைப் போட்ட போது அந்த மகிழ்ச்சி உணர்ச்சியே கொஞ்சம் நிறம் மாறி ‘நீ இன்னும் முழுமையான நல்ல

மனிதனாக ஆகவில்லை. அதனாலதான் யோகேஷ் மரணம் உன்னைப் பெரிதாக பாதிக்கவில்லை' என்று கீச்சுக்குரலில் சொல்வதுபோல உணர்ந்தான்.

நல்லவேளை திருமணம் ஆகவில்லை என்று ரம்யாவுக்காகக் கரிசனப்படும்போதே 'இப்படி ஒரு அற்ப ஆயுளா இவனுக்கு' என்று பரிதாபமும் பட்டான். இறுதியாக அப்படியே அவ்வளவு எண்ணங்களையும் ஓரம்கட்டிவிட்டு ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்கத் துவங்கினான். அவனுக்கு அவனிடமிருந்தே தப்பிக்க வேறுவழி தெரியவில்லை.

விடிந்துவிட்டது.

முதலில் கண்விழித்தது ராம்நாத்தான். கை காலை உதறிக் கொண்டு எழுந்தவர் எப்படி வீட்டுக்கு வந்தோம்? என்கிற கேள்வியில் விழுந்து யார் கொண்டுவந்து விட்டிருப்பார்கள்? என்று யோசித்தபடியே அறையைவிட்டு வெளியே வந்தார். மெல்ல ரம்யாவின் அறைப் பக்கமும் பயத்தோடு எட்டிப் பார்த்தார். சரண்யாவைக் கட்டிக் கொண்டு ரம்யா தூங்குவது அவருக்கு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

# 21

‘ஒருவன் பாவம் செய்ய அவனுடைய மனசு, சந்தர்ப்பம் இரண்டும் காரணமாகின்றன. நாம் பல பாவங்களைச் செய்யமுடியாமல் சந்தர்ப்பமே நம்மைக் கட்டிப் போட்டிருக்கலாம். எனவே ஒரு பாவியைப் பார்க்கும்போது, ‘அம்பிகே... இந்தப்பாவத்தை நானும் கூடச் செய்திருக்கலாம். ஆனால், அதற்குச் சந்தர்ப்பம் தராமல் நீ கிருபை செய்தாய். அந்தக் கிருபையை நீ இவனுக்குச் செய்யம்மா...” என்று பிராத்திக்க வேண்டும்.’

-தெய்வத்தின் குர’லில் காஞ்சிப் பெரியவர்

ராம்நாத் எட்டிப் பார்த்த போது சரண்யாவும் ரம்யாவும் உறங்கிக் கொண்டிருந்த கோலம் அவருக்கு மிகமிக வியப்பை அளிக்க ஆரம்பித்தது. சரண்யாவை அவர் முன்பின் பார்த்திராததால் அவள் யாராக இருக்கமுடியும் என்ற கேள்வியும், கூடவே தோழியாக இருக்குமோ என்கிற சந்தேகமும் வந்தபின், சரண்யாவின் சற்றே முதிய தோற்றத்தால் அதுவும் அழிந்து போனது. நெடுநேரம் வரை அருகே சென்று எழுப்பவும் தோன்றாமல் வேடிக்கை பார்க்கவும் இயலாதபடி ஒரு குழப்பம் அவரை ஆட்டுவித்தது. இறுதியாக வாட்ச்மேனைக் கேட்டால் விபரம் தெரியக்கூடும் என்று எண்ணியவர் வாசல் பக்கம் வந்தார்.

வாட்ச்மேன் மெயின்கேட் அருகே உள்ள அவனது கூட்டை ஒட்டித் திருட்டுத்தனமாக பீடி பிடிக்கத் தயாராகிக் கொண்டிருந்தான். ராம்நாத் அவன் பெயரைச் சொல்லி மிதமாக அழைத்தார்.

“கிருஷ்ணா...டேய் கிருஷ்ணா.”

அவனும் ஓடிவந்தான். ராம்நாத்தை ஒரு தினுசாகப் பார்த்தான்.

“என்னடா பாக்கறே...ஆமா...யாருடா அது ரம்யா ரூமுக்குள்ளே...?”

“தெரியலீங்களே...”

“என்ன தெரியலை... உன்னைத் தாண்டித்தானே அவங்க உள்ள போயிருக்கனும்?”

“பாப்பாவோட சினேகிதங்கன்னு நினைச்சி விட்டேங்க... ஏங்க அவங்க யாருன்னு உங்களுக்கே தெரியாதா?”

“அது சரி... இதுக்கு முந்தி வந்திருக்காங்களா?”

“இவங்க வந்ததில்லை. ஆனா இவங்களோட வாட்டசாட்டமா வந்த ஒரு இளவட்டப் பிள்ளை வருவாரு...நேத்து ராத்திரி கூட அவரும் இந்தம்மாவும் வந்தாங்க. பின்னாலேயே நம்ம ஞானப்பரகாசம் சார் வந்தாரு.”

“நான் வர்றதுக்கு முந்தியா... பிந்தியா?”

“அப்புறம்தாங்க...என்னன்னு தெரியலை. ஞானப்பிரகாசம் சார் அழுதுக்கிட்டே போனாரு. அவரை நானே அப்பிடிப் பாத்ததில்ல...”

அவன் பதில் ராம்நாத்தைச் சற்றுத் திகைக்கச் செய்துவிட்டது. அதற்குமேல் அவனிடம் எதுவும் பேசாமல் திரும்பி வந்து போர்ட்டிக்கோவை ஒட்டி காரிடார் வராண்டாவில் கிடந்த பிரம்புச் சேரில் விழுந்தார்.

நெற்றியில் ரேகை விழும் அளவு தீவிர சிந்தனை. அப்போது பார்த்துத் தொலைபேசியின் கூப்பாடு வேறு. ஓடிப்போய் அதை எடுக்கும் போது அந்த சப்தம் ரம்யா,சரண்யா இருவரையும் கூட எழுப்பிவிட்டது.

சரண்யா கண்விழித்த வேகத்தில் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருந்து நின்றாள். ரம்யாவிடம் சற்று இயல்பான வேகம்.

ராம்நாத்தின் காதுகளில் அரவிந்தன் பாய்ந்திருந்தான்.

“ஹலோ ரம்யா...”

“நான் அவ அப்பா... ரம்யா தூங்கறா”

“ஓ...ராம்நாத் சாரா? நமஸ்காரம் சார்...என் பேர் அரவிந்தன். நௌ ஹவ் ஈஸ் யுவர் ஹேங்கிங்?”

“ஹேங்கிங்...”

“சாரி சார்...நான் கொஞ்சம் டீசன்டா அப்படிச் சொன்னேன். நேத்து ராத்திரி நீங்க மோசமான கண்டிஷன்ல இருந்தீங்க. இந்த மாதிரி உங்களை நான் பல தடவை பார்த்துட்டேன். அதே சமயம் நீங்க ஹேபிச்சுவலா குடிக்கிறவர் இல்லை. இப்ப உங்க மைண்ட் ஸ்லைட் டிப்ரஷன்ல இருக்கிறதால குடிக்கிறதா ரம்யா சொன்னாங்க. என்னதான் டிப்ரஷன்னாலும் குடி அதுக்கு ரைட் சொலூஷன் கிடையாது. என்னடா உங்க பர்சனல் லைப்ல தலையிடறேன்னு நினைக்காதீங்க. உங்க ஸ்காலர்ஷிப்ல் படிச்சவன் நான். உங்க மேல இருக்கிற அக்கறையில் சொல்றேன்.”

அரவிந்தன் ராம்நாத்தின் காது கிடைத்த சந்தர்ப்பத்தை விடக்கூடாது என்பது போல ஒரே மூச்சில் பேசியவன், சடடென்று விபத்தில் உயிரை விட்டிருந்த யோகேஷின் நினைப்பில் சிக்கியவனாய் அந்த விஷயம் ராம்நாத்துக்குத் தெரிந்திருக்கும் என்ற யூகத்தில், “ஐ ஆம் வெரி வெரி சாரி சார்...கண்டலன்ஸ் பாஸ் பண்ண வேண்டிய இந்த நேரத்துல நான்வேற விஷயங்களைப் பேசிட்டேன். ஐ ஆம் வெரி சாரி. அதே சமயம் ரம்யாவுக்கும் யோகேஷீக்கும் நிச்சயமெல்லாம் எதுவும் நடக்கலேங்கிற நல்ல விஷயத்துக்காக ஒரு பக்கம் சந்தோஷப்படறேன்...”என்றான்.

ராம்நாத்துக்கு ஒரே குழப்பம்.

“ஏ மேன்...என்னப்பா பேசற நீ...கண்டலன்ஸ் அது இதுன்னு உளர்றே...? நீ எந்த ராம்நாத் கூட பேசறே? சரியான ஆள் கூடத்தான் பேசறியா நீ...?”

“சார்... நீங்க பேசறதைப் பார்த்தா உங்களுக்கு எதுவும் தெரியாதுபோல இருக்குதே... ஐ ஆம் சாரி... அங்க மிஸ்

ரம்யா அல்லது என் சிஸ்டர் கிட்டயாவது ரிசீவரைக் கொடுங்களேன்.”

அரவிந்தன் அப்படிச் சொன்ன மறுநொடி ரம்யா பெட்ரூமில் உள்ள கார்ட்லெஸ் போனைக் கையில் எடுத்தவளாக, “மிஸ்டர் அரவிந்த்... அப்பாவுக்கு எதுவும் தெரியாது. நாங்க கூட இப்பத்தான் எழுந்தோம். நாலு மணிவரைக்கும் தூக்கம் வரலை. அப்புறம் எப்பத் தூங்கினேன்னும் தெரியல. நீங்க போன காரியம் என்ன ஆச்சு? யோகேஷ் பாடி...?” ரம்யா மென்று விழுங்கினாள்.

“இந்த நிமிஷம் போஸ்ட் மார்ட்டத்துக்குத் தயாராகிட்டிருக்கலாம். ஞானப்பிரகாசம் சார்தான் ரொம்ப ஒடைஞ்சு போயிட்டார். யோகேஷோட பாடியைப் பாத்தப்புறம்தான் அவர் எவ்வளவு யூத்புல் பர்சனானாலிடின்னு தெரிய வந்தது. என்னன்னு சொல்றது ரம்யா? டைம்... டைம்னு சொல்றோம். பெரிய கொலைகாரன் உண்மையில டைம்தான்.”

அவன் பதில் ராம்நாத்தை உலுக்கி விட்டது. அப்படியே தொலைபேசியைப் போட்டுவிட்டு ரம்யாவை நோக்கி ஓடினார். அவள் முன் நின்றார். கையும் காலும் நடுங்க. “ரம்யா...ரம்யா...என்னம்மா விஷயம்? என்ன ஆச்சு?” என்று நா குழறினார்.

“நீங்க டிரெஸ் சேஞ்ஜ் பண்ணிக்கிட்டு கிளம்புங்கப்பா... நானும் அஞ்சு நிமிஷத்துல ரெடியாயிடுறேன். இவங்களை இவங்க அபார்ட்மென்ட்ல கொண்டு போய் விட்டுட்டு நாம ஞானா அங்கிளைப் போய்ப் பார்ப்போம்.”

“என்னம்மா நடந்தது...? அதைச சொல்லும்மா முதல்ல.”

ரம்யா பதிலுக்கு மௌனமாய் நின்றாள். பெருமூச்சு விட்டாள். எல்லா உணர்ச்சிகளையும் வார்த்தையால் கூறிவிட முடியாது என்கிற மாதிரித் தவித்தாள். அவர் பார்வை அப்படியே ஓரமாய் ஒதுங்கி நிற்கும் சரண்யா மேலும் சென்றது. ராம்நாத் பார்க்கவும் அவளுக்குக் கூச்சம் ஏற்பட்டுத் தலை குனிந்துகொண்டாள்.

“ரம்யா...வாய் திறந்து பேசும்மா...ரியலா உன் மூஞ்சியில் எப்படி முழிக்கிறதுங்கிற குழப்பத்திலிருந்துதாம்மா தடுமாறி நின்னேன். ஆனா ஒரு போன்கால் என்னை இப்ப என்னென்னவோ யோசிக்க வைக்குது. யோகேஷீக்கு என்னம்மா? என்திங் சீரியஸ்?”

ராம்நாத் அவள் கையைப் பிடித்துக் கொண்டார். விடு விடு வென்று அது நடுங்கியது. அவள் உடனே அவரது கரத்தை அழுந்தப்பற்றி, “ஐ ஆம் வெரி சாரிப்பா...யோகேஷ் இப்ப உயிரோடு இல்லை. ஒரு ஆக்ஸிடெண்ட்ல...” அவளால் முடிக்க முடியாதபடி குரல் உடைந்துபோனது.

அடுத்த நொடி ராம்நாத் வெட்டப்பட்டது போல அப்படியே அருகில் விழுந்துவிட்டார்.

காரை ரம்யாதான் ஓட்டினாள். ராம்நாத்திடம் சரியான ஸ்மரணை இல்லை. சரண்யா கவனித்தபடியே பின் சீட்டில் உட்கார்ந்திருந்தாள். அவள் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அதே சமயம் ராம்சாத் யோகேஷின் மரணத்தை ஒரு சம்பிரதாய துக்கமாக எடுத்துக் கொள்ளப் போகிறாரா... இல்லை...பெரிய இழப்பாக உணர்ந்து துக்கப்படப்போகிறாரா என்ற கேள்வி அவளுக்குள் விஸ்வரூபத்தில் இருந்தது. காரணம்... அவருக்கு ரம்யாவின் திருமணத்தில் ஈடுபாடு இல்லை என்ற அந்த பாசப்பின்னணி. ஆனால் அவர் பாதிக்கப்பட்டது போலத்தான் தோன்றியது.

“ரம்யா... கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாம போச்சேம்மா. உன் கல்யாணத்தை எப்படியெல்லாமோ நடத்தணும்னு நினைச்சிருந்தேன். இப்ப அப்படியே அவ்வளவும் இடிஞ்ச மண் கோட்டையாயிடுச்சேம்மா?” என்று கண்களில் கண்ணீர் பெருக அழுதார். ரம்யா சட்டென்று காரை ஒரு ஓரமாக நிறுத்தினாள். ஆழமாக விசும்பும் ராம்நாத்தை ஒரு பார்வை பார்த்தாள்.

“அப்பா நீங்க ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது. உங்களைப் பொருத்தவரை இது ஒரு சம்ப்ரதாய துக்கம். நானும் கூட அப்படித்தான் எடுத்துக்கணும். ஒரே ஒரு

சந்திப்பு. ஒரு அரை மணி நேரம் பேசியிருப்போம். இருந்தாலும் ரொம்ப அர்த்தமுள்ள சந்திப்பு அது. மிஸ்டர் யோகேஷ் கிட்ட நிறைய உண்மை இருந்தது. செத்துப்போனதும் உண்மைதான்னு நான் நினைக்கிறேன். நீங்க அனாவசியமா பொய்யெல்லாம் பேச வேண்டாம். உங்க வரையில் என் கல்யாணம் எந்த விதத்தில் நின்னாலும் உங்க மனசுக்குள்ள மாலைபோட்டு வரவேற்பீங்க...ஒரு விதத்துல அதை நினைந்து நான் சந்தோஷம்தான் படறேன். இதனால் உங்களை நான் வெறுத்திடுவேனோன்னு பயப்பட வேண்டாம். அதே சமயம் இனி கல்யாணப் பேச்சை எந்தக் காலத்திலும் எடுக்கக் கூடாது. எடுக்கவும் மாட்டீங்க எனக்குத் தெரியும்.”

அழுத்தமாகச் சொல்லிவிட்டுத் திரும்பவும் காரைக் கிளப்பியவள் பின்னால் திரும்பி சரண்யாவை ஒரு பார்வை பார்த்தாள். சரண்யா முகத்தில் எராளமான சலனங்கள்.

“பை த பை அப்பா இவங்க மிஸ்டர் அரவிந்தனோட சிஸ்டர். அறிமுகப்படுத்திக்க மறந்துட்டேன். நேத்து இவங்க கேஷீவலா நம்ம வீட்டுக்கு வந்தப்பதான் யோகேஷ் ஆக்ஸிடெண்ட் நியூஸ் வந்தது. மிஸ்டர் அரவிந்தனும் ஞானா அங்கிளும் உடனே கிளம்பிப் போனதால இவங்க நம்ப வீட்டில தங்கும் படி ஆயிடிச்சு. நீங்களும் இவங்க மேலயே வாந்தி எடுத்து தர்மசங்கடப்படுத்திட்டீங்க...”

ரம்யா சரண்யா பற்றி சொல்லிவிட்டு வாந்தியெடுத்ததைப் பற்றியும் சொன்ன போது ராம்நாத்துக்குக் கூச்சமாகிவிட்டது. “ஸாரி மேடம்... வெரி ஸாரி மேடம்...” என்று மிகவும் எக்ஸைட் ஆனார்.

“நோ அப்பா... அவங்க டிரெஸ் இப்ப நம்ம வீட்லதான் இருக்கு. நீங்கதான் அதைச் துவைச்சு சலவை பண்ணிக் கொடுக்கணும். அப்பதான் அவங்களுக்கு நீங்க ரியலா சமாதானம் செய்த மாதிரி ஆகும்” என்றாள்.

“ரம்யா அதெல்லாம் வேண்டாம்...” என்று சரண்யா உடனே மறுக்க, “இல்லையில்லை... நான் நிச்சயம் செய்யறேன். அதுதான் சரியான பரிகாரம்” என்று ராம்நாத்தும்

ஆமோதிக்க சரண்யாவுக்குத் தர்ம சங்கடமாகிவிட்டது.

அப்படியே அவளது அபார்ட் மெண்டுக்கு வந்து சேர நன்றி கூறியபடி கீழே இறங்கினாள்.

கச்சிதமாக எப்படியோ போலீஸில் இருந்து மீண்டும் உள்ளே நுழைந்து கொண்டிருந்த அந்த டி.வி. நடிகன் குணசேகரும் அவளையும் ராம்நாத்தையும் பார்த்தான்.

அவன் கண்களில் தீப்பிடித்துக் கொண்டது.

# 22

‘ஸ்ரீ ராமனுக்கு வனவாசத்தில் ஏற்பட்ட கஷ்டம், ஆபத்து எல்லாம் பெரியவை. ஊருக்குப் போகும் குழந்தைக்குத் தாயார் கட்டுச்சாதம் கொடுப்பது போல ராமன் வனவாசம், செல்லும் போது கௌசல்யையும் செய்தாள். பதினான்கு வருஷம் கெடாமலிருக்க பட்சணம் எது? குழந்தைக்கு எதைத் தரலாம் என்று யோசித்தாள். பின் நிரந்தரமான பட்சணமாகத் தர்மத்தைத்தான் கட்டிக் கொடுத்தாள்.’

-தெய்வத்தின் குர’லில் காஞ்ச் முனிவர்.

காரில் இருந்து இறங்கி சரண்யா செல்வதையும் காருக்குள் ராம்நாத்தையும் கூடவே ரம்யாவையும் பார்த்த குணசேகருக்கு யாரோ அவன் வயிற்றுக்குள் குச்சியை வைத்துக் கலக்குகிற மாதிரி இருந்தது. அவன் பார்ப்பதைக் காரை வளைத்துத் திருப்பும்போது ரம்யாவும் பார்த்தாள். அவள் பார்க்கவும் அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டான். அவளோ கழுத்தை வளைத்துத் திருப்பி கார் நெடுந்தூரம் செல்லும் வரை பார்த்துக் கொண்டே இருந்தாள்.

ராம்நாத்துக்கும் அவள் அப்படிப் பார்ப்பதில் ஏராளமான காரணம் இருப்பது தெரிந்தது.

“ரம்யா... யாரும்மா அவன்? அவன் பார்வையும் சரி இல்லை. உன் பார்வையும் சரி இல்லையே...”

“நீங்க டி.வி. பார்ப்பதே இல்லையாப்பா...?”

“எதுக்கு இப்ப டி.வி.யப் பத்திக் கேக்குறே?”

“இவன் மூஞ்சியை அதுல நீங்க அடிக்கடி பார்க்கலாம்.”

“ஓ...சீரியல் ஆக்டரா?”

“கொஞ்சம் சீரியஸான ஆக்டரும் கூட...”

“வாட் டு யூ மீன்...?”

அவர் கேட்கவும் ரம்யாவும் சரண்யா பிரச்னையை ஆதியோடு அந்தம் கூறி முடித்தாள். அதன் பின் ராம்நாத்திடம் ஒரு அழுத்தமான மௌனம் மட்டுமே மிஞ்சியது. கார் அதன் போக்கில் போனபடி இருந்தது.

“என்னப்பா...எதுவும் சொல்ல மாட்டேங்கறீங்க?”

“என்னத்தச் சொல்றது... ஒரு பெண் தனியா காலம் தள்றதுல இவ்வளவு சிக்கல்கள் இருக்கா?”

“இது கம்மி. இவங்களே ஒரு ஆபீஸ்க்கு வேலைக்குப் போறவங்களா இருந்தா ஒரு நாளைக்கு அஞ்சாறு குணசேகர்களைச் சந்திக்கணும்...”

“உண்மைதான். எல்லாம் இனக்கவர்ச்சி படுத்தற பாடு. போதாக்குறைக்கு மீடியாக்களோட தூபம் வேற...”

“என்ன சொல்றீங்க?”

“அப்படியே வெளிய பாரேன். எவ்வளவு சினிமா போஸ்டர்ஸ். எந்த போஸ்டர்ல பெண் இல்ல... அதுவும் அரைகுறை உடைல...”

-ராம்நாத் பார்வை ரோட்டுக்கு இரு பக்கமும் சுவர்களைப் பார்த்தது.

“மானமுள்ள சொஸைட்டிப்பா நம்ம சொஸைட்டி. நம்மைப் போலவே சுவர்களும் டிரெஸ் தெச்சுப் போட்டுக்கணும்கற நல்ல எண்ணத்துலதான் ஒட்டித் தள்ளியிருக்கோம்.”

ரம்யா கொஞ்சம் போல நக்கலடிக்கவும் செய்தாள். ஆனால், அவரால் சிரிக்க முடியவில்லை.

“ஒவ்வொரு ஆணுக்கும் இன்றைய வாழ்க்கை முறை ஒரு சவால்மா. அவனோட சபலத்துக்கும் ஆசாபாசாங்களுக்கும் ஒவ்வொரு நாளும் இந்த சொஸைட்டி ஒரு பரீட்சை வெச்சிக்கிட்டேதான் இருக்கு. சுத்தமான மனசோட வீட்டை விட்டுக் கிளம்பறோம். ஆனால் குப்பைகள் விழுந்த

மனசோட உள்ள நுழையறோம். உள்ளேயும் நம்ம உணர்வுகளோட டி.வி.ங்கற இடியட் பாக்ஸ் மூலமா சோதனை. உண்மைல சுமாரான நல்லவனா இருக்கறதே மகாத்மாவா இருக்க முடிஞ்ச மாதிரிதான்.”

-ராம்நாத் அப்படிச் சொல்லவும் ஒரு அலட்சியச்சிரிப்பு சிரித்தாள் ரம்யா. அவரும் கவனித்தார். ஆனால், ஏன் என்று கேட்கவில்லை. கேட்டால் அவள் சரியான பதிலைச் சொல்லிவிடுவாள். அது அவர் குடித்துவிட்டு விழுந்து கிடப்பதற்கும் சேர்த்த ஒரு பதிலாகவே இருக்கும். எனவே மௌனமாகிவிட்டார். ஆனால் ஒரு விஷயம் நங்கூரம் போல விழுந்துவிட்டது. தான் இருக்கும் வரையில் ரம்யாவின் பாதுகாப்பு பற்றிக்கவலைப்படத் தேவையில்லை. அதற்குப் பின்...? வாழ்க்கையிலேயே முதல் தடவையாக சமூக விகாரம் ஒன்று அவரை நியாயமான அச்சத்தில் பிடித்துத் தள்ளியது. அதற்குள் யோகேஷ் உடல் கிடக்கும் அவனது வீடு வந்துவிட்டது.

நிறைய கார்கள், நிறைய மலர்க் கொத்துகள், மிக அழுத்தமான மௌனத்தில் இரண்டாயிரம் ரூபாய் ரெடிமேட் சட்டைகளில் வரி கட்டும் பணக்காரச் சொட்டைத்தலையர்கள் என்று சூழல் ஒருவிதமாகக் காட்சி தந்தது. காரைக் கஷ்டப்பட்டு பார்க் பண்ணிவிட்டு இருவரும் இறங்கினர். ராம்நாத்துக்கு மரணம் என்கிற ஒன்றை நினைத்துப் பார்க்கவே பிடிக்காது. பிணங்களைப் பார்க்க நேர்ந்தாலோ மனது கிடந்து நெளியும். பச்சையாகப் பாகற்காயை ஏதோ வெள்ளரிக்காயைக் கடித்துச் சாப்பிடுவது போல சாப்பிட்ட மாதிரியும் இருக்கும். யோகேஷும் உடம்பெல்லாம் பேன்டேஜோடு முகம் மட்டும் தெரியும்படி ஃபிரிஸர் பாக்ஸில் படுத்திருந்தான். தலைமாட்டில் அவன் மிக மெச்சிய அவன் தாய். எனக்கு இனி யார் இருக்கிறார்கள் என்பது போல நின்று கொண்டிருந்தாள். அவளை ஒட்டி ஒருத்தி. முகஜாடை அவளது சகோதரியாக இருக்கலாம் என்று யோசிக்க வைத்தது.

அவள் வரையில் அவளே ஒரு முறை இறந்து அதை நேரிலும் பார்க்கிற மாதிரி இருந்தது. பிள்ளைகள் மரணம்

என்பது பெற்றவர்கள் வரையில் இப்படித்தான் எண்ண வைக்கும். என்னுள் இருந்து வந்தது எனக்கு முன் முடிந்தும் போய்விட்டது. நான் மட்டும் எதற்கு இன்னமும் இருக்கிறேன் என்னும் கேள்விக்குச் சரியான விடையைக் கூறியவர்கள் யாருமே இல்லை.

அது என்னமோ தெரியவில்லை யாராக இருந்தாலும் சரி... ஒரு பிணத்தைப் பார்க்கும் போது, அந்தப் பிணமாகத் தன்னையும் ஒரு முறை கற்பனை செய்து பார்த்துக் கொள்ளாதவர்கள் உலகில் இல்லை. அப்பொழுது மட்டும் சில கேள்விகள் பெரிய இளவில் தோன்றும்.

‘இப்படி உடம்பை விட்டுவிட்டு இவர் எங்கே போயிருப்பார்? உயிர் பிரிவது என்றால் என்ன?’ பலரிடம் விபரீதமாகவெல்லாம் கேள்விகள் மூளும். அதுவும் உடம்பைத் தீயிலிடும் போது, மிகத் தூக்கலாக இருக்கும். எல்லாம் சிலமணி நேரங்கள்தான். அதன் பின் மாய வாழ்க்கையானது, பாம்பானது தவளையை விழுங்குகிற மாதிரி ஒரே விழுங்காக விழுங்கிவிடும் பிறகு எல்லாம் மறந்து, எல்லாம் துறந்து பழைய ஆசாபாசங்களுடன் ஓடுகளத்தில் ஓடத் தொடங்கிவிடுவது தானே வழக்கம்.

அபூர்வமாய்ச் சிலர்தான் இந்த மாதிரி தருணங்களில் இயல்பு நிலைகளில் இருந்து பெருமளவு மாறிப்போகிறார்கள். ராம்நாத்தும் அவர்களில் ஒருவராக இருந்தார். தன்னைப் பிணமாக எண்ணிப் பார்த்தவருக்கு ரம்யாவின் அனாதரவான நிலைப்பாடு தான் முதலில் முந்தியது. ஆறுதல் சொல்லும் சாக்கில் ஒருவன் அவளை அழுந்த அணைக்கிற மாதிரிகூட கற்பனை செய்து கொண்டார்.

“அலையறாங்களே...ஐயோ!” என்று அதன் நிமித்தம் முணுமுணுத்ததை ரம்யாவும் கேட்டாள்.

“அப்பா...என்ன உளர்றீங்க?”

“ஒண்ணுமில்லம்மா... இந்தச் சூழல் என்னை... என்னை...”- ஏதோ சொல்ல வந்து முடியாமல் போனார். ரம்யா அதன்பின் அவரைத் தூண்டவில்லை. அதே சமயம் அவள்

மனமும் யோகேஷ் இடத்தில் ராம்நாத்தை வைத்துக்ப் பார்க்கத் தவறவில்லை.

‘அதன்பின் தன் மேல் உண்மையான அக்கறையும் பாசமும் செலுத்த யார்தான் இருக்கிறார்கள்.’ என்கிற கேள்விக்குள் விழுந்தவள் அந்தக் கேள்வி ஒரு மலை போல அழுத்துவதையும் உணர்ந்தாள். வெகுதூரத்தில் பிரமை பிடித்தவர் போல நின்று கொண்டிருந்தார் ஞானப்பிரகாசம். இருவரும் அவரைத் தேடிக்கொண்டு சென்று நின்றனர். அவர் கண்கள் இருவரையும் பார்த்தும் முகத்தில் வேறு எந்த அசைவும் இல்லை. இரு தரப்பிலும் முதல் வார்த்தையாக எதை வைத்துப் போச்சைத்துவக்குவது என்பதில் தடுமாற்றம்... ராம்நாத்தே அந்தத் தடுமாற்றத்தைத் தாண்டினார்.

“ஞானா...வெரி வெரி சாரிடா...”

“ப்ச்ச்...”

“ரெம்பக் கொடுமைடா இது...”

“கொடுமைதான். நீயும் தினம் குடி. கூடிய சீக்கரம் இப்படி ஃப்ரிஸர்ல படுக்கலாம். அதுக்குப் பிறகு ரம்யாவும் அமோகமா இருப்பா...”

“டேய்ய்...”

“போடா... எப்படிடா உன்னால யோகேஷோட இந்தச் சாவை ஒரு சாதாரண சம்பவமா எடுத்துக்க முடியுது? ரம்யாவுக்கு இவனை மாதிரி ஒரு மாப்பிள்ளையை உன்னால பார்க்க முடியுமா? எப்பேர்ப்பட்ட இழப்பு இது...”

“உண்மைடா...நீ சொல்றது சத்யம். நான் இனி குடிக்கமாட்டேன்டா. இந்தப் பிரேதக் காட்சி என்னைக் குடிக்க விடாது. இது ரொம்ப மோசமான சொஸைட்டிடா. நாமதான் நம்ம குழந்தைகளுக்கு ஒரு நல்ல வழியக் காட்டணும். தவறினா எது வேணா நடக்கும். அதை நான் இப்பத்தாண்டா யோசிக்கறேன். இனி ரம்யா கல்யாண விஷயத்துல நான் என் சுயநலத்தைப் பார்க்க

மாட்டேன்...நான் இப்ப சொல்றேன்டா இவளுக்கு நீ நாளைக்கே இன்னொரு மாப்பிள்ளை பார். உடனேயே கல்யாணம் பண்ணித்தரேன்.”

-ராம்நாத் ஞானப்பிரகாசத்தின் கைகளை இழுத்துப் பிடித்து அழுத்தம் கொடுத்துப் பேசிவிட்டு அதற்கு மேல் இருக்கவும் பிடிக்காமல் விலகினார். கவனித்துக்கொண்டே இருந்தாள் ரம்யா. ஞானப்பிரகாசத்தை ஒரு தினுசாகப் பார்த்தவள், “அங்கிள்... அப்பா இனி நிச்சயமா குடிக்கமாட்டார். என் கல்யாண விஷயமும் தடைப்படாது. ஆனா...”-அவள் ஏதோ சொல்லவந்து திரும்பி யோகேஷின் சடலத்தை ஒரு பார்வை பார்த்துவிட்டு, “இப்ப இந்த இடத்துல நான் சில விஷயங்களைப் பேச விரும்பலை. அப்புறமாப் பேசறேன்” என்றபடி நகர்ந்தாள்.

ஞானப்பிரகாசத்துக்கு கொஞ்சம் குழப்பமாகக்கூட இருந்தது.

அரவிந்தன் தன் உடையை அயர்ன் செய்தபடி இருந்தான். பரபரவென்று வீட்டுக் காரியங்களில் இருந்த சரண்யா அவ்வப்போது, “அந்தப் பையனை எடுத்திருப்பாங்க இல்ல... அடிபட்ட உடனேயே உயிர் போயிடிச்சா... இல்லை ஹாஸ்பிடல்லையா?” என்று கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டுக்கொண்டே இருந்தாள். பின் “நீ இனி பஸ்ல போ... டூவிலர்லாம் வோண்டாம்டா” என்றும் வழிந்தாள். அவன் எதுவும் சொல்லவில்லை. இந்த மாதிரி எதிரொலிகள் சகஜம் என்பது அவனுக்குத் தெரியும். அப்போது அந்த அபார்ட்மென்டில் வசிக்கும் ஒருவரின் பிள்ளை ஒரு துண்டுச் சீட்டுடன் வந்து நின்றான்.

“என்னப்பா?”

“அப்பா கொடுத்துவிட்டார்...” –அவன் ஒரு துண்டுச் சீட்டைக் காட்டினான். அதில், ‘காய்கறி வாங்கியதில் பாக்கி 32 ரூபாய். ஏலக்ட்ரிக் பில் கட்டியதில் ஒரு 7.50 பாக்கி. ஆக மொத்தம் 39.50’ என்று ஒரு கணக்கு இருந்தது. நாற்பது ரூபாயாக எடுத்துக் கொடுத்துவிட்டான்.

“எதுக்குப் பணம்...எதுக்குத் துண்டுச் சீட்டு?”

“நம்ம டிக்டேட்டர் மாமா காய்கறி வாங்கும்போது சில்லறை இல்லைன்னு கேட்டதுக்குப் பணம் கொடுத்திருந்தார். எலெக்ட்ரிக் பில் கட்டறவரும் அவர்தானே... அதுலையும் கொஞ்சம் பாக்கி. அதான் நாசூக்கா பையன்கிட்ட எழுதிக் கொடுத்து விட்டிருக்கார்.”

“ஏன் நேர்ல வந்து வாங்கிக்கக்கூடாதா?”

“இது ஒரு அப்ரோச்சுக்கா. இவர் வரைல எதையும் யார்கிட்டேயும் கேக்கறது இவருக்குப் பிடிக்காது. அதைக் கேவலமா நினைக்கறவர் இவர், அதே சமயம் சில்லரைப் பைசாவை விட்டுத் தரவும் மனசு வரலை. இப்படிப்பட்டவங்க சார்பா பேசறது பேப்பர்தானே? இவங்க இல்லையே. இது ஒரு கேரக்டர் அமைப்புக்கா...!”

“இதுல எல்லாமா கேரக்டர் இருக்கு...?”

“இதுலதான்கா கேரக்டரே இருக்கு. எங்க ஆபீஸ்ல ஒருத்தர் இருக்கார். கால்காசு பெறாதவன் கிட்ட கூட தன்மையா பழகுவார். அது சகிப்புத்தன்மையினால கிடையாது. எப்பவாவது அவன் தயவு நமக்குத் தேவைப்படும்கிற ஒரு அல்ப எதிர்பார்ப்பு. அதே போல சரியான சமயத்துல காய்ன் பண்ணி உதவியையும் வாங்கிடுவார். மேலோட்டமாப் பார்த்தா ரொம்பப் பொறுமைசாலி மாதிரி தெரியும். ஆனா உள்கணக்கே வேறயா இருக்கும்.”

-அரவிந்தன் அப்படிச்சொல்லவும், “ஆமா இவ்வளவு பேசற நீ அந்த ராம்நாத்தைப் பத்தி என்ன நினைக்கறே?” என்று அவன் சற்றும் எதிர்பார்க்காத ஒரு கேள்வியைக் கேட்டாள்.

அரவிந்தன் திணறிப் போய்விட்டான்.

“எனக்கென்னவோ அவரைப் பார்க்கப் பாவமா இருக்குடா... மகளைப் பிரிய முடியாத துக்கத்துல ட்ரிங்க்ஸ் சாப்டுட்டுத் தடுமாறதுங்கறது ஒருவிதத்துல பேத்தடிக்கா இல்லை...?”

“ஏன்கா அது ஒரு பயங்கரமான சுயநலமா இருக்கக் கூடாது...?”

“இல்லடா... எனக்கு அது சுயநலமாத் தெரியலை. அப்படியே

சுயநலமா இருந்தாலும் தப்பு இல்லை. ஏன்னா எனக்கு என் மேல பாசமும் அன்பும் செலுத்த ஒரு உறவு வேணும், ஒரு துணைவேணும்னு நினைக்கறது ஒண்ணும் தப்பு இல்லையே. அவருக்கு ஒரு மனைவி இருந்து அவர் இப்படி நடந்துகிட்டா தப்பு. ஆனா, அவரோ அப்படி யாரும் இல்லாததாலதானே இப்படி நடந்துக்கறார். எனக்கு அந்த வலி தெரியும் அரவா. ஒரு வேளை நீ கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்லும்போது, நான்கூட இப்படித்தான் நடந்துப்பேனா என்னவோ? அவ்வளவு ஏன்... உனக்கு வயசாயிடிச்சு... ஆனா நான் உன் கல்யாணம் பத்திப் பேசவே இல்லையே... அப்ப நானும் அவரை மாதிரி சிந்திக்கறேன்னு தானே அர்த்தம்?”

-சரண்யா அப்படிக் கேட்பாள் என்று அரவிந்தன் துளிகூட எதிர்பார்க்கவில்லை. அவனுக்குள் அதிர்ச்சி.

# 23

‘சூர்யா அடிக்கடி ஆத்ம பரிசோதனை செய்து கொள்வதுண்டு. தன்னுடைய வெளிமனம் என்ன சொல்கிறது: தன்னுடைய இதய அந்தரங்கத்தில் எத்தகைய ஆசை குடிகொண்டிருக்கிறது என்பதையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்ப்பான்.

எந்த விஷயத்திலேனும் மனத்தில் குழப்பமிருந்தால் மனத்திற்கும் அறிவுக்கும் இதயத்திற்கும் வேற்றுமை இருப்பதாகத் தோன்றினால் அந்த விஷயத்தைப் பற்றித் தீர்க்கமாகச் சிந்தனை செய்வான். தன்னுடைய உணர்ச்சிகளில் உள்ள குழப்பத்தைப் போக்கித் தெளிவுபடுத்திக் கொள்ளும் பொருட்டு சில சமயம் அவன் டைரி எழுதுவதும் உண்டு.’

-’அலை ஓசை’யில அமரர் கல்கி.

சரண்யாவின் பதிலைத் தொடர்ந்து அரவிந்தன் அவளைப்பார்த்த விதத்தில் ஆச்சரியம் மட்டுமல்ல... அக்காவா இப்படிப் பேசுகிறாள் என்ற அதிர்ச்சியும்கூட...

“என்ன அரவா... என்கிட்ட இப்படி ஒரு பதிலை நீ எதிர்பார்க்கலை இல்ல.”

“ஆமாம்க்கா... நீயா பேசற...? உன்னை ஒரு கூட்டுப்புழுவாத்தான் நான் பாத்திருக்கேன்.”

“உண்மைதான். ஆனா சில தாக்கங்கள் ஏற்படும் போது மாறித்தானே தீர வேண்டியிருக்கு.”

“நீ அப்படி என்ன தாக்கத்துக்கு உள்ளாகிட்டே?”

“இப்ப இந்த குணசேகர்ங்கிற நடிகன் விஷயத்தையே எடுத்துக்க... அவன்லாம் என் வரையில இப்படி நடந்துக்குவான்னு நான் நினைச்சேனா? இனிமே எந்த ஆம்பிளை என் கிட்ட வந்து குழைசலா பேசினாலும் பயமாத்தானே இருக்கும்? அந்த நொடி நமக்கு ஒரு பாதுகாப்பு இல்லாததாலதானே இப்படி நடக்குதுங்கிற

கேள்வியும் எழாமப் போகுமா?”

“சரிக்கா... ஒரு பேச்சுக்கு உன்னைக் கேக்கறேன். நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா உன்னை அது எந்த வகையில் பாதிக்கும்?”

“என்னடா அரவா இது கேள்வி? இப்ப உன் வாழ்க்கையில் உன் சகோதரி எனக்கு மட்டும்தான் இடமிருக்கு. இன்னொருத்தி வந்தா அவ பேச்சையும் நீ கேட்டு நடக்கணும். என் முக்கித்துவம் குறையுமோன்னு நான் நினைக்கலாமில்லியா?”

“அப்ப உன் முக்கியத்துவம்தான் உனக்குப் பெரிசு... என் கல்யாணம் இரண்டாம் பட்சம்தான்.”

“இந்த விஷயத்துல என்னை உண்மை சொல்லச் சொல்றியா? பொய் சொல்லச் சொல்றியா?”

“உண்மையே சொல்லேன்.”

“நீ சொன்னா மாதிரி உன் கல்யாணம் ரெண்டாம் பட்சம்தான். ஏன்னா, எனக்குன்னு இருந்த ஒரே உறவும் கார்கில் போரால போயிடுச்சு. இருக்கற ஒரே கொழுகொம்பும் நீதான். உன்னையும் இழக்க நான் எப்படிடா துணிவேன்? இந்த நிலையிலதான் அந்த ராம்நாத்தும் இருக்கார்.”

“ஏன்கா...உன்னை நான் எனக்கு வரப்போறவ பேச்சைக் கேட்டு விரட்டீ அடிச்வுடுவேன்னு பயப்படறியா?”

“நீயும் விரட்டி அடிக்க மாட்டே.... நானும் அப்படி நடந்துக்க மாட்டேன். அதே சமயம் எந்த முக்கியத்துவமுமில்லாம மூலையில கிடந்துட்டு நீ போடாறத சாப்பிட்டுக்கிட்டு வாழறது ஒரு வாழ்க்கையா அரவா?”

“அக்கா...!”

“என்னடா... நான் எதாவது தப்பா சொல்லிட்டேனா?”

“நிச்சயம் நீ பேசறது தப்புத்தான்கா... உன் பயம் ரொம்ப

அநாவசியமானது. அதிகபட்ச மானதும் கூட...”

“இருக்கலாம் அரவிந்தா... ஆனா என்னால இப்படியெல்லாம் நினைக்காம இருக்க முடியல...அதுலயும் அந்தப் பொண்ணு ரம்யா, அவங்க அப்பா ராம்நாத் இவங்களைப் பார்த்த பிறகு எனக்குள்ள பயம் அதிகமாயிடுச்சு. நிஜமா சொல்றேண்டா... கல்யான பந்தம்ங்கிறது ரொம்ப பெரிய விஷயம். அதுக்குக் கொடுப்பினை இல்லாத எனக்குத்தான் அதோட மதிப்புத் தெரியும், அரவா... இப்ப உடம்பில தெம்பு இருக்கு. எப்படி வேணா வாழ்ந்துடலாம், வயசாகிக் கண்பார்வை குறைஞ்சு ஒரு கவர்ச்சியும் இல்லாமக் கிடக்க நேரும்போது, பசங்களோ குட்டிகளோ இல்லைன்னா யாருடா வருவா?”

“அப்ப ஒரு குடும்பத்தில யாருக்காவது இப்படி ஒரு நிர்க்கதி ஏற்பட்டுட்டா மத்தவங்க கல்யாணமே பண்ணிக்கமே கூட இருந்து தங்களை அழிச்சுக்கனும்கிறியா?”

“நான் அப்படிச் சொல்லலைடா... கல்யாண உறவு ரொம்ப பெரிசுன்னு சொல்ற நான் அதை உனக்குக் கூடாதுன்னு சொல்வேனா?”

“முடிவாக் கேக்கறேன். நான் கல்யாணம் பண்ணிக்கணுங்கிறியா? இல்லை...கூடாதுங்கிறியா?”

“அது...அது...?”

“வேண்டாம்கிறியா?”

“சீச்சீ...நீ பண்ணிக்கணும் நீயாவது நல்லா இருடா.”

“ஆனா, உன் முக்கியத்துவம் போயிடும்னு நினைக்கிறியே நீ...”

“நான் அப்படித்தான் நினைப்பேன். அப்படியெல்லாம் கிடையாதுன்னு நான் பொய் சொல்லலாம். ஆனா நான் பொய் சொல்லலை. அதுக்காக நீ உன் வாழ்க்கையை இப்ப அமைச்சுக்கத் தவறினா நான் போன பிறகு யாருடா உனக்குத் துணையா இருக்க முடியும்?”

“ஏன்கா இப்படிப் போட்டு குழப்பறே...தெளிவா பதில் சொல்லுக்கா.”

“என்ன அரவா...நீ கேக்கிற வேகத்தைப் பாத்தா நீ யார் மேலயோ ஆசை வச்சிருக்கிற மாதிரித் தெரியுதே?”

“இல்லக்கா... இனிமே வைக்கலாமில்லியா?”

“வைடா...நல்ல பெண்ணா பார்த்து நேசி. சீக்கிரம் ஒரு புது உறவோட வா. எனக்கும் தனிமை நீங்கும். என் மனசுக்கும் ஒரு தெம்பு வரும்.”

“ஆனா மூலையில கிடக்க வேண்டி வரும்னு சொல்றியே.”

“அது பயத்துல பேசற பேச்சு.”

ஆனா பிறர் வாழ்க்கை விஷயங்களுக்கு நம்ம பயம் தடையா இருக்கக் கூடாது. என் மாதிரிப் பெண்கள் இப்படித் தான் பேசுவோம். இது எங்க சாபக்கேடு. இதையெல்லாம் பார்க்காதே. நான் ஒண்ணு சொல்றேன். கேப்பியா?”

“என்னக்கா?”

“ரம்யா இந்த வீட்டுக்கு மருமகளா வந்தா என் பயத்துக்கு வேலையே இருக்காதுன்னு நினைக்கிறேன்,”

சரண்யா போகிற போக்கில பட்டென்று போட்டு உடைக்கவும் அரவிந்தன் என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்தான்.

“என்னடா...எனக்குப் பேராசைன்னு நினைக்கிறியா? அவ பணக்கார வீட்டுப் பொண்ணு... ராம்நாத் சம்மதிக்கமாட்டார்னும் நினைக்கிறியா?”

“இல்லைக்கா...அந்தப் பொண்ணுக்கு என்னைப் பிடிக்கனும்னு ஒரு விஷயம் இருக்கே... அதை நீ யோசிக்கவே இல்லையா?”

“உன்னை நிச்சயம் அவளுக்குப் பிடிக்கும். உன்கிட்ட என்ன குறை. நீ ராஜாடா...”

“ராஜாக்களை ராணிகளுக்குப் பிடிக்கணும்னு கட்டாயம் இல்லக்கா. அதுமட்டுமில்ல... எங்களுக்குள்ள எப்பப் பார் கருத்து மோதல்.”

“கருத்து மோதல் ஒரு விஷயமில்லை. அது ஆரோக்கியம். கள்ளத்தனம், நீச புத்தி இதெல்லாம்தான் கல்யாண உறவுக்குத் தடையாக இருக்கிற விஷயங்கள். உனக்கு அவளைப் பிடிச்சிருக்கில்ல?”

“மௌனமாய்ப் பதில் கூறாமல் நின்றான் அரவிந்தன். எப்போதும் பிடிக்கவில்லை என்றால்தான் வேகமாக மறுப்பு வெளிப்படும்.

சரண்யாவின் உடையைச் சலவை செய்து கொண்டிருந்தார் ராம்நாத். ரம்யாவும் கவனித்தாள். ஆனால், அதைப் பெரிதாகப் பொருட்படுத்தாமல் மௌனமாக அவர் எதிரில் வேறு நாட்டங்களைக் காட்டிக் கொண்டிருந்தாள்.

அவருக்கும் புரிந்தது. சில விஷயங்களில் ரம்யா பாரபட்சங்களே பார்ப்பதில்லை. அவளது கோர்ட்டும் அதன் நீதிகளும் வலிமையானவை. ஒரு முறை காரில் வரும் போது தெருநாய் ஒன்று குறுக்கிட்டுக் காலை ஒடித்துக் கொண்டது. பிழை முழுக்க அதன் மீதுதான். ஆனாலும் எனக்கென்ன என்று தாண்டிவர ரம்யாவால் முடியவில்லை.

அந்த நாயைக் காரில் போட்டுக்கொண்டு மிருக வைத்தியரிடம் போய்க் காட்டி கட்டுப் போட்டு மிக சீரியஸாக, அந்த நாயால் திரும்ப நடமாட முடியுமா என்றெல்லாம் கேட்டு, அது நடமாடத் தொடங்கிய பிறகே சமாதானமானாள். அதைப் பெருமிதத்துடன் பார்த்து ரசித்தவர்தான் ராம்நாத். இப்போது இந்த விஷயத்தில் எப்படிச் சலுகை கேட்க முடியும்?

சலவை செய்து முடித்த புடவையைச் சலவைக்காரன் போலவே கையில் எடுத்துக் கொண்டு வந்து ரம்யா முன் நின்றார்.

“புடவை ரெடிம்மா...நானே தோய்ச்சு நானே சலவையும் செய்துட்டேன்.”

“நீங்களே போய்க் கொடுத்துட்டு வந்துடுங்க...”

“என்னம்மா இப்படிச் சொல்றே... இதுக்கு நான் ஒரு புதுப்புடைவை வாங்கிக் கொடுத்துடுவேனேம்மா?”

“அப்படிச்செஞ்சா அதுல உங்க பணபலம் வேணும்னா வெளிப்படலாம். பரிகாரம் எப்படி வெளிப்படும்?”

“அம்மாடி...”

“அவங்க மேல வாந்தி எடுத்தப்ப அவங்களுக்கு எவ்வளவு அருவருப்பா இருந்திருக்கும். உங்களை நினைச்சாலே வாந்தி தான் ஞாபகத்து வரும். அதை மாத்த வேண்டாமா?”

“இப்படி நடந்துட்டா மாறிடுமா?”

“நிச்சயமா! ஒரு தொழிலதிபர் தானே தோய்ச்சு, சலவை செய்து நேர்லயும் கொண்டுவந்து கொடுக்கறார்னா அந்தச் செயல் சாதாரணமானதா?”

“அவங்க வீட்டுக்கு நீயும் வர்றியா?”

“இல்லப்பா... நான் கூட வந்தா அது உங்க செயலோட தனித்தன்மைக் குறைச்சிடும்.”

அதற்கு மேல் ராம்நாத் எதுவும் பேசவில்லை. அவர் சரண்யாவைச் சந்திக்கத் தயாராகிவிட்டார்.

போர்டிகோவிலிருந்து அவர் கார் நீங்கிய அடுத்த நிமிடம் அரவிந்தனின் ஸ்கூட்டர் அங்கு வந்து தேங்கி நின்றது.

அவன் வழக்கத்துக்கு மாறாக டீ ஷர்ட், ஜீன்ஸ் பேன்ட், தலையில் ஒரு தொப்பி என்று தன் இளமைக்கு ஒரு புது மெருகு சேர்த்திருந்தான்.

“வாங்க சார்...”என்றாள் மிதமான உற்சாகத்தோடு.

“என்ன ரம்யா... ப்ரியா இருக்கீங்க போலிருக்கு...”என்றபடியே அவள் எதிரில் மமர்ந்தான்.

“அப்பா இல்லை?”

“இல்லை... இப்பதான் வெளியே போறாரு...அதுவும் உங்க...”என்று சொல்ல ஆரம்பித்தவள் சஸ்பென்சாக இருக்கட்டும் என்று சொல்லவில்லை.

“என்ன ரம்யா... அவரைக் கொஞ்ச நாளைக்கு எங்கேயும் தனியா அனுப்பாம இருக்கலாமில்லியா?” என்று பதறினான்.

“எதனால...?”

“இல்ல...அவர் பாட்டுக்கு ஏதாவது ஒரு பாருக்குப்போய் தண்ணியப் போட்டுட்டு...” –அவன் முடிக்கும் முன்பே சிரித்தவள், “அனேகமாக அப்பா இனி எப்பவுமே தண்ணி அடிக்கப் போகமாட்டார்னு நான் நினைக்கிறேன்” என்றாள்.

“அவர் சத்தியமே பண்ணியிருந்தாலும் நம்பாதீங்க ரம்யா. சத்தியத்தில குடிகாரங்க சத்தியம்னே ஒரு ரகம் இருக்கு.”

“நானும் கேள்விப்பட்டிருக்கேன் அரவிந்தன். ஆனா அப்பா குடிகாரனா இருந்தாத்தானே அப்படி நடத்துக்க...அவர் ஒரு பயந்தாங்கொள்ளி. அவர் எதுக்குப் பயந்தாலும் தண்ணி அடிப்பார். இப்பதான் நான் அந்தப் பயத்தைப் போக்கிட்டேனே.”

“என்ன சொல்றீங்க?”

“நான் கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தாத்தானே அப்பா பயப்படுவார். கொஞ்ச நாளைக்கு அந்த டாபிக்கை எடுக்காம இருந்துட்டா? ஆமா... எங்க இவ்வளவு தூரம்?”

“சும்மாதான் அக்காவோட டிரஸ் ஒண்ணு இங்க இருக்கில்ல... அதை வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன்.”

“இப்ப டிரஸ் உங்க வீட்டுக்குப் போயாச்சு... அதுவும் அப்பாவே தன் கையால தோய்ச்சு, சலவை பண்ணி எடுத்துக்கிட்டுப் போயிருக்காரு.”

“ஐயய்யோ! என்ன ரம்யா இது? அவருக்கு எதுக்கு இப்படி ஒரு தண்டனை?”

“தண்டனை இல்ல அரவிந்தன்...பரிகாரம்!”

“மண்ணாங்கட்டி... எந்தக் காலத்துலயும் ஒரு ஆம்புளை புடவை தோய்க்கக் கூடாதுங்க...அப்புறமா அவனை...”என்று வேகமாக ஒரு கருத்தைச் சொல்ல வந்தவன் அவனது கூரிய பார்வையைக் கண்டு தயக்கினான்.

“உம்...கமான் அரவிந்தன். புரட்சிகரமா எதோ சொல்ல வந்த மாதிரி இருந்தது. ஏன் பாதியில நிறுத்திட்டீங்க. அப்ப நீங்க உங்க மனைவி புடவையைத் தோய்க்க மாட்டீங்க இல்லியா? அவ மட்டும் உங்களோட வேட்டியைத் தோய்க்கலாம். அப்படித்தானே?”

“அப்படியில்லை...ஒரு ஆண் கவனம் அவனோடு பணியில இருக்கணும். ஒரு பெண்ணோட கவனம் ஆணின் நலத்திலும் கௌரவத்திலும் இருக்கணும். அவள் அவனை உயர்த்திப் பிடிக்கணும். அப்படிப் பெண்ணால் தூக்கி நிறுத்தப்படற குடும்பம்தான் ஆலமரமா வளரும். குடும்ப உறவு தர்மம் சார்ந்தது. எப்பவும் வாழ்க்கை நியதிகள் ஆண், பெண் இயல்புகளை ஒட்டி இருக்கணும். உங்க வீட்டையே எடுத்துக்கோங்க. உங்க அம்மா மட்டும் உங்க அப்பவுடன் வாழ்ந்திருந்தா நீங்க இப்படியா இருப்பீங்க? எப்பவோ உங்களுக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தை கூட இருந்திருக்குமே?”

ரம்யா வாயடைத்துப் போனாள். அவனின் திடமும் தெளிவும் அவளைக் கட்டிப் போட்டது. அப்படியே அதில் காதலின் ஈரமும் கசிய ஆரம்பித்தது. அரவிந்தனோ, அவள் மௌனத்தைக் கோபம் என்று உணர்ந்து அங்கிருப்பது சரியல்ல என்று நழுவத் தொடங்கினான். அவனை இரு என்று சொல்லத் தோன்றாமல் பிரமிப்பிலேயே இருந்தாள் ரம்யா.

ப்ளாட் வாசலில் அரவிந்தன் வந்து நின்ற போது உள்ளே கலகலப்பான சிரிப்புச் சப்தம். கூடவே பூரி மசால் அடுப்பில் கமழும் வாசம். ராம்நாத்தும் சரண்யாவும் தங்களை மறந்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

# 24

'பாரிஜாத மலருக்கு ஆசைப்பட்டாள் சத்தியபாமா. அவளுக்காக அந்த விருட்சத்தையே அவள் வீட்டுத் தோட்டத்துக்குக் கொண்டு வர எண்ணம் கொண்டான் கண்ணன். அதன் பொருட்டு சத்தியபாமாவை அவன் அழைத்துக் கொண்டு இந்திரலோகம் சென்றான். ஆனால் இந்திரனோ தன்னிடம் உள்ள பாரிஜாத மரத்தைத் தர மறுத்தான். கண்ணன் உடனே இந்திரனோடு போர் புரியத் தொடங்க, இந்திரனும் புரிந்து கொண்டான். சிறுவிருப்பங்கள் சூட்சமான உட்பொருள் கொண்டவை. எனவே இந்திரன் அடங்கிப்போனதோடு பாரிஜாத விருட்சத்தைக் கண்ணனுக்குத் தந்துவிட்டான். கண்ணன் எடுத்துச் சென்றால் இது ஒரு தினுசு. தானாக முன் வந்து தந்தால் இது ஒரு தினுசு. இந்திரன் இம்மட்டில் புத்திசாலி. எந்த விஷயத்தோடு மோத வோண்டும், எதோடு ஒத்துப் போக வேண்டும் என்பதில் அவனுக்கு ஒரு தெளிவு ஏற்பட்டு விட்டது.”

-கிருஷ்ணலீலாவிலிருந்து...

வாசல் கதவருகே ஆச்சரியத்தில் பெரிதும் ஆழ்ந்து போனான் அரவிந்தன். கலகல வென்ற பேச்சும் சிரிப்பும் அவன் வீட்டில் கேட்டுப் பல வருடங்கள் ஆகிவிட்டன. அப்படியே நின்றுகொண்டு கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்போல் இருந்தது. ஆனால், அபார்ட்மென்ட் வராண்டாவில் நடப்பவர்கள் அரவிந்தன் தேங்கி நிற்பதைக் கண்டு ஏதாவது நினைக்கலாம் என்பதால் தயக்கத்தோடு காலிங்பெல்லை அழுத்தினான். சரண்யாவும் வந்து கதவைத் திறந்தாள். அவள் முகத்தில் இனம் புரியாத மலர்ச்சி. அரவிந்தன் பார்வை அப்படியே உள்ளே தாவியது. ராம்நாத் பூரி மசால் சாப்பிட்டபடி இருந்தார்.

“சார்...”

“வாங்க அரவிந்தன்... நான் ஒரு மடையன். உங்கவீட்ல இருந்துக்கிட்டு உங்களைப்போய் இன்வைட் பண்றேன் பாருங்க” –ராம்நாத் பூரித்தட்டுடன் எழுந்து நின்று

கொண்டார்.

“உக்காருங்க சார்.”

“அவர் வந்து ஒன் அவருக்கும் மேல ஆகுது. அரவா...இங்க பாருடா... இந்தப் புடவையை இவரே தோச்சு சலவை பண்ணி அதைக்கொண்டு குடுக்க நேர்லையே வந்திருக்கிறத... நல்லாவா இருக்கு?” –சரண்யாவிடம் கரிசனம் வழிந்தது.

“மேடம்... அதையே நீங்க எத்தனை தடவை சொல்வீங்க? தப்புப் பண்ணினவன் நான். நான்தானே பிரயாச்சித்தம் தேடனும்,”

“இருந்தாலும் இது டூ மச்சுங்க. அட அதுக்குள்ள சாப்பிட்டீங்களா.? இருங்க இருங்க... சூடா இன்னும் இரண்டு பூரி போடறேன்.”

“நோ...நோ...இட்ஸ் எனஃப் நான் நார்மலா எண்ணெய் ஐட்டமே எடுத்துக்கிறதில்லே... உங்க சமையல் வாசனைக்காக சம்மதிச்சேன். இதுவே அதிகம்.”அவர் மறுத்தும் பயனில்லை.

“அதெல்லாம் ஒண்ணுமில்லை. ஆசையா சாப்பிட்டா எதுவும் ஆகாது சார்.” –சரண்யா அடுப்படிக்கு ஓடினாள். டைனிங் டேபிள் மேல் குடும்ப ஆல்பம். கல்யாண ஆல்பம் என்று எல்லாம் இருந்தது. அனேகமாக அவைகளை ராம்நாத் பார்த்திருக்க வேண்டும். ஒரு ஆழமான பரஸ்பர பேச்சு வார்த்தை அங்கே நடந்திருப்பதற்கான முகாந்திரங்களை அரவிந்தன் புரிந்துகொண்டான்.

அப்புறம் சார்... நீங்க எங்க வீட்டுக்கு வந்ததுல எனக்கு ரொம்ப பெருமை” என்றபடியே அவருக்குச் சற்று தள்ளி அமர்ந்தான்.

“ஆமாம்...நான் பெரிய மகாத்மா கந்தி, ஜவஹர்லால் நேரு பாருங்க, நீங்க பெருமைப்பட்டுக்க...!” –அவரும் மறுதலித்தார்.

நடுவில் பொங்கிய புடைப்புடன் ஆவி பொங்க வந்த பூரி

அவர் தட்டில் விழுந்தது. உடனேயே அதில் ஆள்காட்டி விரலால் துளை போட்டு வாயால் ஒரு ஊது ஊதி ‘அரிய சந்தர்ப்பம் இது, விட்டுவிடக் கூடாது’ என்பது போல ஒரு மும்முரம் காட்டினார்.

ஒரு கோணத்தில் அவர் அப்பொழுதுதான் ருசியாகச் சாப்பிடுவதாகத் தோன்றியது.

“மெல்ல சாப்பிடுங்க சார், ஆமாம்... ரம்யா நல்லா சமைப்பாங்களா சார்?”

“பிரமாதமா சமைப்பா, ஆனா உணவே மருந்து: மருந்தே உணவுன்னு சொல்லி அப்பப்ப என்னைக் கொன்னுடுவா. குறிப்பா எண்ணெய், நெய் இதையெல்லாம் தொடாம சமைப்பா. சில நேரங்களில் நான் ஏதோ ஒரு ஆஸ்ரமத்துல இருக்கிற மாதிரிகூட இருக்கும்.”

-ராம்நாத் தன் பேச்சின் முடிவில் மனம் விட்டுச் சிரித்தார்.

“அரவா...உனக்குப் பூரி போட்டு எடுத்துக்கிட்டு வரவா?”

“இல்லக்கா... இன்னும் கை, காலக் கூடக் கழுவல...”

“போ...போய்க் கை காலைக் கழுவிக்கிட்டு வா. உனக்கும் தர்றேன்.”

அவளது தூண்டல் மற்றும் அந்த வாசம் இரண்டும் அவனுக்குள் நாகரிகம் நிமித்தம் ஒளிந்திருக்கும் தயக்கங்களை எல்லாம் தவிடு பொடியாக்கியது, ஓடினான். சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டிவிட்டு அப்படியே பாத்ரூம் போனான். ஒரு காக்கை ஏரிக்கரையில் தன் கால்களை நனைத்துக்கொண்டு வேகமாக வானில் எழும்பியது மாதிரி ஒரு வேகத்தில் திரும்பி வந்தான்.

சரண்யாவும் தட்டில் பூரியைப் போட்டு வாசம் மணக்க நீட்டினாள். நாக்கில் ஒரு ஊறல் ஆரம்பமானது. சுவையும் அலாதியாக இருந்தது, பசி நேரத்தில் சுவையான உணவு கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். வாழ்க்கையில் எல்லோருக்கும் எப்பொதாவது அந்த அதிருஷ்டம் வாய்ப்பது உண்டு. இன்று அரவிந்தனுக்கு

அப்படி ஒரு அதிருஷ்டம் அடித்திருப்பதாகத் தோன்றியது.

“அக்கா... பிரமாதம்கா...”என்றான்.

“மேடம்...பேசாம எங்க வீட்டுக்கு வந்து தினசரி சமைச்சு வச்சிடறீங்க...ஒரு பாக்டரி சூப்பர்வைசருக்குத் தர்ற அளவுக்குச் சம்பளம் தரக்கூட நான் தயார்” என்று சரண்யாவின் சமையலுக்கு ராம்நாத் சர்டிபிகேட் அளித்தார்.

பெண்களுக்கு இறைவன் இரண்டு அஸ்திரங்களைக் கொடுத்திருக்கிறான் ஒன்று அவர்களது இளமை. இரண்டாவது அவர்களது சமையல். சமையலில் மட்டும் ஒரு பெண் ஆணைச் சாய்த்துவிட்டால் அதன் பின் அவனால் எந்தக் காலத்திலும் எழுந்திருக்கவே முடியாது. “உன்னதமான ஒரு கலை சமையல்கலை. பரிபூரண திருப்தியை அதனால் தான் தரமுடியும். பேராசை பிடித்தவன் கூட இலையில் போதும்னு சொல்றது சாப்பாடு பரிமாறும் போது மட்டும். உண்மையில் ஹோட்டல் சர்வராக இருக்கிறதும், மாஸ்டராக இருக்கிறதும் சேவையைச் சேர்ந்த விஷயங்கள். வேறெந்த வேலையிலும் இப்பத் திருப்தியை உருவாக்கிப் புண்ணியத்தை மூட்டை கட்ட முடியாது. இதுல மட்டும் தான் முடியும். ஆனா நாம சமையல்காரங்களைக் கூலிக்காரங்க அளவுக்குத்தான் பாக்கறோம். இல்லையா அரவிந்தன்?”

ராம்நாத் ஒரு பெரிய திருப்தியைக் கருத்தாக வெளிப்படுத்த அவரது அந்தப் புது கோணம் அரவிந்தனை யோசிக்க வைத்தது,

நடுவில் காலிங்பெல் சப்தம். யார் என்று பார்த்தான். போலீஸ் சப் இனஸ்பெக்டர். நல்ல சாப்பாட்டில் இடையில் கல்லைப் போல அவரை உணர்ந்தவன் உள்ளே அனுமதித்தான்.

“சார்...மிஸ்டர் அரவிந்தன். உங்க சிஸ்டர் சம்பந்தமான கேஸ் விஷயமாத்தான் பேசலாம்னு சொல்லுங்க?”

“உக்காருங்க... என்ன விஷயம்னு சொல்லுங்க?”

“சார் யாரு?”

“சார் என் குடும்ப நண்பர். பேர் ராம்நாத்.”

“ஹலோ சார்...அந்த விஷயத்தைக் கொஞ்சம் தனியாப் பேசறது தான் நல்லதுன்னு தோணுது.”

“பரவாயில்ல பேசுங்க...சாரோடு பொண்ணு ரம்யாதான் புகார் கொடுத்தவங்களே...”

“அப்படியா...ரொம்பத் துணிச்சலான பொண்ணுதான். பைதபை...அந்தக் குணசேகர் பயங்கரமா. பீல் பண்றாரு. அவர் சார்பா பெரிய பெரிய சினிமா புரொட்யூசர்கள்ல இருந்து பல விஜபிங்க என்கிட்ட பேசிட்டாங்க...”

“நீங்க என்ன சொல்ல வர்றீங்க” –அரவிந்தன் முகம் வேகமாக மாறத் துவங்கியது.

“மிஸ்டர் அரவிந்தன், உங்க சிஸ்டர் கால்ல கூட விழுந்து மன்னிப்புக் கேக்க அவர் தயாரா இருக்காரு. விவகாரம் பேப்பர், டி.வி.ன்னு வந்தா அவர் நடிக்கிற சீரியல் எல்லாம் ரேட்டிங்கில கஷ்டப்படும்னு சொல்றாங்க. அவர் திருந்த ஒரு சந்தர்ப்பம் குடுங்கன்னு கேக்கத்தான் வந்திருக்கேன்.”

“முடியாதுன்னா?”

“அதனால பரவாயில்லை...அவ்வளவுதான் அவர் தலை எழுத்துன்னு நினைச்சுக்க வேண்டியதுதான். அதே சமயம் அவரோடு ரியாக்ஷன் எப்படி வேணா மாற வாய்ப்பிருக்கு...”

“என்ன சொல்றீங்க?”

“டிப்ரஷன்ல அவர் தற்கொலை செய்துக்கலாம். கொலையும் செய்யத் தயாராகலாம். நான் இதைச் சும்மா மிரட்டறதுக்குச் சொல்லலை. இதுதான் இந்த விஷயத்துல யதார்த்தம்.”

“என்ன சார்...மிரட்டிப் பாக்கறீங்களா? அவன்கிட்ட இருந்து எவ்வளவு பணம் கை மாறிச்சு...”

“தப்பாப் பேசறீங்க அரவிந்தன். நான் அந்த மாதிரி போலீஸ்காரன் இல்லே.”

“எனக்குத் தெரிஞ்சு கை நீட்டாத போலீஸே இல்லை சார்”

‘நான் அந்த ரகம் இல்லை...” –சப்-இன்ஸ்பெக்டர் ஆவேசமாகும் போது குணசேகரன் சரேலென்று அங்கே நுழைந்து விட்டான். திருதிருவென்று விழித்தவன் சரண்யாவைப் பார்த்துவிட்டு ஓடிப்போய் பொதேல் என்று காலில் விழுந்தான்.

அவளுக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. வேகமாக ஒதுங்கி அரவிந்தன் அருகில் வந்து நின்று கொண்டாள். அவன் எழுந்து பரிதாபமாகப் பார்த்தான்.

“சாரி மேடம்... வெரி வெரி சாரி... என் புரொபஷனே உங்க கையிலதான் இருக்கு. என்னை மன்னிச்சு கேஸை வாபஸ் வாங்கிக்குங்க. உங்களுக்குக் கோடி புண்ணியம். இந்த சப்-இன்ஸ்பெக்டருக்கு நான் சத்தியமா காலணா கூடத் குடுக்கல்ல. என்னை நம்புங்க...ப்ளீஸ்...”

அவன் உதடுகள் துடித்தன. சரண்யாவுக்குக் கண்கள் இரண்டும் கலங்கிவிட்டன்

“அரவா...வேண்டாம்டா...கேஸை வாபஸ் வாங்கிடுடா... நீங்க போங்க சார்... நான் அதை அப்பவே மறந்திட்டேன். நீங்களும் மறந்துடுங்க... போங்க...போங்க...”

சரண்யாவின் பெருந்தன்மை ராம்நாத்தையும் சிலிர்க்க வைத்தது. சப்- இன்ஸ்பெக்டர் முகத்தில் கொஞ்சம் போல நிம்மதிப் புன்னகை. குணசேகர் தலையைக் கவிழ்த்தபடி நின்றான்.

“ஓ.கே.சார்... நான் அப்புறமா ஷ்டேஷனுக்கு வந்து கேஸை வாபஸ் வாங்கிக்கறேன். நீங்க கிளம்புங்க.”

அரவிந்தனும் விடை கொடுத்தான். இருவரும் விலகினர்.

ஒரு இறுக்கம் தளர்ந்த மாதிரி இருந்தது. ராம்நாத் பின் மெல்லப் பேசி சகஜத்திற்குக் கொண்டுவர முயன்றார்.

“மேடம்... உங்க பெருந்தன்மையை நான் ரொம்பப் பாராட்டறேன். எப்பவும் தண்டிக்கிறதை விட மன்னிக்கிறது தான் பெரிய தண்டனைன்னு சொல்வாங்க. நீங்க அதை ப்ரூப் பண்ணிட்டீங்க.”

“உண்மைதான் சார். எப்படியோ இந்தக் கேஸ் சுமுகமா முடிஞ்சிடுச்சு. அதுவே போதும், அப்புறம் அக்கா...நாம்ப வேற வீடு மாறறோம்.”

அரவிந்தன் புதிய தகவல் ஒன்றைத் தரவும் சரண்யா லேசாக அதிர்ந்தாள்.

“வேற வீட்டுக்கா...எதுக்குடா?”

“அது சரி... இவ்வளவு ஆனதுக்கும் பிறகு இங்க இருந்தா நல்லா இருக்குமா?”

“அதான் எல்லாம் சரியாயிடுச்சே...”

“சரியாயிடுச்சுதான்... ஆனாலும் சில நேரங்களில் வேற விதமா பத்திக்கிறதுக்கு வாய்ப்பு இருக்கு. அதனால ஒரு பாதுகாப்பான வீட்டுக்குக் குடிபோறோம். வீட்டுக்காரர் கீழே இருக்கார். மாடியில நம்ப போர்ஷன்.”

“வாடகை எவ்வளவு?”

“ஒன்பதாயிரம்.”

“அம்மாடி...வேண்டாம்டா... இந்த வீட்டு வாடகையான ஐயாயிரமே எனக்கு மலைப்பா இருக்கு. தோட்டத்துல பாதி கிணறுங்கிற மாதிரி சம்பளத்துல பாதி வாடகை போன அப்புறம் என்னடா பண்றது?”

“அதெல்லாம் பாத்துக்கலாம். எனக்கு உன் பாதுகாப்புதான் முக்கியம்.”

“போடா... எனக்குப் பாதுகாப்புக்குச் சரியான வழி சொல்றேன் அதைக் கேளு...முதல்ல உனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணு, உனக்குன்னு ஒருத்தி வரட்டும். அவ தருவா எனக்குப் பாதுகாப்பை.”

“அதுசரி...நீ இப்ப நடக்கிற வழியைப் பாரு.”

“ஏன்...உன் கல்யாணம் என்ன அவ்வளவு சீக்கிரம் நடக்காதா? ஊனக்கு எதுல குறைச்சல்? சொல்லுங்க சார் நீங்களும்.” –சரண்யா கேள்வியை ராம்நாத் பக்கமும் திரும்பினாள்.

“யூ ஆர் கரெக்ட். அரவிந்தன் தாராளமா கல்யாணம் பண்ணிக்கலாம். இட் ஈஸ் த ரைட் டைம். “

“இல்லே சார்... தயவு செஞ்சு அந்தப் பேச்சு மாத்திரம் வேண்டாம். விட்றுங்க. “

“அட... என்ன அரவிந்தன் நீங்க. கல்யாணம் பண்ணிக்கிட்ட பிறகு சொல்லுங்க. நமக்குன்னு ஒருத்தி வேணும் அரவிந்தன். அப்படி ஒருத்தி இல்லைன்னா அந்த லைஃப் எப்படி இருக்கும்னு எங்கிட்ட கேளுங்க. நான் சொல்றேன்.”

ராம்நாத்தின் உதடு துடித்தது.

“ஒத்துக்கறேன் சார்...ஆனா கல்யாண விஷயத்துல எனக்குன்னு சில விருப்பங்கள் இருக்கு...அதனால...”-அரவிந்தன் கொஞ்சம் தடுமாறினான்.

“என்னடா...யாரையாவது நீ லவ் பண்றியா?”

சரண்யா படுவேகமாகக் கேட்டாள்.

“அக்கா...!”

“சும்மா சொல்லுடா... யாராயிருந்தாலும் நான் போய் பொண்ணு கேக்கிறேன்.”

“அரவிந்தன்...இப் யூ டோன்ட் மைன்ட் உங்க அக்காகூட நானும் வர்றேன். அந்த பொண்ணு எத்தனை உயரத்தில் இருந்தாலும் சரி... டோன்ட் ஒர்ரி...உங்களுக்கு இப்ப உங்க பத்திரிக்கையில எவ்வளவு சம்பளம்?”

“சார்... இந்தப் பேச்சை இதோடு விட்றுங்கன்னு சொல்றேன்னில்ல...”-சற்றுகாட்டமாக அவன் நிமிர்ந்தான்.

அதற்கு மேல் ராம்நாத்தால் எதுவும் பேச முடியவில்லை. ஆனால் சரண்யா இதுதான் சரியான சமயம் என்று ரம்யாவைப் பற்றிப் பேச நினைத்தவள், ராம்நாத்தைப் பார்த்து, “அவன் யாரை விரும்புறான்னு எனக்குத் தெரியும் சார்” என்றாள்.

“அப்படியா... இதை ஏன் முதல்லயே நீங்க சொல்லலை?”

“அக்கா... கொஞ்சம் சும்மா இருக்கியா? சார்... ப்ளீஸ்சார்... இந்தப் பேச்சை இத்தோட விட்றுங்க...உங்க நட்பு, ரம்யாவோட பழக்கமெல்லாம் என்னைப் பொருத்தவரை பெரிய விஷயங்கள் சார். அதெல்லாம் நீடிக்கணும் சார்.”

அவனையும் அறியாமல் அவன் ராம்நாத், ரம்யா உறவு பற்றி அச்சப்பட்டு வாய்விட, ராம்நாத் கூர்மையானார். கண்களிரண்டும் அரவிந்தனை வெறித்தன.

“பயப்படாதேடா... எவ்வளவு சினிமா பாக்கறே... காதலைச் சொல்லி வந்த கேட்டைவிடச் சொல்லாததால் வந்த கேடுதான் அதிகம். சும்மா சொல்லுடா... சரி...நானே சொல்றேன். சார்...என் தம்பி உங்க மகள் ரம்யாவை நேசிக்கிறான், ஆனா உங்க மகள் என்ன நினைக்கறாள்னு தெரியாது. இதுதான் விஷயம்.”

சரண்யா போட்டு உடைத்தே விட்டாள். ஏனோ அரவிந்துக்கு உடம்பெல்லாம் வியர்க்கத் தொடங்கியது. ஆனால்...

# 25

‘அன்றிரவு நான் ஒரு கனாக் கண்டேன்.

அத்தனை குத்துவிளக்குகளும் குப்பெனத்தானே ஏற்றிக்கொள்கின்றன. அலைகளின் வரிசை, பாம்பு வளைவில் நெளிகிறது. அதனின்று ஆடும் நிழலும் ஒளியும் இழைந்து கலந்த தண்ணொளிப்பிழம்பு இதழ் இதழாய் விரிந்துகொண்டே கண்ணைக் கவிகிறது. இப்பெருமானின் வயிற்றிலிருந்து மங்கலக் குலவையா? உயிரின் ஓலமா? பிரித்துப் புரியவில்லை. பின்னணியில் ஒரு இரைச்சல் அலைபாய்கிறது.

இவ்வொளிமலரின் இதழ்களில்...

ஒருத்தி படத்துக்கெதிரே குத்துவிளக்கு ஏற்றுகிறாள். அவளுடைய புதுப்புடவை புசுபுசுக்கிறது.’

-’த்வனி’யில் லா.ச.ரா.

சரண்யா ஒரு மண் பானையைப் போட்டு உடைப்பது போலவா விஷயத்தை உடைப்பாள்? ராம்நாத்துக்கு ஒருபுறம் அதிர்ச்சியாக இருந்தது என்றால், இன்னொரு புறம் ஆனந்தமாகவும் இருந்தது. ஆனாலும் இப்படி ஒரு உண்மை அந்த இடத்தில் தெரியவரும் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை.

நெடுநேரம் எந்தப் பதிலும் கூறாமல், கூறவும் முடியாமல் மௌனமாய் நின்றார். அருகில் அவர் சாப்பிட்ட நிலையில் வைத்த டிபன் பிளேட் காய்ந்துகொண்டிருந்தது. அரவிந்தனோ, சரண்யாவை ஒரு மாதிரி பார்த்தான்.

“உனக்கு அறிவே இல்லைக்கா...இப்படித்தான் போட்டு உடைப்பியா? சார் இப்பதான் கொஞ்சம் ஸ்டெடி ஆகியிருக்கார். அதைக் கெடுத்தியே” என்றவன், ராம்நாத் பக்கமாகத் திரும்பினான். ஒரு முடிவோடு தீர்க்கமாகப் பேச ஆரம்பித்தான்.

“வெரி சாரி சார்... என் சிஸ்டருக்கு ரம்யாவை ரொம்ப்

பிடிச்சிருக்கு. அதனால எனக்கும் பிடிக்கணும்னு எதிர்பாக்கறாங்க. அவங்க வெளிப்படையா போட்டு உடைச்ச மாதிரி நானும் வெளிப்படையாகவே சில விஷயங்களைச் சொல்லிடறேனே...எனக்கு எப்படியும் கல்யாணம்னு ஒண்ணு நடக்கும். அப்படி நடந்தா இந்த வீட்டுக்கு ஒருத்தி என் பொண்டாட்டியா வருவா. அப்படி வரப்போறவ எப்படிப்பட்டவளா வேணும்னாலும் இருக்கலாம். அக்காவுக்கு அதுல ஒரு தயக்கம். ஏற்கெனவே யாரும் இல்லைங்கிற ஒரு தாழ்வு மனசு. இதுல அக்காவைப் பாரமா நினைக்கிற ஒருத்தி வந்துட்டா அக்காவோட நிலை ரொம்ப மோசமாப் போகும் இல்லையா? அதனால எனக்குக் கல்யாணம் நடக்காம இருந்தாக்கூட நல்லதுன்னுதான் முதல்ல அக்கா நினைச்சாங்க. ஆனா அப்படி நினைக்கிறது தப்புன்னு அவங்களுக்குள்ளேயே குற்ற உணர்ச்சி. கிட்டதட்ட உங்களை மாதிரித்தான் இவங்களும். கல்யாணம் நடக்கணும் அதே சமயம் தங்களோட பாதுகாப்புக்கு எந்தப் பங்கமும் வந்துவிடக்கூடாது. இதுதான் அக்காவோட எதிர்பார்ப்பு. அதுக்கு ஏத்த மாதிரி ரம்யா இவங்க கண்ணுல பட்டாங்க. இதுதான் சார் விஷயம். எனக்கு ரம்யாவைப் பிடிச்சிருக்கு. உங்க பெண்ணை யாருக்குமே பிடிக்காமப் போகாது. அவங்க அப்படி ஒரு கேரக்டர். ஆனா அவங்களுக்கு என்னைப் பிடிக்கணும்னு ஒண்ணு இருக்கே? எல்லாத்துக்கு மேலே உங்களுக்கும் பிடிக்கணும். அப்புறம் ஜாதி, ஸ்டேட்டஸ்னு நிறைய விஷயம் இருக்குது.

அக்கா ஆசைக்கு வெட்கமில்லை, விவேகமும் இல்லை. அதான் போட்டு உடைச்சிட்டாங்க. தயவு செய்து இதை நீங்க பெரிசா எடுத்துக்காம அப்படியே விட்டுடுங்க. ஏன்னா நான் இப்பத்தான் உங்க வீட்ல இருந்து வர்றேன். ரம்யா கொஞ்ச நாளைக்குக் கல்யாணம் பத்தியே சந்திக்கப் போறதில்லைன்னு சொன்னாங்க. உங்க இண்டஸ்ட்ரி... அப்புறம் உங்க ஹெல்த்னு அவங்க கான்சால்ட்ரேட் பண்ண நினைக்கிற விஷயங்கள் எவ்வளவோ இருக்கு. பேசினதை அப்படியே மறந்திடுங்க ப்ளீஸ்.” –அரவிந்தன் ஒரு பாட்டம் பேசி முடித்தான். சரண்யாவும் அவனை நெட்டுக்குத்தலாகப் பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.

ராம்நாத் சட்டென்று எழுந்தார். வெளியே புறப்படத் தயாராகிவிட்ட மாதிரி ஒரு பாவனை வெளிப்பட்டது. கார் கீ செயின் டேபிள் மீது கிடந்தது. எடுத்துக்கொண்டார். அவிழ்த்து விட்ட ஷூ சாக்ஸையும் மாட்டத் தொடங்கினார். அவரது மௌனத்தில் கப்பல் கிரேன்களில் தொங்கும் அரிசி மூட்டைகளைப்போல அப்படி ஒரு கனம்.

அரவிந்தன் முடிவு செய்துவிட்டான்.

அவர் ஏற்கெனவே வேதாளம். இந்த வேதாளத்தின் மௌனம் கலைந்தால் மீண்டும் முருங்கை மரம்தான். இங்கிருந்து நேராக பாருக்குப் போகப் போகிறாரா இல்லை... வீட்டுக்குத்தானா? அவனுக்குக் குழப்பமாக இருந்தது. ஆனால், அவர் சரண்யாவை மட்டும் திரும்பி ஒரு பார்வை பார்த்துவிட்டு விறுசிறுவென நடக்க ஆரம்பித்தார்.

“அக்கா... எல்லாத்தையும் கெடுத்துட்டேக்கா... பேசாம’ங்கே’ன்னு இருப்பியே... இப்ப என்ன வந்துச்சு உனக்கு? எதுக்கு இப்படி எப்ப எதைப் பேசறதுன்னு இல்லாம பேசினே... மோசம்க்கா நீ...”

விஸ்தாரமாகச் சலித்துக் கொண்டே ஒரு மூலையாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டான். சரண்யா கூட வருத்தப்பட ஆரம்பித்தாள்.

‘நான் அவசரப்பட்டுவிட்டேனா?’

ராம்நாத்தின் கார் நிதானமான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது. நல்லவேளை, அது ஒரு பாருக்கும் போய் நின்றுவிடவில்லை. ஞானப்பிரகாசம் வேலை செய்யும் ஃபேக்டரி முன்னால் போய் நின்றது. ஞானப்பிரகாசம் உள்ளே இருந்தார். ஒரு மினி பஞ்சாயத்தை முடித்து விட்டு நிமிர்ந்தார். கண்ணாடி அறைக்குப் புறத்தில் ராம்நாத் அமர்ந்திருப்பது தெரிந்தது. இன்ப அதிர்ச்சியாகவும் அது மாறியது. எழுந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான்.

“என்ன ராம்நாத் ஆபீஸுக்கே தேடி வந்துட்டே?”

“ஏன் ஞானா...வரக்கூடாதா?”

“பாழப்போன ஃபோன் எதுக்கு இருக்கு?”

“அதுல உன் முகம் என் முகமெல்லாம் தெரியாதேடா ஞானா,”

“அப்ப நீ வாய்ஸை நம்பல.”

“வளவளன்னு பேசினது போதும் ஞானா. ஒரு முக்கியமான விஷயம். ஐ நீட் யுவர் ஹெல்ப்” என்றபடி அமர்ந்து காலை நீட்டிக் கொண்டார்.

“சொல்லு.”

“ரம்யாவுக்கு நீ ஏற்பாடு செய்த யோகேஷ்தான் அமையாமப் போயிடுச்சு. இப்ப அரவிந்தனு ஒரு பையன் கிடைச்சிருக்கான். ஜர்னலிஸ்ட்! சப் எடிட்டரா இருக்கான். ரம்யா-அரவிந்த் நடுவில ஒரு ப்ரண்ஷிப் இருக்கு. ஏற்கெனவே ஒருத்தரை ஒருத்தருக்கு சல்லாத் தெரியும். வாட் டூ யூ சே?”

ஞானா தீர்க்கமாக ராம்நாத்தைப் பார்த்தார். கைகள் இரண்டையும் கோர்த்துக் கொண்டார். பாடிலாங்வேஜில் அவர் ஆச்சரியப்படுவது, ஆனந்தப்படுவது எல்லாம் வெளிப்பட்டது. செல்ஃபோனில் பேசும் போது இதை எப்படி உணர முடியும்.

“என்னடா...”

“இல்ல... நீதான் பேசறியான்னு ஆச்சரியமா இருக்கு.”

“அப்பன் பேசாம தெருவுல போறவனா பேசுவான்?”

“எங்க இன்னொருவாட்டி சொல்லு?”

“போதுண்டா...வாயைக் கிளறாதே. சட்டுன்னு ஒரு பதில் சொல்லு.”

“ஃபூல் மாதிரிப் பேசாதே. பதில் சொல்ல வேண்டியவ ரம்யா. அப்புறம் அந்தப் பையன். இரண்டு பேரும் நல்ல

நண்பர்கள்னு சொல்றே. நட்பை லைஃப் அக்டரிமென்டா மாத்த நினைக்கிறது ராந்தல் விளக்கை பெட்ரோமாக்ஸா மாத்தறா மாதிரி விளக்கே வெடிச்சிடறதுக்கு சான்சஸ் அதிகம்.”

“இல்லைடா... பையனோட அக்காதான் இந்த டாப்பிக்கை எடுத்தவ. பையனுக்கும் சம்மதம். ரம்யாவும் சம்மதிப்பாங்கிறது என் யூகம்.”

“நீ பேசறதைப் பார்த்தா பேச்சுவார்த்தைப் முடிஞ்ச மாதிரி தெரியுதே?”

“இப்பத்தான் ஆரம்பமாயிருக்கு. இன்பாக்ட் இப்படி ஒரு இடம் கிடைக்கிறதும் அபூர்வம்.”

“அந்த சைட்ல பையனோட அக்கா சரண்யா ஒரு விடோ. நான் இங்க ஒரு விடோயர். ஏன்னா என் வரையில் சுசீலா செத்தவதானே? எங்க இரண்டும் பேருக்குமே ஒரே மாதிரி வேவ் லெங்த்.”

ஞானபிரகாசம் சட்டென்று உச்சந்தலையில் முடியை இழுத்தது போல நிமிர்ந்தார்.

“என்னடா. வேவ்லெங்த்துன்ன உடனே ஆச்சரியமாயிடுச்சா. ரொம்ப சிம்பிள். இங்க ரம்யாவுக்குக் கல்யாணமானா நான் தனிமையா ஃபீல் பண்ணுவேன்னு நினைச்சேன் பாரு. அந்த மாதிரி அங்க சரண்யாவும் நினைச்சிருக்கா.”

“அக்கா பேர் சரண்யாவா?”

“ஆமாண்டா...என்னமா சமைக்கிறா தெரியுமா. நல்ல கை மணம். அதே சமயம் குழப்பமில்லாத சிந்தனை. ரம்யாவை அவளுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. ரம்யாவுக்கும் சரண்யாவைப் பிடிச்சிருக்கு. ஒரு டி.வி. நடிகன் ஒருத்தன் சரண்யாகிட்ட கொஞ்சம் ஜொள்ளுவிட்டு அப்புறம் பெரிசாவே டார்ச்சர் பண்ணியிருக்கான். ரம்யா போலீஸ் வரை போய் அவனை உண்டு இல்லைன்னு பண்ணிட்டா. அதனால் சரண்யாவுக்கு ரம்யா மேல ஒரு பற்றுதல், மதிப்பு

எல்லாம். ஒரு பொண்ணு இளம் வயசுல விதவையாகிறதும் பெரிய கொடுமைடா. என்னைக் கேட்டா ரம்யாவுக்குக் கூடக் கொஞ்சம் தள்ளிக் கல்யாணம் பண்ணலாம். சரண்யா மாதிரி விடோக்களுக்குத்தான் ஏதாவது ஒரு நல்ல வழி பண்ணணும்."

ராம்நாத் பீறிட்டார். ரம்யாவில் தொடங்கிய பேச்சு சரண்யா வரை போய் வளைத்துக் கொண்டது. கூட்டிக் கழித்துப் பார்த்தபோது சரண்யாவுக்காகவே இந்தக் கல்யாணம் நடந்தால் நல்லது என்று ராம்நாத் நினைப்பதை ஞானப்பிரகாசம் புரிந்து கொண்டுவிட்டார். நெடுநாட்களுக்குப்பிறகு புத்துணர்ச்சியோடும் தன்னம்பிக்கையோடும் ராம்நாத் நிற்பதுபோல் அவருக்குத் தோன்றியது.

"ராம்நாத்...உங்கிட்ட ஒரு புது ஒளி தெரியுதுடா...இதெல்லாம் எந்த மார்க்கெட்லையும் எவ்வளவு கோடி கொடுத்தாலும் கிடைக்காது. கீப் இட் அப். ரம்யாகிட்ட நான் பேசறேன். உன் விருப்பப்படியே கல்யாணம் நடக்கட்டும்."

"அப்ப உனக்கும் சம்மதம்னு சொல்லு."

"நான் சொல்லலைன்னாலும் நீ விடமாட்டே போலிருக்கே?"

"அப்படியில்லை. அட் த சேம் டைம் ரம்யாகிட்ட பேசி அவளை..."

"அப்ப நான் கிளம்பறேண்டா" படுவேகமாக எழுந்தார் ராம்நாத். ஆச்சரியம் அதிகமானது ஞானப்பிரகாசத்திடம்.

"என்னடா எழுந்துட்டே..."

"திருப்பதி போகப் போறேண்டா."

"என்ன திடீர்னு!"

"ரொம்ப நாள் டியூ அது. அந்தச் சாமியோட ஒரு கணக்கு நேர் ஆகாமயே இருக்கு. எனக்கு எப்ப நல்ல வழி காட்டறியோ அப்பத்தான் உன்னைப் பார்க்க வருவேன்னு

சொல்லியிருந்தேன். அதான் கிளம்பிட்டேன்.”

பேசிக்கொண்டே கண்ணாடி அறையிலிருந்து வெளிப்பட்டுக் கதவு வரை சென்றவர் படுவேகமாகத் திரும்பிவந்து, “ஞானா...இன்னொரு முக்கியமான விஷயம்டா, கல்யாணத்துக்குப் பிறகு இரண்டு குடும்பமும் ஒண்ணா இருக்கணும். அந்த விடோ லேடி கஷ்டப்பட வேண்டாம். அதனால சொல்றேன். மாப்பிள்ளை அரவிந்தனும் எப்படி மாமனார் வீட்டோட இருக்கிறதுன்னு குழப்பிக்க வேண்டாம். நாம ஒரு முன் மாதிரியா... ஐ மீன் ரோல் மாடலா சொஸைட்டிக்கும் இருந்து காட்டுவோம்னு நான் நினைக்கிறேன். அதையே நீயும் சொல்...என்ன?”

ராம்நாத் வழிந்துவிட்டு விறுவிறுவென நடந்து வெளியேறி மறைந்தார். ஞானப்பிரகாசத்திடம் திகைப்பான திகைப்பு.

ராம்நாத்தின் வீட்டுக்குள் ஞானப்பிகாசத்தின் கார் நுழைந்த போதே அவருக்கு முன்னால் அங்கு அரவிந்தனின் பைக் நின்றிருந்தது.

“அங்கிள்...நான் மொட்ட மாடியில இருக்கேன். நேர இங்க வந்திருங்க” என்று தலைக்கு மேலிருந்து குரலும் கேட்டது. நிமிர்ந்து பார்த்தார் ஞானப்பிரகாசம். மாடிக் கைப்பிடிச் சுவருக்கு மேல் ரம்யாவின் முகம்.

சிரித்துக்கொண்டே அவரும் மொட்டை மாடிக்குப் போனபோது இன்னொரு சுவர் மேல் அரவிந்தன் தெரிந்தான். ஞானப்பிரகாசத்தைப் பார்க்கவும், “ஹலோ சார்...”என்றபடி எழுந்து நின்று மரியாதைக்கு மாறினான்.

“வாட் எ சர்ப்ரைஸ்...இரண்டு பேரையும் நான் பார்க்கணும்னு நினைச்சிட்டிருந்தேன். இங்கேயே இருக்கீங்க. ரொம்ப சௌகரியமாப் போச்சு. இப்பத்தான் ராம்நாத் ஆபீஸீக்கு வந்துட்டுப் போறான். அவனுக்குள்ள ஒரு சந்தோஷம். காரணம் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். என்ன முடிவு எடுத்திருக்கீங்க?”

-ஞானப்பிரகாசம் நேரே விஷயத்துக்கு வந்தார். அவர்களிடம் ஏதோ பதில் கூற முடியாத மௌனம்.

“உங்களைத்தான்...இப்படி மௌனமா இருந்தா எப்படி?” தூண்டிவிடவும் மெல்ல நிமிர்ந்தாள் ரம்யா.

“கல்யாணம்ங்கிறது எதுக்கு அங்கிள்?” என்று ஆரம்பித்தாள்.

“அதுசரி... ஏம்மா உனக்கு இதுக்குப் பதில் தெரியாதா? நான் ஒரு உபன்யாசம் பண்ணணுங்கிறயா?”

“உபன்யாசம் வேண்டாம். சுருக்கமா ரெண்டு வரியில சுலபமாச் சொல்ல முடியுமா உங்களால?”

“எனக்குத் தெரிஞ்ச பதிலைச் சொல்றேன். நான் பத்துபேரை இந்தக் கையால தூக்கிவிடலாம். ஆனா என்னை என்னால இந்தக் கையால தூக்க முடியாது. அதுக்கு இன்னொருத்தர் வேணும், அது லைஃப் பார்ட்னரா இருந்தா எல்லாவகையிலும் நல்லது.”

“அப்ப கல்யாணம் மனுஷனுக்கு ரொம்ப நெசசரியான ஒண்ணு. அப்படித்தானே?”

“இப்ப இதுக்கு எதுக்கும்மா பட்டிமன்றம்? நான் என்ன சாலமன் பாப்பையாவா? நீ பளிச்சினு விஷயத்துக்கு வா. எனக்கு ஒரு துணையும் தேவை இல்லை. அப்பா துணை போதும்னு சொல்லப் போறியா?”

“தப்பு அங்கிள்...”–வேகமாக மறுத்தாள் ரம்யா. ஞானப்பிரகாசத்துக்கு அது அதிர்ச்சியாகக்கூட இருந்தது.

“எனக்கே ஒரு துணை தேவைன்னா அப்பாவுக்கு ஒரு துணை அவசியம்தானே?”

“அதனால...?”

“சொன்னா அதிர்ச்சி அடையக் கூடாது. கோவிக்கவும் கூடாது.”

‘நீ முதல்ல விஷயத்தைச் சொல்.”

“நானும் அரவிந்தனும் மனசுவிட்டுப் பேசி எடுத்திருக்கிற ஒரு முடிவையும் இப்ப உங்க கிட்ட சொல்லப் போறேன்.”

“சொல்லு... சீக்கிரம் சொல்லு.”

“திரும்பவும் சொல்றேன். நாங்க எல்லாக் கோணத்துலயும் சிந்திச்சுப் பாத்துட்டு இந்த முடிவை எடுத்திருக்கோம். சில அசட்டுப் போலித்தனங்களை உடைச்சு நொறுக்கி ஆத்மார்த்தங்களுக்குத் தண்ணிர் விடறதுதான் எப்பவும் புத்திசாலித்தனம்.”

“தயவு செய்து விஷயத்துக்கு வர்றியா?”

“வந்துட்டேன் அங்கிள். நானும் அரவிந்தனும் கல்யாணம் பண்ணிக்கத்தயார். ஆனா ஒரு கண்டிஷன். அதற்கு முந்தி என் அப்பாவும் இவங்க அக்காவும் கல்யாணம் பண்ணிக்கணும், சரியா?”

-ரம்யாவின் கேள்வி ஞானப்பிரகாசத்தைத் திக்குமுக்காடச் செய்தது.

# 26

‘குருடன் ஒருவன் கையில் லாந்தருடன் போய்க் கொண்டிருந்தானாம். எதிரில் வந்த ஒருவன். உனக்குத்தான் கண் தெரியவில்லையே லாந்தர் எடுத்து வருகிறாய் என்று கேட்டானாம்.

அதற்குக் குருடன், எனக்கு இல்லாவிட்டாலும் உனக்கு இருக்கிறது அல்லவா? நீ தெளிவாகப் பார்த்து ஓரமாக நடக்கத்தான் என்றானாம். நமது பழைய சாஸ்திரங்களும் இப்படித்தான். அவைகள் இப்போது புரியாவிட்டாலும் எதிர்காலத்தில் யாருக்காவது புரியலாம்.’

-’தெய்வத்தின் குரல’லில் காஞ்சிப் பெரியவர்

ஞானப்பிரகாசம் முகத்தில் ஒருவித இன்ப அதிர்ச்சி. அரவிந்தனும், ரம்யாவும் இப்படி ஒரு முடிவுக்கு வருவார்கள் என்று அவர் ஓரம் சாரமாகக் கூட எண்ணிப் பார்க்கவில்லை. அதே சமயம் அவள் சொல்வதில் தவறு இருப்பதாகவும் தெரியவில்லை.

பிரமிப்பு அவரிடம்.

மேரு மலை நெட்டுக்குத்தாய் கூர்மையாக நிமிர்ந்து நிற்கிறாற் போன்ற அந்தப் பிரமிப்பு அவருக்குப் புதியதும்கூட...

“அங்கிள்...”

‘ஆங்!”

“என்ன அங்கிள்...என்ன பேசறதுன்னு தெரியலியா?”

“அஃப்கோர்ஸ்...ஐ வாஸ் ஸ்டன்னுடு.”

“எக்ஸாஜிரேட் பண்ணாதீங்க அங்கிள். நான் சொன்னதில் தப்பு இல்லையே?”

“இருந்திருந்தாத்தான் வேகமா ரியாக்ட் பண்ணியிருப்பேனே!”

“அப்ப நாங்க சரியாத்தான் யோசிச்சிருக்கோம்,”

“அது சரி...எப்படி இப்படி ஒரு எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டது?”

“ஒரு வகையில இப்படி நாங்க யோசிக்க அவங்கதான் காரணம்.”

“எந்த விதத்துல? உன் அப்பாவோ, இல்ல அந்த சரண்யாவோ தங்களுக்கு மறுமணத்துல இன்ட்ரஸ்டஸ் இருக்கறத எப்பவாவது வெளிக்காட்டிக்கிட்டாங்களா?”

“நிச்சயமா இல்லை. ஆனா கல்யாண வாழ்க்கை பாழாப்போச்சேன்னு வெளிப்படையாவே பாரம் சுமந்தாங்க. தங்களுடைய சோக உணர்ச்சிகளை வெளிக்காட்டத் தெரியாமக் காட்டினாங்க...அவங்க தவிப்பை, தத்தளிப்பை என்னால, எங்களால நல்லாவே உணர முடிஞ்சது.”

“அதுக்கு மறுமணம்தான் தீர்வுன்னு எப்படி முடிவுசெய்தே?”

“வேற தீர்வு ஏதாவது இருந்தா நீங்க சொல்லுங்க அங்கிள், நாங்க இப்பவே பரிசலிக்கிறோம். “

“இது கொஞ்சம் கஷ்டமான கேள்விதான். அது சரி, உங்களோட இந்த முடிவுக்கு அவங்க இரண்டு பேரும் சம்மதிக்கலைன்னா...”

“நிச்சயமா அதுல போலித்தனம் இருக்கும்.”

“லுக்...போலித்தனம் இன்னிக்கு யார்கிட்ட இல்ல? பர்சன்டேஜ்தான் வித்யாசப்படுது. அது பெரிய தப்பு இல்ல ரம்யா.”

“நானும் தப்பு, சரின்னு சொல்ல வரலை. அவங்க கொஞ்சம் டெலிகேட்டா வேணும்னா ஃபீல் பண்ணலாம். ஆனா அவங்க கட்டாயம் இதுக்குச் சம்மதிக்கணும். அதுதான் அவங்களுக்கு நல்லது.”

“சரி...நான் அவங்ககிட்டப் பேசிப் பாக்கறேன். இதுல ராம்நாத் பத்திக்கூட நான் ஓரளவு தெரிஞ்சவன் என்னால

அந்த’ சரண்யா பத்திதான் டிசைட் பண்ணமுடியல.”

“டோன்ட் ஒர்ரி சார்... ‘நீ சம்மதிக்கலைன்னா நான் சாமியார் ஆயிடுவேன்’னு சொன்னாப் போதும்...அவ வழிக்கு வந்துடுவா?”

-அரவிந்தன் பாய்ச்சலாகக் குறுக்கில் வந்து பதில் சொன்னான். ஞானப்பிரகாசம் தாடையைத் தேய்க்கத் தொடங்கினார்.

“சார், இதுல யோசிக்க என்ன இருக்கு? ஒரு கோணத்துல பார்த்தா நானும் ரம்யாவும் சந்திச்சதே இந்த நல்ல காரியத்துக்காகத் தானோன்னு நினைக்கிறேன். எங்களுக்கு வயசு இருக்கு...நிறைய வாய்ப்புகளும் இருக்கு. ஆனா, அவங்க நிலையைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க...”

“மிஸ்டர் அரவிந்தன்... ராம்நாத்தை இன்னொரு கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி அலுத்துப் போனவன் நான். அவனுக்குச் சித்தினாலே ராட்சஸின்னு ஒரு எண்ணம். ‘முதல் மனைவியே எனக்கு உருப்படலை. இதுல இரண்டாவதா?’ன்னு என்னைத் திருப்பிக் கேட்டவன்... ‘எனக்கு என் பொண்ணு இருக்கா... அவ போதும் எனக்கு’ன்னும் சொன்னவன். இருந்தாலும் அவனைக் கொஞ்சம் தட்டி நிமிர்த்திச் சரிசெய்துவிட முடியும். ஆனா, ஒரு விதவையை நாம் ஒரு ஆண்கிட்ட நெருங்கற மாதிரி நெருங்க முடியாது. ஏன்னா இன்னும் எத்தனை ஆயிரம் வருஷம் ஆனாலும் சரி... பெண்களோட சில இயல்புகள் மட்டும் மாறவே மாறாது. அது மாறவும் கூடாது. அதுல ஒரு அம்சம் கற்பு. கடைசி வரை ஒரு தாலி. ஒரு கணவன்னு வாழ்ந்து முடிஞ்சு போகறதத்தான் பெருமையா நினைக்கற ஒரு இனம் பெண் இனம். இறந்துட்ட தன் கணவன் ஆகாயத்துல தனக்காகத் தனியா காத்துக்கிட்டிருக்கறதா நினைச்சு பூமியிலே அவன் நினைவை ஒரு வெள்ளைப் புடவை கட்டிச் சுமக்கிறவங்க. அதை ஒரு மடத்தனம்னு நாம சுலபமா சொல்லிடலாம். ஆனா, அதுலதான் மானுடத்தோட, குறிப்பா பெண்களோட பற்று, பாசத்தோட உச்சத்தைப் பார்க்க முடியும். வாழ்க்கைல ஆண்-பெண் உறவுங்கறது எப்படி இருக்கணும்கிறதுக்கு ஒரு

எடுத்துக்காட்டு கணவன்-மனைவி உறவோட வலிமைலதான் இருக்கு. நல்ல அப்பா அம்மாவைப் பார்க்க முடியாத ஒரு மனிதன் எது இருந்தும் இல்லாதவன்தான்...இப்படிப் பேசிக்கிட்டே போகலாம்...”

-ஞானப்பிரகாசம் ஏதோ கல்லூரியில், பரிட்சையில் ஒரு கேள்வி கேட்டு விட்டதைப் போல நினைத்து ஒரு கட்டுரை போலப் பேசினார்.

“இதுலல்லாம் எவ்வளவு நியாயம் இருக்கோ, அதுக்குத் துளியும் குறையாத நியாயம் ஒரு பரிதவிக்கிற நிலைல உள்ள பெண் மறுமணம் செய்துக்கறதுலையும் இருக்கு அங்க்கிள். மனிதத்தன்மையே இல்லாத கணவனை அடைஞ்சு அப்புறமா விவாகரத்துன்னு விடுதலையும் பெற்றவங்க மனசுல எந்த ஆண் மேல மதிப்பு இருக்கும்? ஒரு நல்ல ஆண்மகன் அவங்க மனசுல இடம் பிடிக்கற வரை பாக்கற வரை பாக்கறவங்களையெல்லாம் அவங்க தன்னோட ராட்சஸ கணவன் மாதிரி தானே நினைப்பாங்க...குறைந்தபட்சம் அவங்க மனதை மாத்தவாவது ஒரு நல்ல ஆண்மகன் அவங்களுக்கு மாப்பிள்ளையா அமையறது தானே சரியான முடிவு.”

ஒரு தாலி, ஒரு கணவன்-ங்கிறது எவ்வளவுக்கெவ்வளவு சரியானதோ, அதே அளவுக்கு அது பிழையானதும்கூட... குணசேகர் மாதிரி நபர்கள் காமவலை வீசும்போது அவங்க நிலைப்பாடு என்ன? யோசிச்சுப் பாருங்க. கணவன்கிற பாதுகாப்பு இருந்தா யாருக்காவது வாலாட்டத் தோணுமா?”

-ரம்யாவும் ஒரு பதில் பிடிபிடித்தாள்.

“அம்மாடி... இந்த உலகத்துல சில விஷயங்கள் இருக்கு. அதை எல்லாம் தப்புன்னும். சரின்னும் வாரக்கணக்குல பேசிக்கிட்டே போகலாம். அதுல ஒண்ணுதான் இதுவும். பொதுவாச் சொல்றேன். இந்த மனசு இருக்கே...இது ஒரு விசித்திரமான விஷயம். இது எதையும் ஒப்பிட்டுப் பார்த்துதான் புரிஞ்சுக்க முயலும். கம்பேரிசன்னு ஒண்ணு இல்லாம ஒரு விஷயத்தையும் ஒரு நாளும் இது விளங்கிக்காது. அப்படி விளங்கிக்க இதுக்கு பாயின்ட் ஆஃப்

வியூ ரொம்ப முக்கியம்.

ஒரு விஷயத்தை எங்க இருந்து பாக்கறோம். எப்படிப் பாக்கறோம்கறதுதான் எல்லாமே இருக்கு. தரைல 6-ன்னு எழுதிட்டு எதிர்ப்பக்கம் போய்ப் பார்த்தா அதே 6 ஒன்பதாத் தெரியும். அந்தப் பக்கம் நின்னு பார்த்தா ஒன்பது: இந்தப்பக்கம் நின்னு பார்த்தா ஆறு. விஷயம் ஒண்ணுதான், பாயின்ட் ஆஃப் வியூ மாறினதால வந்த மாற்றம் இது. இதுல யார் சொல்றதச் சரின்னு சொல்ல முடியும்? யார் சொல்றதப் பிழைன்னும் எடுத்துக்க முடியும். இரண்டு பேர் சொல்றதுமே சரிதான். நாம எந்தப் பக்கம். யார்கூட இருக்கோமோ அவங்களுக்கு சப்போர்ட் பண்ண வேண்டிதுதான்.

“இப்போதைக்கு ராம்நாத்தும் சரண்யாவும் கல்யாணம் பண்ணிக்கிறதுங்கறது இரண்டு பேருக்குமே நல்லதுங்கற பக்கம் நாம இருக்கோம். அதை அப்படியே செயல்படுத்தப் பார்ப்போம். மற்ற கருத்துகள் நம் வரைல அநாவசியம்னு கூடச் சொல்வோன்...”

-ஞானப்பிரகாசம் சொன்ன அந்தப் புதிய விளக்கம் ஒரு விளங்கிக்கொள்ள முடியாததையே விளங்கிக்கொள்ள வழி இருப்பதாகத் தான் அரவிந்தனையும், ரம்யாவையும் நினைக்க வைத்தது.

“சரி... உங்களுக்கு ஒரு கேள்வி. அவங்க சம்மதிச்சுட்டா நீங்க சம்மதிக்கிறதுல எந்தவித ஆட்சேபணையும் இல்லையே...”

“நிச்சயமா இல்லை. ஆனாலும் நாங்க உடனே கல்யாணம் செய்துக்கப் போறதில்லை. ஒரு ஆறு மாசம் நல்லபடியாப்பழகிட்டு, கருத்து வேற்றுமைகளைக் குறைச்சுக்கிட்ட பின்னால ஒண்ணு சேரலாம்னு நினைக்கிறேன்.”

“அப்ப உங்கவரைல அவங்க திருமணம்தான் பெருசா...?”

“சந்தேகமில்லாம...”

ஞானப்பிரகாசத்தைச் சரண்யா எதிர்பார்க்கவில்லை. இருந்தும் அரவிந்தன், ரம்யா விஷயமாகப் பேசத்தான் அவர் வந்திருப்பதாக நினைத்தாள்.

“வாங்க...ராம்நாத் சார், அரவிந்த்-ரம்யா கல்யாண சம்பந்தமா ஏதாவது சொல்லிவிட்டிருக்காரோ?”

“ஆமாம்...இதுல உங்க பதில்லதான் எல்லாமே இருக்கு...”

“என் பதில்லதான் எல்லாம் இருக்கா...என்ன சொல்றீங்க?”

“இல்ல...தன் கல்யாணத்துக்குப் பிறகு அப்பாவைக் கூடஇருந்து பார்த்துக்க யார் இருக்கான்னு ஒரு கேள்வி அவளுக்கு...”

“அதனால...”

“அவருக்குத்தான்...”

“அவருக்குத்தான்...”

“இல்ல... இப்ப அவருக்குத்தான் ஒரு துணை அவசியம்னு நினைக்கறா...”

“நீங்க என்ன சொல்றீங்க? அப்பாவை விட்டுப் பிரிஞ்சு வந்து அவ கல்யாணம் செய்துக்க மாட்டாளமா? பரவாயில்ல...அவர் எதுக்குப் பிரிஞ்சு போகணும்? என் தம்பி கூடவே அவரும் இருக்கட்டும்.”

“அவர் வீட்லையா, உங்க வீட்லையா?”

“நீங்க கேக்கறதப் பார்த்தா என் தம்பிய அவர் வீட்டோட மாப்பிள்ளையா வந்துடச் சொல்ற மாதிரி தெரியறதே...”

“ஆமாம்... கடல் போல வீடும் சொத்தும் அவருக்கு இருக்கு. வசதி இருக்கிற இடத்துல வாழ முயற்சி செய்யறதுதானே சரி.”

“அப்ப இதுக்குப் பதிலை என் தம்பி தான் சொல்லணும். அவன் ரோஷக்காரன். இதுக்குச் சம்மதிக்கமாட்டான்னுதான் நினைக்கிறேன்...”

“அப்ப அவர் தனியாவே இருந்து சாகனும்... ஆனா நீங்க மட்டும் உங்க தம்பியோட இருந்துகிட்டு உங்க வாழ்க்கையைச் செலுத்துவீங்களோ?”

“உளறாதீங்க, சுத்தி வளைச்சுப் பேச வேண்டாம். நேரடியா விஷயத்துக்கு வாங்க. அவர் என்ன என் தம்பிய விலைக்குக் கெட்கிறாரா?”

“அப்படிக் கேட்டா உங்களோட பதில்...”

“என் பதில் எதுக்கு... என் தம்பியே சரியான பதிலை அவருக்குச் சொல்லிருவான்...”

“அப்படியா...ஒருவேளை உங்க தம்பி சரின்னுட்டா...”

-ஞானப்பிரகாசம் முக்கியமான இடத்தில் நிறுத்தி கேப் விட்டார்.

“நீங்க கேக்கற தொனியப் பார்த்தா அவன் சரின்னு சொல்லிட்ட மாதிரி தெரியுதே...”

“சரி...அப்படிக் கூட வெச்சுக்குங்க. உங்க பதிலைச் சொல்லுங்க.”

“நான் என்னத்தச் சொல்ல... ஆத்துலையோ, குளத்துலையோ போய் விழவேண்டியவள்தான்.”

“அப்ப வாழற எண்ணம் இல்லையா?”

“என்னத்த... நாப்பது வயசு நிறையல. அதுக்குள்ளே எல்லாத்தையும் பார்த்துட்டேன். எதுக்கு மத்தவங்களுக்குப் பாரமா?”

“தற்கொலைதான் தீர்வா? வாழ முயற்சி செய்யலாமே...”

“எப்படி வாழறது... யார் இருக்கா?”

“யாராவது இருந்தா...?”

-ஞானப்பிரகாசம் திரும்பவும் இடைவெட்டினார். சரண்யா திருதிருவென்று முழிக்கத் தொடங்கினாள்.

“என்ன பதிலைக் காணோம்?”

“என்னத்தச் சொல்றது... சர்க்கரைன்னு எழுதி நக்கினால்லாம் இனிக்காது. வாழ முயற்சி செய்யறதப் பத்தி ஒரு ஆதரவுக்குள்ள இருக்கிற நீங்க பேசலாம். நான் பேச முடியாது... ஏன்னா, நான் எதுக்கும் பிரயோஜனம் இல்லாதவ...”

“ஒருத்தர் சொல்றார். உங்களால பெரிய அளவு பிரயோஜனம் இருக்காம்...”

“யார் அவர்?”

“வேற யார்... ராம்நாத்தான்.”

-அதிர்ந்தாள் சரண்யா.

“அவர் மகள் ஒரு கண்டிஷன் போட்ருக்கா. அதுக்கு நீங்க சம்மதிச்சா உங்க தம்பியைக் கல்யாணம் பண்ணிக்க அவளும் ரெடியா இருக்கா...”

“என்ன செய்யணும்?”

“நீங்க மறுமணம் செயதுக்கணும்...”

“ஐய்யோடா... இந்த வயசுல என்னை யார் கல்யாணம் செய்துப்பா...?”

“இருக்காங்களே...”

அந்த பதிலால் திரும்பவும் அதிர்ந்தாள் சரண்யா.

நெடுநேரம் கழித்து அவேளே வாயைத் திறந்தகாக, “யார் அது?” என்று கேட்க, ஞானப்பிரகாசமும் சிரித்தபடி, “வேற யார்... ராம்நாத்தான்” என்றார்.

எதனாலோ அவளால் அதன் பிறகு ஒரு வார்த்தை பேச முடியவில்லை. அவளிடம் பெரிதாய் எதிர்ப்புணர்வும் தெரியவில்லை.

ஞானப்பிரகாசமும் நிம்மதிப் பெருமுச்சுவிட்டார்!

ரிஜிஸ்தர் ஆபீசில் கையெழுத்துப் போட்டு மாலையும் மாற்றிக்கொண்டு விட்ட பிறகு ராம்நாத்தும் சரண்யாவும் தம்பதி சமேதராகச் சேர்ந்து நின்றனர். ரம்யாவும் அரவிந்தனும் ஒரு காணக் கிடைக்காத காட்சியைக் காண்பது போலக் கண்டனர். ஞானப்பிரகாசமும்தான்... ரிஜிஸ்திராரே எழுந்து கைதட்டினார்.

“என் சர்வீஸ்ல இப்படி ஒரு அர்த்தமுள்ள திருமணத்தைப் பார்த்ததில்ல... இன்றைய இளைய தலைமுறையோட சிந்தனைகளும் அவங்களோட பெரிய மனதும் ரொம்ப பெரிய விஷயங்கள். உலகத்துல அப்பா மகளுக்குக் கல்யாணம் பண்ணிப் பார்த்திருக்கேன். மகள் அப்பாவுக்குக் கல்யாணம் பண்ணினதை இங்கதான் பார்க்கறேன்” என்றார்.

சரண்யாவும் ராம்நாத்தும் கண்கள் குளமாக அரவிந்தனையும் ரம்யாவையும் பார்த்தனர்.

அது அனேகமாக ஆனந்தக் கண்ணீர் என்பதால் எதுக்கு அழுதுகிட்டு என்றெல்லாம் ரம்யா சொல்லவில்லை. அரவிந்தனும்...

அப்படியே இருவரும் தம்பதியை ஒரு தனி காரில் முன்னே அனுப்பிவிட்டு, பின்னே ஒரு காரில் ஏறி அமர்ந்தனர். காரும் கிளம்பியது. அரவிந்தனின் தோள் ராம்யாவின் தோள் மீது உரசியது. அவள் அதைத் தவிர்க்கவில்லை. முன்சீட்டில் ஞானப்பிரகாசம் இருந்தார். “அடுத்து உங்க கல்யாணம் தான்...”என்றார்.

இருவருமே அதைக் கேட்டு ரசித்துச் சிரித்தனர்.

நிறைந்தது